# வரமாய் வந்தாய்...

கலைவாணி சொக்கலிங்கம்



# வரமாய் வந்தாய்...

## 1

பொட்டு வைத்த முகமோ
கட்டி வைத்த குழலோ
பொன்மணிச் சரமோ
அந்தி மஞ்சள் நிறமோ!

**மா**லை நேரக் கூட்டம் கடையில் அலைமோதியது. ஆடிமாதத் தள்ளுபடியை முன்னிட்டு ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஜவுளி எடுப்பவர்களுக்கு ஒரு புடவை இலவசம் என்று கடை நிர்வாகி அறிவித்தாலும் அறிவித்தார், ஜனங்களின் படையெடுப்பு மிக அதிகமாகவே இருந்தது.

முதலாளிக்குக் கல்லா நிறைந்தது. ஜவுளி எடுப்பவர்களுக்கும் புடவை இலவசமாய்க் கிடைத்து விட்டது என்ற திருப்தி. ஆனால், இடையில் நின்று நொந்தவர்கள் கடையில் நிற்கும் பணியாளர்கள்தான். காலையில் ஏழு மணிக்கே வந்து துணிகளைப் பிரித்து ஹேங்கரில் மாட்டித் தொங்கவிடுவதும் கடையைத் தூசு எதுவும் இல்லாமல் சுத்தமாய்த் துடைப்பதுமாய் ஆரம்பிக்கும் பணி.

இரவு பதினோரு மணி வரையிலும் ஓய்வே இல்லாத உழைப்பு. அதுவும் ஆடி மாதம் பிறந்த பிறகு சாப்பிடக்கூட நேரமில்லாமல் போனது. கூட்டம் குறைந்தபின் சாப்பிடலாம் என்ற உத்தரவிற்குக் கட்டுப்பட்டுக் கால தாமதமாகிப் போனதில் சிறு டப்பாவில் அடைத்துக் கொண்டு வரும் உணவும் கெட்டுப் போய்ச் சாயங்கால டீயும் நின்றுவிட, பட்டினி கிடந்து உழைத்துக் கடையில் கல்லாவை நிறைய வைத்தனர் கடைப் பணியாளர்கள்.

மாலை ஆறு மணியாகி விட்டிருக்க, பசி வயிற்றைக் கிள்ளியது காயத்ரிக்கு. காலையில் அவசரமாய் இரண்டு தோசையை வாயில் போட்டுக்கொண்டு வந்ததோடு சரி. மதிய உணவிற்கும் தோசையே தந்து விட்டிருந்தாள் அக்கா. பாவம்! அவளும்தான் என்ன செய்வாள்?

எட்டு மாதக் கர்ப்பிணி. அந்த வயிற்றோடு காலையில் எழுந்து ஏழு மணிக்குள் தனக்குச் சாப்பாடு ரெடி பண்ணித் தருவதே பெரிய விஷயம். அப்படிக் கஷ்டப்பட்டுச் செய்து தந்த தோசையைக்கூட இன்று உண்ணமுடியவில்லை.

மதிய வேளையில் கூட இன்று கூட்டம் குறைய வில்லை. இயற்கை உபாதைகளைக் கழிக்கக்கூடச் செல்ல



நேரமில்லை என்று தண்ணீர்கூட அருந்தாமல் நின்றிருந் ததில் நா வறண்டது. உடல் தடதடவென்று ஆடத் துவங் கியது. தயக்கமாய்க் கடை உரிமையாளர் அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்தாள்.

நடுத்தர வயதில் இருந்த சோமசுந்தரம், ரூபாய் நோட்டுக்களை எச்சில் தொட்டு எண்ணிக் கொண்டிருந்தார். அருகே இருந்த இருக்கையில் அவரது மகன் துணிகளைச் சரிபார்த்துப் பில்லையும் துணிகளையும் கவரில் போட்டு, வாடிக்கையாளர்களிடம் இன்முகத்தோடு கொடுத்துக் கொண்டிருந்தான்.

அவர்களின் முன் பத்துப் பேருக்கும் மேல் வரிசையாய் பில் போடக் காத்திருக்க, நிச்சயமாய்ச் சற்று நேரத்திற்கு அவர்களின் பார்வை இங்கு திரும்பாது என உணர்ந்தவளாய், தனக்கு அருகே நின்ற ஆண் பணியாளரை அழைத்தாள்.

"அண்ணே! திருப்பதி அண்ணே...!" - மெல்லிய குரலில் காயத்ரி அழைக்க, புடவையை விரித்துக் காட்டிக் கொண்டிருந்த திருப்பதி, திரும்பினார்.

"என்னம்மா?"

"அண்ணே! மதியம் சாப்பிடாதது உடம்புக்கு ஒரு மாதிரி மயக்கமா இருக்கு!"

"ஐயய்யோ! ஏம்மா! காபி எதுவும் வேணுமா?"

"ராமுவைக் காணோமே! அவனைத்தான் தேடிப் பார்த்தேன்... காணோம்!"

"இப்ப என்னம்மா பண்றது?"

"அண்ணே! வர்ற கஸ்டமரைக் கொஞ்சம் கவனிச்சுக்கங்க. நான் பாத்ரூம்ல போய் முகம் அலம்பிட்டு வந்திடுறேன்."

"இந்தாம்மா! முதல்ல தண்ணியக் குடி. ராணி! ஏய் ராணி!" - திருப்பதி தன் வலப்புறப் பக்கமாய் நின்ற பெண்ணை அழைத்தார்.

"என்ன அண்ணே!"

"நீ பிஸ்கட் கொண்டு வருவியே... வெச்சிருக்கியா? சாப்பிட்டியா?"

"போங்கண்ணே. இந்தக் கூட்டத்திலே எங்கே பிஸ்கட் சாப்பிடறது? ஒரு வாரமா நான் எந்த ஸ்நாக்ஸும் கொண்டு வர்றதில்ல..." - உதட்டைப் பிதுக்கினாள் ராணி.

"சரியாப் போச்சு... காயத்ரி! வெறும் தண்ணிதான் இருக்கு. இதைக் குடி. ராமு வந்தா டீ வாங்கிட்டு வரச் சொல்றேன்."

"சரிண்ணே...!" என்றவாறு, அவர் நீட்டிய தண்ணீர் பாட்டிலை வாங்கி, மூச்சு விடாமல் குடித்து முடித்தாள் காயத்ரி. அதுவரை காய்ந்து போயிருந்த வயிற்றுக்குள் தண்ணீர் இறங்கியதும் பிரளயம் நடந்ததைப் போல் இருந்தது. நீர் பட்டதும் வயிறு தீயாய்க் காந்தியது.

கடந்த பத்து நாட்களாய்ச் சரிவரச் சாப்பிடாததால் வயிறு புண்ணாகியிருக்குமோ! லேசாய்த் தொடங்கிய எரிச்சல் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து, நெஞ்சு, தொண்டை என எரியத் துவங்க, வயிறு பலமாய் வலிக்கத் துவங்கியது.



பற்களைக் கடித்து வலியைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றபோது, எதிரே இருந்த பெண் கோபமாய்க் கத்தினாள்.

"ஏம்மா! எவ்வளவு நேரமா நிற்கிறேன். நீ பாட்டுக்குப் பேசிட்டு நிற்கிற. நாங்க துணி எடுக்கணுமா, இல்ல... வேற கடைக்குப் போகட்டுமா?" - அந்த அம்மாளின் சத்தத்தில் சோமசுந்தரம் திரும்பிப் பார்த்தார்.

காயத்ரிக்குப் பயத்தில் உயிரே போயிற்று. "மன்னிச்சிடுங்கம்மா... கொஞ்சம் உடம்பு சரியில்ல. உங்களுக்கு என்ன வேணும்?"

"உடம்பு சரியில்லன்னா வீட்ல இருக்க வேண்டியது தானே! ஏன் கடைக்கு வர்றீங்க?"

"மேடம்... ப்ளீஸ்! என்ன வேணும்னு சொல்லுங்களேன்!"

"நாலு வாட்டி கேட்டுட்டேன். இதே மாதிரி டிசைன்ல கரும்பச்சைக் கலர் புடவை வேணும்னு..." - அந்த அம்மாள் கையிலிருந்த தேன் நிறப் புடவையைக் காட்டினாள்.

"ஸாரி மேடம்! இந்த டிசைன்ல இந்த ஒரு கலர்தான் இருக்குன்னு சொன்னேனே!" - அவஸ்தையாய் வயிறைப் பற்றிக் கொண்டாள்.

"நீ எங்கே தேடிப் பார்த்தே? தேடினாத்தானே இருக்கா இல்லையான்னு தெரியும்? உங்களுக்குத்தான் வேலை செய்ய கஷ்டமா இருக்கே! சம்பளம் வாங்கிறீங்கள்ல? வாங்குற சம்பளத்துக்கு உழைக்க வேண்டாமா?" - அந்த அம்மாள் வேண்டுமென்றே குரலை உயர்த்த, சோமசுந்தரம் தனது பொறுப்பை மகனிடம் விட்டுவிட்டு எழுந்து வந்தார்.

"என்னம்மா! என்ன இங்கே பிரச்சனை?" - என்றவரின் கடினக் குரலில் மிரண்டு, வாயைத் திறக்க முயற்சிப்ப தற்குள், அந்த அம்மாள் முந்திக் கொண்டாள்.

"ஸார்! நீங்கதான் இந்தக் கடைக்கு ஓனரா?"

"ஆமா! ஏம்மா?"

"ஏன் ஸார்! இப்படிப்பட்ட பொண்ணுங்களையா வேலைக்கு வைக்கிறது?"

"ஏம்மா! என்னாச்சு?"

"பின்னே என்ன ஸார்? அரை மணி நேரமா நிற்கிறேன்... நான் கேட்கிறதைக் கவனிக்காம இந்த ஆளு கிட்ட பேசிட்டு இருக்கா. ஒரு புடவை வேணும்னு பத்துத்தரம் கேட்டாச்சு. அவ காதுல நான் கேட்கிறது விழவே இல்ல..."

சோமசுந்தரம் காயத்ரியை நெருப்புப் பார்வை பார்த்தார். காயத்ரி மொத்தமாய் ஆட்டம் கண்டாள்.

"இல்ல ஸார். த... தண்ணி..."

"இதோ பாரும்மா! உன்னால ஒழுங்கா வியாபாரம் பண்ண முடிஞ்சா இங்கே நில்லு. இல்லன்னா கிளம்பிட்டே இரு."

"இல்ல ஸார். நான்..."

"பதில் பேசுறது எனக்குப் பிடிக்காது. இஷ்டம்னா வேலை செய். எனக்கு என்னோட கஸ்டமர்தான் முக்கியம். அவங்களைக் காக்க வைக்காம அவங்க கேட்கிற துணிகளை எடுத்துப் போடத்தான் உங்களை இரண்டாயிரம் ரூபா சம்பளம் கொடுத்து வேலைக்கு வெச்சிருக்கேன்.



"உனக்கு அரட்டைதான் முக்கியம்னா வேலையை விட்டுட்டு வீட்ல போய் உட்கார்ந்து கதை பேசிட்டு இரு. இப்படிக் கடையில நின்னு கதையளந்துக்கிட்டு கஸ்டமருங்க கிட்ட கடைக்குக் கெட்ட பேரை உண்டுபண்ணிடாதீங்க!" - சோமசுந்தரம் அந்த அம்மாளின் முன்னே குரலை உயர்த்திப் பேச, வந்திருந்தவர்கள் அனைவரும் காயத்ரியைப் பார்த்தனர்.

அவமானத்தில் உயிரே போய்விடுவது போல் இருந்தது. இது இன்று மட்டும் நடப்பதல்ல. பலமுறை... பலரின் முன் நடப்பதுதான். ஆனால் தவறு செய்துவிட்டு அதற்கான தண்டனை என்றால் ஏற்றுக் கொள்ளலாம். பசி மயக்கத்தில் தண்ணீர் அருந்தியது ஒரு குற்றமா?

அதற்காக ஒரு வயது வந்த பெண்ணை இத்தனை பேர் முன்னிலையில் இப்படித் திட்டலாமா? ச்சே! இந்தக் கடையில் நின்று சம்பாதிப்பதற்கு, நாலு வீட்டில் பாத்திரம் கழுவிப் பிழைக்கலாம் என்று எண்ணும்போதே கண் கலங்கி...

அதுவும் நோகாத வேலையா என்ன? அதோடு அங்கும் இந்த மாதிரிப் பேச்சுக்களைக் கேட்டுத்தானே ஆகவேண்டும். இதெல்லாம் என்னைப் போன்றவர்கள் வாங்கி வந்த வரம். இதை ஒருபோதும் மாற்ற முடியாது.

மனதின் வலியாலும் உடம்பின் உபாதையாலும் அரும்பத் துவங்கிய கண்ணீரை மென்று புன்னகையைச் சிந்தினாள்.

"ஸாரி ஸார்! இனிமே இப்படி நடக்காது!"

"நடக்கக் கூடாது. நடந்தா இங்கே வேலை செய்ய முடியாது!" - என எச்சரித்துவிட்டு அவர் விலக, அருகே நின்ற புவனா, பொருமினாள்.

"இந்த ஒன்னரை அணா கடைக்கே இவ்வளவு பில்டப் பண்றாரே! இவரெல்லாம் அஞ்சு மாடி பத்து மாடின்னு கடை வெச்சிருந்தா இன்னும் என்ன பந்தாவெல்லாம் பண்ணுவாரோ?"

"ஷ்... சும்மா இரு!" - என அதட்டிய காயத்ரி, தன் முன் இருந்த பெண்மணியை நோக்கிச் செயற்கையாய்ப் புன்னகைத்தாள்.

"மேடம்! நீங்க கேட்ட கலர்ல கொஞ்சம் காஸ்ட்லியான புடவை இருக்கு. எடுத்துத் தரவா?"

"காஸ்ட்லின்னா... எவ்வளவுல இருக்கு?"

"ஆயிரத்து முன்னூர்ல இருந்து இரண்டாயிரம் ரூபா வரைக்கும் வரும்."

"வேண்டாம், வேண்டாம். நான் ஏதாவது காட்டன் ஸாரி எடுத்துக்கிறேன். காட்டன் ஸாரி இருந்தா எடுத்துப் போடு!"

"அது எதிர்ல இருக்கிற செக்ஷன் மேடம்!"

"ஓ.கே." - என்றவாறு அவள் விலகி நடக்க, ராணியின் முகம் கடுத்தது.

"இவல்லாம் புடவை எடுக்கவா வர்றா? புதுசு புதுசா என்ன புடவை வந்திருக்குன்னு பார்த்துட்டுப் போக வந்திருப்பா. இவ மூஞ்சியப் பார்த்தாலே தெரியுதே...!"



"ராணி! சத்தமாப் பேசாதே!" - திருப்பதி அதட்டினார்.

"பின்னே என்னண்ணே! ஒரு மணி நேரமா நின்னிருக்கா. அம்பது சேலைக்கு மேல பிரிச்சுப் பார்த்திருக்கா. இதையெல்லாம் மடிச்சு வைக்கவே நமக்கு மூணு மணி நேரமாகும்!"

"அதுக்குத்தானே நம்மை வேலைக்கு வெச்சிருக்காங்க. நாமளும் கைநீட்டிச் சம்பளம் வாங்குறோம்."

"என்ன பெரிய சம்பளம்? கொடுக்கிற சம்பளத்துக்கு நூறு மடங்கு வேலை வாங்கிடுறாங்க. இதுல போனஸ் மாதிரி அப்பப்போ ஏச்சும் பேச்சும் கிடைக்குது."

"இதெல்லாம் சகஜம்தானே! விடு... அதோ பார்... பத்து இருபது பேர் கொண்ட கும்பல் வருது. முகத்தைச் சிரிச்ச மாதிரி வெச்சுக்க..." - என்றாள் காயத்ரி.

"இதைத்தானே எப்பவும் செய்துட்டு இருக்கோம்!" - என்றவாறே அனைவரும் இயல்பாய்ப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு வந்தவர்களை வரவேற்று, அவர்கள் கேட்கும் ஆடைகளை எடுத்து விரித்துக் காட்டிக் கொண்டு இருக்கும்போது, கடையில் வேலை பார்க்கும் சிறுவன் வந்தான்.

"காயத்ரிக்கா! உன்னை முதலாளி கூப்பிடுறார்."

"என்னையா?"

"ஆமா! சீக்கிரம் வரணுமாம்!" - சொல்லிவிட்டு அவன் சென்றுவிட, பதறும் இதயத்தோடு முன் பக்கத்தை நோக்கி நடந்தாள். மற்றவர்களின் முன்னிலையில் திட்டியது போதாதென்று, தனியாகக் கூப்பிட்டுத் திட்டப் போகிறாரா?

கடையில் இவ்வளவு கூட்டம் இருக்கும்போது இப்படிக் கூப்பிடமாட்டாரே!

திகிலாய், சோமசுந்தரம் அமர்ந்திருந்த சுழல் நாற்காலி முன் சென்று நின்றாள்.

"ஸார்! கூப்பிட்டீங்களா?"

"ம்... ம்... ஆமா, நீ என்ன நினைச்சிட்டு இருக்கே...?"

"ஸார்?"

"இவ்வளவு பிஸியா வியாபாரம் நடந்திட்டு இருக்கும் போது உனக்கு மட்டும் ஏன் வீட்ல இருந்து ஆட்கள் வர்றாங்க? வேலை கெட்டுப் போகுதில்ல?" - சிடுசிடுவெனக் கேட்டார்.

"என்ன? வீட்ல... யார் ஸார் வந்திருக்காங்க?" - கேட்கும்போதே மனம் பதறியது. 'அக்காவிற்கு ஏதேனும் ஆகியிருக்குமோ?'

"அதோ வாசல்ல நிக்கிறான் பாரு... அவன் யார்?" - சோமசுந்தரம் கேட்க, திரும்பிப் பார்த்தவள் லேசாய் அதிர்ந்தாள். மடித்துக் கட்டிய லுங்கியோடு பாண்டியன் நின்று கொண்டிருக்க, மனம் இன்னும் பதறியது.

"ஸ... ஸார்! இது என் அக்காவின் கணவர்."

"ம்... ம்... சொன்னான். ஏதோ அவசரமாம். வீட்டுக்கு அனுப்புங்கன்றான். கிளம்பு!"

"தேங்க்யூ ஸார்!"

"ஆனா சம்பளத்துல பிடிச்சுப்பேன்!" - என்றார் கறாராய்.



"ச... சரி ஸார்!"

"இதுதான் கடைசி. இனிமே வேலை நேரத்தில இப்படி யாராவது வந்து கூப்பிட்டா வேலையை விட்டுட்டே போக வேண்டியது இருக்கும்."

"நீ என்னய்யா சொல்றது? நான் சொல்றேன். அவ கணக்கை முடிச்சு அனுப்பு. அவ இனிமே வேலைக்கு வரமாட்டா!" - என்றவாறே அருகே வந்து நின்ற பாண்டியனைப் பார்த்துப் பதறினாள் காயத்ரி.

"மாமா! என்ன இது?"

"ஆமாங்கண்ணு. இம்மாங் கூட்டத்தில கால்கடுக்க நின்னு உழைக்கணும்னு உனக்கென்ன தலையெழுத்தா? இவன் வேலையும் வேணாம்... ஒன்னும் வேணாம். சம்பளப் பாக்கி இருந்தா வாங்கிட்டு வா, போகலாம்!"

"மாமா! ஏன் இப்படி மரியாதை இல்லாம உளர்றீங்க. இவர் எனக்குச் சம்பளம் கொடுக்கிற முதலாளி."

"ஆமா, பெரிய கப்பல் முதலாளி. போம்மா..."

சோமசுந்தரத்தின் முகம் அவமானத்தால் சிவக்க, அவரது மகன் சீற்றமாய் எழுந்தான்.

"ஏய்! என்ன கலாட்டா பண்றதுக்குன்னு வந்தியா? காயத்ரி... ஒழுங்கா உம் மாமனக் கூட்டிட்டு வெளியே போயிடு. இல்லேன்னா உடம்பு புண்ணாயிடும்."

"ஸாரி! மன்னிச்சுடுங்க ஸார். மாமா! நீங்க போங்க. நான் என்னோட ஹேண்ட் பேகை எடுத்திட்டு வர்றேன்!"

"ம்ஹூம்... கையோட உன்னைக் கூட்டிட்டுப் போகணும். வா!"

"எங்கே மாமா?"

"நம் வூட்டுக்குத்தான்!"

"எதுக்கு மாமா?"

"வூட்ல வந்து பாரு... நீயே அசந்திடுவே!"

"அக்காவுக்கு... ஏதாவது?"

"அவளுக்கென்ன! ரொம்ப சந்தோஷமா இருக்கா. சீக்கிரம் வா!"

"காயத்ரி... இன்னும் எவ்வளவு நேரம் நிற்ப... கிளம்பு." - சோமசுந்தரம் அதட்ட, ஓட்டமும் நடையுமாய்ச் சென்று தனது கைப்பையை எடுத்துக் கொண்டாள்.

"காயு! என்ன சீக்கிரம் கிளம்பிட்ட?"

"புவனா! நான் காலையில வந்து சொல்றேம்ப்பா. எம் மாமா வந்து நிற்குது. போயிட்டு வர்றேன்..." - என வாசலை நோக்கி வந்தபோது, சோமசுந்தரம் பணத்தை எண்ணி நீட்ட, அதை வாங்கிக் கொண்டிருந்தான் பாண்டியன்.

பதறினாள். "மாமா! இப்போ எதுக்காகப் பணம் வாங்குறீங்க?"

"காயத்ரி! இன்னியோட உங்கணக்கை முடிச்சாச்சு. இனி நீ வேலைக்கு வர வேண்டாம்."

"ஸார்!" - அதிர்ந்தாள் காயத்ரி.

"கஸ்டமர் வர்ற நேரம். இப்படி வழியிலே நிற்காதே. போ!" - சோமசுந்தரம் விரட்ட, முகமும் மனமும் சுருங்க,



வேதனையாய் வெளியேறினாள் காயத்ரி. கூடவே வந்த பாண்டியனிடம் சீறினாள்.

"மாமா! உங்க மனசுல என்ன நினைச்சிட்டு இருக்கீங்க? இப்ப ஏன் என்னோட வேலைய விடச் சொன்னீங்க?"

"இது எதுக்கும்மா உனக்கு? உன் ரேஞ்ச்சே மாறிப் போச்சு!"

"என்ன? எம் பேருக்கு எதுவும் லாட்டரி அடிச்சிருக்கா?"

"அட! கரெக்ட்டா சொல்லிட்டியே! ஜாக்பாட் தான் அடிச்சிருக்கு. நாம யாருமே எதிர்பாராத அளவுக்குப் பெரிய ஜாக்பாட்."

"என்ன மாமா! இன்னிக்கு சாயங்காலமே ஏத்தியாச்சா?"

"என்னம்மா! இப்படிக் கேட்கிற?"

"பின்னே? இந்தச் சம்பளத்தை வாங்கித்தான் அக்காவோட பிரசவச் செலவுக்குச் சேர்த்திட்டு இருக்கேன். இந்த வேலைய விட்டுட்டு இனி செலவுக்கு என்ன பண்றதுன்னு நான் திணறிட்டு இருக்கேன். நீங்க என்னன்னா... ஜாக்பாட் அது இதுன்னு சொல்லிக் கடுப்பேத்துறீங்க...!"

"காயத்ரி! முகத்தைச் சிரிச்ச மாதிரி வெச்சுக்க. ஏற்கெனவே மாசக்கணக்கா சாப்பிடாதவ மாதிரி சோர்ந்து போய்த் தெரியுற. இதுல முகமும் கடுப்பா இருந்தா ஏதோ நோயாளிப் பொண்ணுன்னு நினைச்சுப்பாங்க!"

"யாரு?"

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்கதான்!"

"என்ன?" - திகைப்பாய்க் கேட்டவளின் நடை தடைப்பட்டது.

"போச்சு! உளறிட்டேனா?" - கையை உதறியவனைக் கோபமாய் ஏறிட்டாள்.

"மாமா! என்ன சொன்னீங்க? மாப்பிள்ளையா?"

"அது... வீட்டுக்கு வாயேன்... உனக்கே தெரியும்!" - என்ற பாண்டியன், விடுவிடுவென நடக்க ஆரம்பித்தான். காயத்ரியின் முகம் லேசாய் இருண்டது.

## 2

ஊரெல்லாம் தூங்கையிலே
விழித்திருக்கும் என் இரவு
உலகமெல்லாம் சிரிக்கையிலே
அழுதிருக்கும் அந்த நிலவு!

காயத்ரியின் கேள்விக் கணைகளில் இருந்து தப்பிக்கவே வேகமாய் முன்னே சென்றாலும், பாண்டியனின் பார்வை அடிக்கடி திரும்பிப் பின்னால் அவள் வருகிறாளா எனக் கவனித்துக் கொண்டது. காயத்ரியின் முகமும் மனமும் வெகுவாய்க் களைத்துப் போயிருக்க, நடையில் ஒரு தொய்வு தெரிந்தது.

களைப்பைவிடக் குழப்பம் அதிகமாய்த் தாக்கியது. என் கல்யாணத்திற்கு இப்போதென்ன அவசரம்? மாதம் தோறும் கிடைக்கும் சம்பளத்திற்காக மட்டும் தன்னை வீட்டில் வைத்திருக்கிறாள் அத்தை. தந்தை இறந்து போனபின் இந்த ஆறு வருடங்களில் கண்கூடாகக் கண்ட உண்மை இது.



ஆனாலும் சிறு வயதில் தாயை இழந்து நிற்கும் போது தாயாய் நின்று வளர்த்த தந்தையையும் இழந்து அநாதையாய் நின்ற இரு பெண் பிள்ளைகளையும் தன் வீட்டோடு வைத்துக்கொண்ட அத்தையைக் கோயில் கட்டித் தான் கும்பிட வேண்டும்.

தம்பி பிள்ளைகள் எப்படிப் போனால் நமக்கென்ன என்று விலகி விடாமல், தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தாளே... ஆனால் வரும்போதே தெளிவாய்ச் சொல்லி விட்டாள்.

"இதோ பாருங்கம்மா... உங்க அப்பன் இருந்தவரை உங்களை ராஜகுமாரியாட்டம் வளர்த்திருக்கலாம். ஆனா என் வீட்ல அப்படி இருக்க முடியாது. உன் மாமனால வெளியே நடமாட முடியாது. வீட்டோடதான் இருக்காரு. என் மவனும் லாரி டிரைவர். அவன் சம்பாத்தியம் வாய்க்கும் வயித்துக்குமே பத்தாது.

"அதனால... நீங்க ரெண்டு பேரும் ஏதாவது வேலைக்குப் போனாத்தான் நாம மூணு வேளை சாப்பிட முடியும். இதுல துணிமணி, பவுடர், சீப்பு, சோப்புன்னு எவ்வளவோ செலவு இருக்கே. நீங்க சம்பாதிச்சுத்தான் இதெல்லாம் வாங்கிக்கணும். இதுக்குச் சம்மதம்னா எங்கூட வரலாம். என்ன சொல்றீங்க?"

அத்தையின் பேச்சில் அக்காள் தங்கை இருவருமே மிரளவில்லை. சந்தோஷமாகவே ஒப்புக் கொண்டனர். பெற்றவர்களை இழந்து தனியே இந்த வீட்டில் எப்படி இருக்க முடியும்? யார் சம்பாத்தியத்தில் சாப்பிட முடியும்?

அத்தை, மாமா என்று பெரியவர்களின் துணை இருப்பதே பெரிய பலம். எந்த வேலையாய் இருந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் எனத் திடமாய் முடிவெடுத்துத் தந்தையின் பதினாறாம் நாள் காரியம் முடிந்த கையோடு புறப்பட்டுச் சென்னைக்கு வந்தார்கள்.

வந்த மறுநாளே மூத்தவள் சாவித்ரியை ஒரு கார்மெண்ட்ஸில் பணிக்குச் சேர்த்து விட்டாள் அத்தை. தையலைப் பற்றி எதுவுமே தெரியாத காயத்ரியை, தெரிந்தவர் மூலமாய் இந்தத் துணிக்கடையில் வெறும் ஐந்நூறு ரூபாய் சம்பளத்திற்குச் சேர்த்து விட்டாள்.

சாவித்ரிக்கு ஏற்கெனவே தையல்கலை அத்துப்படி. அதிலும் பொறுப்பும் சுறுசுறுப்பும் அதிகம் என்றதால், சோர்வில்லாமல் உழைத்துக் கைநிறையச் சம்பாதித்து அத்தையிடம் வந்து கொடுத்தாள். அந்த நிமிடமே அக்காவைத் தன் மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அத்தைக்குத் தோன்றியிருக்கலாம்.

சாவித்ரியிடம் ரொம்ப அன்பாய் நடந்து கொள்வாள். கம்பெனியில் சென்று உழைத்தால் மட்டும் போதாதென்று வீட்டிலும் ஒரு பழைய தையல் மிஷினை வாங்கிப் போட்டு, அக்கம் பக்கம் உள்ளவர்களின் துணிமணிகளைத் தைக்க வைத்து அதிலும் துட்டுப் பார்த்து விடுவாள்.

செல்லமாய் வளர்ந்த காயத்ரிக்கோ முழு நேரமும் கடையில் நிற்பது சிரமமாய்த்தான் இருந்தது. போகப் போகப் பழகிவிட்டது. கொஞ்சம் சம்பளமும் அதிகரிக்க, இருவரின் பணத்தையும் வைத்து, அத்தை தன் மூன்று பெண்களில் இருவரைக் கரையேற்றி விட்டாள்.



கடைக்குட்டி உமாபாரதி, சாவித்ரியைவிட நாலு வயது சின்னவள் என்பதால், அவளை வைத்துவிட்டுத் தன் மகன் பாண்டியனுக்குச் சாவித்ரியை மணம் முடித்து வைத்தாள். திருமணத்திற்குப் பிறகும் இரவு பகல் பாராமல் உழைத்துக் கொண்டே இருந்ததில், சாவித்ரியின் வயிற்றில் உருவாகும் கரு நிற்காமல் கலைந்து போனது. மூன்று முறை கவனியாமல் விட்டு விட்டு நான்காவதாய் உண்டானபோது மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றாள் காயத்ரி.

தொடர்ச்சியாய் ஏற்பட்ட கருச்சிதைவால் உடல் மிகவும் பலவீனமாய் இருப்பதாகவும் கட்டாயம் முழு ஓய்வில் இருந்தால் மட்டுமே இம்முறை குழந்தைக்கு எதுவும் ஆகாது என்றும் சொல்லிவிட்டார் மருத்துவர்.

அத்தையிடம் சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடி ஒருவழியாய் வேலையில் இருந்து லீவு பெற்று சாவித்ரியை வீட்டோடு வைத்துக் கொண்டாள். மனைவி கர்ப்பமாய் இருக்கிறாள்... இந்த நிலையில் அவளை விட்டுவிட்டு வெளியூர் செல்ல இயலாது என்று பாண்டியனும் வீட்டோடு தங்கிவிட, பணப்புழக்கம் சுத்தமாய்க் குறைந்தது.

காயத்ரி கொண்டுவரும் இரண்டாயிரம் எப்படி ஆறு வயிறுக்குப் போதும்? அதுவும் சாவித்ரி வயிற்றுப் பிள்ளைக்காரி. மாதந்தோறும் மருத்துவப் பரிசோதனை, மாத்திரை, மருந்தென்று தனிச் செலவு.

தம்பி மக்கள் வந்தபிறகு வக்கணையாய்ச் சாப்பிட்டுப் பழகிய நாக்கு, வெறும் ரசம் சாதம், சாம்பார் சாதம் சாப்பிட மறுத்தது. வாரத்தில் நான்கு நாள் கறி, மீன் இல்லாமல்

சாப்பிடமாட்டாள் ரங்கநாயகி. அதுவே பாண்டியனுக்கும் பழகிவிட, சாவித்ரியின் கழுத்தில் கிடந்த செயின் அடகுக் கடைக்குப் போயிருந்தது.

இவர்களை நம்பினால் பிரசவச் செலவிற்குத் திண்டாட வேண்டும் எனக் கருதி, வேலை அதிகமாய் இருக்கும் நாளில் சோமசுந்தரம் தரும் ஐம்பது அல்லது நூறு ரூபாயை வீட்டிற்குத் தெரியாமல் சேமிக்கத் துவங்கினாள். ஆடி மாதம் முழுக்கக் கடையில் கூட்டம் அலைமோதியது என்பதால், மாதக் கடைசியில் பார்த்துப் போட்டுத் தருகிறேன் என்று சொல்லியிருந்தார் சோமசுந்தரம்.

இன்று பாண்டியன் பேசிய பேச்சில் எல்லாவற்றிலும் மண் விழுந்தது. இனி எப்படிச் சம்பாதிப்பது? சம்பாதிக்காமல் அத்தை எப்படி வீட்டோடு வைத்திருப்பாள்? அதைவிடத் தன்னை எப்படி மணம் முடித்து வெளியே அனுப்புவாள்? இப்போதைக்கு இந்த வீட்டில் உழைக்கும் ஒரே ஜீவன் நான்தான். என்னை எப்படி வெளியே அனுப்புவாள் அத்தை?

இந்தக் குழப்பத்தோடு வயிற்றின் வலியும் அதிகமாகிவிட, சோர்ந்து போனவளாய் வீட்டை அடைந்தாள் காயத்ரி. பாண்டியன் சொன்னது போல் பெண் பார்க்கவென்று எந்தக் கும்பலும் வந்து நிற்கவில்லை. வீடு காலியாய் இருந்தது.

வராந்தாவில் உள்ள திண்ணையில் ரங்கநாயகி அமர்ந்திருக்க, அவளருகே ரங்கநாயகியின் தூரத்து உறவான ராஜேஸ்வரி அமர்ந்து கொண்டிருந்தாள். எதற்காக இந்த மாமா தன்னிடம் பொய் சொல்லி அழைத்து வந்தார்?



கோபமாய்த் திரும்பினாள். வாசல்படியருகே நின்று பீடியைப் பற்ற வைத்துக் கொண்டிருந்த பாண்டியனை அழைத்தாள்.

"மாமா! என்ன இது?"

"என்ன காயத்ரி?"

"எங்கிட்ட பொய் சொல்லிக் கூட்டிட்டு வந்தீங்களா?"

"இல்லையே! யம்மோவ்... சொல்லேம்மா...!" - எனத் தாயைத் துணைக்கழைத்தான்.

"என்ன? இப்ப ஏன் எம்புள்ளைய விரட்டுற?" - என ரங்கநாயகி துவங்க, சத்தம் கேட்டு வெளியே வந்தாள் சாவித்ரி. மெலிந்த தேகம், பம்மிய வயிறு, தாய்மையின் பூரிப்பில் மின்னும் மஞ்சள் முகம்.

"வா காயு! காபி தரட்டுமா?"

"அக்கா! மாமாவை ஏன் கடைக்கு அனுப்பினே?" - சீற்றமாய்க் கேட்டாள்.

"நானா? நான் அனுப்பவில்லையே!"

"நான்தான் அனுப்பினேன்!" - ரங்கநாயகியின் குரலில், இருவரும் திரும்பினர்.

"ஏன் அத்தே? கடையில எவ்வளவு கூட்டம் தெரியுமா? இந்த மாமா வேற ஓனர்கிட்ட ஏடாகூடமாப் பேசினதால வேலையை விட்டே அனுப்பிட்டாங்க!" - சொல்லும்போதே கண்கள் கலங்கினாள்.

"நீ இனிமே வேலைக்கெல்லாம் போக வேண்டாம்!"

"அத்தே?"

"உனக்குக் கல்யாணம் பண்ணிடலாம்னு முடிவெடுத்திருக்கோம்!"

"கல்யாணமா? எனக்கு எதுக்குக் கல்யாணம்?"

"என்னடி கேள்வி இது? வயசுக்கு வந்த பெண்ணை எத்தனை காலம்தான் வீட்ல வெச்சிருக்கிறது? இப்பவே ஊர்ல உள்ளவ எல்லாம் கேட்கிறா!"

"என்ன கேட்டாங்க?"

"உன் தம்பி பொண்ணுங்க சம்பாத்தியத்தில தான் உன் குடும்பமே உட்கார்ந்து சாப்பிடுதான்னு...!"

"ஊர்ல உள்ளவங்க ஆயிரம் பேசுவாங்க. அதுக்கெல்லாம் நாம கல்யாணம் பண்ண முடியுமா?"

"அதுக்காகப் பண்ண முடியாதுதான். ஆனா என் வீட்லயும் ஒரு பொண்ணு வளர்ந்து நிற்கிறாளே!"

"அப்போ முதல்ல உமாவுக்குப் பாருங்க அத்தே... எனக்கு ஒன்னும் அவசரமில்ல..."

"அடியேய்! என்னடி பேசுற? எப்படிப் பேசுறதுன்னு உன் அக்காகிட்ட இருந்து கத்துக்கோ. சாவித்ரி!"

"அத்தே...!"

"உன் தங்கைகிட்ட சொல்லு. இன்னும் பத்து நாள்ல கல்யாணம்னு!"

"அத்தே! இப்போ எதுக்காக இவ்வளவு அவசரமா என் கல்யாணத்தை முடிக்கப் பார்க்கிறீங்க? முதல்ல அக்காவுக்கு நல்லபடியா குழந்தை பிறக்கட்டும். அதுக்கே செலவுக்கு என்ன பண்றதுன்னு நான் முழிச்சிட்டு இருக்கேன்...!"



"போதும்டியம்மா! அவ எம் மருமக. அவளைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். நீ பேசாம நாங்க சொல்றபடி கேட்டு நட. அதுதான் நல்லது!"

"அத்தே! இப்படி உடனே கல்யாணம்னா எப்படி? மாப்பிள்ளை யாரு? என்ன பண்றாரு? எப்படி இருப்பாரு? இதையெல்லாம் சொல்லாம..."

"பார்த்தியா ராஜேஸ்வரி! நம்ம காலத்தில எல்லாம் கல்யாணப் பேச்சை எடுத்தாலே தலையக் குனிஞ்சுக்கிட்டு வீட்டுக்குள்ள போய் ஒளிஞ்சுக்குவோம். இப்ப உள்ள குமரிங்க கொஞ்சமும் வெட்கமோ கூச்சமோ இல்லாம நம்மகிட்டயே மாப்பிள்ளையைப் பத்தி விசாரிக்கிறாளுங்க..." என்றாள் நக்கலாய்.

"அத்தே! நான் இப்போ என்ன தப்பாக் கேட்டுட்டேன்? எவனோ ஒருத்தன் கிடைச்சான்னு நீங்கபாட்டுக்குத் தள்ளி விட்டுடுவீங்க. காலம் பூரா நான்தானே அழணும்!"

சாவித்ரி அதட்டினாள். "காயு! என்ன நீ பெரியவங்க முன்னாடி இப்படி மரியாதை இல்லாமப் பேசுற? நல்ல விஷயம் பேசும்போது ஏன் அபசகுனமாப் பேசுற? முதல்ல உள்ளே வா!"

"அக்கா! நான் பாட்டுக்கு வேலைக்குப் போயிட்டு வந்திட்டு இருக்கேன். எனக்கு ஏன் கல்யாணம் காட்சியெல்லாம்?"

"இப்படியெல்லாம் சொல்லாதேம்மா. காலாகாலத்திலே நடக்க வேண்டியதெல்லாம் நடக்கணுமே! பாவம் ரங்கா... அவ உடம்புல தெம்பு இருக்கும்போதே உங்களையெல்லாம் கரையேத்த வேண்டாமா?" - ராஜேஸ்வரி சொன்னதைக்

கேட்டுக் கண்களை இறுக மூடித் தன்னைக் கட்டுப் படுத்தினாள் காயத்ரி.

"இதோ பாருங்க! இது எங்க குடும்ப விஷயம். தயவு செய்து... நீங்க இதுல தலையிட வேண்டாம்."

"ஏய் காயத்ரி! என்னடி நாலு காசு சம்பாதிக்கிற திமிரா? யாரைப் பார்த்து என்ன பேசுற? இவ என் கூடப் பொறந்தவ மாதிரி...!"

"அத்தே!"

"இவதான் உனக்கு மாப்பிள்ளை பார்த்திட்டு வந்திருக்கா! நாங்கெல்லாம் பேசி முடிவு பண்ணிட்டோம். வர்ற பதினெட்டாம் தேதி வடபழனி முருகன் கோயில்ல வெச்சுக் கல்யாணம்!"

"இது என்ன அநியாயம்? என்னைக் கேட்காம எப்படி நீங்களே எல்லாத்தையும் முடிவு பண்ணலாம்?"

"அம்மாடி! உன் அப்பன் உங்க ரெண்டு பேரையும் விட்டுட்டுக் கண்ணை மூடினானே... அப்போ உங்களை நிர்கதியா விடாம கையோட அழைச்சிட்டு வந்து இன்னிக்கு வரைக்கும் உங்களை வெச்சிக் காப்பாத்திட்டு இருக்கேனே... இது அநியாயமா?"

"அத்தே! நீங்க தெய்வம்தான். நான் மறுக்கல்ல. ஆனா கல்யாணம்கறது ஒன்னும் விளையாட்டு இல்லையே. அதோட கல்யாணம் செய்யுற அளவுக்கு இப்ப நம்மகிட்ட என்ன இருக்கு?"

"அதைப் பத்தி எல்லாம் நீ கவலைப்படாதேம்மா! எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்."



"சரி! மாப்பிள்ளை யாரு? என்ன பண்றார்?"

"அதெல்லாம் சாவித்ரிகிட்ட தெளிவாச் சொல்லிட்டோம். நீ உள்ளே போ. எல்லாம் அவ சொல்லுவா! ராஜேஸ்வரி...! நீ போய் மாப்பிள்ளை வீட்ல சொல்லி ஆக வேண்டிய காரியத்தைக் கவனி!" - அத்தை உறுதியான முடிவை எடுத்து விட்டாள் என்பது புரிய, ஏமாற்றமும் கண்ணீருமாய்த் தமக்கையைப் பார்த்தாள்.

தங்கையின் கண்ணீர் நெஞ்சை அழுத்த, அவளது கையைப் பற்றி வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் சாவித்ரி.

"காயும்மா! முதல்ல காபி குடி. அக்கா எல்லாம் சொல்றேன்!"

"எனக்கு எதுவும் வேணாம்...!" - என்றவாறு கைப்பையைக் கழற்றி எறிந்தாள்.

"ஏம்மா கோபப்படுற? அத்தை எது செய்தாலும் நம்ம நல்லதுக்குத்தானே செய்வாங்க. நீ ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிற?"

"அக்கா! நீதான் புரிஞ்சுக்க மாட்டேங்கிற!"

"என்னம்மா சொல்றே?"

"அக்கா! அத்தை செய்த நல்லதை நானும் மறக்கல்ல. ஆனா உனக்கு அமைஞ்ச மாதிரி ஒரு குடிகாரப் பய எனக்குக் கிடைச்சா உன்னை மாதிரி என்னால சகிச்சுக்கிட்டு வாழ முடியாதுக்கா! நான் செத்தே போயிருவேன்!" - தரையில் அமர்ந்து அழத் துவங்கினாள் காயத்ரி.

"அப்படியெல்லாம் சொல்லாதே! மாப்பிள்ளை குடிக்க மாட்டாராம். உன் மாமாவின் நண்பராம். ரொம்ப நல்லவர்ன்னு மாமாவே சொன்னாங்க காயு!"

"யாரு? உன் வீட்டுக்காரரா? அவர் அரிச்சந்திரனோட மறு அவதாரமாச்சே! அவர் சொன்னா அது சரியாத்தான் இருக்கும்!" - தங்கையின் பேச்சில் இழையோடிய ஏளனம் புரிந்தது.

"என்ன காயு! இப்படியெல்லாம் சொல்ற?"

"பின்னே என்னக்கா! உன் கல்யாணத்துக்கு முன்பே நாம இந்த வீட்லதானே இருந்தோம். மாமாவுக்குக் குடிப்பழக்கம் உண்டுன்னு யாராவது சொன்னாங்களா? எவ்வளவு சாமர்த்தியமா மறைச்சாங்க. மாசத்தில பாதி நாள்கூட வேலைக்கு ஒழுங்காப் போறதில்ல...

"கேட்டால் ஆயிரம் நொண்டிச் சாக்கு. ஏதோ நீயும் நானும் வேலை பார்த்ததால சரியாப் போச்சு. இல்லேன்னா பட்டினிதானே கிடக்கணும். மகன் ஒரு குடிகாரன். முழுச் சோம்பேறி. இதுல பீடி, பாக்குன்னு எல்லாப் பழக்கமும் இருக்கு. இதையெல்லாம் அத்தை நம்மகிட்ட இருந்து மறைச்சாங்கள்ல...

"அதே மாதிரி என் விஷயத்திலயும் எதை எதையெல்லாம் மறைக்கிறாங்களோ! நமக்கு என்னக்கா தெரியும்? வீட்டுக்குள்ள இருந்த மாப்பிள்ளையோட யோக்யதையே நமக்குத் தெரியல்ல. இதுல மாப்பிள்ளை எந்த ஊருன்னே தெரியல்ல. அவன் யாரோ? எப்படிப் பட்டவனோ?"



"காயு! என் விஷயத்தில நடந்த தப்பு உனக்கு நடக்காதுடி. ஏன்னா ராஜேஸ்வரி அத்தைகிட்ட நான் எல்லாத்தையும் விசாரிச்சிட்டேன். களக்காடு பக்கம் பெரிய நெல்லித் தோப்பும் முந்திரித் தோப்பும் இருக்குதாம்."

"மாப்பிள்ளைக்கா?"

"ம்ஹூம்... அந்தத் தோப்புலதான் மாப்பிள்ளை வேலை செய்யுறாராம்."

"தோப்புல... என்ன வேலை?"

"சொட்டுநீர்ப் பாசனமாம். மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுறது... காய்களைப் பறிக்கிறது... மூட்டை கட்டி அனுப்புறதுன்னு பெரிய வேலையாம். தோட்டத்துக் குள்ளேயே வீடும் இருக்காம்!" - எனச் சொல்லிக்கொண்டே போன சாவித்ரி, தங்கையின் முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்டு, தன் பேச்சை நிறுத்தினாள்.

"என்னம்மா?"

"அக்கா! உனக்கு... இந்த வரனைப் பிடிச்சிருக்கா?" - கண்ணீர் மல்கக் கேட்டவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் சாவித்ரி.

"ஏம்மா இப்படிக் கேட்கிற?"

"இவ்வளவு அவசரமா ஒரு தோட்டக்காரனுக்கு என்னைக் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்னக்கா வந்தது?"

"காயு! மனசைப் போட்டுக் குழப்பிக்காதே! கிடைச்ச வாழ்க்கையை சந்தோஷமா ஏத்துக்கிறதுதாம்மா புத்தி சாலித்தனம்!"

"இல்ல... இது எனக்குக் கிடைச்ச வாழ்க்கை இல்ல... தானாகத் திணிக்கப்பட்ட வாழ்க்கை. என்னால இதை ஏத்துக்கவே முடியாது."

"காயு! சொன்னாப் புரிஞ்சுக்கடி. நீ சின்னப் பொண்ணு. உன்கிட்ட இதைவிட விளக்கமா ஒன்னும் சொல்ல முடியாது."

"ஏன் சொல்ல முடியாது? அக்கா! நீ வீட்லதானே இருக்கே! உனக்குத் தெரியாம இருக்காது. தயவு செய்து உண்மையைச் சொல்லு. ஏன் இப்படி என் கல்யாணத்தை நடத்த அத்தை அவசரப்படுறாங்க... சொல்லுக்கா."

சாவித்ரியின் தோளைப் பற்றி உலுக்கினாள் காயத்ரி. சாவித்ரி பரிதாபமாய் விழித்தாள். கதவிடுக்கின் வழியே வெளியே எட்டிப் பார்த்தாள். ரங்கநாயகி இன்னும் வெளித் திண்ணையிலே அமர்ந்திருக்க, மெல்லப் பார்வையைத் திருப்பித் தங்கையைப் பார்த்தாள்.

மெல்லிய குரலில் அழைத்தாள். "க... காயு!"

"சொல்லுக்கா!"

"இ... இன்னிக்கு ஒரு பெரிய இடத்துல இருந்து உன்னைப் பெண் கேட்டு வந்தாங்கடி!"

"என்ன?" - அதிர்ச்சியாய் நிமிர்ந்தாள் காயத்ரி.

"ம்... மாப்பிள்ளை நீ வேலை செய்யுற கடை ஓனரோட மகன் ஃப்ரெண்டாம். கடையில வெச்சு சில சமயம் உன்னைப் பார்த்திருக்கானாம். உன்னை ரொம்பப் பிடிச்சுப் போயி அவங்க அம்மா அப்பாவைக் கூட்டிட்டு வந்து பெண் கேட்டான்."



"ஐயோ! யாருக்கா அது? எனக்கு யாருன்னே தெரியலியே!"

"பேரு கூட... ஏதோ சொன்னானே... ம்... ஜனார்த்தனன்னு சொன்னான்."

"ஜனார்த்த... அட! கணேஷ் அடிக்கடி ஜனா ஜனா என்பாரே... அது இவன்தான். யமஹாவில் வந்து நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருப்பானே! ச்சே! அவன் முகம் கூட சரியாய் நினைவில்லையே! அவனா வீடு தேடி வந்து பெண் கேட்டான்?"

"என்னடி! ஆள் யாருன்னு தெரியுதா?"

"அக்கா! அது கணேஷோட ஃப்ரெண்ட்ன்னு தெரியும். ஆனா இதுவரை நேராய்ப் பார்த்ததுகூட இல்லை. பேசியதும் இல்லை."

"ஆனா... உன்னோட பேரை கரெக்டாச் சொன்னானே!"

"இதெல்லாம் பெரிய விஷயமா அக்கா! கடையில் ஒரு நாளில் எத்தனை முறை என் பெயரை ஏலம் போடுகிறார்கள். அது அவன் காதில் விழுந்திருக்கலாம். சரி! அத்தை இருக்கும்போதா வந்தார்கள்?"

"ஆமா! உன்னைத் தவிர எல்லாருமே வீட்டில்தான் இருந்தோம்."

"என்ன சொன்னார்கள் அக்கா?"

"வந்து... அத்தை மாமாவுக்கு எல்லாம் அந்தப் பையனை - அந்தக் குடும்பத்தை ரொம்பப் பிடிச்சுப் போச்சு!"

"என்ன?" - வியப்பும் குழப்பமுமாய் அக்காவை ஏறிட்டாள்.

"ஆமா...! அவங்களுக்கெல்லாம் ரொம்ப இஷ்டம் போலத்தான் தோணுது...!"

"பிறகேன் அக்கா எனக்கு எவனோ ஒரு தோட்டக்காரனைப் பேசணும். பத்தே நாளில் கல்யாணம்னு ஏன் மிரட்டணும்?"

சாவித்ரி அவஸ்தையாய் எச்சிலை விழுங்கினாள். "காயு! அ... அவங்க..."

"சொல்லுக்கா?"

"அந்த மாப்பிள்ளையை... உ... உமாவுக்கு முடிக்கலாம்னு... இஷ்டப்படுறாங்க போலிருக்கு...!" - திணறலாய்ச் சாவித்ரி சொல்லி முடிக்க, தலையில் ஏதோ ஓங்கி அடித்தாற் போலிருந்தது காயத்ரிக்கு!

## 3

நதியில் விளையாடி, கொடியில்
தலைசீவி நடந்த இளம்தென்றலே
வளர் பொதிகை மலைதோன்றி
மதுரை நகர் கண்டு பொலிந்த
தமிழ் மன்றமே!

"அக்கா! நீ... என்ன சொல்றே?" அதிர்ந்த குரலோடு கேட்டாள் காயத்ரி. சாவித்ரி மீண்டும் ஒருமுறை வெளியே பார்த்துவிட்டுத் தங்கையிடம் நெருங்கி வந்தாள்.



"காயு! அந்தப் பையன் பெரிய பணக்காரனாம். பஜார்ல ரெண்டு பாத்திரக் கடையும், இந்த டி.வி., பிரிட்ஜ் எல்லாம் விற்பாங்களே, அந்தக் கடையும் இருக்குதாம். பையன்கூட பார்க்க ரொம்ப அழகா இருந்தான். அத்தைக்கு அவனை விடவே மனசில்லை.

"எனக்கும் ரொம்ப சந்தோஷமா இருந்தது. நீ பெரிய இடத்துல போய் வாழப்போறேன்னு நினைச்சி எனக்குச் சந்தோஷத்தில கண்ணீரே வந்திடுச்சு தெரியுமா? ஆனா..."

"என்னக்கா?" - அதிர்ச்சியில் இருந்து மீளாமலே கேட்டாள்.

"அத்தை கொஞ்சமும் தயங்காம காயத்ரிக்கு ஏற்கெனவே கல்யாணம் பேசி முடிச்சாச்சு. இன்னும் ஒரு பத்து நாள்ல கல்யாணம்னு சொல்லிட்டாங்க காயு!"

"என்ன?"

"ம்... எனக்கே அதிர்ச்சியாத்தான் இருந்தது. அத்தை என்னைப் பேச விடல்ல. உள்ளே போகச் சொல்லிட்டாங்க. அதுக்கப்புறம் உமாவைக் காட்டி, இவ எம் பொண்ணு. இவளுக்குத்தான் மாப்பிள்ளை தேடிட்டு இருக்கோம்... அப்படி இப்படின்னு ஜாடைமாடையா சொல்லிப் பார்த்தாங்க!"

"அ... அதுக்கு மாப்பிள்ளை வீட்ல என்ன சொன்னாங்க?"

"பையனோட அம்மா ஏதோ யோசிச்சாங்க. ஆனா அந்தப் பையன் உடனே எழுந்து, வந்தவங்களைக் கூட்டிட்டுப் போயிட்டான்."

காயத்ரியின் மனதில் காரணமே இல்லாமல் ஒருவித நிம்மதி தோன்றியது. சரி! ஏதோ ஒரு பெண் கிடைத்தால் போதும் எனத் தலையாட்டி விடாமல் புறப்பட்டுப் போயிருக்கிறான் என்றால், தன்னை அவன் விரும்புகிறான் என்றுதானே அர்த்தம். தன்னைத் தவிர வேறொரு பெண்ணை ஏற்றுக்கொள்ள மறுக்கிறான் என்ற எண்ணமே அந்த நிம்மதியைத் தந்தது.

தங்கையின் மன உணர்வுகளை உணராத சாவித்ரி, இன்னும் அதே மெல்லிய குரலில் தொடர்ந்தாள்.

"அவங்க எல்லாம் போன பிறகு அம்மாவும் புள்ளையும் கூடிப் பேசினாங்க. ராஜேஸ்வரி அத்தையையும் அழைச்சிட்டு வந்து என்ன பேசினாங்களோ தெரியாது. ஆனா ஒரு மணி நேரம் கழிச்சு என்னைக் கூப்பிட்டாங்க."

"எ... என்ன சொன்னாங்க?"

"அது... வந்து... இல்ல... ஒன்னும் சொல்லல்..." - தயங்கி மறைத்தாள்.

"அக்கா! என் தலைக்கு மேலே வெள்ளம் போயாச்சு. நான் மூழ்கிட்டு இருக்கேன். இதுல நீ வேற என்னைக் கொல்லாதே. எதுவா இருந்தாலும் சொல்லு!" - வெடித்தாள் காயத்ரி.

"அது... உன் தங்கை வேலைக்குப் போனது போதும். நம்ம குடும்பத்தோட மானத்தைக் காத்துல பறக்க விட்டுடுவா போலிருக்கு. இன்னும் எவனெல்லாம் வீடு தேடி வரப்போறானுங்களோ... அதனால சீக்கிரமாக் கல்யாணம் பண்ணி அனுப்பி வெச்சிடலாம்னு சொன்னாங்க."



"என்ன?" - துடித்து நிமிர்ந்தாள் காயத்ரி. இத்தனை வருடங்களாய்க் குனிந்த தலை நிமிராமல் நடந்து அந்நிய ஆடவர்களோடு ஒரு வார்த்தை பேசாத என்னால் இந்தக் குடும்ப மானம் காற்றில் பறந்து விடுமா? முதன் முறையாய் அத்தையின் மீது வெறுப்பு வந்தது.

தன் பெண்ணிற்கு வளமான வாழ்வு அமைய வேண்டுமென்று இன்னொரு பெண்ணைப் பழிக்கலாமா? யார் எவரென்று விசாரிக்காமல் பத்தே நாளில் திருமணம் செய்து அனுப்ப எப்படி மனம் வந்தது அத்தைக்கு? அவளும் மூன்று பெண்களைப் பெற்றவள்தானே!

இதுவே தன்னைப் பெற்றவர்கள் உயிரோடு இருந்தால், இந்த அவல நிலை ஏற்பட்டிருக்குமா? அப்பா எப்போதோ மணம் முடித்துக் கொடுத்திருப்பார். இப்படிக் கண்ட இடத்தில் வேலைக்குப் போயிருக்கவும் மாட்டேன். கண்டவனும் வந்து பெண் கேட்டு நின்றிருக்கவும் மாட்டான்.

பெற்றவர்களின் இழப்பு இன்றுதான் பலமாய்த் தாக்கியது. கண்களில் கண்ணீர் இறங்கியது. அவசரமாய் அதைத் துடைத்து விட்டாள் சாவித்ரி.

"அழாதே காயு! அத்தை அப்படிச் சொன்னதும் நல்லதுக்குத்தானே! அவன் என்ன ஜாதியோ என்னவோ? கல்யாணம்னு வந்தா அதையெல்லாம் பார்க்கணுமில்ல. இப்பப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை ராஜேஸ்வரி அத்தை யோட சொந்தக்காரராம். தங்கமானவராம்.

"கண்ணை மூடிட்டுப் பெண்ணைக் கொடுக்கலாம்னு சொல்றாங்க... அதோட நகைநட்டு எதுவும் எதிர் பார்க்கலையாம். கம்மல் கொலுசு மட்டும் போதும்;

கல்யாணச் செலவுகூடச் செய்ய வேண்டாம்; கோயில்ல வெச்சச் சிம்பிளா முடிச்சாப் போதும்னு சொன்னாங்க.

"காயு! நம்ம வசதிக்கு இதைவிட அருமையான இடம் அமையுமா? பேசாமச் சரின்னு சொல்லிடும்மா. அத்தையோட வெறுப்பைச் சம்பாதிச்சுக்கிட்டு நாம எங்கே போறது? பேசாம அவங்க சொல்ற மாதிரி நடந்துக்கம்மா!" - என்ற சாவித்ரியைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

இத்தனை வெகுளியாய் இருக்கிறாளே... என்னை வெளியேற்றினால்தான் தனது மகளுக்குப் பெரிய இடத்துச் சம்பந்தம் கிடைக்கும் என்ற நப்பாசையில் இதையெல்லாம் செய்கிறாள் அத்தை என்று இவளுக்குப் புரியவில்லையா?

தன் உழைப்பை மொத்தமாய் உறிஞ்சத்தான் மருமகளாய் ஏற்றுக் கொண்டாள் என்பதையே இவளால் உணர முடியவில்லை. இதில் தங்கையின் நிலையை எப்படி உணர்ந்து கொள்வாள். வெளுத்ததெல்லாம் பால்தான் என அடித்துக் கூறுவாள் அக்கா.

அதனால் அவளை ஏமாற்றுவது சுலபம் என மாமியாரும் கணவரும் புரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால்தான் தங்கையைச் சம்மதிக்க வைக்க அக்காவை அனுப்பியிருக்கிறாள் அத்தை. இனி இவளிடம் என்ன பேச முடியும்?

எதைப் பேசினாலும் அக்கா ஒரே வார்த்தையைத்தான் சொல்லிக் கொண்டே இருப்பாள். வீணான மன வருத்தம் தான் உண்டாகும். எதுவும் பேசாமல் இருப்பதுதான் சரி என முடிவெடுத்தவளாய் எழுந்து உள் அறையை நோக்கி நடந்தாள்.



"காயு! ஒன்னுமே சொல்லாமப் போறியே!" - தவிப்பாய்க் கேட்டாள் சாவித்ரி.

"அக்கா! நான் படுக்கிறேன். என்னை எழுப்பாதே!"

"காயு! நான்..."

"ப்ளீஸ்க்கா! என் மூளை கொஞ்ச நேரமாவது ஓய்வெடுக்கட்டும். ஆளாளுக்குப் பேசி என்னைப் பைத்திய மாக்கிடாதீங்க."

"காயு...!"

"எது பேசறதா இருந்தாலும் நாளைக்குப் பேசு. நான் படுக்கிறேன்."

"சாப்பிட்டுப் போய்ப் படு காயு."

"வேண்டாம்!"

"வெறும் வயித்தோட படுத்தா எப்படித் தூக்கம் வரும்? ஒரு நிமிஷம் இரு. சாப்பாடு போட்டு எடுத்திட்டு வர்றேன்."

"அதான் வேணாம்னு சொல்றேனில்ல..." - சுள்ளென எரிந்து விழ, சாவித்ரி வாயை மூடிக் கொண்டாள்.

"என்ன? சத்தமெல்லாம் பலமா இருக்கு?" - என்றவாறே தன் கனத்த உடம்போடு திண்ணையை விட்டு எழுந்து வந்தாள் ரங்கநாயகி. அவளை நேராய்ப் பார்க்க விருப்பமின்றி முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போனாள் காயத்ரி.

"சாவி! உன் தங்கை என்ன சொல்றா?"

"சாப்பாடு வேணாமாம்."

"ம்ப்ச்! நான் அதைக் கேட்கல்ல. கல்யாணத்தைப் பத்திக் கேட்டேன்."

"ஒன்னும் சொல்லல அத்தே!"

"அப்போ அக்காவும் தங்கையுமா மணிக்கணக்கா என்னதான் பேசுனீங்க?"

"அது... நீங்க சொன்னதெல்லாம் சொல்லிட்டேன் அத்தே! அவளுக்கு உடம்பு சரியில்ல போலிருக்கு. அதான் காலையில பேசலாம்னு சொல்லிட்டா!"

"அவகிட்டச் சொல்லு... கல்யாணம்னு தகவல்தான் சொல்றோம் - அவ சம்மதம் எதுவும் தேவையில்லன்னு. பொட்டச்சிங்ககிட்ட சம்மதம் கேட்டுட்டுக் கல்யாணம் பண்ற அளவுக்கு என் நிலமை இறங்கிடல்ல..."

"ச... சரி அத்தை!"

"நாளையில இருந்து வீட்ல உட்கார்ந்து சமைக்கக் கத்துக்கட்டும். பிறகு புருஷன் வீட்ல போய் சமைக்கத் தெரியாம முழிச்சிட்டு நிற்கக்கூடாது."

"சரி அத்தே!"

"ராத்திரிக்கு என்ன சமைச்சிருக்க?"

"வெண்டைக்காய்ப் புளிக் குழம்பு. அப்பளம் வறுக்கணும்."

"அப்பளமெல்லாம் வேணாம். கடையில போய் இரண்டு பாக்கெட் கருவாடு வாங்கியாந்து வறுத்து வை!"

"சரி அத்தே!"



"சீக்கிரமாப் போயிட்டு வா. பசி வயித்தைப் புரட்டுது."

"ம்..." - என்றவாறு அலமாரியில் வைத்திருந்த சில்லறையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் சாவித்ரி.

"சாவி! போற வழியில அந்த ஆனந்தி வீட்ல இந்த உமா குட்டி இருந்தா வரச் சொல்லு. கழுதை! நேரம் காலம் தெரியாம ஊரைச் சுத்திட்டு இருக்கு." - என்றவாறே கட்டிலில் சாய்ந்தாள் ரங்கநாயகி. தலையாட்டிவிட்டு வெளியேறினாள் சாவித்ரி.

"ரங்கா! எனக்குப் பீடி தீர்ந்து போச்சு. மருமகள வாங்கியாரச் சொல்லு." - கணவர் சீனிவாசன் லேசான இருமலோடு சொல்ல, பக்கவாட்டில் திரும்பி முறைத்தாள்.

"அந்தக் கருமத்தைக் குடிச்சிட்டுத்தானே இப்படி விடாம இருமிட்டே இருக்க. சனியனை விட்டுத் தொலையேன். ராத்திரியெல்லாம் இருமல் சத்தத்தில தூங்கக்கூட முடியல்ல."

"நான் என்ன உம் மகனை மாதிரி குவாட்டர் ஆப்புன்னா கேட்கிறேன். பீடிதானே கேட்கிறேன். அதைக்கூட உன்னால வாங்கித் தர முடியாதா?"

"யோவ்! வாயை மூடுய்யா... அவன் வயசென்ன? உன் வயசு என்ன?"

"அட! இதுக்கெல்லாமா வயசு விபரம் கேட்கணும்?"

"யோவ்! உனக்கு உடம்பு ஓய்ஞ்ச மாதிரி வாய் ஓயமாட்டேங்குதே. சின்னவ கல்யாணம் முடியுற வரைக்கும் வாயையும் கையையும் அடக்கி வெச்சிட்டு இரு. புரியுதா?"

"ரங்கா! நான் என்ன கேட்கிறேன்? நீ என்ன சொல்றே?"

"ஏ! அறிவு கெட்ட மனுஷா! இப்போதைக்கு வேலைக்குப் போயிட்டு இருக்கிறது சின்னவ மட்டும்தான். இப்போ அவளும் நின்னுட்டா. இனிமே துட்டுக்கு என்ன பண்றது? அதனால பீடி பிடிக்கிறதெல்லாம் நிறுத்திடு."

"ஏன் ரங்கா! இத்தினி வயசுக்கப்புறமும் உன்னால ஒரு நாள்கூட மீனோ கறியோ தின்னாம இருக்க முடியல்ல. ஒரு ரெண்டு ரூபாய்க்கு பீடி வாங்க இப்படித் தடை போடுறியே?"

"எனக்கு விரோதி வெளிய இருந்து வரவேண்டாம். நீ ஒரு ஆள் போதும்!" - நொடித்தாள்.

"அம்மா! இப்போ எதுக்கு என்னைக் கூப்பிட்டு அனுப்பினே?" - சிணுங்கியவாறே வந்தாள் உமாபாரதி. தாயை உரித்துக் கொண்டு பிறந்திருந்த உமா இன்னும் குழந்தைத்தனம் மாறாமல் இருந்தாள். கழுத்து வரை மட்டுமே படர்ந்திருந்த கூந்தலை வாரிப் பின்னலிடாமல் பறக்க விட்டிருந்தாள்.

"ஏன்டி கழுதை! வயசுப்புள்ள இப்படியா நேரம் காலம் தெரியாம ஊர் சுத்திட்டு வருவே?" - மகளைக் கடிந்து கொண்டாள் ரங்கநாயகி.

"போம்மா! டி.வி.யை ரிப்பேர் பாருன்னு எத்தனை வாட்டி சொன்னேன். கேட்கிறியா நீ? நான் நாடகம் பார்க்க வேண்டாமா?"

"நாடகம்தான் உனக்கு முக்கியமாப் போச்சு!"

"ஆமா! உனக்கு ராஜேஸ்வரி பெரியம்மாகூட பேசுறதுதான் முக்கியம். அப்பாவுக்கு இந்த ரூமும் நாலு பீடியும் போதும். அண்ணிக்குக் கிச்சன் மட்டும்தான்



உலகம். அதை விட்டுட்டு வெளியே வரவே மாட்டாங்க. காயத்ரிக்கு ஒரு கவலையும் கிடையாது. ஜாலியா கடைக்குப் போயிடுறா. நான் மட்டும் வீட்லயே அடைஞ்சு கிடக்கணுமா?" - உதட்டைச் சுழித்தவாறே கேட்டாள் உமா.

"ஏய்! நான் ஒரு கேள்விதானே கேட்டேன்?"

"ரங்கா! உன் பொண்ணு உருவத்தில மட்டுமில்ல, பேச்சுலயும் உன்னை மாதிரிதான் வர்றா!"

"போதும்... நீ வாயை மூடிட்டு இரு. என்னைக் குறை சொல்லாம உன்னால இருக்க முடியாதே!"

"அம்மா! உங்க சண்டையை எல்லாம் அப்புறம் போடுங்க. இப்ப என்னை எதுக்காகக் கூப்பிட்டே?"

"அடியேய்! வயசுப் பொண்ணா லட்சணமா வீட்டோட இருடி. நாளைக்கே மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்து அக்கம் பக்கம் விசாரிச்சா, நாலு பேர் நல்ல விதமாச் சொல்ல வேண்டாமா?"

"பொண்ணு பார்க்க வர்றவங்க ஏன் அக்கம் பக்கம் விசாரிக்கணும்?"

"பொண்ணு எப்படின்னு விசாரிக்கிறது வழக்கம்தானே!"

"அப்போ மாப்பிள்ளையைப் பத்தி நாம விசாரிக்கணுமா?"

"ஆமா! விசாரிச்சு நாலு பேர் நல்ல விதமாச் சொன்னாத்தான் பொண்ணைக் கொடுப்பேன்." - பெருமையாய்ச் சொன்னாள் ரங்கநாயகி.

"அப்போ ஏம்மா காயத்ரிக்குப் பார்த்த மாப்பிள்ளையை மட்டும் எதுவுமே விசாரிக்காம கல்யாணத்திற்குத்

தேதி குறிச்சே?" - வெகுளியாய் உமா கேட்க, திணறிப் போனாள் ரங்கநாயகி.

உள் அறையில் தரையில் பாய் விரித்துக் கவிழ்ந்து படுத்திருந்த காயத்ரி, உமாவின் கேள்வியால் தன் அழுகையை நிறுத்திக் காதைக் கூர்மையாக்கினாள். அத்தை திணறுவது நன்றாகப் புரிந்தது.

"அது... அது வந்து... மாடசாமி யாரு? வெளி ஆளா விசாரிக்கிறதுக்கு? நம்ம சொந்தக்காரப் பயதானே. சின்ன வயசில இருந்தே தெரியுமே! பிறகேன் விசாரிக்கணும்? தங்கமான பையன்டி அவன்."

"அப்போ ஏம்மா அந்த அக்கா செத்துப் போச்சு?"

"எ... எந்த அக்கா?" - ரங்கநாயகி பற்களைக் கடித்தவாறே மகளைப் பேசாமல் இரு என ஜாடை காட்டினாள். ஆனால் குழந்தைத்தனமாகவே இருந்த உமாவால் தாயின் ஜாடையைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

"அதாம்மா... மாடசாமியோட பெண்டாட்டி திலகா அக்கா. அவங்க ஏன் தூக்குப் போட்டுச் செத்தாங்க?" - உமா சத்தமாகவே கேட்க, அறைக்குள் இருந்த காயத்ரி மட்டுமல்ல, கடையில் இருந்து கருவாடுடன் வீட்டு வாசலை மிதித்த சாவித்ரியும் தலையில் இடி இறங்கியது போல் உறைந்து போனாள்.

தங்கைக்குப் பார்த்த மாப்பிள்ளை திருமணமானவனா? அதுவும் இரண்டாம் தாரமாய்த் தன் தங்கையைக் கேட்டார்களா? என்ற அதிர்வில் சாவித்ரியின் மொத்த உடலும் நடுங்கியது. காயத்ரியோ உடம்பில் உயிரே இல்லாததைப் போல் அசைவற்றுப் போயிருந்தாள்.



மாப்பிள்ளையைப் பற்றிய ரகசியங்கள் இன்னும் என்னென்ன வெளியே வரப் போகிறதோ என்ற திடுக்கிடலோடு நெஞ்சைப் பற்றிக் கொண்டு வாசலிலேயே நின்று கொண்டாள் சாவித்ரி.

பதட்டமாய் எழுந்து மகளின் வாய் மீது ரெண்டு போட்டாள் ரங்கநாயகி.

"சனியனே! எந்த நேரம் என்ன பேசணும்னு தெரியாது உனக்கு? ஆள் வளர்ந்திருக்கியே தவிர, மண்டையில ஒன்னும் கிடையாது. உன்னையெல்லாம் எப்படித்தான் ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுக்கப் போறேனோ?"

"என்னை ஏம்மா அடிக்கிற? நான் உண்மையைத்தானே சொன்னேன். அப்பா! அந்தத் திலகா அக்கா செத்ததுக்கு நாமகூடப் போனோமில்ல!" - என்றாள் தந்தையைப் பார்த்து.

"ஆமாம்மா! அவளுக்கு என்ன வியாதியோ என்னவோ... தற்கொலை செய்துகிட்டா போலிருக்கு!"

"இல்லப்பா. உங்களுக்கு விஷயமே தெரியாதா? நம்ம மாடசாமி அண்ணன்தான் அந்த அக்காவை அடிச்சே கொன்னுட்டாராம்."

சாவித்ரி தடுமாறிக் கீழே விழுந்து விடாமல் இருக்க, நிலைப்படியைப் பற்றிக் கொண்டாள். தலை சுழல்வது போல் இருந்தது.

"என்ன? என்னம்மா சொல்ற? இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?" - உண்மையாகவே அதிர்ந்து போய்க் கேட்டார் சீனிவாசன்.

"அன்னிக்கே ஊர்க்காரங்க எல்லாரும் பேசினாங்கப்பா. உங்க காதுல விழலியா? அம்மாவுக்குக் கூட தெரியுமே! இல்லம்மா?" - எனத் தாயை நோக்கிக் கேட்க, இன்னும் பதறிப் போனாள் ரங்கநாயகி.

"சண்டாளி! வாயை மூடுடி. சின்னவ காதுல விழுந்து தொலைக்கப் போவுது. கடைக்குப் போனவளும் வர்ற நேரம்தான்."

"அப்போ அண்ணிக்குத் தெரியாதா? ஆமா! அவங்க யாரும் இங்கே வரலியே! நான் வேணா காயுகிட்ட சொல்லிட்டு வரவா?" - என எழுந்தவளின் முதுகில் அறைந்தாள் ரங்கநாயகி.

"பைத்தியக்காரி... பைத்தியக்காரி! உன் வாயை வெச்சிக்கிட்டு சும்மா இருக்க மாட்டியா? என் வயித்துல வந்து பொறந்திருக்கியே!"

"ரங்கா! இப்ப ஏன் புள்ளய அடிக்கிற? விடு அவளை!"

"ம்ஹூம்... இவளை இங்கே வெச்சிருந்தா காரியத்தையே கெடுத்திடுவா. நாளைக்கு விடிஞ்சதும் மொத வேலையா மூத்தவ வீட்ல போய் விட்டுடணும். கல்யாணம் முடிஞ்ச பிறகு வந்தாப் போதும்!"

"ஏம்மா! காயு கல்யாணத்தை நான் பார்க்க வேண்டாமா?"

"நீ இருந்தா கல்யாணமே நடக்காதுடி. நானே எவ்வளவு கஷ்டப்பட்டுச் சாவித்ரிய சம்மதிக்க வெச்சேன். அக்காக்காரி சொன்னாத்தான் அந்த வாயாடி கேட்பா. எல்லாம் கூடி வர்ற நேரம், இந்தப் பைத்தியக்காரி வாயை



விட்டு எல்லாத்தையும் கெடுத்திடுவா போலிருக்கே!" - ரங்கநாயகி ஆற்றாமையோடு புலம்பிக் கொண்டிருக்க, அதற்கு மேலும் நிற்க இயலாமல் கால்கள் தொய்ந்து போக, மயங்கிச் சரிந்தாள் சாவித்ரி.

## 4

எதிர்பார்த்தேன் இளங்கிளியே
காணலியே இளம்காற்றே
ஏன் வரல்ல புரியலியே வாராளோ
என் மாது, பூங்காற்றே போ தூது!

சுள்ளென வெயில் தலையில் இறங்குவதைக் கூட உணராமல், அந்த ஜவுளிக் கடையின் முன்னால் சாலையோரமாய்த் தன் யமஹாவை நிறுத்தி, அதன் மீது சாய்ந்து நின்றபடி காத்திருந்தான் ஜனார்த்தனன். பார்க்கும் யாரையும் அசர வைக்கும் அழகு முகம்.

வியர்வையில் குளித்திருந்த போதும் புத்துணர்வோடு தெரிந்த கம்பீரமான அழகு. துளியும் அழுக்கோ கசங்கலோ இல்லாத இஸ்திரி போடப்பட்ட உடை. வலக்கையில் யானை முடியால் செய்யப்பட்டிருந்த தங்க கைச்செயின் அவனது பொன்நிறத்தை இன்னும் எடுப்பாய்க் காட்டியது.

அவஸ்தையாய் நகத்தைக் கடித்துக் கொண்டிருக்க, வலது கை மோதிர விரலில் வைரக்கல் பதித்த மோதிரம் மின்னியது. கழுத்தை ஒட்டினாற்போல் மெல்லிய செயின். இதய வடிவ டாலர். காந்தக் கண்கள்.

அது அடிக்கடி சாலையைப் பார்ப்பதும் ஏமாற்றமாய்த் திரும்புவதுமாய் இருந்தது. வழக்கமாய் எட்டு மணிக்கே

வந்துவிடும் காயத்ரியை இன்று இன்னும் காணவில்லையே! ஒரு நாளும் விடுமுறை போட மாட்டாளே!

தன்னால் அவள் வீட்டில் எதுவும் பிரச்சனை ஆகியிருக்குமோ? அவளிடம் தன் மனதைச் சொல்லாமல் நேரே வீட்டிற்குப் போனது தவறோ? ஆனால் அந்த அம்மாள் சொன்னது உண்மையில்லை. பத்து நாளில் திருமணம் என்றதும் காயத்ரியின் அக்கா மிரண்டார்களே!

ஏதோ மறுப்பாய்ப் பேசத் துவங்கும்முன் அவர்களை உள்ளே போகச் சொல்லிவிட்டார்களே! இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதைக் காயத்ரியிடமே பேசித் தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என்று காலையிலே எழுந்து மற்ற வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு ஓடி வந்தால்... கடையில் காயத்ரி இல்லை. அதோடு கணேஷும் வரவில்லை.

சோமசுந்தரம் மட்டுமே அமர்ந்திருந்தார். கூட்டமும் அதிகமாய் வந்து கொண்டிருந்ததால், கடைக்குள் அமராமல் வெளியே வந்து நின்றான். நேரம்தான் கடந்து கொண்டே போனது. காயத்ரி வரும் சுவடே இல்லை.

கணேஷ் வந்தாலாவது கேட்டுப் பார்க்கலாம். வேறு யாரிடம் கேட்பது? பேசாமல் அவள் வீட்டிற்கே போய்ப் பார்த்துவிடலாமா? வேண்டாம். அது பிரச்சனையாகிவிடும். பொறுமையின்றி நகத்தைக் கடித்து வரவே, வலிக்க ஆரம்பித்த போது கணேஷின் ஹீரோ ஹோண்டா வந்தது.

சட்டென மகிழ்ந்து கையை அசைத்தான் ஜனார்த்தனன். கணேஷ் தன் வேகத்தைக் குறைத்து நண்பனின் அருகில் வந்து பிரேக் இட்டு நிறுத்தினான்.



"ஹாய்டா! என்ன இங்கே நிக்கிற?"

"சும்மாதான்." - புன்னகைத்தான் ஜனார்த்தனன்.

"என்ன? சும்மாவா? ஜனா! மேலே காயுறது சூரியன்டா. நிலா இல்ல!"

"ஏன்டா... அதுகூடத் தெரியாதா எனக்கு?"

"பின்னே! வெயில் இப்படிக் கொளுத்துது. ரோட்ல நின்னுட்டு சும்மா நிக்கிறேன்ற?"

"கணேஷ்! உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். அப்பாதான் கடையில இருந்தாங்க. அதோட கூட்டமா இருந்தது. அதான்..."

"அதுக்கு ஏன்டா வெளியே நிக்கிற? கடைக்குள்ள ஏதாவது சேர்ல உட்காரலாமில்ல. வா! உள்ளே போகலாம்." - என வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டுப் பூட்டிச் சாவியை எடுத்தான் கணேஷ்.

"கணேஷ்! உங்கிட்ட கொஞ்சம் பேசணுமே!"

"வாடா! உள்ளே போய்ப் பேசலாம்!"

"இல்ல... கொஞ்சம் தனியா... எந்த டிஸ்டர்பும் இல்லாமப் பேசணும்."

"என்னடா! எதுவும் பிரச்சனையா?"

"எனக்கே சரியாத் தெரியல்ல."

"என்னடா? என்னமோ மாதிரிப் பேசுற?"

"கொஞ்சம் குழப்பத்தில் இருக்கேன், கணேஷ்!"

"ம்... நினைச்சேன். முகத்தில எப்பவும் இருக்கிற ஒளி இன்னிக்கு இல்லியே... ஏன்? காயத்ரியைப் பார்க்க வில்லையா?"

"விளையாடாதே, கணேஷ்!"

"அட! வெட்கத்தைப் பாரு! சரி, சொல்லு. எங்கே போகலாம்."

"எங்கேயாவது ஜூஸ் கார்னருக்குப் போகலாமா?"

"சரி, கிளம்பு!"

"வாடா! என் வண்டியிலேயே போயிடலாம்."

"சரி... நீ வண்டிய ஸ்டார்ட் பண்ணு. நான் அப்பாகிட்ட சொல்லிட்டு வந்துடுறேன்." - என்றவாறு கடைக்குள் நுழைந்தான்.

"அப்பா!"

"என்னடா, ஏன் இவ்வளவு நேரம்?"

"பேங்க்ல கூட்டம்பா!"

"சரி, சாப்பிட்டியா?"

"இல்லப்பா... அப்பா! ஒரு பத்து நிமிடம் வெளியே போயிட்டு வந்திடுறேம்பா!"

"இப்பத்தானடா வந்தே?"

"ஜனா வந்திருக்காம்பா... கொஞ்சம் அர்ஜெண்ட்!"

"சரி! சீக்கிரமாப் போயிட்டு வந்திடு." - என்றவர் தன் வேலையில் மூழ்கிவிட, வெளியே வந்து நண்பனின் பைக்கில் தொற்றிக் கொள்ள, ஐந்தே நிமிடத்தில் அந்த ஜூஸ்



கார்னர் சென்ற போது, அது ஏராளமான கூட்டத்தோடு தெரிந்தது.

பைக்கை ஓரங்கட்டி நிறுத்திவிட்டு இறங்கி, "திராட்சை ஜூஸ் இரண்டு!" - என ஆர்டர் பண்ணிவிட்டு, காலியாய் இருந்த டேபிளின் முன்னால் அமர்ந்தனர்.

"ம்... இப்பச் சொல்லு!" - என்றான் கணேஷ். ஜனாவின் குரல் தயங்கியது.

"கணேஷ்! வந்து..."

"அதான் வந்துட்டோமே... விஷயத்தைச் சொல்லு!"

"நான்... நேத்து..."

"என்ன! காயத்ரிகிட்ட உன் விருப்பத்தைச் சொல்லிட்டியா?"

"ம்... சொல்லிட்டேன்."

"வாவ்! கன்கிராட்ஸ்டா. ஒரு வழியா மூணு வருஷங் கழிச்சு உனக்குத் தைரியம் வந்திருச்சு. வாழ்த்துக்கள்!"

"டேய்! முழுசாக் கேளுடா!"

"ம்... சொல்லு, சொல்லு!"

"கணேஷ்! நான் என்னோட விருப்பத்தைச் சொன்னது உண்மை. ஆனா, காயத்ரிகிட்டச் சொல்லல."

"பின்னே...?" - புருவம் சுருக்கினான் கணேஷ்.

"முதல்ல அம்மாகிட்டச் சொன்னேன். அம்மா அப்பாகிட்டச் சொல்லி, நாங்க மூணு பேருமா சேர்ந்து காயத்ரியோட வீட்டுக்குப் போனோம், பெண் கேட்டு..." -

தயக்கமாய் ஜனா சொல்ல, வியப்பாய் விழிகளை விரித்தான்.

"டேய்! என்னடா சொல்றே?"

"ஆமாண்டா! அவங்க வீட்ல போய்ப் பெண் கேட்டோம். ஆனா அவங்க சொன்னதுதான் எனக்கு ரொம்பக் குழப்பமா இருக்கு!"

"என்ன சொன்னாங்க?"

"காயத்ரிக்கு ஏற்கெனவே கல்யாணம் முடிவாகிப் போச்சாம். பத்து நாள்ல கல்யாணமாம்."

"என்ன?" - அதிர்ந்தான் கணேஷ்.

"எனக்கும் ஷாக்காத்தான் இருக்கு, கணேஷ். ஆனா காயத்ரியோட அக்கா முகத்திலயும் அதிர்ச்சி தெரிஞ்சது."

"ஏன்?"

"நான் நினைக்கிறேன்... அவங்க அத்தை பொய் சொல்றாங்கன்னு..."

"எப்படிடா சொல்ற?"

"கணேஷ்! நாங்க போனதும்... அம்மா உங்க வீட்டுப் பெண்ணை எங்க பையனுக்கு ரொம்பப் பிடிச்சிருக்குது. அதான் பெண் கேட்டு வந்திருக்கோம்னு சொன்னாங்க. உடனே அந்த அம்மா முகத்தில அப்படி ஒரு மலர்ச்சி!"

"சரி... பிறகேன் அப்படிச் சொன்னாங்க?"

"கேளுடா! நாங்க காயத்ரின்னு பேர் சொன்னதும், அந்த மலர்ச்சியெல்லாம் காணாமப் போயிடுச்சு. முகமே மாறிப் போச்சு. பேச்சும் மாறிடுச்சு."



"ஏன்?"

"நாங்களும் குழம்பிட்டோம். ஆனா அந்த அம்மா இன்னொரு சின்னப் பெண்ணைக் காட்டி, அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கான்ற மாதிரி கேட்க ஆரம்பிச் சிட்டாங்க!"

"அப்படிப் போடு! மச்சம்டா உனக்கு? அந்தப் பொண்ணு எப்படி இருந்தது?"

"விளையாடாதே, கணேஷ்!"

"ஓ.கே. கூல் டவுண். சரி, இப்ப என்ன பண்ணலாம்னு இருக்கே?"

"கணேஷ்! கல்யாண விஷயம் உண்மையா பொய்யான்னு நான் காயத்ரிகிட்ட கேட்கணும்!"

"கேளு!"

"அதுக்கு நான் அவளைப் பார்க்கணும்!"

"பாரு!"

"எங்கே? எப்படி?"

"இதென்னடா கேள்வி? எங்கூட வா. கடையிலதான் நிற்பா. சும்மா துணி வாங்குற மாதிரி அவ முன்னால போய் நின்னு கேளு!"

"டேய்! காயத்ரி இன்னிக்குக் கடைக்கே வரலடா!"

"என்ன?"

"ம்... காலையில இருந்து உன் கடைக்கு எதிர்லதான் வெயிட் பண்ணினேன். அவ வரவே இல்லை!"

"நீ கவனிச்சிருக்க மாட்டே ஜனா! அவ ஏழரைக்குள்ள கடைக்கு வந்திடுவாளே!"

"நான் ஏழு மணிக்கே... கடை திறக்கும் முன்பே வந்து வெயிட் பண்ணினேன்." - ஜனா சொல்ல, கணேஷ் தன் வாட்சைத் திருப்பிப் பார்த்தான்.

"அடப்பாவி! மணி இப்போ ரெண்டுடா. அப்படின்னா ஏழு மணி நேரமாவா அந்த வெயில்ல நின்னே?"

"ஸாரிடா! அந்தக் கணக்கை யெல்லாம் நான் பார்க்கல்ல!"

"நீ பார்க்க மாட்டே! ஆனா இதே மாதிரி ரெண்டு நாள் நின்னேன்னு வை! அடையாளமே தெரியாம மாறிடுவே!"

"என்னடா சொல்ற?"

"இப்போ அரவிந்த் சாமி கலர்ல இருக்க. இன்னும் ரெண்டு நாள்ல முரளி கலருக்கு மாறியிருப்பே!"

"இப்ப இந்தப் பேச்சு ரொம்ப முக்கியமா?"

"இல்லை!"

"என் மேட்டருக்கு வாடா."

"வந்திட்டேன்... சொல்லு! நான் என்ன பண்ணணும்?"

"நான் காயத்ரியைப் பார்க்கணும்... பேசணும்..."

"அதுக்கு?"

"நீதான் ஏற்பாடு செய்யணும்."

"வெரிகுட், குட் ஜாப்!" - லேசாய்க் கை தட்டினான் கணேஷ்.



"நான் சீரியஸாப் பேசுறேன்டா!"

"ம்... தெரியுது. பட்... நான் எப்படி ஏற்பாடு பண்றது?"

"ஏன்டா முடியாது?"

"எனக்கு அவ வீடே தெரியாதுடா!"

"எனக்குத் தெரியுமே! நான் கூட்டிட்டுப் போறேன்!"

"அப்போ ரெண்டு பேரும் போகலாமா?"

"ம்ஹூம்... நான் தெருவோரமா நின்னுப்பேன். நீ மட்டும் போய்ப் பேசு!"

"என்ன பேசணும்?"

"கடைக்கு ஏன் வரலன்ற மாதிரி பேச்சைத் தொடங்கு. அப்புறம்..."

"ஹேய் ஜனா! வெயிட் எ மினிட். சொல்ல மறந்திட்டேனே... நேத்து ஈவ்னிங் ஒருத்தன் வந்தான்டா. காயத்ரியோட அக்கா புருஷன்னு சொன்னான்."

"இஸிட்? என்ன சொன்னான்?" - பரபரப்பாய்க் கேட்டான் ஜனா!

"ஏதோ முக்கியமான விஷயம். காயத்ரிய அனுப்புங்கன்னு வந்தான். நல்ல போதை வேற. அப்பா காயத்ரியை அழைச்சி வீட்டுக்குப் போகச் சொன்னாங்க. ஆனா அந்த ஆள் வேணும்னே அப்பாவை ரொம்ப மரியாதைக் குறைவாப் பேசி, இனிமே இந்த வேலை எங்களுக்கு வேண்டாம்னு கணக்கை முடிச்சு இந்த மாசச் சம்பளத்தையும் வாங்கிட்டுப் போயிட்டான்டா!"

"என்ன?"

"நான்கூட ஏதோ போதையில உளறுறான்னு அதைப் பெரிசபடுத்தலே. ஆனா நீ சொல்றதைப் பார்த்தா... ஒரு வேளை கல்யாண ஏற்பாடு உண்மையா இருக்குமோ?"

"கணேஷ்!"

"பயப்படாதேடா! ஏன்னா, காயத்ரியும் இன்னிக்கு வேலைக்கு வரலியே! அதான் யோசிக்கிறேன்."

"கணேஷ்! காயத்ரிக்கு எல்லாம் தெரியுமா? ஏதாவது சொன்னாளா?"

"ஸாரிடா! எங்கிட்டகூட இதுவரை பேசினதில்லை. அவ உண்டு, அவ வேலை உண்டுன்னு இருப்பாளே!"

"ஒரு வேளை அவ கூட நிற்பாங்களே... அவங்ககிட்ட சொல்லியிருப்பாளா?"

"இருக்கலாம்!"

"கணேஷ்! நீ அவங்ககிட்ட விசாரியேன். உண்மையா இல்லையான்னு தெரிஞ்சிடும்," - என்று நண்பனைக் கூர்மையாய்ப் பார்த்தான்.

"ஜனா... ஒரு வேளை உண்மையா இருந்தா?"

"கணேஷ்?"

"இல்ல... ஒரு வேளை காயத்ரிக்குக் கல்யாணம் முடிவாகியிருந்தால் நீ... நீ என்ன செய்வாய்?" - கணேஷின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்தான். சில கணங்களுக்குப் பிறகு ஒரு பெருமூச்சுடன் நண்பனைப் பார்த்தான்.



"சந்தோஷமா வாழட்டும்னு நினைச்சுப்பேன். பிறகு அவ முன்னாடி போய் நிற்கவே மாட்டேன்." - என்றான் உறுதியாய்.

கணேஷின் முகம் மலர்ந்தது. "கிரேட்! ஓ.கே. ஒரு வேளை பொய்யாய் இருந்தால்...?"

"எத்தனை தடை வந்தாலும் காயத்ரியைக் கல்யாணம் பண்ணியே தீருவேன். இதுல எந்த மாற்றமும் இல்லை."

"தட்ஸ் குட்! இந்த உறுதி போதும். வாடா! நான் உன்னை அழைச்சிட்டுப் போறேன்!" - என எழுந்தான்.

"எங்கேடா?"

"காயத்ரி வீட்டுக்கு! எதையுமே ஆறப் போடக்கூடாது. சூட்டோடு சூடா செய்து முடிச்சிடணும்!"

"தேங்க்யூ நண்பா!" - என்றவாறே ஜனாவும் எழுந்து கொள்ள, பேரர் பணிவாய் நெருங்கினான்.

"ஸார்! கிரேப் ஜூஸ் கொஞ்சம் தாமதமாகும். வேறு ஏதேனும் சாப்பிடுறீங்களா?"

"நோ தேங்க்ஸ். நாங்க கிளம்புறோம்!"

"ஸாரி ஸார்! ஒரு டென் மினிட்ஸ் வெயிட் பண்ணுங்க!"

"அந்தப் பத்து நிமிடத்தில் எங்கள் வேலையில் பாதி முடிந்துவிடும். பரவாயில்ல. மற்றவர்களைக் கவனியுங்கள். வாடா!" - என்றவாறு ஜனார்த்தனன் முன்னே செல்ல, அவனைத் தொடர்ந்தான் கணேஷ்.

இருவருமாய் ஏறிக்கொள்ள யமஹா சீறிப் புறப் பட்டது.

"கணேஷ்! நான் ரொம்ப ஹேப்பியா இருக்கேன்டா. ரொம்பத் தேங்ஸ்டா!"

"ஜனா! கண்ட்ரோல் யுவர்செல்ப். முடிவு எதுவா இருந்தாலும் நீ ஏத்துக்கணும்."

"கண்டிப்பாடா. ஆனா எனக்கு நம்பிக்கை இருக்குடா. காயத்ரி நிச்சயமா எனக்குக் கிடைச்சிடுவா!"

"உன் நம்பிக்கை பலிக்கட்டும்." - கை உயர்த்தி ஆசிர்வதித்தான்.

"நன்றிடா! உன்னாலதான் இது சாத்தியம், கணேஷ்!"

"எது?"

"இதோ... இப்போ போறோமே... காயத்ரி வீட்டுக்கு!"

"சொல்லுவடா... உங்களுக்கு ஒரு ஹெல்ப் வேணும்னா நாங்க வேணும். இல்லேன்னா எங்களுக்கே தெரியாம பெண் கேட்டுப் போவீங்க! ஏன், கல்யாணம்கூடப் பண்ணிப்பீங்க."

"ஸாரிடா!"

"என்ன ஸாரி? எங்கிட்ட ஒரு வார்த்தை சொன்னியா நீ?"

"ஸாரிடா! அப்பா சம்மதிப்பாங்கன்னு நான் நினைக்கவே இல்லை. அதோட நேத்து நாளும் நல்லா இருக்குன்னு சொன்னதால..."



"ம்... ம்... புரியுது. காயத்ரி வீட்ல ஓ.கே. சொல்லியிருந்தா என்கிட்டகூடச் சொல்லாம தாலியும் கட்டியிருப்பே!"

"சேச்சே! நீ இல்லாம எப்படிடா? எப்பவுமே மாப்பிள்ளைத் தோழன் நீதான்."

"நம்புறேன். வேற வழி?"

"கணேஷ்! அது... காயத்ரி மாதிரி இல்ல...?" - வண்டியை வேகம் குறைத்தான் ஜனார்த்தனன்.

"எங்கே?"

"அதோ! அந்தக் கோவில்ல...!" - வண்டியைத் திருப்பினான்.

"நல்லா பார்த்தியாடா?"

"ஷ்யூர்... அவதான். என் கண்ணு பொய் சொல்லாது!"

"எப்படிச் சொல்லும்? மூணு வருஷமா பார்த்துப் பழகின முகமாச்சே!" - என்றவாறு பார்வையைச் சாலையோரமாய் வீசிக் கொண்டே வர, சின்னதாய் இருந்த சத்துமாரியம்மன் கோவில் தெரிந்தது. சாலையோரமாய் வண்டியை நிறுத்தினான்.

"இந்தக் கோவிலா?" - கேட்டுக்கொண்டே இறங்கினான் கணேஷ்.

"ஆமா... இங்கேதான் பார்த்தேன்!"

"கோவில் பூட்டியிருக்குடா. இந்த நேரம் யார் கோவில்ல இருப்பாங்க?"

"இல்லடா... நான் பார்த்தேன். அந்த வேப்ப மரத்தடியில... அதோ!" - பளிச்சென முகம் மலரக் கை

நீட்டிக் காட்டினான் ஜனார்த்தனன். அவன் கைகாட்டிய திசையில் பார்த்தான் கணேஷ்.

சிலுசிலுவென வீசிய வேப்ப மரத்துக் காற்றில் சில பழுங்கள் விழுந்தன. மரத்தில் கூடியிருந்த பறவைகளின் ஓசையிலும் கூடத் தன் கவனம் சிதறாமல் ஒரு வெறித்த பார்வையோடு வேப்ப மரத்தின் அடியில் சாய்ந்து அமர்ந்திருந்தாள் காயத்ரி.

சாலையில் சென்ற வாகனங்களின் ஒலியோ இருவரின் காலடியோசையோ அவளை அசைக்கவில்லை. வேப்ப மரத்தின் பழுத்த பழங்கள் 'சொட்'டென்ற சத்தத்துடன் அவள் மீது பட்டுக் கீழே விழ, அப்போதும் அவளிடம் அசைவில்லை.

நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே அவளை நெருங்கினர். "நான் வெளியே வெயிட் பண்றேன். நீ பேசு!" - எனக் கணேஷ் ஜனாவிடம் கைகாட்டிவிட்டு நகர்ந்து செல்ல, தயக்கமும் படபடப்புமாய்க் காயத்ரியை ஏறிட்டான் ஜனார்த்தனன்.

அதே நிலைத்த பார்வையுடன் அற்புதமான சிலை போன்று அமர்ந்திருந்தவளைப் புன்னகையோடு நெருங்கினான். இதுவரை தூரமாகவே பார்த்திருந்த முகம், இன்று தன் எதிரே தங்க நிலவாய் ஜொலித்தது. நெற்றி வரை அபர்த்தியாய்ப் பரவியிருந்த கருங்கூந்தல் காற்றின் அசைவிற்கேற்ப அலைந்து கொண்டிருந்தது.

சின்னஞ்சிறிய பொட்டும் சிறுதீற்றலாய்க் குங்குமமும் நெற்றியை அலங்கரித்திருந்தது. இமைக்காத கண்கள்,



கருமை நிறப் பட்டாம்பூச்சியை நினைவுபடுத்தின. பட்டுக் கன்னங்களில் கோடாய் இறங்கியிருந்த கண்ணீர் காய்ந்திருந்தது.

வற்றி மெலிந்த தேகம், நீண்ட கைகள், மெல்லிய விரல்கள், நீளமாய் மின்னிய நகங்கள், பஞ்சு போன்ற மென்பாதங்கள், அதில் நெளிந்த மெல்லிய கொலுசு என காயத்ரியின் மொத்த உருவத்தையும் தன்னுள் பதித்துக் கொண்டான்.

தான் வந்து நின்று இவ்வளவு நேரமான பின்பும் கூட, அசைவில்லையே! இவளிடம் எப்படிப் பேச்சைத் தொடங்குவது? என்ன சொல்லி அழைப்பது? தயக்கமாய்த் தொண்டையைச் செருமினான்.

ம்ஹூ்ம்... அவள் அசையவே இல்லை.

லேசாய் திரும்பியவனின் கண்கள் அவள் பாதத்தில் நிலைத்தன. வேம்பின் மேல் ஏறிக் கொண்டிருந்த கட்டெறும்புகள் சில காயத்ரியின் பாதத்தில் ஏறத் துவங்கின. காயத்ரியோ அதை உணராமல், அசோக வனத்தின் சீதை போல் தவ நிலையில் உறைந்திருக்க, அவளைக் கடித்துவிடக் கூடாதே என்ற பதட்டத்தில் எறும்புகளைத் தட்டிவிட்டான் ஜனார்த்தனன்.

அதுவரை சிலையாய் இருந்தவள், சட்டென உணர்வு பெற்றாள்.

திடுக்கிட்டு நிமிர்ந்து தன் பாதத்தைத் தொட்டுக் கொண்டிருந்த ஆண் மகனைக் கண்டு பதறி எழுந்தாள், காயத்ரி.

# 5

நான் தேடிவந்த ஒரு கோடை
நிலவு நீதானே! மனக்கண்ணில்
நின்று பலகவிதை தந்தமகள்
நீதானே... நீதானே!

**"பா**ர்த்து! மரத்தில இடிச்சுக்கப் போறே?" - உரிமையாய் எச்சரித்தவனைக் கண்டு சற்று விலகி நின்றாள். சற்றே பெரிய கருவிழிகளை விரித்து அவனை நோக்கினாள்.

"ய... யார் நீங்க?"

"காயு! நான்தான் ஜனா!" - புன்னகையோடு அறிமுகம் செய்ய, காயத்ரி திகைத்தாள்.

"யாரு...?"

"ஜனா... ஜனார்த்தனன். கணேஷோட நண்பன். நேற்று உங்க வீட்டுக்கு உன்னைப் பெண் கேட்டு வந்தவன்!" - அதே புன்னகையோடு அவன் விவரிக்க, காயத்ரியின் பார்வை அவன் முகத்தில் நிலைத்தது.

'நீதானா அது? ஒரே நாளில் என் வாழ்க்கையையே புரட்டிப் போட்டவன் ஆயிற்றே நீ? இப்போது எதற்காக வந்திருக்கிறான்? ஏற்கெனவே என்னால்தான் குடும்ப மானம் போகிறது என்கிறாள் அத்தை. இதில் இவனுடன் இப்படிப் பொது இடத்தில் நின்று பேசுவது தெரிந்தால் போதும், கொன்றே விடுவாள்!'



அத்தையின் நினைவு வந்ததும் அவனை விட்டு நகர்ந்து வெளியேற முனைந்தவளைக் கை நீட்டித் தடுத்தான்.

"என்ன காயு! கிளம்பிட்டே?"

"பின்னே? உங்கிட்ட நின்னு பேசுவேன்னு எதிர் பார்த்தியா? அதுக்கு வேற ஆளைப் பாரு!" - சீறிவிட்டு விலகினாள்.

"காயு! ப்ளீஸ்... நில்லு காயு! நான் உங்கிட்ட நிறையப் பேசணும்."

"எங்கிட்ட நீ என்ன பேசணும்? வழியை விடு."

"பேசணும்... நிறையப் பேசணும். கிட்டத்தட்ட மூணு வருஷமா எம் மனசுக்குள்ள போட்டுப் பூட்டி வெச்ச நேசத்தைச் சொல்லணும். உனக்காக இத்தனை நாளா தவம் இருந்த அவஸ்தையைச் சொல்லணும். காலம்பூரா உன்னை மட்டுமே நேசிப்பேன்ற உண்மையைச் சொல்லணும்." - அவன் அழுத்தமாய்ச் சொல்ல, அதிர்ந்து நின்றாள் காயத்ரி.

விழிகள் இன்னும் பெரிதாக, அவனை வியப்பாய் ஏறிட்டாள்.

"எ... என்ன?"

"ஆமாம் காயு! நான் உன்னை விரும்புறேன். உன்கூட வாழ்நாள் முழுக்க வாழ ஆசைப்படுறேன். உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?" - அவன் நேரிடையாய்க் கேட்டுவிட, பேச்சற்றுப் போனாள்.

"ஏன் காயு! என்னைப் பிடிக்கலியா?"

சட்டெனச் சுற்றுப்புறத்தைத் திரும்பிப் பார்த்தாள். "இதோ பாருங்க... நீங்க யாரா இருந்தாலும் சரி. இப்படிக் கண்ட இடத்தில வெச்சுப் பேசுறது சரியில்ல."

"இது கோயில், காயு! நல்ல விஷயத்தைக் கோவில்ல வெச்சுப் பேசலாம். தப்பில்ல..."

"என்ன... எது நல்ல விஷயம்?"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறது."

"நான்சென்ஸ்... உங்க இஷ்டத்துக்கு நீங்களே முடிவு பண்ணிடுவீங்களா?"

"நோ... நோ... உன் கிட்டேயும் சம்மதம் கேட்டேனே... என்னைப் பிடிச்சிருக்கா?"

"இந்தக் கேள்வியை எங்கிட்ட எப்போ கேட்டிருக் கணும்?"

"எப்போ கேட்கணும்?"

"எங்க வீட்டுக்குப் பெண் கேட்டு வந்தீங்களே... அதுக்கு முன்னால என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருக் கணும். உங்க இஷ்டத்துக்குத் தட்டைத் தூக்கிட்டு வந்திடறதா?"

"தப்புதான்... உங்கிட்ட கேட்காம வந்தது தப்புதான். ஆனா நான் வந்தது சரிதான்!"

புருவம் சுருக்கினாள். "என்ன உளர்றீங்க?"

"காயு! தன் கடமையில கண்ணா இருக்கிற பொண்ணு கிட்டப் போய் ஒருத்தன், நான் உன்னை விரும்புறேன்னு சொல்றதுக்கும், பெத்தவங்களோட போய், உங்க வீட்டுப் பொண்ணை எங்களுக்குப் பிடிச்சிருக்குன்னு கேட்கிறதுக்கும் வித்தியாசம் இருக்கில்ல?"



"ஆமாம்...!" - என்றாள் யோசனையாய்.

"பெரியவங்களோட போய்ப் பெண் கேட்கிறதுதானே மரியாதை!"

"ம்..."

"அப்போ... நான் செய்தது சரிதானே?"

"என்ன... விளையாடுறீங்களா?"

"இல்ல காயு! உனக்காகத்தான் நான் இப்படிப் பண்ணினேன்!"

"என்ன?"

"ஆமா! நீ கடையில வேலை பார்த்திட்டு இருக்கும் போது உங்கிட்ட வந்து நான் இப்படிப் பேசினா அது உனக்கு நிறையச் சங்கடத்தைக் கொடுக்கும். மத்தவங்க முன்னாடி நீ சங்கடப்படக்கூடாதுன்னுதான் நான் உங்கிட்ட எதுவும் சொல்லல.

"அதோட... இப்படிப் பொண்ணுங்க பின்னாடி அலையுறது, ஜோடி போட்டு ஊரைச் சுத்துறது... இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நீ என் மனைவியா வரணும்னு ஆசைப்பட்டேன். நீ, உன் பேச்சு, உன் செயல்பாடுகள் எல்லாமே எனக்குப் பிடிச்சிருந்தது. உன்கூட வாழ்ந்தாத்தான் அது ஒரு முழுமையான வாழ்க்கையா இருக்கும்னு நினைச்சேன்.

"என்னோட விருப்பத்தை பேரண்ட்ஸ்கிட்ட சொன்னேன். அவங்களும் ஒத்துக்கிட்டாங்க. அதான் உங்க வீடு தேடி வந்தோம். இது தப்பா, காயு? நான் ஒன்னும் நீங்க போற வர்ற வழியில நின்னு உங்களை டிஸ்டர்ப் பண்ணலியே. உங்க பின்னாலே ஒரு நாளும் ஃபாலோ பண்ணினதில்லையே!

"மனசுக்குப் பிடிச்சிருந்தது. அதை நாகரிகமான முறையில் வந்து கேட்டோம். என்னைப் பிடிச்சிருந்தா சரின்னு சொல்லு. இல்லேன்னா வேண்டாம்னு சொல்லிடு. அதைத் தெரிஞ்சுக்கத்தான் இப்போ உன் வீட்டுக்குப் போயிட்டு..."

"என்ன? வீட்டுக்குப் போனீங்களா?" - பதறினாள்.

"இல்ல... போகணும்னு கிளம்பினோம். நல்ல வேளையா வழியிலேயே உன்னைப் பார்த்திட்டோம்!"

நெஞ்சில் கைவைத்து நிம்மதியாய் மூச்சு விட்டாள். "ஹப்பாடா..."

"என்ன ஆச்சு காயு?"

"என்ன ஆச்சா? நேற்று நீங்க செய்த காரியத்தால என் அக்கா ஹாஸ்பிடல்ல இருக்கா. நான் இப்படி வந்து கோவிலே கதின்னு நிற்கிறேன்."

ஜனாவின் முகம் மாறியது. "காயு! என்ன சொல்றே?"

"என்ன சொல்றது? உங்களுக்கு ஏன் ஸார் இந்த வேண்டாத வேலையெல்லாம்? நான் பாட்டுக்கு வீடு... வீடு விட்டா கடைன்னு இருந்தேன். உங்க வரவால எல்லாமே போச்சு!"



"என்ன? வீட்ல எதுவும் பிரச்சனையா?"

"பின்னே? இதுவரைக்கும் ஏதோ நான் கொண்டு போற பணத்துக்காக என்னை வீட்டோட வெச்சிருந்தாங்க. இப்போ எவனோ ஒருத்தனுக்கு ரெண்டாந் தாரமாத் தள்ளிவிட முடிவு பண்ணிட்டாங்க. பெரிய புண்ணியவான் ஸார் நீங்க!"

"காயு! ப்ளீஸ். தயவு செய்து கோபப்படாம என்ன நடந்ததுன்னு மட்டும் சொல்லு! என்ன பிரச்சனை?"

"அதை உங்ககிட்ட சொல்றதால என்ன ஆகப் போகுது?" - சலிப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"நோ... இது உங்க வீட்டுப் பிரச்சனையா இருக்கலாம். ஆனா பிரச்சனைக்குக் காரணமானவன் நான். தயவு செய்து சொல்லுங்க. வீட்ல என்ன நடந்தது? நாங்க கேட்டதுக்கு அந்தப் பெரியம்மா, ஏற்கெனவே உங்களுக்குக் கல்யாணம் முடிவாயிடுச்சு என்றார்களே! அது உண்மை இல்லையே!"

"இல்லை!"

"நான் யூகிச்சது சரிதான். சரி! வேறென்ன பிரச்சனை?" - அவனது தவிப்பு புதிராய் இருக்க, அவனை வியப்பாய்ப் பார்த்தாள். எப்படியும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் இவன்தான் மூலகாரணம். இவனிடம் சொல்வதில் தவறில்லை.

அவசரப்பட்டு ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இத்தனை இடையூறுகளை உண்டாக்கி விட்டோம் என்று இவனும் உணர வேண்டாமா? அதனால் எதையும் மறைக்காமல் முழுவதுமாய்ச் சொல்லி முடித்தபோது ஜனார்த்தனின் முகம் இருண்டு போயிருந்தது.

"இப்போ சொல்லுங்க. எதையுமே யோசிக்காம நீங்க பண்ணின காரியத்தால நாங்க எவ்ளோ கஷ்டப்படுறோம்னு புரியுதா? ஸார்! நாங்க வயித்துப் பாட்டுக்காக உழைக்க வர்றோம். அதனாலதான் எங்க கண்ணையும் மனசையும் எங்களோட கட்டுப்பாட்டுக்குள்ள வெச்சுப்போம்.

"ஆனா உங்களை மாதிரி ஆட்களால எங்க வாழ்க்கையே திசைமாறிடுது. பேசாம வீட்ல பார்க்கிற பெண்ணைக் கல்யாணம் பண்ணிட்டு சந்தோஷமா குடும்பம் நடத்த வேண்டியதுதானே! ஏன் எங்க வாழ்க்கையில விளையாடுறீங்க?"

"அக்காவுக்கு இப்போ என்ன ஆச்சு?" - உடைந்த குரலில் கேட்டான்.

"அக்கா ஏற்கெனவே ரொம்பப் பலவீனமானவ. அதோட வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கிற கபடமில்லாதவ. மாமியார் வாயால கேட்ட உண்மைகளை அவளால ஜீரணிக்க முடியல்ல. அதான் அதிர்ச்சியில மயங்கிட்டா!"

"டாக்டர் என்ன சொல்றாங்க?"

"பி.பி. நார்மலா இல்லையாம். இப்போ எதுவும் அதிர்ச்சிகரமான தகவல் காதில விழுந்தா அது தாய்க்கும் சேய்க்கும் ஆபத்தாகிடுமாம். குறைப் பிரசவம்கூட ஆகிறதுக்கு வாய்ப்பிருக்காம்! பத்து நாளாவது கம்ப்ளீட் பெட்ரெஸ்ட் எடுத்துக்கணுமாம்."

"ஐயோ..." - பதட்டமாய் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான்.



மனம் கூர்வாளாய் மாறி அவனது இதயத்தில் பாய்ந்தது. என்னுடைய செயல் எத்தனை விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அவசரப்பட்டு விட்டேனோ!

"அக்காவுக்கு எதுவும் ஆகக் கூடாதுன்னுதான் கோவில்ல வந்து வேண்டிட்டு இருந்தேன். வீட்ல அத்தை இருக்க விட மாட்டேங்கிறாங்க. ஹாஸ்பிடல்லயும் ஒருத்தர் தான் இருக்கணுமாம். மாமா இருக்காரு. அதான் இங்கேயே இருந்துட்டேன்." - கண்களில் லேசாய் ஈரம் கசிந்தது.

"மன்னிச்சிடு. காயு. என் ஒருத்தனோட விருப்பம் உங்களை யெல்லாம் இப்படிப் பாதிக்கும்னு நான் நினைச்சுக்கூடப் பார்க்கல்ல. வெரி ஸாரி!"

"போனது போகட்டும். இனிமே என்னைப் பார்த்துப் பேசாதீங்க. அப்புறம் பிரச்சனை இன்னும் பெரிசாகிடும்."

"ஏன்?"

"எங்க அத்தைக்கு மட்டும் இந்த விஷயம் தெரிஞ்சது... அவ்வளவுதான்."

"ம்... நேத்தே பார்த்தேனே! என்ன ஒரு சுயநலம்! தம்பி மகளுக்கு வரும் வாழ்க்கையைத் தன் மகளுக்காகத் தட்டிப் பறிக்கும் அளவிற்குச் சுயநலவாதி உன் அத்தை! எப்படித்தான் அந்த வீட்டில் இருக்கிறீர்களோ?"

"எங்களுக்கு வேற போக்கிடம் கிடையாது. சுயநலவாதியா இருந்தாலும் எங்க அத்தை எங்களுக்கு அடைக்கலம் தந்த தெய்வம்.

"வேண்டாம்... தெய்வத்தைப் பழிக்காதீர்கள்."

"தன் தேவைக்காகப் பிறரது இரத்தத்தை உறிஞ்சும் அட்டைப் பூச்சியைத் தெய்வத்தோடு ஒப்பிடலாமா?" - அவனது கோபம் புன்னகையை வரவழைத்தது. மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள். சிவந்த அவனது முகம் கோபத்தால் இன்னும் சிவந்து போயிருக்க, கோபத்திலும் அழகாய் இருந்தான்.

இந்த அழகையும் வசீகரத்தையும் தன் பெண்ணிற்கே சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என அத்தை நினைத்ததில் தவறில்லையோ என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் தன்னையே ஒருமுறை பார்த்துக் கொண்டாள். என்னை இவனுக்குப் பிடித்திருக்கிறதா?

நான் ஒன்றும் அத்தனை பேரழகு இல்லையே! எது இவனைக் கவர்ந்தது? அழகு என்பது ஒவ்வொருவரின் பார்வையைப் பொறுத்தது போலும். அத்தைகூடத் தன் பிள்ளைகளைப் போல் அழகு யாருமே கிடையாது என்பாளே! காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா?

அதே போல் இவன் பார்வைக்கு நான் அழகானவளாய்த் தெரிகிறேனோ! மூன்று வருடங்களாய் விரும்பினேன் என்றானே! ஆனால் ஒருமுறை கூட நேரில் வந்து நின்று வழிந்ததில்லை. நிழலாய்ப் பின்தொடர்ந்து இம்சிக்கவில்லை. கண்ணியமானவன்.

அதனால்தான் கண்ணியமான முறையில் பெற்றவர்களை அழைத்துக் கொண்டு வந்து பெண் கேட்டான். அதைத் தவறாகப் பயன்படுத்த நினைப்பது அத்தையின் குற்றம். அதற்காக இவனிடம் கோபம்



கொள்ளலாமா? தன்னால் இத்தனை பிரச்சனை வந்து விட்டதே என்று எப்படி வருந்துகிறான். அக்காவின் உடல் நிலையைப் பற்றி எப்படிப் பதறுகிறான்?

இது நிச்சயமாய் நடிப்பல்ல. கைதேர்ந்த நடிப்பை யெல்லாம் தினமும் வீட்டில் பார்க்கிறாளே! இவன்... இவனது கோபம்... பதட்டம்... நேசம் எதிலும் நடிப்புத் தெரியவில்லை. உண்மை இருக்கிறது. அவனைப் பார்க்கும்போதே அவன் மீது மதிப்புக் கூடியது.

"என்ன?" - அவன் கேட்ட பிறகே சுதாரித்தாள்.

"ம்...?"

"என்ன? என்னை அப்படிப் பார்க்கிற? நான் எப்படிப்பட்டவன் என்று ஆராய்கிறாயா?" - அவன் நேரிடையாய்க் கேட்டதும் வெலவெலத்துப் போனாள்.

"சேச்சே! அப்படியெல்லாம் எதுவும் இல்லை!"

"பின்னே?"

"வந்து... உங்ககிட்ட ஒன்னு கேட்கணும்." - தயக்கமாய் இழுத்தாள்.

"ஒன்றென்ன? ஓராயிரம் வேண்டுமானாலும் கேள்."

"உங்க... உங்களுக்கு உமாவைப் பிடிக்கலையா?"

"யாரு?" - புரியாமல் கேட்டான் ஜனா.

"அதான்... உமாபாரதியை!"

"அது யாரு... உமாபாரதி?"

"நேற்றுப் பார்த்தீர்களே! என் அத்தையின் சின்னப் பெண். அவதான்... அவளை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

"விளையாடாதே, காயு!"

"ஏன்?"

"உன்னை நினைச்ச மனசு இன்னொரு பெண்ணைப் பார்க்க விரும்புமா? நான் அந்தப் பொண்ணைப் பார்க்கவே இல்லை. அது கறுப்பா சிவப்பான்னு கூடத் தெரியாது எனக்கு!" - அவனது பதிலில் மனம் லேசானது. இருந்தும் விடாமல் கேட்டாள்.

"இல்ல... அவ ரொம்ப அழகாய்த்தான் இருப்பாள்."

"இருக்கட்டுமே! அதுக்கென்ன?"

"இல்ல. நீங்க சம்மதிச்சா அவளையே... உங்களுக்கு..."

"ஸ்டாப் இட், காயு!"

"ஏன்? என்னாச்சு?"

"எனக்கு உன்னைப் பிடிக்கும். உனக்கு என்னைப் பிடிக்கலைன்னா சொல்லு. அதை விட்டுட்டு எனக்குப் பெண் பார்க்கும் வேலை வேண்டாம்!"

"இப்ப என்ன சொல்லிட்டேன் நான்?"

"பின்னே! நீ இப்படிக் கேட்கிறது என்னையே அவமானப்படுத்துற மாதிரி இருக்கு. என்னை என்ன பெண் பித்தன் என்று நினைத்தாயா?"

"ஐயோ... இல்லை!" - அவசரமாய் மறுத்தாள்.



"அப்போ இந்தக் கேள்விக்கு என்ன அர்த்தம்?" - சத்தமாய் அவன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே கணேஷின் குரல் கேட்டது.

"டேய்! பேசணும்னு சொல்லிட்டு, ரோடு வரை கேட்கிற மாதிரி சண்டையா போட்டுட்டு இருக்கே?" - என்றவாறு கணேஷ் வந்ததும், பதறினாள் காயத்ரி.

"ஸார்! நீ... நீங்க... இங்கே... எப்படி?"

"நான்தான் இந்தத் தடியனக் கூட்டிட்டு வந்தேன். உன்கிட்டப் பேசணும்னு ஒத்தக் கால்ல நின்னான், காயத்ரி. சரி, பேசுடான்னு விட்டுட்டுப் போனா சண்டை போட்டுட்டு இருக்கான். என்னாச்சுடா உனக்கு?"

"கணேஷ்! உனக்கு ஒன்னும் தெரியாது. இவ என்ன கேட்கிறா தெரியுமா?" - எனத் தொடங்கியவனைக் கை உயர்த்தித் தடுத்தான்.

"நோ... இதெல்லாம் உங்க பர்ஸனல். நான் கேட்கக்கூடாது. இப்போ என்ன முடிவு பண்ணியிருக்கீங்க? அதை மட்டும் சொல்லு!"

"எ... என்ன முடிவு?" - காயத்ரி குழப்பமாய்க் கேட்டாள்.

"என்ன முடிவா? இவ்வளவு நேரம் ரெண்டு பேரும் மனசுவிட்டுப் பேசியாச்சா? எப்போ கல்யாணம்னு முடிவு பண்ணியாச்சா?"

"ஐயோ!"

"என்ன ஐயோ? எப்படியும் நடக்கப் போறதுதானே!"

"ஸார்! இங்கே நடந்ததே வேற. நீங்க புரியாமப் பேசாதீங்க!"

"ஏன்? என்னாச்சு?"

"எல்லாம் உங்க ஃபிரெண்ட்கிட்டச் சொல்லிட்டேன். அவர்கிட்டயே கேட்டுக்கங்க! நான் வர்றேன்." - என நகர்ந்தவளை நிறுத்தினான் ஜனா.

"எனக்கு ஒரு பதிலைச் சொல்லிட்டுப் போ!"

"பதிலா? எ... என்ன பதில்?"

"இதோ பார், காயு! எம் முடிவில எந்த மாற்றமும் இல்லை. உன்னை எவனோ ஒருத்தனுக்கு ரெண்டாந்தாரமா மூணாந்தாரமா என்னால கொடுக்க முடியாது. இந்த ஜென்மத்துல எனக்கு நீதான் வொய்ஃப். யாருக்காகவும் உன்னை விட்டுத் தர மாட்டேன். நீ மட்டும் உன் மனசுல உள்ளதத் தெளிவாச் சொல்லிடு."

"எ... என்ன சொல்லணும்?"

"என்னைப் பிடிச்சிருக்கா? இல்ல, அந்த மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்கா?"

"இ... இப்படிக் கேட்டா எப்படி?"

"எனக்குத் தெரிஞ்சாகணும். அப்பத்தான் என்னால மேற்கொண்டு யோசிக்க முடியும்."

"எனக்கு இப்போ என் அக்காவோட நினைவுதான் இருக்கு. வேற எதையும் என்னால யோசிக்க முடியாது."

"சரி... எப்போ சொல்லுவ?"



"என்ன?"

"என் கேள்விக்கான பதிலை எப்போ சொல்லுவ?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது." - என்றவாறு நழுவியவளின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான்.

"அப்போ... நான் சொல்றதைக் கேட்டுட்டுப் போ! இந்தக் கையைப் பிடிக்கப் போறது நான்தான். நான் மட்டும்தான். நீ என் மனைவி. இதை மனசில வெச்சுக்க. போ!" - என்று கையை விட்டான். மலைத்துப் போனாள் காயத்ரி.

## 6

உன்னை நான் சந்தித்தேன்
உன்னையே சிந்தித்தேன்
என்னை நீ இணை சேரும்
திருநாள் வருமோ உயிரே!

முற்றத்தில் பரந்து விரிந்திருந்த முல்லைக் கொடியிலிருந்து ஊசி ஊசியாய் நீண்டிருந்த முல்லை அரும்புகளைப் பொறுமையாய்ப் பறித்துக் கிண்ணத்தில் சேகரித்தாள் கோமதி. கிண்ணம் நிறைந்துவிட, மீதமிருந்த அரும்புகளை விட்டுவிட்டு வீட்டிற்குள் நுழைந்தாள்.

ஹாலில் கிடந்த டீபாயின் மேல் கிண்ணத்தை வைத்துவிட்டு அலமாரியைத் திறந்து, பூக்கட்டும் நூலை எடுத்துக் கொண்டு டி.வி.யை நெருங்கி சுவிட்சைப் போட்டாள். பக்திப் பாமாலை அலை வரிசையில் வைத்துவிட்டு, டி.வி. மேல் இருந்த தன் மகனின் புகைப்படத்தைப் பார்த்தாள்.

மார்பளவே இருந்த புகைப்படம் பெரிதாக்கப் பட்டிருந்தது. கருவிழிகளில் வசீகரமான பார்வையோடு இளம் புன்னகையுமாய் இருந்த பிள்ளையை மெல்ல முத்த மிட்டாள். இந்தப் போட்டோ ரொம்ப அழகு. இனி இதை இங்கே வைக்கக்கூடாது. பெட்ரூமில் வைக்க வேண்டும் எனத் தனக்குள் கூறியவாறே சோபாவில் வந்து அமர்ந்தாள்.

டி.வி.யில் ஒலித்த பக்திப் பாடலைக் கேட்டுக்கொண்டே நிதானமாய்ப் பூச்சரத்தைத் தொடுக்க ஆரம்பித்தபோது, அடுத்த வீட்டுத் திலகவதி வந்து நின்றாள்.

"உள்ளே வரலாமா?"

"அட... திலகா! வாவா. இது என்ன கேள்வி? எப்பவும் போல வரவேண்டியதுதானே! வா... உட்கார்." - சோபாவைக் காட்டிவிட்டுத் தன் வேலையைக் கோமதி தொடர, நவநாக ரிகமான அந்தத் திலகவதி ஒய்யாரமாய் நின்று வீட்டை ஒருமுறை பார்வையால் அலசினாள்.

வீடு முழுக்க அப்போதுதான் துடைத்து வைத்தது போல் அத்தனை சுத்தமாய் இருந்தது. தேடிப் பார்த்தால் கூட ஒரு தூசு கிடைக்காது. விலையுயர்ந்த சோபாக்கள், நாற்காலிகள், தரை என அனைத்துமே வெகு சுத்தம்.

கண்களில் லேசாய்ப் பொறாமை எழ, டி.வி.யைப் பார்த்தாள். அதன் மேல் இருந்த புகைப்படத்தைப் பார்த்ததும் பொறாமை மறைந்து, ஒரு கர்வப் புன்னகை தோன்றியது. இது என் மகள் வந்து வாழப் போகும் வீடு என்ற பெருமை தோன்றியது.



"என்ன திலகா நிற்கிற? உட்கார்."

"கோமதி! நீ ரொம்பக் கொடுத்து வெச்சவ."

"என்ன திடீர்னு பெரிய பேச்செல்லாம் பேசுற?"

"உண்மையைத்தான் சொல்றேன். உனக்குக் கணவன் பிள்ளைகள் மட்டும் அற்புதமா அமைஞ்சிடலை. வீட்டு வேலைக்காரிகூட அருமையா அமைஞ்சிருக்கா!"

"என்ன சொல்றே?"

"உன் வீட்டைப் பாரேன். துடைச்சு வெச்ச மாதிரி என்ன பளபளப்பு. ஒரு தூசு ஒரு அழுக்கு கண்ல படமாட்டேங்குதே. என் வீட்ல ரெண்டு வேலைக்காரி இருக்கான்னுதான் பேரு. ஒவ்வொரு வேலையையும் நாமதான் ஏவிகிட்டே இருக்கணும்." - திலகா சலிப்பாய்க் கூற, புன்னகைத்தாள் கோமதி.

"இப்ப ஏன் சிரிக்கிற?"

"திலகா! வேலைக்காரங்களும் மனுஷங்கதானே! எல்லா வேலையையும் அவங்க தலையில கட்டிடக்கூடாது. நம்மால முடிஞ்ச வேலையை நாமளும் செய்யணும்."

"என்ன? நாம செய்யணுமா? பிறகெதுக்கு அவங்களை வேலைக்கு வெக்கிறோம். தண்டச் சம்பளம் கொடுக்கவா?"

"சேச்சே! அப்படி ஏன் நினைக்கிற? திலகா! நமக்கென்ன அறுபது எழுபது வயசா ஆகிப் போச்சு. நாற்பத்தைஞ்சு, இல்ல ஆறு இருக்கும். நம்ம உடம்பும் தெம்பாத்தானே இருக்கு. துணி துவைக்க, பாத்திரம் கழுவன்னு ஒரு ஒத்தாசைக்கு ஆட்கள் வெச்சிக்கலாம்.

"அவங்க ஒரு வேலையைச் செய்யும்போது நாம ஒரு வேலை செய்தா அவங்க வேலைப்பளு குறையுமே. பாவம்! நம்ம வீட்ல வேலை செய்திட்டு, அவங்க வீட்லயும் போய் வேலை செய்யணுமில்ல. அதனால நாம் அவங்களைச் சக்கையாப் பிழிஞ்சு எடுக்கக்கூடாது."

"சம்பளம் கொடுக்கிறோமே... அதுக்கேத்த வேலை வாங்க வேண்டாமா?"

"சம்பளம் பெரிசில்ல, திலகா! நாம என்ன வேலை சொன்னாலும் முகம் சுழிக்காம செய்யுறாங்க பார். அதுதான் பெரிசு. எங்க வீட்ல தேவகி கிச்சன் வேலையப் பார்த்துக்குவா. நாம ஏன் சும்மா இருக்கணும்னு நான்தான் இந்தப் பொருட்களை எல்லாம் துடைச்சு வெப்பேன்."

"என்ன? நீயா இதெல்லாம் சுத்தப்படுத்துவ?"

"ஏன்? செய்தா என்ன? நம்ம வீடு தானே! நாமதான் சுத்தமா வெச்சுக்கணும். எத்தனைதான் சோபா, சேர்னு இருந்தாலும் அப்பாவும் புள்ளையும் வந்ததும் தரையில உட்காரத்தான் ஆசைப்படுவாங்க.

"அதுவும் எங்க ஜனா, தரை சுத்தமா இருந்தா எதுவும் விரிக்காமலே படுத்துப்பான். அவனுக்காகவே எப்பவும் தரையைச் சுத்தமா வெச்சிருப்பேன். நாமளும் குனிஞ்சு நிமிர்ந்து வேலை செய்தா உடம்புல தேவையற்ற சதை பிடிக்காதுல்ல. நல்ல உடற்பயிற்சியும்கூட..." - என்றவாறே பூவைக் கட்டி முடித்தாள்.

"அம்மா! காபி." - என்றவாறே வேலைக்காரப் பெண் கையில் ட்ரேயோடு வந்தாள். இரண்டு கோப்பைகள்.



கூடவே சின்னதாய் ஒரு தட்டில் முந்திரிப் பக்கோடா, மிக்சர், டீப்பாயின் மீது வைத்தாள்.

"நான் காபி குடிக்கிறதில்ல!" - என்றாள் திலகா பெருமையாய்.

"உங்களுக்குப் பச்சைக் கலர் கப்பும்மா. பூஸ்ட் கலந்து கொண்டாந்தேன்."

"ம்... பரவாயில்லையே! வேலைக்காரிக்கு நல்லாத் தான் ட்ரெய்னிங் கொடுத்து வெச்சிருக்க..." - என்றவாறு இளம் பச்சை நிறத்தில் இருந்த கண்ணாடிக் கோப்பையை எடுத்துக் கொண்டாள்.

"தேவகி! இந்தப் பூவைச் சாமி படத்துக்குப் போட்டுடு..." - கட்டியிருந்த பூச்சரத்தைக் கொடுத்தாள் கோமதி.

"சரிங்கம்மா!"

"நீயும் காபி குடி. நாங்க கொஞ்ச நேரம் லான்ல உட்கார்ந்திருக்கோம்."

"சரிம்மா!"

"வேலை முடிஞ்சதுன்னா டி.வி. பார். நைட் டிபன் அவங்க வந்த பிறகு சூடா செய்துக்கலாம்."

"சரிங்கம்மா..." - என்றவாறு அவள் உள்ளே செல்ல, காபி கோப்பையை எடுத்துக் கொண்டாள், கோமதி. மெதுவாய் நடந்து வெளியே வந்து மூங்கில் நாற்காலியில் அமர்ந்தனர்.

"ஆனாலும் இது ரொம்ப அநியாயம், கோமதி!"

"எது?"

"வேலைக்காரிக்கு இவ்வளவு இடம் கொடுக்காதே. பிறகு நம்ம தலையில முளகா அரைச்சிடுவாளுக."

"சும்மா ஏன் வேலைக்காரின்ற திலகா. தேவகின்னு பெயரைச் சொல்லேன். நல்ல பேர்தானே! கூப்பிடவும் எளிதா இருக்கு."

"உன்னைத் திருத்த முடியாது. சரி! நான் வந்த விஷயத்தைச் சொல்றேன்." - என்றவாறு சூடான பானத்தைக் காலி செய்துவிட்டுக் கப்பைக் கீழே வைத்தாள்.

"சொல்லு!"

"நான் கேள்விப்பட்டது உண்மையா?"

"என்ன கேள்விப்பட்டே?"

"நேத்து ஜனாவுக்கு எங்கேயோ பொண்ணு பார்க்கப் போனீங்களாமே?"

"ஓ... அதுவா?"

"என்ன கோமதி? அடுத்தடுத்த வீட்ல இருக்கோம். இருபது வருஷப் பழக்கம். ஒண்ணுக்குள்ள ஒண்ணா இருக்கோம். எங்கிட்டகூட ஒரு வார்த்தை சொல்லலையே!"

"தப்பா எடுத்துக்காதே, திலகா! இதை நாங்களே எதிர்பார்க்கல!"

"அப்படின்னா?"

"இது முழுக்க ஜனாவோட விருப்பத்திற்காக நடந்தது. திடீர்னு வந்து நான் ஒரு பெண்ணை விரும்புறேம்மா. அவளைத்தான் கட்டிப்பேன்னு சொன்னான். அவங்க அப்பா, மகனோட விருப்பம்தான் முக்கியம்னு, தலை யாட்டிட்டாங்க.



"நேத்து நாளும் நல்லா இருந்ததா? அதான் கிளம்பிப் போனோம். எல்லாம் பேசி முடிச்ச பிறகு மத்தவங்ககிட்ட சொல்லிக்கலாம்னு விட்டுட்டேன்."

"நானும் மத்தவங்களும் ஒன்னா?"

"சேச்சே! அப்படியில்ல. உங்கிட்ட சொல்லக் கூடாதுன்னு இல்ல. நேற்று நீ வீட்லயே இல்லை போலிருக்கு. கதவு பூட்டியிருந்ததே!"

"ஆமா! ஒரு முக்கியமான விஷயமா வெளியே போயிருந்தேன்."

"அப்படியா?"

"சரி! பொண்ணு எப்படி? ரொம்பப் பெரிய இடமா? அழகா இருக்காளா?" - உள்ளே எழுந்த ஏமாற்றத்தோடு கேட்டாள் திலகா.

"ப்ம்ச்! என்ன சொல்ல...?"

"ஏன்? என்னாச்சு?"

"அந்தப் பொண்ணுக்கு ஏற்கெனவே கல்யாணம் முடிவாகிடுச்சாம். பத்து நாள்ல கல்யாணமாம்."

"என்ன?" - திலகாவின் முகத்தில் பளீரென வெளிச்சம் தோன்றியது.

"ம்... நாங்க கொஞ்சம் தாமதாப் போயிட்டோம் போலிருக்கு. பெண்ணைப் பார்க்கவே இல்லை. அந்த வீட்டுல இன்னொரு பொண்ணும் இருக்கு. அதைப் பேசலாம்னு அவங்களுக்கு ஆசை."

திலகாவின் முகம் மீண்டும் இருண்டது. "பேசியாச்சா?"

"ம்ஹூம்! ஜனா வேண்டான்னுட்டான்!" - கோம ஏமாற்றமாய்ச் சொல்ல, திலகவதி நிம்மதியாய் மூச்ச விட்டாள்.

"கோமதி! நேத்து நாங்க எங்கே போனோம்னு தெரியுமா?"

"எங்கே போனீங்க?"

"வயலூர் ஜோஸியர்கிட்ட... பெயர்ப் பொருத்தம் பார்க்க!"

"என்ன? யாருக்குப் பெயர்ப் பொருத்தம்?"

"மேகாவுக்கும் ஜனாவுக்கும்தான்!" - திலகா சொல்லிவிட்டு நிறுத்த, கோமதியின் முகம் நொடியில் மாறியது. திகைப்பாய்ப் பார்த்தாள்.

"திலகா! நீ என்ன சொல்றே?"

"ஆமா, கோமதி! போன வாரம் ஒரு அமெரிக்கா மாப்பிள்ளை வரன் வந்திச்சுல்ல..."

"ஆமாம்!"

"மேகா வேணாம்னு சொல்லிட்டா. அதை மட்டுமில்ல... இதோட பத்து மாப்பிள்ளைகளை வேணாம்னு சொல்லி யிருக்கா!"

"ஏன்?"

"நானும் அதைத்தான் கேட்டேன். அவ என்ன சொன்னா தெரியுமா?"

"என்ன சொன்னா?"



"சின்ன வயசில இருந்தே ஜனாகூட விளையாடி, அவன் கூடவே படிச்சு, அவன்கூடவே வளர்ந்திட்டேன். கடைசி வரைக்கும் அவன்கூட வாழணும்னு ஆசைப் படுறேன் மம்மின்றா."

"என்ன?"

"நானும் இப்படித்தான் ஷாக்காயிட்டேன். கூடப் படிச்சதுக, ஒன்னா வளர்ந்ததுகன்னு நாம சும்மா இருந்திட்டோம். அதுக ஆசைப்பட்டதுல தப்பும் இல்லையே. உனக்கும் ஒரே புள்ள. மேகா எனக்கு ஒரே பொண்ணு. தூரமா கட்டிக் கொடுத்து அனுப்ப எனக்கும் மனசில்ல.

"அதனால முதல்ல பேர்ப் பொருத்தம் பார்த்திட்டுப் பொருத்தம் நல்லா இருந்தா உங்க வீட்ல வந்து பேசலாம்னு இருந்தேன். அதுக்குள்ள இப்படியெல்லாம் நடந்து போச்சே!"

கோமதி பேசாமல் அமைதியாய் இருந்தாள். அவளது முகத்தை ஆராய்ந்து கொண்டே கேட்டாள் திலகவதி.

"என்ன கோமதி! அமைதியா இருக்க?"

"ம்! இல்ல... நான் இதையெல்லாம் எதிர்பார்க்கல!"

"ஏன்? என் பொண்ணை உனக்குப் பிடிக்கலையா?"

"மேகலா நல்ல பொண்ணுதான். சின்ன வயசுல இருந்தே பார்க்கிறேனே... நான் அதைச் சொல்லல."

"பின்னே?"

"பெரியவங்க நமக்குப் பிடிச்சிருந்தா போதுமா? ஜனாவுக்குப் பிடிக்கணுமே!"

"ஜனாவுக்கும் மேகாவைச் சின்ன வயசுல இருந்தே பிடிக்குமே!"

"பிடிக்கும்தான். ஆனா கல்யாணம்னு வந்தப்போ அவன் மேகலாவைப் பிடிச்சிருக்குன்னு சொல்லலையே திலகா! அதான் யோசிக்கிறேன்."

"இதுல யோசிக்க என்ன இருக்கு? ஏதோ ஒரு பெண்ணைப் பார்த்திருப்பான். பிடிச்சுப் போயிருக்கும். இப்பத்தான் அந்தப் பொண்ணுக்குக் கல்யாணம்னு சொன்னியே! இனிமே வேற பொண்ணுதானே பார்க்கணும். அது ஏன் எம் பொண்ணா இருக்கக் கூடாது?"

திலகாவின் கேள்வியில் இருந்த நியாயம் உணர்ந்து அமைதியானாள் கோமதி. ஒரே பெண். பக்கத்திலேயே கொடுத்தால் பிரிய வேண்டியதில்லை. ஆனால் இதில் ஜனாவுக்கும் விருப்பம் இருக்க வேண்டுமே! அவனது விருப்பம்தானே முக்கியம். ஏற்கெனவே நேற்றிலிருந்து மிகவும் மன வருத்தத்தில் இருக்கிறான்.

அந்தப் பெண்ணை நேரில் பார்த்துப் பேசியே தீருவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். இந்தச் சமயத்தில் எப்படி இதைப் பற்றிப் பேச முடியும்? பேசினால் கேட்பானா? சம்மதிப்பானா?

"கோமதி! நீ யோசிக்கிறதப் பார்த்தா உனக்கு இதுல விருப்பம் இல்ல போலிருக்கே?"

"அப்படியில்ல திலகா! எதுக்கும் ஜனாகிட்ட கேட்டுட்டு மேற்கொண்டு பேசலாமே! ஏன்னா... இதுல அவன் சம்மதம்தான் முக்கியம்."

"கண்டிப்பாச் சம்மதிப்பான். அவனுக்கு மேகலாவைப் பிடிக்கும். கோமதி. எங்குழந்தைக்கு என்ன குறைச்சல்? அதோட பேர்ப் பொருத்தம் அம்சமா இருக்கு. கோமதி



லட்சத்தில் ஒருத்தருக்குத்தான் இப்படி அமையுமாம். ஜோஸியரே சொன்னாரு."

"அப்படியா?"

"ம்... மேகாவைக் கட்டிக்கிட்டா ஜனாவோட நிலை இன்னும் உயர்ந்திடுமாம். புத்திர பாக்கியமும் அமோகமா இருக்காம். குடும்ப விருத்தி, தொழில் முன்னேற்றம், தாலி பாக்கியம்ன்னு எல்லாமே பிரமாதமா இருக்காம்!"

"நிஜமாவா?" – வியப்பும் துளி மகிழ்ச்சியுமாய்க் கோமதி கேட்க, திலகவதியின் முகம் வெற்றிக் களிப்பில் பூரித்தது. உற்சாகமாய் மேலும் பல கதைகளை அவிழ்த்து விட, கோமதியின் மனம் மேகலாவை மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்ளத் துவங்கியது.

"கோமதி! உன் ஹஸ்பெண்ட் வந்ததும் பேசுறியா? நல்ல நாளாப் பார்த்து நிச்சயம் பண்ணிடலாம்!"

"பார்க்கலாம் திலகா! அவங்க வரட்டும். பொறுமையாப் பேசிப் பார்க்கிறேன்."

"ரொம்ப நன்றி கோமதி! குழந்தை ரொம்ப டென்ஷனா இருப்பா. நான் போய் விஷயத்தைச் சொல்றேன். வரட்டுமா?"

"திலகா! அவசரப்படாதே. ஜனா சம்மதிக்கணுமே!"

"நீ சொன்னா கண்டிப்பாச் சம்மதிப்பான். உன் பிள்ளை தங்கமான புள்ளையாச்சே! உன் வார்த்தையை மீறுவானா?"

"அது சரி, திலகா! ஆனா..."

"எல்லாம் பிறகு பேசிக்கலாம். நீ சம்மதிச்சதே போதும். குழந்தை ரொம்ப ஆர்வமா எதிர்பார்த்திட்டு இருப்பா. நான் போய்ச் சொல்லணும். வரட்டுமா?" - என்றவாறே எழுந்து கொண்டாள் திலகவதி.

"சரி! ஆனா, திலகா! எம் புள்ள முடிவுதான் எம் முடிவு சரியா?"

"அது தெரியாதா எனக்கு? ஜனா நிச்சயம் நல்ல முடிவாத்தான் சொல்வான். கோமதி! எதுக்கும் சமயம் கிடைக்கும் போதெல்லாம் நம்ம மேகாவைப் பத்தி உம் பிள்ளைகிட்ட சொல்லு!"

"ம்... ம்..."

"என் சொத்து முழுக்க எம் பிள்ளைக்குத்தானே! ஒன்னே ஒன்னு பெத்து வெச்சிருக்கேன். அதைக் கண் எதிரிலேயே வாழவைச்சுப் பார்க்கணும்னு ஆசைப்படுகிறேன் கோமதி. மத்தப்படி மாப்பிள்ளை கிடைக்காம இல்ல."

"சரி, திலகா! அவங்க வர்ற நேரமாச்சு. டிபன் பண்ணணும்."

"நீ உன் வேலையைப் பாரு. மறக்காம இன்னிக்கே உம் பிள்ளைகிட்ட பேசிடு கோமதி. நாளைக்கே நல்ல பதிலாச் சொல்லு!"

"முயற்சி பண்றேன்." - ஒப்புக்காகச் சொன்னாலும், ஜனா சம்மதிப்பான் என்று அவளுக்கே நம்பிக்கையில்லை.



# 7

எந்தன் உயிரே கண்கள்
முழுதும் உந்தன் கனவே
நீயாக என்னை எடுத்தாய்
பதிலாக உன்னைக் கொடுத்தாய்!

தன் அறையில் பொறுமையில்லாமல் நடைபோட்டுக் கொண்டிருந்தாள் மேகலா. திலகவதியின் ஒரே பெண். செல்லப் பெண். தந்தை அயல்நாட்டில் இருந்து சம்பாதித்து அனுப்பும் பணத்தில் பாலும் நெய்யுமாய்ச் சாப்பிட்டு உடல் முழுக்க மெருகேறியிருந்தது. எதைக் கேட்டாலும் கிடைத்து விடுவதில் உண்டான கர்வம் முகத்தில் உறைந்திருந்தது.

தாயின் உடல் வாகையும் தந்தையின் மாநிறத்தையும் வாங்கிக் கொண்டு பிறந்ததில் மேகலாவிற்கு நிறைய வருத்தம் உண்டு. என்றாலும் வாரம் இருமுறை அழகு நிலையம் சென்று தன் முகத்தைச் சீர் செய்து பளபளப்பான ஒப்பனையோடு வலம் வருபவள்.

"என் குழந்தைக்கென்ன? அவள் பேரழகி! நிறம் மட்டும் குறைவாய் இருப்பது நல்லதுதான். இல்லையென்றால் பார்ப்பவர்களின் கண் திருஷ்டிக்காகத் தினமும் சுற்றிப் போட்டுக் கொண்டே இருக்க வேண்டும்!" - எனத் திலகா அவ்வப்போது தூபம் போட்டுக் கொண்டே இருக்க, அதுவே மகளின் மனதில் ஆழமாய்ப் பதிந்தும் போனது.

எத்தனை பேர் வந்தாலும் என் அழகுக்கு ஈடாகாது என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. அந்த எண்ணத்தில் தான் ஜனார்த்தனன் தன்னைத் தவிர யாரையும் பார்க்க மாட்டான், மணக்க நினைக்க மாட்டான் என இறுமாந்திருந்தாள்.

ஆனால் ஜனாவின் பெற்றோர் ஏதோ ஒரு பெண்ணை மணம் பேசி முடிக்கச் சென்றதைக் கேள்வியுற்றுக் கொதித்துப் போனாள். தான் ஒருத்தி எதிர் வீட்டிலேயே வருடக்கணக்காய்க் காத்து நிற்கிறேன். நான் அவன் கண்ணில் படவில்லையா?

ஜனாதான் எனக்கு வேண்டும் அம்மா! அந்தப் பெண் யாராய் வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனா ஜனா என்னைத் தவிர யாரையும் மணக்கக் கூடாது. உடனே போய்ச் சம்பந்தம் பேசுங்கள் எனத் தாயை விரட்டாத குறையாய் அனுப்பி இருந்தாள். போய் ஒரு மணி நேரத்திற்கும் மேலாயிற்று.

இன்னும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். நான் ஒருத்தி இங்கே அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பேன் என்று தெரியாதா? கடுப்பாய் வாசலைப் பார்த்தவளின் முகம் மலர்ந்தது.

கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள் திலகவதி.

வேகமாய்ச் சென்று தாயின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"மம்மி! என்ன சொன்னாங்க? ஓ.கே.தானே?"

"இருடா கண்ணு. உள்ளே போய்ப் பேசுவோம்."

"இங்கேயே சொல்லுங்க! சரின்னு சொல்லிட்டாங்களா? ஆன்ட்டிக்கு என்னைப் பிடிக்குமே!" - பரபரப்பாய்க் கேட்ட மகளைப் புன்னகையோடு வீட்டிற்குள் அழைத்து வந்து அமர வைத்தாள்.



"மேகா குட்டி! உன் நல்ல நேரம்... நேற்று அவங்க பார்க்கப் போன பெண்ணிற்கு ஏற்கெனவே கல்யாணம் முடிவாயிடுச்சாம்!"

"தேங்க் காட்! அப்போ இனி எந்தப் பிராப்ளமும் இல்ல."

"அப்படின்னு சொல்ல முடியாது. அந்தப் பையனும் சம்மதிக்கணுமே!"

"ஏம்மா! ஏன் சம்மதிக்க மாட்டான்? ஜனாவை விட நான் என்ன குறைந்தவளா? பணத்திலயும் படிப்பிலயும் அழகுலயும் அவனை விட நான் ஒன்னும் குறைந்தவளல்ல. பிறகேன் சம்மதிக்க மாட்டான்?"

"ராஜாத்தி! இப்ப நான் என்ன சொல்லிட்டேன். கோமதிக்குச் சம்மதம். அது அவ பேச்சிலயே தெரியுது. எதுக்கும் மகன்கிட்ட ஒரு வார்த்தை கேட்கணும்னு சொல்றா. அவன் சம்மதிச்சா உடனே கல்யாணம்தான். அதைத்தான் சொல்ல வந்தேன். "

"அதானே பார்த்தேன். ஆன்டிக்குச் சம்மதம்தானே!"

"ஆமா! அவளே சொன்னா."

"அப்போ பயமில்ல. ஜனா ஒரு அம்மாக் கோண்டு. அம்மா எது சொன்னாலும் தலையாட்டுவான். மம்மி! ஐயாம் ஸோ ஹேப்பி. நான் இப்பவே என் ஃபிரெண்ட்ஸுக்கு எல்லாம் போன் பண்றேன்." - உற்சாகமாய் விலகிய மகளைத் தடுத்தாள்.

"இரம்மா... இப்போ என்ன அவசரம்? கன்பார்ம் ஆனபிறகு சொல்லலாமே!"

"இல்ல மம்மி! அந்த ரேவதி என்னை ரொம்ப டீஸ் பண்ணிட்டா. நான் தலைகீழா நின்னாலும் ஜனா எனக்குக் கிடைக்க மாட்டானாம். ஜனா முகத்திலேயே அது தெரியுதாம்."

"எவடி அவ? எங்குழந்தைகிட்டயே இப்படிப் பேசினவ? நீ சும்மாவா விட்டே?"

"மம்மி! பேசிட்டுப் போறா விடுங்க. நான் ஜனாவைக் கல்யாணம் பண்ணி அவ மூக்கை உடைக்கப் போறேன். அப்போ இருக்கு அவளுக்கு!"

"சரி! கோபப்படாதே. கோமதிய இன்னிக்கே அவங்ககிட்ட பேசச் சொல்லியிருக்கேன். பேசி முடிவு பண்ணினதும் நாளைக்குச் சொல்லிடுவா. பிறகு போன்ல என்ன... எல்லார்கிட்டயும் நேர்லயே போய்ப் பேசிக்கலாம். சரியா?"

"ம்ப்ச்! பிரியாகிட்ட மட்டுமாவது சொல்றேம்மா. என்னோட ஹேப்பிய யார் கிட்டேயாவது நான் ஷேர் பண்ணிக்கணும்." - மேகலா சொல்லிக் கொண்டிருந்த போதே...

எதிர்வீட்டில் ஜனாவின் பைக் சத்தம் கேட்டது.

"அம்மா! ஜனா வந்திட்டான். நான் போய்ப் பார்த்திட்டு வரட்டுமா?"

"போயேன். அவன்கிட்ட உன் சந்தோஷத்தை ஷேர் பண்ணிக்கோ!"

"குட் ஐடியா. தேங்க்யூ மம்மி!" - தாயைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்.



"மேகாம்மா! அம்மா ரொம்ப சுதந்திரம் கொடுக்கிறேன்னு நீ எதுவும் ஏடாகூடமா நடந்துக்கக் கூடாது. கட்டுப்பாடா இருக்கணும்."

"போங்கம்மா! ஜனா ஒரு பக்கா ஜென்டில்மேன் தெரியுமா? என் நிழல்கூடப் படாத தூரத்தில நின்னுதான் பேசுவான். அவன்கிட்ட எனக்குப் பிடிச்சதே அவனோட டீஸன்ட்ஸியான பிஹேவியர்தான்!"

"என்னவோ போ! நீ அந்த அமெரிக்கா மாப்பிள்ளையை வேணாம்னு சொன்னதுல டாடிக்கு ரொம்ப வருத்தம்!"

"ஏனாம்?"

"அவர் டாக்டர்டி. எத்தனை லட்சம் சம்பாதிக்கிறார் தெரியுமா?"

"ஏம்மா! நம்மகிட்ட இருக்கிற பணம் போதாதா? அதே மாதிரி ஆயிரம் மாப்பிள்ளை பார்த்தாலும் ஜனாவுக்கு ஈடாகாதும்மா. ஹீ இஸ் மை ஹார்ட். மை ட்ரீம்ஸ். மை லைஃப். இப்படி என்ன வேணா சொல்லலாம்."

"உன் சந்தோஷம்தாம்மா எங்க சந்தோஷம். அதனாலதான் நம்ம கௌரவத்தை விட்டு இறங்கிப் போய்ச் சம்பந்தம் பேசிட்டு வந்திருக்கேன்."

"ஓஹோ! போதும் மம்மி. நாமளே பேசிட்டு இருந்தா அங்கே ஜனா சாப்பிட்டுத் தூங்கிடுவான். ப்ளீஸ்... நான் போகணும்." - சிணுங்கியவளைக் கன்னம் வருடினாள் திலகவதி.

"சரி... போயிட்டு வா!"

"தேங்க்யூ மம்மி!" என்றவள் அடுத்த நொடி ஜனாவின் வீட்டில் இருந்தாள். சோபாவின் மீது சாய்ந்தமர்ந்து, எதிரே இருந்த டீப்பாயின் மேல் காலை நீட்டிக்கொண்டு டி.வி.யில் லயித்திருந்தான் ஜனார்த்தனன். அருகில் ஒருவரும் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு மெல்ல அடியெடுத்து வைத்து அவன் முன் சென்று நின்றாள்.

"ஹாய் ஜனா!" - அவளது உற்சாகக் குரலில் கலைந்தவன் சட்டெனக் கால்களை எடுத்துக் கீழே வைத்து நிமிர்ந்து அமர்ந்தான்.

"ஹலோ!"

"ஆன்ட்டி இல்லையா?"

"அம்மாவும் அப்பாவும் கோவிலுக்குப் போயிருக்காங்க!"

"ஓ! வெரி நைஸ். அப்போ நீ மட்டும் தனியா இருக்கியா?" - என்றவாறே அவனருகே அமர முயற்சிக்க, நாசூக்காய் எழுந்து கொண்டான்.

"இல்லை... நானும் வெளியே கிளம்பிட்டு இருந்தேன்." - தன்னை உதாசீனப்படுத்தவே பொய் சொல்கிறான் என்று புரிந்தது. வெளியே கிளம்புபவன், இப்படிப் பனியனும் ஷார்ட்ஸுமாய் அமர்ந்திருப்பானா? இவன் ஏன் இப்படி இருக்கிறான்? லேசாய் எரிச்சல் தோன்றியது.

"ஜனா! உன்னைப் பார்க்கிறதே பெரிய விஷயம். அதிலும் தனியாப் பார்க்கிறது அதைவிடப் பெரிய விஷயம். ப்ளீஸ் ஸிட் டவுன். நான் உங்கூடப் பேசணும்."



புருவம் சுருக்கினான் ஜனா. "என்கூடவா? என்ன பேசணும்?"

"என்ன... எதுவுமே தெரியாத மாதிரி கேட்கிற? ஆன்ட்டி எதுவும் சொல்லலையா?"

"இல்லையே... என்ன விஷயம்?"

"எல்லாம் நல்ல விஷயம்தான். கல்யாண விஷயம்." - கண்ணடித்துச் சிரித்தாள்.

"ஓ! அதுவா? அதுதான் எனக்குத் தெரியுமே!"

"ரியல்லி! உனக்குத் தெரியுமா? உனக்கு விருப்பம்தானே?" - என ஆர்வமாய் அவனைப் பார்த்தாள்.

"இதுல என்ன சந்தேகம்? நான்தானே அம்மாகிட்ட சொன்னேன்!"

"ஹய்யா! ஜனா! என்னால நம்பவே முடியல்ல. நிஜமாவே உனக்குப் பிடிச்சிருக்கா? ஏன் இதை எங்கிட்ட சொல்லவே இல்லை?"

"உன்கிட்ட... என்ன... எப்படிச் சொல்லுறது?"

"ஓ! உனக்கும் தயக்கமா இருந்ததா? நான் எப்பவுமே போல்டாப் பேசுவேன். என்னாலயே இதைப்பத்தி உங்கிட்டப் பேச முடியல்ல. நீ எப்படிச் சொல்லுவ? எப்படியோ இப்பவாவது சொன்னியே...! ரொம்ப தேங்க்ஸ் ஜனா!"

புரியாமல் பார்த்தான். "நீ ஏன் தேங்க்ஸ் சொல்றே?"

"என்ன ஜனா! இப்படிக் கேட்கிற? நான்தான் எப்பவும் உன் நினைப்பில சுத்திட்டு இருக்கேன்னு என் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் சொல்வாங்க. ஆனா நீயும் என்னை விரும்புறேன்னு இப்பத்தான் புரியுது. ஜனா! எனக்கு..."

"ஏய் மேகலா! என்ன நீ? ஏதேதோ பேசுற?" ஜனாவின் முகம் மாறிவிட, தன் பேச்சை நிறுத்தினாள்.

"ஜனா!"

"என்ன பேசுற நீ? நான் உன்னை விரும்புறேனா?"

"ஜனா! விளையாடாதே. நான் கேட்டதுக்கு நீ சொன்னியே!"

"என்ன சொன்னேன்?"

"உனக்கும் விருப்பம்தான்னு!"

"ஆமா... சொன்னேன். காயத்ரியை எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. நான்தான் அம்மாகிட்டச் சொல்லிப் பெண் பார்க்கப் போனோம். அந்த விஷயத்தைத்தானே நீ கேட்டாய்?"

மேகலாவின் முகம் பேயறைந்தது போல் மாறியது "என்ன? பொ... பொண்ணு பார்க்கப் போனீங்களா? எப்போ?"

"மேகலா! என்ன... தெரியாத மாதிரிக் கேட்கிற? உன் அம்மாவுக்குத் தெரியாத விஷயம்னு எதுவுமே இருக்காதே பிறகென்ன இவ்வளவு ஷாக்காகுற?'' – என்றவாறே அலட்சியமாகச் சென்று டி.வி.யை நிறுத்தினான்.

மேகலா அவசரமாக யோசித்து முகத்தை இயல் பாக்கினாள். "ஓ! அந்தப் பொண்ணா? நான் வேறன்னு நினைச்சேன்!"

"தினம் ஒரு பொண்ணு பார்க்கிற அளவுக்கு நான் ஒன்னும் லோபர் இல்ல."



"கோவிச்சுக்காதே ஜனா! ஆமா அந்தப் பொண்ணுக்கு ஏற்கெனவே மேரேஜ் பிக்ஸ் ஆயிடுச்சாமே!"

"உனக்கு யார் சொன்னது?"

"இ... இல்ல... கேள்விப்பட்டேன்."

"அதெல்லாம் உண்மையில்லை."

"அப்படின்னா?"

''அப்படின்னா... அவதான் நான் கல்யாணம் பண்ணிக்கிற பொண்ணு. இதுல எந்த மாற்றமும் இல்லன்னு அர்த்தம்!" – என்றான் ஜனார்த்தனன். இப்போது உண்மையாகவே அதிர்ந்தாள் மேகலா.

"ஜனா...! நீ என்ன சொல்றே?"

''லுக் மேகலா! நீ உன் ஃபிரெண்ட்ஸ்கிட்டே பெட் கட்டின விஷயம் என் காதுக்கும் வந்தது. என்னைப் பத்தி என்ன நினைச்சிட்டு இருக்கே நீ? நீ விளையாட நான் என்ன உன் கைப்பொம்மையா?"

"ஜனா... நான்...!"

"எல்லாம் எனக்குத் தெரியும். எனக்கு எப்போதுமே உம் மேல எந்த ஈடுபாடும் கிடையாது. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைச்சதும் இல்லை. இனிமே கண்டவகிட்டேயும் என்னைப் பற்றிப் பேசுவதை நிறுத்து. உன் எதிர்கால நலனுக்காக இதைச் சொல்றேன்."

"ஜனா! என்னோட எதிர்காலமே நீதான்!"

"ஸ்டுப்பிட் மாதிரிப் பேசாதே! ஐ லவ் காயு. அவதான் எனக்கு எல்லாமே! அவதான் என் மனைவின்னு எப்பவோ

டிஸைட் பண்ணிட்டேன். இனிமே தேவையில்லாத எண்ணத்தோட எங்க வீட்டுக்கு வராதே!"

"ஜனா! ஏன் இப்படிப் பேசுற? நாம எத்தனை வருஷமாப் பழகறோம். உனக்கு எம் மேல ப்ரியமே வரலையா? அப்படியென்ன அவ பெரிய அழகா? என்னைவிட உசத்தியா?"

"இதோ பார்! மனசுக்குப் பிடிச்ச ஒரு பெண்ணை வேறு யாரோடயும் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. எனக்குக் காயுவைப் பிடிச்சிருக்கு!"

"ஆனா எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. யாருக் காகவும் யார்கிட்டேயும் உன்னை விட்டுக்கொடுக்க மாட்டேன்."

"வீண் பிடிவாதம் பண்றே, மேகலா! நீ நல்ல பொண்ணுதான். உன் அம்மாவோட செல்லம்தான் உன்னை இப்படி மாத்தியிருக்கு. உன்னை நீயே மாத்திக்க மேகலா. அதுதான் உன் லைஃப்புக்கு நல்லது."

"நம்ம லைஃப்புக்குன்னு சொல்லு ஜனா. உனக்காக நான் மாறுறேன். நீ என்ன சொன்னாலும் செய்யுறேன். பட்... எனக்கு நீ வேணும். நீதான் வேணும்."

"அனிதாகிட்ட என்ன பெட் கட்டின மேகலா?"

"ஜனா! அது... வந்து..." - தடுமாறினாள்.

"நீ என்னைக் கட்டிக் கொண்டால் அவ உனக்கு ஃபைவ் தௌஸண்டுக்கு ட்ரீட் வெக்கணும். அதுதானே? இது மட்டும்தானா? இல்லே, வேறு யார் கிட்டேயும் பெட் கட்டியிருக்கியா?" - பற்களைக் கடித்துக் கொண்டு நின்றவளை வெறுப்பாய் நோக்கினான்.



"அசிங்கமா இல்ல உனக்கு? நேசம்னா என்னன்னு தெரியுமா உனக்கு? கல்யாணம்னா என்னன்னு தெரியுமா? குடும்பம்னா என்னன்னு தெரியுமா? ஒரு சூதாடி மாதிரிப் பணயம் வெக்கிறதுக்குப் பேர் என்ன? நான் என்ன சூதாட்டப் பொருளா?

"மொதல்ல பொண்ணா லட்சணமா நடந்துக்க. இனிமே நான் வீட்ல இருக்கும்போது இப்படி அரைகுறையா ட்ரெஸ் பண்ணிட்டு வந்து நிற்காதே! அது உம் மேல உள்ள வெறுப்பை அதிகரிக்குது. போ... வெளியே போ." - கையில் காபியோடு வந்து நின்ற தேவகியின் முன்னால் அவமானத்தால் முகம் சிவந்து போனாள் மேகலா. தன்னை ஒதுக்குகிறான் என்பதே பெரிய அவமானம். இதில் ஒரு வேலைக்காரியை வைத்துக்கொண்டு தன்னை வெளியே போகச் சொன்னது. கோபத் தீயில் நெய்யூற்றியது போலிருக்க, ஜனார்த்தனனை வெறித்தாள்.

"ஜனா! என் லைஃப்ல எதுலயும் நான் தோத்ததில்ல. உன் விஷயத்திலயும் நான் தோற்கமாட்டேன். நீ என்ன சொன்னாலும் சரி. உனக்குப் பிடிக்குதோ பிடிக்கலையோ... நீ என்னைத்தான் கட்டிக்கணும். எங்கூடத்தான் வாழ்ந்தா கணும். வாழ வைப்பேன்."

"என்ன, மிரட்டுறியா?"

"எச்சரிக்கிறேன். இந்த வீட்ல உன் மனைவியா கடைசி வரை வாழப் போறது நான்தான். நான் மட்டும்தான். எவளையாவது நினைச்சிட்டு என்னை ஒதுக்காதே! அது உனக்கு நல்லதில்ல."

"அடச் சீ! வாயை மூடு. உன் ரௌடித் தனத்தையெல்லாம் உன் அம்மாவோட நிறுத்திக்க. எங்கிட்ட வேண்டாம். போ... போய் வேறு எவனாவது கிடைப்பான். அவன்கிட்ட போய் உன் விளையாட்டை வெச்சுக்க. எனக்கு ஆயிரம் வேலை இருக்கு... கிளம்பு!"

"தப்பு பண்ற ஜனா! ஒரு வேலைக்காரி முன்னால என்னை நீ ரொம்ப அவமானப்படுத்துற. இதுக்கு நீ பதில் சொல்லியே ஆகணும்." - கண்களில் வெறி மின்ன மேகலா அதிரும் குரலில் மிரட்ட, அலட்சியமாய் அ... ஒதுக்கினான்.

"தேவகி! தலைய வலிக்குது. காபியைக் கொடு!"

"இந்தாங்கய்யா!" - ஓடிவந்து காபி கோப்பையை நீட்டினாள்.

"தேவகி! இனி இந்த மாதிரி யாரும் வந்தா உள்ளே அலவ் பண்ணாதே! எதுக்கும் கதவைப் பூட்டியே வை!" - என்றவாறு காபியை அருந்திக் கொண்டே தன் அறைக்குள் நுழைந்து, கதவை அறைந்து சாத்தினான் ஜனார்த்தனன்.

முகத்தில் அறை வாங்கியது போல் முகம் சிவக்க நின்றாள் மேகலா. தனது ஆத்திரத்தை அவனிடம் எப்படி காட்டுவது எனப் புரியாமல் சுற்றிலும் தேடிப் பார்த்தவளின் நெருப்புக் கண்களில், டி.வி. மீது வைக்கப்பட்டிருந்த ஜனாவின் புகைப்படம் கண்ணில் பட்டது.

விகாரமாய்ச் சிரித்தாள். ஆவேசமாய் அதை எடுத்து அதில் அழுத்தமாய் முத்தமிட்டாள். தேவகி மிரண்டு போய் நிற்க, அவளைப் பார்த்துக் கொண்டே, கையிலிருந்த புகைப்படத்தை ஓங்கி டி.வி.யின் திரை மீது எறிந்தாள்.



"ச்சில்லீர்..." - என்ற ஓசையோடு டி.வி. நொறுங்கிவிட, புகைப்படம் விரிசலோடு கீழே விழுந்து சிதறியது. பயத்தில் தேவகி அலறிவிட, சத்தம் கேட்டு அறையை விட்டு வெளியே வந்தான் ஜனார்த்தனன்.

ஆக்ரோஷமாய்த் தேவகியை நெருங்கினாள் மேகலா. "அடியேய்! உன் எஜமான்கிட்ட சொல்லு. அவன் எனக்குத் தான். அப்படி நடக்காமப் போனா இதே மாதிரி ஆகிடுவான். சொல்லி வை." - எனக் கர்ணகடூரமாய் மொழிந்து விட்டு வேகமாய்த் திரும்பி வாசலை நோக்கி நடந்தாள்.

வாசலில் கார் வந்து நிற்க, கோமதியும் சங்கரனும் இறங்கினர். வெளியே வந்து கொண்டிருந்த மேகலாவைப் பார்த்ததும் புன்னகைத்தாள் கோமதி.

"வாம்மா! எப்போ வந்தே? கிளம்பிட்டியா?"

"ஆன்ட்டி! உங்க வீட்டு வேலைக்காரிகிட்ட இப்போ ஒரு விஷயம் சொல்லிட்டு வந்தேன்."

"என்னம்மா விஷயம்?"

"அதை அவகிட்டயே கேளுங்க. நான் சொன்னது உங்க பிள்ளைக்காக மட்டுமில்ல. உங்க ரெண்டு பேருக்கும் சேர்த்துத்தான். நினைவுல வெச்சுக்கங்க." - என்றவாறே சரேலென வெளியேறினாள்.

கணவன் மனைவி இருவரும் குழப்பமாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்ன கோமதி! இந்தப் பெண்ணைப் பத்தித்தானே இவ்வளவு நேரமாப் பெருமையாப் பேசிட்டு வந்தே! இவ ஒரு மாதிரிப் பேசிட்டுப் போறாளே!"

"எனக்கும் எதுவும் புரியலங்க! வாங்க உள்ளே போவோம்!" - கணவனோடு வீட்டிற்குள் நுழைந்தவள், தரை முழுக்கச் சிதறிக் கிடந்த கண்ணாடித் துகள்களையும் அதனருகே நின்ற மகனையும் கண்டு அதிர்ந்து போனாள்.

## 8

அன்னை பெற்றாள் பெண்ணென்று
அதனால் தானே துயர்இன்று
கண்ணைத் தந்த தெய்வங்களே
கருணை தந்தால் ஆகாதோ!

பசுமையாய் இதய வடிவில் இருந்த வெற்றிலையின் காம்பைக் கிள்ளி எறிந்துவிட்டுப் பக்குவமாய்ச் சுண்ணாம்பு தடவி, அதை நான்காய் மடித்து வாயில் வைத்து மென்று கொண்டிருந்தாள் ரங்கநாயகி. நடுநடுவே நாக்கை நீட்டி, சிவந்திருக்கிறதா எனப் பார்த்துக்கொண்டு, மீண்டும் அவள் அசைபோட, கட்டிலில் அமர்ந்திருந்த சீனிவாசன் குரல் கொடுத்தார்.

"ரங்கா!"

திரும்பாமல் கேட்டாள், "ம்...?"

"நீ செய்யுறது உனக்கே நியாயமாப்படுதா?"

வெற்றிலை மெல்வதை நிறுத்திவிட்டுக் கணவன் புறமாய்க் கோபத்தோடு திரும்பினாள். சாறை விழுங்கிக் கொண்டு, "இப்ப என்ன அநியாயம் பண்ணிட்டேன்?" என்றாள்.

"வயித்துப் பிள்ளைக்காரி தனியா ஆஸ்பத்திரியில இருக்காளே! நீ ஒத்தாசைக்கு இருக்கலாம்ல்ல?"



"அவ ஒன்னும் தனியா இல்ல. எம்புள்ள குத்துக்கல்லு மாதிரி கூடவே இருக்கான்."

"உம்பிள்ளைதானே? அவன் இந்நேரத்துக்குக் குடிச்சிட்டு எங்கே விழுந்து கிடப்பானோ? அவனை நம்பி விட்டுட்டு வரலாமா? வீட்டுல உனக்கு என்ன வேலை? பேசாம ஆஸ்பத்திரிக்குப் போ. ராத்திரி நேரம் புள்ள தனியாத் தவிக்கப் போவுது!"

கோபமாய் எழுந்து ஜன்னல் வழியே எச்சிலை உமிழ்ந்துவிட்டுக் கணவனை நெருங்கினாள்.

"யோவ்! பொண்டாட்டி மேல அக்கறை இல்லாமலா மாசக்கணக்கா எம்புள்ள வேலைக்குப் போகாம வீட்டோட கிடக்கிறான். எல்லாம் அவன் பார்த்துக்குவான்."

"உம்புள்ள ஏன் வேலைக்குப் போகாம இருக்கான்னு உனக்குத் தெரியாதா? நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினதுதான் சாக்குன்ற மாதிரி, இவனுக்கு இது ஒரு சாக்குப்போக்கு!"

"யோவ்! பேசாமக் கிட! இப்படி எதையாவது பேசி என் கோபத்தைக் கிளறாதே! சொல்லிட்டேன்."

"கோபப்படாதே ரங்கா! அப்பன் ஆத்தா இல்லாத புள்ளை. ரொம்பக் கஷ்டப்பட்டு இப்பத்தான் உண்டாகி யிருக்கு. இந்த மாதிரி நேரத்தில கூட இருந்து நாமதானே கவனிக்கணும்?"

"அட! மருமக மேல அப்படி என்ன அக்கறை உனக்கு?"

"அது மருமக இல்லடி... நம்ம மக. இன்னிவரைக்கும் அதுதானே நமக்குக் கஞ்சி ஊத்துது!"

"ம்... ஊத்துவா... ஊத்துவா. ஆறு மாசமா வேலைக்குப் போகாம வீட்ல உட்காந்திருக்கா. அவளுக்கும் சேர்த்து நான்தான் கஞ்சி ஊத்துறேன். நினைப்பிருக்கட்டும்."

"என்ன? நீ கஞ்சி ஊத்திறியா? எங்கே போய்ச் சம்பாதிக்கிற? கலெக்டர் ஆபீஸ்லயா?"

"யோவ்...!"

"அக்காவுக்காகவும் உங்க குடும்பத்துக்காகவும் அந்தப் பச்சப் புள்ள நாளெல்லாம் கடையில கால்கடுக்க நின்னு சம்பாதிக்கிற பணத்தை நீ நோகாம வாங்கி இடுப்பில முடிஞ்சுக்கிற. இப்ப அந்தப் புள்ளையையும் கண்ல காண விடமாட்டேங்கிற..."

"ஆமாய்யா! அவ என் விரோதி பாரு?"

"நீ அப்படித்தான் நடந்துக்கிற. அந்தப் புண்ணியவான் வந்து பெண் கேட்டதுக்கு, இந்தப் புள்ள என்ன பண்ணும்... பாவம்!அதைப்போட்டு அப்படி வறுத்தெடுக்கிறியே!"

"யோவ்! வீட்டுக்குள்ள அடைஞ்சி கிடக்கிற உனக்கு என்னய்யா தெரியும்? அவன் எப்படித் தானா வீடு தேடி வருவான்? இவ... இந்தச் சிறுக்கிதான் வரச் சொல்லி யிருப்பா. அவ எப்படிப்பட்ட வில்லங்கம் பிடிச்சவன்னு எனக்குத்தான் தெரியும்!"

"ரங்கா! நீயா கற்பனை பண்ணிக்கிட்டு உளறாதே! பெண்ணைப் பழிக்கிறது பெரிய பாவம்."



"நான் ஒன்னும் பழிக்கல்ல. உண்மையைத்தான் சொல்றேன். காலங்காத்தால வெளியே போனாளே. இன்னும் வீடு திரும்பினாளா? அவ எங்கே போனான்னு தெரியுமா உனக்கு?"

"எங்கே போயிருக்கு?"

"அவளோட ஆசைநாயகனைப் பார்த்துக் கொஞ்சப் போயிருக்கா!" - ரங்கநாயகி நீட்டி முழக்க, வெளித் திண்ணையில் தூணோடு தூணாய்ச் சாய்ந்து அமர்ந்திருந்த காயத்ரியின் தலையில் நெருப்பை அள்ளிக் கொட்டியது போல் இருந்தது.

இந்த அத்தைக்கு நாக்கில் நரம்பே கிடையாதா? ஏன் இப்படிக் கொஞ்சமும் கூசாமல் பேசுகிறாள். மனம் வலிக்கக் கண்ணீர் பெருகியது. உள்ளே சீனிவாசன் அதட்டினார்.

"அடியே! என்ன பேசுறோம்னு தெரிஞ்சுதான் பேசுறியா? இப்படி மனச்சாட்சியே இல்லாம அந்தப் பொண்ணு மேல பழி போடாதே!"

"யோவ்! நான் எல்லாம் தெரிஞ்சுதான்யா பேசுறேன். அக்காக்காரி சாவைத் தேடி ஆஸ்பத்திரியில கிடக்கா. இவ என்னன்னா அந்த வருத்தம் தெரியாம ரோட்டோரமா இருக்கே அந்தக் கோவில்ல வெச்சு அந்தப் பயகூட கும்மாளம் போட்டுட்டு இருக்கா!"

"என்ன?" - சீனிவாசன் அதிர்ந்தார். காயத்ரியின் உடல் நடுங்கியது.

"ஆமாய்யா! வண்டிக்கடை மாரிமுத்து பார்த்திருக்கான். என்கிட்ட வந்து சொன்னான். என் ரத்தம் அப்படியே

கொதிச்சுப் போச்சு. இன்னிக்கு வரட்டும் அவ. ரெண்டுலே ஒன்னு பார்த்திடுறேன்."

"ரங்கா! நிஜமாவா சொல்ற?"

"அட, ஆமாங்கிறேன். இவளுக்கு ஏற்கெனவே அந்த பயகூட பழக்கம் இருந்திருக்குய்யா. பூனை மாதிரி இருந்து நம்மளை ஏமாத்தியிருக்கா. இவ சொல்லித்தான் அவ நம்ம வீட்டுப் படியேறி வந்திருக்கான்." - அத்தை அடித்துக்கூற, மாமாவிடம் இருந்து பதில் வரவில்லை.

காயத்ரிக்கு வயிறு கலங்கியது. என்னவெல்லாமோ சொல்கிறாளே. கடவுளே! இவளே தன்னைக் கேவலப்படுத் விடுவாள் போலிருக்கே! அம்மா! நான் எந்தத் தப்பு செய்யலம்மா. என்னை ஏன் இப்படி எல்லாருமாச் சேர்ந்து கொல்றாங்க?

எனக்கு வாழப் பிடிக்கவில்லையம்மா. என்னையும் கூட்டிட்டுப் போயிடும்மா. அப்பா! நீங்கள் அருமையாய் வளர்த்த ரத்தினங்களை இந்த அத்தை சேற்றை வாரிப் பூசுகிறாளே. நாங்கள் படும் துயரம் உங்களுக்குத் தெரியவில்லையா?

கண்ணீர் பெருக்கெடுத்தோட, வானை நோக்கிக் கும்பிட்டாள். உள்ளே மீண்டும் பேச்சுக் குரல் கேட்டது.

"ரங்கா! நீ சொல்றது உண்மைன்னே வை. பேசாம அந்தப் பயலுக்கே கட்டிக் கொடுத்திடலாமே! நீ ஏன் பொய் சொல்லி அவங்களை அனுப்பின?"

"அடக் கூறு கெட்ட மனுஷா... வந்திருந்த மாப்பிள்ளையைப் பார்த்தியா? வெள்ளைக்காரப் புள்ள



மாதிரி எம்புட்டு அழகு. பணமும் கொட்டிக் கிடக்கு. அந்த அம்மாகூடத் தங்கமான பொம்பளையாத்தான் தெரியுது."

"பிறகேன் தயங்குற? காயத்ரியோட அதிர்ஷ்டம்... அவளுக்கு இப்படி ஒரு வாழ்க்கை கிடைச்சிருக்கு. பேசாம சரின்னு சொல்லிடு ரங்கா!"

"உனக்கு ரொம்பத்தான் தாராள மனசுய்யா. எம் புள்ளைங்களைக் கூலிக்காரனுக்கும் விறகு வெட்டுற வனுக்குமா கொடுத்திருக்கேன். இவளுக்கு மட்டும் குபேர வீட்டுச் சம்பந்தமா?"

"ரங்கா!"

"என் உசிரே போனாலும் சரி. இந்தக் கல்யாணத்தை நடத்த விட மாட்டேன். அந்த மாப்பிள்ளை நம்ம வீட்டு மருமகன். நம்ம உமாக் குட்டிக்குதான்னு முடிவே பண்ணிட்டேன் நானு!"

"இது பேராசைடி. அந்தப் பொண்ணு அழகுக்கும் குணத்துக்கும் தானாத் தேடி வந்த வரன் இது. இதை நீ தட்டிப் பறிக்கிறது பாவம்டி."

"பாவ புண்ணியத்தைப் பத்தி நீ பேச வேண்டாம். எதை எப்படிச் செய்யணும்னு எனக்குத் தெரியும்."

"ரங்கா! சொன்னாக் கேளு. அடுத்தவங்களோட சாப்பாட்டைப் பறிச்சாலே அது தீராத பாவம்னு சொல்வாங்க. நீ என்னன்னா, வாழ வேண்டிய சின்னப் பொண்ணோட வாழ்க்கையையே பறிக்கணும்னு ஆசைப் படுறியே! இந்தப் பாவம் நம்மைச் சும்மா விடாதுடி."

"யோவ்! சும்மா ஏன்யா சொன்னதையே சொல்லிட்டு இருக்கே! இப்படிப் பேசிப் பேசித்தான் வீணாப் போயிட்ட. நாங்களும் அப்படியே போகணுமா? எம் பொண்ணு அரண்மனையில போய் வாழப் போறா. அதிர்ஷ்டத்தோட பொறந்தவ என் கடைக்குட்டி."

"ஏன்டி! அவங்க உம் பொண்ணைக் கட்டிக்குவாங்கன்னு எப்படிக் கனவு காண்கிறாய்? அன்னிக்கே அந்தப் பையன் திரும்பிக்கூடப் பார்க்கலியே!"

"பார்ப்பான்... திரும்பிப் பார்க்க வைப்பேன்."

"என்னடி? சினிமா வில்லி மாதிரிப் பேசுற! என்ன செய்யப் போற?"

"முதல்ல இந்த ஆள் மயக்கிய வீட்டை விட்டு வெளியேத்தணும். அந்த மாடசாமி தலையில கட்டிடணும். அப்புறமா..."

"ஏய்! பாவத்துக்கு மேல பாவமாச் செய்யாதடி. நமக்கும் புள்ளைங்க இருக்குது. அந்த மாடசாமிக்குப் பொண்ணைக் கொடுப்பதைவிட நீயே உன் தம்பி மகளைப் பாழும் கிணற்றில் பிடித்துத் தள்ளிவிட்டிடு. ஒரே நாளில் போய்ச் சேரட்டும்."

"யோவ்! நான் என்ன கொலைகாரியா? ஆயிரம் இருந்தாலும் அது என் தம்பி பொண்ணுய்யா!"

"பிறகெப்படி அந்தப் படுபாவிக்குக் கொடுக்க மனம் வந்தது உனக்கு?"

"காரணம் இருக்குதுய்யா. அந்தப் பய இருக்கிறது களக்காடு பக்கம். ஒரு வனாந்திர தேசத்தில. இவளை



அங்கோ கொடுத்திட்டோம்னு வை. அங்கே என்ன நடந்தாலும் நமக்குத் தெரியப் போறதில்ல. நானும் அந்த அம்மாகிட்ட இதமாப் பதமாப் பேசி சம்மதிக்க வெச்சிடுவேன்.

"நம்ம பொண்ணு அந்த வீட்ல போய் ராஜபோகமா வாழுவா. அதைவிட வேறென்னய்யா நமக்கு வேணும். நம்ம பொண்ணுக்காகத்தான் நான் இவ்வளவும் செய்யுறேன்."

"பாவி! சதிகாரி! எவ்வளவு கொடூரப் புத்திடி உனக்கு. நீ பெத்த பொண்ணு சந்தோஷமா வாழ, ஒரு அப்பாவிப் பெண்ணை உசிரோட பலி கொடுக்கப் போறியே! நீயெல்லாம் ஒரு மனுஷியா? உன்கூட வாழ்ந்தா நான் இத்தனை பிள்ளைகளைப் பெற்றேன்? ச்சே!" - வெறுப்பாய் முகம் சுழித்தார் சீனிவாசன்.

"போதும்யா... ரொம்பத் துள்ளாதே! ஏற்கெனவே உடம்பு முடியாம இருக்க. பொட்டுன்னு போயிடாதே!"

"அப்படிப் போயிட்டா சந்தோஷம்தான். இந்தக் கொடுமையெல்லாம் கண்கொண்டு பார்க்க வேண்டாமே!"

"நீ ஏன் பார்க்கிற? கண்ணை மூடிட்டுப் படு. அதுதானே உன் வேலை. சும்மா ஏட்டிக்குப் போட்டியாப் பேசிக் கிடைக்கிற சாப்பாட்டைக் கெடுத்துக்காதே! பிறகு நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது."

"நீ என்ன வேண்டுமானாலும் செய்வாய். உன் சுயநலத்திற்காகப் பச்சைக் குருத்தையே வெட்டப் போகிறாய். இந்தப் பட்ட மரத்தையா விட்டு வைப்பாய்? ஆதாயம் கிடைக்கிறது என்றால் நீ என்னையே கொல்லத் தயங்க மாட்டாய். அது எனக்கே தெரியும்!" - என்றார் கசப்பாய்.

"தெரியுதில்ல. பொத்திக்கிட்டு இரு. நான் இந்தச் சிறுக்
எங்கே போய்த் தொலைஞ்சான்னு ஒரு நடை பார்த்திட்
வர்றேன். அவன் கூடவே போயிட்டாளோ என்னவோ
குடும்பத்தைக் கெடுக்க வந்தவ..." - என்றவாறே வாயி
இருந்த வெற்றிலைச் சக்கையைச் சத்தமாய்த் த்தூ என
துப்பினாள்.

செம்பில் இருந்த தண்ணீரை எடுத்து வா
கொப்புளிக்கும் ஒலி கேட்க, காயத்ரி மெல்ல எழுந்தாள்
இனியும் வீட்டிற்குள் போகாமல் இருந்தால், தெருவி
வைத்தே நாறடித்து விடுவாள் அத்தை. என்ன பேசினாலு
வீட்டிற்குள் இருந்தே பேசட்டும்.

கண்களைச் சுத்தமாய்த் துடைத்துவிட்டு வாசலில் கா
வைக்க முயன்றபோது, பின்னால் பாண்டியனின் குர
கேட்டது. சட்டெனத் திரும்பினாள்.

வாழ்க்கை... எனும்... ஓடம்... எனப் புலம்பியவா
போதையில் தள்ளாடிக் கொண்டே வந்து கொண்டிருந்தா
பாண்டியன். இடையில் கட்ட வேண்டிய லுங்கி அவிழ்ந்
தெருவைப் பெருக்கிக் கொண்டே வர, மேலே அணிந்திருந்
சட்டை காணாமல் போயிருந்தது.

அவசரமாய் அவனருகே ஓடினாள். "மாமா! என்
இது? ஏன் இங்கே வந்தீங்க?" - எனக் கேட்டவளை உற்று
பார்த்தான்.

"என்ன சாவி! இப்படிக் கேட்கிற? ஐயா எவ்வள
குடிச்சாலும் கரெக்ட்டா நம்ம வீட்டுக்கு வந்திடுவேனே. என்
புதுசா கேட்கிற?"



"ஐயோ மாமா! அக்காவைத் தனியா விட்டுட்டு ஏன் வந்தீங்க?"

"அக்காவா? என்ன சாவி? நீயும் குடிச்சிருக்கியா? உனக்கு அக்கால்லாம் கிடையாதும்மா. ஒரே ஒரு தங்கைதான்." - இரண்டு விரல்களைக் காட்டியவாறே அவன் குழறலாய்ச் சொல்ல, நெற்றியில் அறைந்து கொண்டாள் காயத்ரி.

கட்டினவளுக்கும் அடுத்தவளுக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்குக் குடித்திருக்கிறானே! என்ன மனிதன் இவன்? வயிற்றுப் பிள்ளையோடு அக்கா மருத்துவ மனையில் தனியாய் இருப்பாளே! இரவில் ஏதேனும் அவசரம் என்றால்... கடவுளே! மனம் பதறியது.

"சாவிக்கண்ணு! நீ ஏன் தெருவுக்கெல்லாம் வர்ற? நான்தான் வீட்டுக்கு வந்திட்டேனில்ல... வா, உள்ளே போகலாம்." - எனத் தோள் மீது கையைப் போட்டவனைப் பட்டெனத் தட்டிவிட்டாள்.

"மாமா! குடிச்சிருந்தா கண்ணு தெரியாதா? நான் காயத்ரி."

"என்ன சாவி! கையைத் தட்டி விடுற? புருஷன்னா ஒரு மரியாதை வேண்டாம். வா... வீட்டுக்குள்ள போவோம்." - என மீண்டும் கையைத் தோள் மீது வைத்துத் தன்னோடு அணைத்துக் கொள்ள, ஆத்திரத்தோடு பலமாய் உதறித் தள்ளினாள்.

பிடிமானம் இன்றித் தள்ளாடித் தரையில் விழுந்தவன், சத்தமாய்க் கத்திக் கூச்சலிட, வீட்டிற்குள் இருந்து ரங்கநாயகி

ஓடி வந்தாள். தரையில் புரண்ட மகனைக் கண்டது பதறினாள்.

"டேய் பாண்டி! என்னடா ஆச்சு? நீ ஏன் ஆஸ்பத்திரியில இருந்து வந்தே? எழுந்திருடா..." என்றவாறே மகனைப் பற்றித் தூக்க, தாயையும் தன்னோ சேர்த்து இழுத்துக் கொண்டு கீழே விழுந்தான்.

"அடப் படுபாவி! கீழே தள்ளிட்டாளே!" - எ ரங்கநாயகி புலம்ப, வெறுப்பாய் வீட்டிற்குள் ஓடினா காயத்ரி. கட்டிலை விட்டு எழ முயற்சித்துக் கொண் சீனிவாசன், காயத்ரியைப் பார்த்ததும் அமர்ந்தார்.

"அம்மாடி! வெளியே என்னம்மா சத்தம்?"

"மாமா! உங்க புள்ள குடிச்சிட்டு விழுந்து கிடக்கா மாமா!"

"ஐயோ! மருமக...?"

"அக்கா தனியா இருப்பா மாமா. நான் உடனே ஆஸ்பத்திரிக்குப் போகணும்."

"இந்த ராத்திரியில எப்படிம்மா போவே? தூரமாச்சே!" பதறினார்.

"ஆட்டோவில போயிடுவேன் மாமா. காசு வேணும்!" என்றவாறு பரபரவெனத் தேடினாள். ஏமாற்றமாய்க் கண்ணீ சிந்தியவளை, அருகே அழைத்தார் சீனிவாசன். குரலை தழைத்துக் கொண்டார்.

"அம்மாடி! உன் அத்தை கட்டில்ல தலையணை குள்ள தேடிப்பாரு. அதுதான் அவளோட ரகசிய அறை."



மாமா சொன்னது போல் அத்தையின் தலையணைக்குள் கைவிட்டுத் துழாவ, இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்கள் சிக்கின. அவசரமாய் எடுத்துக் கொண்டு, சீனிவாசனின் கைகளைக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

"ரொம்ப நன்றி மாமா!"

"அதெல்லாம் இருக்கட்டும். நீ போம்மா. புள்ளத்தாச்சிப் பொண்ணு தனியா இருப்பா!"

"சரி மாமா! அத்தை தேடினா..."

"நான் பேசிக்கிறேன், போம்மா!" - அவர் தந்த நம்பிக்கையில் காற்றாய் வெளியேறினாள் காயத்ரி. தெருவில் கிடந்த பாண்டியன், சாப்பிட்டதையெல்லாம் வாந்தியெடுத்துக் கொண்டிருக்க, நாற்றம் குடலைப் புரட்டியது.

தெரு மொத்தமும் கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, காயத்ரி வேகமாய்ப் புறப்பட்டுப் பிரதான சாலையை அடைந்தாள். கண்களைக் கூசச் செய்யும் விளக்கொளியுடன் சீறிப்பாயும் வேகத்தோடு வாகனங்கள் வரிசையாய்ப் போய்க் கொண்டிருக்க, சாலையோரமாய் நின்று கொண்டு கைவீசி நிறுத்தச் சொல்லிக் கெஞ்சினாள்.

வந்த ஆட்டோவெல்லாம், "சவாரிம்மா!" - என்றவாறே நிற்காமல் சென்றுவிட, ஓய்ந்து போனாள் காயத்ரி. பகலெல்லாம் சாப்பிடாததில் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. எங்கே மயங்கி விழுந்து விடுவோமோ என்ற அச்சத்தில் தலையை உதறிக்கொண்டாள்.

மங்கலான் பார்வையைக் கூர்மையாக்கிச் சாலையில் வீச, தூரமாய் ஒற்றை விளக்குடன் வாகனம் ஒன்று சீரான வேகத்தோடு வந்து கொண்டிருந்தது.

நிச்சயம் இது ஆட்டோதான். இதையும் விட்டுவிட்டால் இனி மருத்துவ மனைக்குள் நுழைய முடியாது. எத்தனை ஆட்கள் இருந்தாலும் சரி... இந்த ஆட்டோவில் ஏறியே ஆக வேண்டும் என்ற முனைப்போடு உடலையும் உள்ளத்தையும் திடப்படுத்திக் கொண்டு, மெல்ல நகர்ந்து சாலையில் வந்து நின்றாள்.

"ஏம்மா! நீ சாக என் வண்டிதான் கிடைச்சிதா? ஓரமாப் போம்மா!" - எனக் கத்திவிட்டுப் போன இரு சக்கர வாகன ஓட்டியின் பேச்சைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், எதிரில் வந்த வாகனத்தில் குறியாய் நின்றாள்.

தூரத்தில் தெரிந்த விளக்கொளி நெருங்கி வர, இரு கைகளையும் வீசி, "ப்ளீஸ்! ஸ்டாப். ப்ளீஸ் ஸார்..." - எனக் கெஞ்ச, எதிரே வந்த வாகனம் தன் வேகத்தைக் குறைத்தது.

முகத்தில் நிம்மதி பரவ, வேகமாய் முன்னேறி வாகனத்தை நெருங்கியவள் திடுக்கிட்டாள். அது ஆட்டோ அல்ல. இரு சக்கர வாகனம். அது வந்து அவளருகே நிற்க, இன்னும் பலமாய் அதிர்ந்தாள். வாகனத்தில் அமர்ந்திருந்தது ஜனார்த்தனன்.

இவனா? கடவுளே! மீண்டும் மீண்டும் இவன் பார்வையில் படுகிறேனே! நான் விலகினாலும் விதி விலக விடாது போலிருக்கே! பரிதவிப்பாய் அவனுக்குப் பின்னே சாலையில் பார்வையை வீசினாள். சைக்கிளும் லாரியும் தான் வந்து கொண்டிருந்ததே தவிர, பஸ்ஸோ ஆட்டோவோ தென்படவில்லை.



"காயு! என்ன இது கோலம்? என்னாச்சு? ஏன் இந்த நேரத்தில அதுவும் தனியா நின்னு லிப்ட் கேட்கிற? காயு! உன்னைத்தான் கேட்கிறேன்." - அவன் சற்று அதட்டவே, திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள்.

"வந்து... நான்... ஆட்டோன்னு நினைச்சு... கைகாட்டினேன். ஸாரி!"

"நான் என்ன கேட்டேன்? நீ என்ன சொல்கிறாய்?"

"ம்...! எ... என்ன கேட்டீங்க?"

"நீ எங்கே போகணும்?"

"நான்... ஹாஸ்பிடலுக்குப் போகணும்."

"ஹாஸ்பிடலுக்கா? ஏன்... உடம்புக்கு என்ன?" - அவனது பதட்டம் கண்களில் நீரை வரவழைத்தது. அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் விம்மியபடி ஆரம்பித்தாள்.

## 9

உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணின் பாவையன்றோ
கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ!

சாலையில் விர்ரெனக் கடந்து சென்ற வாகனங்கள் ஒளியை வாரியிறைத்துக் கொண்டே செல்ல, அந்த ஒளியில் தெரிந்த காயத்ரியின் முகம், மனதை வெகுவாய் வருத்தியது. பேச்சு வராமல் அவள் அழுதுகொண்டே நிற்க, தவிப்பாய் அவளை ஏறிட்டான் ஜனார்த்தனன்.

"காயு... ப்ளீஸ்! அழாதே. பார்க்கவே கஷ்டமா இருக்கு. என்ன நடந்ததுன்னு சொல்லு."

"நான் ஹாஸ்பிடலுக்குப் போகணும்."

"உடம்புக்கு என்ன காயத்ரி? ஜுரமா? முகமெல்லாம் வீங்கிப் போயிருக்கே!" - பதட்டமாய் அவளது நெற்றியில் கை வைத்துப் பார்க்க, காயத்ரியின் கண்கள் பொங்கின.

"காயு! அழாதே. பார்க்கிறவங்க தப்பா நினைச்சுக்கப் போறாங்க!" - அவன் சொன்ன பிறகே சுற்றுப்புறத்தை உணர்ந்தாள் காயத்ரி. இரவு வேளை. ரோட்டில் நின்று ஒரு ஆடவனுடன் பேசிக்கொண்டு இருப்பதே மற்றவர்களது கவனத்தைத் திருப்பும்.

இதில் அழுது கொண்டு நின்றால், பார்ப்பவர்களின் மனதில் எந்த மாதிரி எண்ணங்கள் தோன்றும்? நடந்து செல்பவர்கள் கூடத் தங்களைப் பார்த்துக் கொண்டே போவதை உணர்ந்து, அவசரமாய்ப் புடவைத் தலைப்பால் கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டாள்.

ஜனார்த்தனன் தனது வண்டியை நன்றாய் ஒதுக்கி விட்டு இறங்கினான்.

"இப்பச் சொல்லு காயு! எங்கே போகணும்?"

"வந்து... அக்கா ஹாஸ்பிடல்ல இருக்கா. அவளைப் பார்க்கப் போகணும்."

"இந்த நேரத்திலா? காலையில போலாமே!"

"இல்ல... அவ தனியா இருப்பா. கூட யாரும்



"என்ன?"

"நான் உடனே போகணும்." - என நகர முயன்றவளை நிறுத்தினான்.

"எங்கே போறே?"

"இங்கே ஆட்டோ எதுவும் நிற்க மாட்டேங்குது. ஆட்டோ ஸ்டாண்டுக்குப் போய் ஆட்டோ பிடிச்சுக்கிறேன்."

"காயு! மணி பத்தாகுது. இந்த நேரம் தனியாப் போகலாமா?"

"நான் போகணும். அக்கா தனியா இருக்காளே! நைட் எதுவும் அவசரம்னா?"

"உன் மாமா இருக்கார்ன்னு சொன்னியே... பிறகென்ன?"

"மாமாவா? அவர் இருந்தால் நான் ஏன் போகிறேன்?"

"ஏன்? அவர் எங்கே போயிட்டார்?"

"வீட்டுக்கு வந்திட்டார்."

"ஏன்? நைட்ல ஜென்ட்ஸ் தங்கக் கூடாதா, ஹாஸ்பிடல்ல?"

"எங்க மாமா நைட்ல ஒரு நாளும் நிதானமா இருக்க மாட்டாரு. வீட்ல எல்லாரும் பட்டினியாக் கிடந்தாலும் அவருக்குத் தண்ணி போடக் காசு கொடுத்தாகணும்."

"காயு?"

"இப்போ எங்க தெருவில விழுந்து கிடக்கிறார். அங்கே அக்கா தனியா இருக்கா. நான் போகணும். தயவுசெய்து

எதுவும் கேட்காதீங்க!" - புதட்டமாய் நகர்ந்தவளை மீண்டும் தடுத்தான்.

"சரி காயு! வண்டியில ஏறு. நான் கூட்டிட்டுப் போறேன்."

"ஐயோ! வேணாம்..." - வெகுவாய்ப் பதறினாள்.

"ஏன்? ஹாஸ்பிடலுக்குத்தானே போறோம். சும்மா ஏறு!" - அவன் இயல்பாகக் கூறியவாறே வண்டியை எடுத்து அவளருகே கொண்டு வந்து நிறுத்த, அவசரமாய் அக்கம் பக்கம் பார்வையைச் சுழல விட்டாள்.

காலையில் கோவிலில் நின்று பேசியதற்கே அத்தை ஆயிரம் அர்த்தம் கற்பித்தாள். இதில் இவனுடன் வண்டியில் போவதா? இந்த விஷயம் மட்டும் அத்தைக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? நினைக்கும்போதே உடல் நடுங்கியது.

"டயமாகுது காயு... வண்டியில ஏறு!"

"இல்ல... வேண்டாம்!"

"ஏன்?"

"எனக்கு... இந்த வண்டியில உட்கார்ந்து பழக்கமில்லை. கொஞ்சம் பயம்..."

"பயமா இருந்தா என்னைப் பிடிச்சுக்க!"

"ஐயோ!" - பதறி நெஞ்சில் கைவைத்தாள்.

"இப்ப ஏன் இவ்வளவு பயப்படுற? நான்தானே கூப்பிடுறேன். வா...!"

"இதோ பாருங்க... என்னால வர முடியாது. நீங்க போங்க... நான் ஆட்டோவில போய்க்கிறேன்."



"புரியாமப் பேசாத, காயு! வயசுப் பொண்ணு இப்படி ராத்திரி நேரம் தனியாப் போனா ஒரு மாதிரிப் பார்ப்பானுங்க. உனக்கு நாட்டு நிலவரம் புரியல்ல. என்னென்னவோ நடக்குது ஊர்ல. பேசாம வா!"

"இல்ல... வேண்டாம்!"

"அப்படியென்ன பிடிவாதம் காயு! கட்டிக்கப் போறவன்கூட பைக்ல போறது தப்பா?"

"என்னது?" - விழிகளை விரித்தாள்.

"ஆமா! நான் உன்னைக் கட்டிக்கப் போறவன்தானே! உன் வீட்ல யாரு என்ன பிளான் போட்டாலும் சரி... நீதான் என் மனைவி. உங்க அக்கா குணமாகி வரட்டும். அவங்ககிட்டப் பேசிட்டு மத்த வேலையைத் தொடங்கிடுறேன்."

"எ... என்ன வேலை?"

"நம்ம கல்யாண வேலைதான்!"

"ஐயோ...!"

"என்ன ஐயோ? நல்ல விஷயம் பேசும்போது இப்படியெல்லாம் பேசக்கூடாது. புரியுதா?"

"உங்களுக்கு எங்க அத்தையைப் பத்தி சரியாத் தெரியல. அதான் இப்படிப் பேசுறீங்க!"

"உங்க அத்தைக்குத்தான் என்னைப் பத்தித் தெரியல்ல..."

"என்ன?"

"ஆமா! எவ்வளவு தைரியம் இருந்தா என் மனைவிய இன்னொருத்தருக்குக் கல்யாணம் பேசுவாங்க?"

"ஏ... என்ன சொல்றீங்க?"

"ஆமா காயு! உன்னை என்னிக்குப் பார்த்தேனோ அப்போ இருந்தே நீதான் என் மனைவின்னு மனசுக்குள்ள குடும்பமே நடத்திட்டு இருக்கேன். இப்ப வந்து எவனோ ஒருத்தனுக்கு உன்னைத் தூக்கிக் கொடுப்பேனா? நெவர். என்ன ஆனாலும் சரி! நீதான் என் வொய்ஃப்!" – உறுதியாய்ச் சொன்னவனை மிரட்சியாய்ப் பார்த்தாள்.

"என்ன பார்க்கிற? நான் ஒன்னும் சும்மா சொல்லல. நம்பிக்கை இல்லையா? இப்பக்கூட உன்னைக் கூட்டிட்டுப் போய்த் தாலிகட்ட நான் ரெடி."

"இதோ பாருங்க. :..."

"வெயிட் காயு! ஆனா நான் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். நான் ஏன் திருட்டுக் கல்யாணம் பண்ணணும்? மனசுல உள்ள விருப்பத்தையே பெத்தவங்க மூலம் நாகரிகமா முறையாத் தெரிவிச்சேன். கல்யாணத்தை எப்படித் திருட்டுத்தனமாப் பண்ணுவேன்?

"நம்ம கல்யாணம் பெத்தவங்க சம்மதத்தோடு உங்க அக்காவோட முன்னிலையில நடக்கணும்னு ஆசைப் படுறேன். அதுக்காக எவ்வளவு நாள் என்றாலும் காத்திருக்க நான் தயார். இதெல்லாம் ஏன் உங்கிட்ட சொல்றேன்னு தெரியுமா?"

பேச்சின்றி அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் காயத்ரி.

"உனக்கு எம் மேல நம்பிக்கை வரணும். என்னோட அன்பு எவ்வளவு ஆழமானது என்று நீ புரிஞ்சுக்கணும்.



எத்தனை தடை வந்தாலும் எனக்காக ஜனா இருக்கான்னு நீ உறுதியோட நிற்கணும். என்னோட நேசம் வெறும் கானல் நீரல்ல – வற்றாத கங்கை நதின்னு நீ புரிஞ்சிக்கணும்.

"அதனாலதான் உன்கிட்ட இந்தச் சூழ்நிலையிலகூட இதெல்லாம் சொல்றேன். உன்னைப் பார்க்கவோ பேசவோ வாய்ப்பும் கிடைப்பதில்லையே! சாரி காயு! உன் அவசரம் புரியாமல் பேசிக் கொண்டிருக்கிறேன். வா போகலாம்."

காயத்ரி இன்னும் தயங்கியே நிற்க. "இன்னும் உனக்கு நம்பிக்கை வரல இல்ல. சரி... நீ இங்கே வெயிட் பண்ணு. நான் போய் ஆட்டோ கூட்டிட்டு வர்றேன்." – என்றவாறு வண்டியை ஸ்டார்ட் செய்தான்.

"வேண்டாம்!" – மெல்லிய குரலில் மறுத்தாள்.

"இல்ல... உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?"

"இதில சிரமம் என்ன? ஆட்டோ பிடிச்சு உன்னை அனுப்பிட்டுப் பின்னால நான் வண்டியில வர்றேன். சரியா?"

"நீங்க எதுக்கு?"

"என்ன காயு... இப்படிக் கேட்கிற? உங்க அக்காவுக்கு இப்படி ஆக நானும் ஒரு காரணம். அவங்களைப் பார்த்து ஸாரி கேட்கணும்னு நினைச்சிட்டு இருந்தேன். இப்ப உன்கூட வந்தா அவங்களைப் பார்த்து மன்னிப்புக் கேட்ட மாதிரியும் இருக்கும். நீயும் பத்திரமா ஹாஸ்பிடல் போய்ச் சேர்ந்தன்னு ஒரு நிம்மதி இருக்கும்.

"அதோட, நீயே சின்னப் பொண்ணு. ஹாஸ்பிடல்ல தனியா இருப்பியா? நானும் கூட இருக்கேன். மெடிஸின் எதுவும் வாங்கணும்னா ஆள் வேணுமே! வா போலாம்."

"ஏங்க! நீங்க... வீட்டுக்குப் போக வேண்டாமா? வீட்ல தேட மாட்டாங்களா?"

"ஒரு போன் பண்ணிச் சொல்லிட்டாப் போச்சு!"

"என்ன சொல்வீங்க?"

"காயுவோட ஹாஸ்பிடல் போறேன்னு சொல்வேன்."

"ஒன்னும் சொல்ல மாட்டாங்களா?"

"உதவி செய்யுறதுக்கு ஒரு நாளும் நம்ம வீட்ல யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க!" - அவன் வெகு உரிமையாய் நம்ம வீடு என்றதில் லேசாய் மனம் அசைந்தது. இத்தனை வருடங்களாய்க் கூடவே இருந்தாலும் அத்தை தங்கள் வீட்டை என் வீடு என்று பிரித்துத்தான் பேசுவாள். ஆனால் இவன்...

"கருமம் கருமம்! இதுகளுக்கு நேரம் காலம் இடம் எதுவுமே கிடையாது போலிருக்கு. இப்படி நேரம் கெட்ட நேரத்தில ரோட்ல நின்னு கூத்தடிக்குது பாரு. பெத்தவ, வீடு வாசல்ன்னு எதுவும் கிடையாதோ என்னவோ? ச்சே! கண்றாவி!" - இரண்டு பெண்கள் சத்தமாகச் சொல்லிவிட்டுப் போக,அவமானத்தில் உடல் குறுகியது.

முகத்தில் கடுமை தோன்ற, அந்தப் பெண்களை அழைத்தான் ஜனார்த்தனன். "ஹலோ! ஒரு நிமிஷம். இங்கே நாங்க கூத்தடிக்கிறதப் பார்த்தீங்களா? என்ன ஏதுன்னு புரியாம இப்படி முட்டாள்தனமாப் பேசாதீங்க!"

ஒரு அம்மாள் வெடுக்கெனக் கேட்டாள். "பின்னே? நடுரோட்ல நின்னு குடும்பத்தின் வரவு செலவுக் கணக்குப்



பார்க்கிறீங்களாக்கும். உங்களுக்கெல்லாம் வேற இடமா இல்ல?"

"ஹலோ! என்ன..." - எனத் தொடங்கியவனைத் தடுத்தாள் காயத்ரி.

"வேண்டாம்... ராத்திரி நேரத்தில பிரச்சனை வேண்டாம். நீங்க வண்டிய எடுங்க."

ஜனார்த்தனனின் முகம் வாடியது. "ஏன் காயு! ஒரு ஆட்டோ பிடிச்சுட்டு வரக்கூட என்னை அலவ் பண்ண மாட்டியா?"

"நான் உங்க வண்டியிலயே வர்றேன்."

"காயு! நிஜமாவா சொல்றே?" - வியப்பாய்க் கேட்டான்.

"ம்... நேரமாகுது. போகலாமா? அப்புறம் ஹாஸ்பிடலுக்குள்ள விடமாட்டாங்க."

"போகலாம்... போகலாம்..." - உற்சாகமாக வண்டியை உசுப்ப, தயக்கமாய்ச் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, மெதுவாய் வண்டியில் ஏறி உட்கார, உலகையே வென்ற சந்தோஷத்தில் சீறிப் பாய்ந்தான்.

இரவு நேரச் சாலையில் அவனது வேகம் மிரட்ட, பயமாய்க் குரல் கொடுத்தாள். "ஏங்க! கொஞ்சம் மெதுவாய்ப் போங்களேன்!"

"ஏன் காயு?"

"எனக்குப் பயம்மா இருக்கு!"

"பயமா இருந்தா... என்னைக் கட்டிப் பிடிச்சுக்கோ!"

"சீச்சீ..."

"நான் ஒன்னும் தப்பா எடுத்துக்க மாட்டேன்."

"இப்படியெல்லாம் பேசினா நான் இறங்கிடுவேன்!"

"சரி சரி... பேசல. எந்த ஹாஸ்பிடல்னு சொல்லுடா. அதுக்கப்புறம் பேசவே மாட்டேன்."

"திருவல்லிக்கேணியில ஜிஹெச். இருக்கில்ல..."

"என்ன? ஜி.ஹெச்லயா அட்மிட் பண்ணியிருக்கீங்க?"

"ஆமாம்!"

"ஏன் காயு! இங்கே பக்கத்திலேயே எவ்வளவோ ஹாஸ்பிடல் இருக்கே! அவ்வளவு தூரம் போய் ஏன் சேர்த்தீங்க?"

"அத்தைக்கு எல்லாக் குழந்தையும் அங்கேதான் பொறந்ததாம். அதனால... அத்தைதான் சேர்த்தாங்க."

"ஏன் காயு! உங்க வீட்ல உங்க அத்தை வெச்சதுதான் சட்டமா? உன் மாமா எதையும் தட்டிக் கேட்க மாட்டாரா?"

"யாரு?"

"உன் அக்காவின் கணவர்!"

"மாமா நல்லவர்தான்... தண்ணியடிக்காத வரை. தண்ணியடிச்சா அப்படியே தலை கீழா மாறிடுவார். இன்னிக்கு ரொம்ப ஓவர். நானே அடையாளம் தெரியல்ல அவருக்கு."

"அப்படியென்ன குடி? மனைவிய இந்த நிலையில விட்டுட்டு எவனாவது இப்படிக் குடிச்சிட்டு விழுந்து கிடப்பானா? நானு சாத்து சாத்தினாத்தான் கொஞ்சம் பயம்



இருக்கும். உன் அத்தை இதை யெல்லாம் செய்ய மாட்டாங்களா?"

"அத்தையா? எம் மாமா இப்படி முழு நேரக் குடிகாரனா மாறுனதுக்குக் காரணமே அவங்கதான். புள்ளைய அதட்டி வேலைக்கு அனுப்பாம, வீட்டோட சோம்பேறியா இருக்க வெச்சதாலதான் மாமாவோட நிலமை இவ்வளவு மோசமாச்சு!"

"இதையெல்லாம் முதல்லயே தட்டி வெச்சிருக்கணும் காயு!"

"வெச்சிருக்கணும்தான். ஆனா யாரு தட்டிக் கேட்கிறது? எங்களுக்குன்னு யார் இருக்கா?" - சொல்லும்போதே தொண்டை அடைத்தது. வண்டியின் வேகத்தைக் குறைத்தான் ஜனார்த்தனன்.

"இனிமே இப்படியெல்லாம் சொல்லாதே, காயு!"

"ம்...!"

"நான் இருக்கேன். எப்பவுமே உனக்காக - உங்களுக்காக நான் இருக்கேன்." - பதிலின்றி அமைதியாய் இருந்தாலும், அவனது வார்த்தை காயம்பட்ட மனதை மயிலிறகாய் வருடியது. வார்த்தை மட்டுமா? அவனது அருகாமையும்தான். வீட்டிலிருந்து அத்தையின் பேச்சுகளையும், மாமாவின் ஆட்டத்தையும் கண்டு மனம் நொந்து வேதனையாய்த் துடித்துக் கொண்டுதானே ஓடி வந்தாள்.

ஆனால் இப்போது அந்த வேதனைகள் மெல்ல மறையத் துவங்கியிருந்தன. ஏன் என்று புரியாமலேயே இந்த அண்மையை மனம் விரும்பி ஏற்றுக் கொண்டது. இவன்

அருகே இருக்கும் போது அத்தையோ, தனது வருத்தமோ மறந்துதான் போகிறது. அவன் மீது மோதிய காற்று தன் மீது மோத, அதை இனிமையாய்ச் சுவாசித்தாள்.

"என்ன காயு சைலண்ட் ஆயிட்டே? மாமாவைப் பற்றி நினைச்சு வருத்தப்படுறியா?"

"ம்...? இ... இல்ல... ஆமா...!"

"நீ கவலையே படாதே காயு! நான் உம் மாமாவை ஒரு வழி பண்ணிடுறேன்."

"என்னது?"

"பதறாதே! உம் மாமாவைத் திருத்தி ஒரு நல்ல மனுஷனா மாத்துறது எம் பொறுப்பு!"

"நிஜமாவா சொல்றீங்க?"

"ம்... உம் மாமா மத்த டைம்ல எப்படி இருப்பார்? ஐ மீன் உன் அக்கா மேல ரொம்பப் பிரியமா இருப்பாரா?"

"ம்... ரொம்ப அன்பா இருப்பாரு. எவ்வளவு குடிச்சாலும் அக்காகிட்ட மட்டும் கோபமோ சண்டையோ போட மாட்டார். இந்தக் குடிப் பழக்கத்தைத் தவிர வேற எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது."

"இது போதுமே! ஈஸியா மாத்திடலாம். நீ கவலையே படாதே காயு! உன் அக்காவுக்குக் குழந்தை பிறக்கும்போது உம் மாமா ஒரு பொறுப்புள்ள ஆளா மாறியிருப்பாரு. அது என் பொறுப்பு!" - உறுதியாய்ச் சொன்னவனை மனம் நெகிழப் பார்த்தாள்.

"இதெல்லாம் நடக்குமா?"



"கண்டிப்பா நடக்கும். உங்க மாமா இந்தக் குடிப் பழக்கத்தை நிறுத்த வைத்தியம் பண்ணும் இடம் இருக்கு. அங்கே அழைச்சிட்டுப் போறேன். அவங்க கவுன்சிலிங் பண்றதுலயே அந்தப் பழக்கம் மேல வெறுப்பு வந்திடும். தேவைப்பட்டா ட்ரீட்மெண்ட் எடுத்துக்கலாம். நோ ப்ராப்ளம்.

"அதோட ஒரு வேலைக்கும் ஏற்பாடு பண்ணிட்டாப் போதும். மத்த நினைப்பு தானாப் போயிடும். உங்க அக்கா முகத்தில இனி நிரந்தரமா சந்தோஷத்தைப் பார்க்கலாம் காயு."

"ரொம்ப நன்றிங்க. இதெல்லாம் நடக்குதோ என்னவோ... ஆனா கேட்கும்போதே ரொம்ப சந்தோஷமா இருக்கு."

"இந்தச் சந்தோஷம் நிஜமாவே உங்களுக்குச் சொந்தமாகப் போகுது பாரேன்!"

"இ... இதுக்கெல்லாம்... நான்... நான்..."

"காயு! இதெல்லாம் பண்றதுக்குக் காரணம் இருக்கு காயு. உன் அக்கா குடும்பம் நிம்மதியா சந்தோஷமா இருந்தாத்தானே நீயும் மனசில எந்த வருத்தமும் இல்லாம என்கூட வாழ முடியும்? உனக்காக நான் என்ன வேணா செய்வேன் காயு!" - அவனது மென்மையான குரலும் இதமான வார்த்தையும் மனதை இறுக்கமாய்க் கட்டி வைத்திருந்த கயிற்றை அறுத்து எறிந்தது.

மனக்குளம் அலையடிக்கத் துவங்கியது.

நிதானமாய் அவனை ஏறிட்டாள்.

காற்றின் வேகத்தில் கலைந்த அவனது கேசம், பரந்த முதுகு, நிமிர்ந்து அமர்ந்த தோரணை, இதமாய் வீசிய நறுமணம் என அவளை மிகவும் ரசிக்க வைத்தது. சாலையில் இருந்த வேகத் தடை மீது பைக் ஏறி இறங்க, பதட்டமாய் அவனது தோளைப் பற்றிக் கொண்டாள்.

ஜனார்த்தனனின் இரத்த நாளங்கள் புத்துயிர் பெற, வண்டியைச் சீறவிட்டான். தோளைப் பற்றிய கரத்தை எடுக்காமல் அப்படியே வைத்துக் கொள்ள, அவர்களது வாகனத்தின் எதிரே வந்த கார் பிரேக் இட்டு நின்றது. காரின் முன்பக்கக் கண்ணாடி இறக்கப்பட, வெறித்த கண்களோடு அவர்கள் இருவரையும் பார்த்தாள் மேகலா.

உடல் முழுக்கப் பற்றி யெரிந்தது போல் இருந்தது. பின்னால் அமர்ந்திருந்த காயத்ரியின் மீது வன்மம் எழுந்தது. பற்கள் அனைத்தும் நொறுங்கி விடுவது போல் கடித்தாள்.

# 10

மனதில் ஒன்று விழுந்ததம்மா
விழுந்தது பூவாய் மலர்ந்ததம்மா
கனவில் ஒன்று தெரிந்தது
கைகளில் வந்தே சேர்ந்ததே!

“ஹேய் மேகா! அந்த பைக்ல போறது உன் ஆள் மாதிரியில்ல?” - முன் இருக்கையில் அமர்ந்திருந்த அனிதா கேட்டதும் இன்னும் கடுப்பானாள்.

“ம்... ம்...”



“என்னப்பா இது? ஏதோ ஒரு பொண்ணு பின்னால இருக்கிறா? அதுவும் உரிமையா தோள் மேல கை போட்டுட்டுப் போறாளே! யார் அவ?”

“இஸிட்! ச்சே! நான் பார்க்கலியே...” - பின்னால் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த மூன்று இளம்பெண்களில் நடுவே இருந்த ரேவதி அலுத்துக் கொண்டாள்.

“ஏய்! அது ஜனாதானா? நல்லா பார்த்தியா?” அடுத்தவள் கேட்க, அடித்துக் கூறினாள் அனிதா.

“கண்டிப்பா ஜனாதான். ஹெட்லைட் வெளிச்சத்தில் கிளியரா தெரிஞ்சதே. மேகா! நீயும் பார்த்தியே... அவன் ஜனாதானே?”

“ஆமாம்! அதுக்கென்ன இப்போ?”

“என்னடி, இவ்வளவு சாதாரணமா சொல்றே? ஜனா கூடப் போறது ஒரு பொண்ணு...”

“இருக்கட்டுமே. அதுக்கு என்ன பண்ணணும்றே?”

“மேகா! பேசுறது நீதானா? நம்பவே முடியல்ல!”

“ஏன்?”

“இல்ல கொஞ்ச நாளுக்கு முன்னால ஜனா பார்க்கிறதுக்கு ஹீரோ மாதிரி இருக்கான்னு ரம்யா ஒரே ஒரு வார்த்தை சொன்னதுக்காக காலேஜ்ல எத்தனை பேர் முன்னால அவளை அறைஞ்ச! ஞாபகம் இருக்கா?”

“அதை எப்படி மறப்பா அனிதா? ரம்யா அவளோட பேரண்ட்ஸைக் கூட்டிட்டு வந்து செமத்தியா ரகளை பண்ணிட்டாளே. அதை யாருமே மறக்க முடியாது.”

"இப்ப ஏன் பழசெல்லாம் கிளறுறீங்க?" - கொதித்துப் போயிருந்த மேகலா வெடித்தாள்.

"இல்லடி! அவ சும்மா ஒரு வார்த்தை சொன்னதற்கே என் ஜனாவை... என்னைத் தவிர யாரும் பார்க்கவும் கூடாது. ரசிக்கவும் கூடாது. அவனே வந்து பேசினாக்கூட எவளும் பேசக் கூடாதுன்னு அவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணின? இப்போ எவளோ ஒருத்தி இவ்வளவு உரிமையா ஜனாகூடப் போறா. நீ போனா போகட்டும்கிற?"

ரேவதி சத்தமாய்ச் சிரித்தாள்.

"அனி! உனக்கு விஷயமே தெரியாதா? நான் சொன்னதுதான் நடக்கப் போகுது. மேகா நிலைமை இலவு காத்த கிளி மாதிரி ஆகப் போகுது. பாரேன்!"

"ஷட் அப்! ரே... நீ என்ன ரொம்ப டீஸ் பண்ற! இது உனக்கு நல்லதில்ல..." - பின்னால் திரும்பி ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள் மேகலா.

"கோவிச்சுக்காதே மேகா. உண்மை இதுதானே. ஐ திங்க்! இது அந்தப் பொண்ணாதான் இருக்கணும்."

"எந்தப் பொண்ணு ரே?" - ஆர்வமாய்க் கேட்டாள் லலிதா.

"அதான் லலி! ஜவுளி ஷோரூம்ல பார்த்து மனசைப் பறிகொடுத்து அந்தப் பொண்ணோட வீட்ல போய்ப் பெண் கேட்டாங்களாமே. அந்தப் பொண்ணாத்தான் இருக்கும்."

"சேச்சே! அவளா இருக்காது!" - மறுத்தாள் அனிதா.

"ஏன் இருக்காது?"



"ஈவினிங்தான் மேகா ஜனாகிட்ட இதைப் பத்தி பேசியிருக்கா. அதோட கையில கிடைச்சதெல்லாம் போட்டு உடைச்சி மிரட்டிட்டுப் போயிருக்கா. அந்த அதிர்ச்சியில இருந்து மீளவே ஜனாவுக்கு ஒன் வீக்காகும்..."

"போடி இவளே! ஜனாவை என்ன உங்களை மாதிரி பயந்தாங்கொள்ளின்னு நினைச்சிங்களாக்கும். அவன் வீரன்டி. இவ மிரட்டலுக்கெல்லாம் பயப்பட மாட்டான். நாம இந்த ரூட்ல வர்றோம்னு தெரிஞ்சே மேகாவை வெறுப்பேத் தணும்னுதான் இந்தப் பக்கமா போறான்னு நினைக்கிறேன்."

"ரே! வாயை மூடு. மேகா கோபப்பட்டா ஆபத்து. மௌனமா இருந்தா அது பெரிய ஆபத்து. நீ வேற வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக்காதே..." - இடப்புறம் அமர்ந்திருந்த அஸ்வினி மெதுவாய்க் கிசுகிசுத்தாள்.

"மேகா! காரை எடுப்பா! எவ்வளவு நேரமா நிற்கிறது? டயமாகுது..." - அனிதா குரல் கொடுக்க ஸ்டியரிங்கை அழுந்தப் பற்றிக் கொண்டு முகம் சிவக்க, தலை சிவந்து அமர்ந்திருந்தாள் மேகலா. மனம் குமுறிக் கொண்டிருந்தது.

தோழியரின் பேச்சை விடவும் சற்று முன் கண்ட காட்சி மனதை அறுத்துக் கொண்டே இருந்தது. என்ன ஒரு துணிச்சல்! அத்தனை தூரம் சொல்லிவிட்டு வந்த பிறகும் இந்த இரவு நேரத்தில் அவளுடன் உல்லாசப் பயணமா செல்கிறாய்? அது அவள்தானா? வேறு யாரேனும் லிஃப்ட் கேட்டு ஏறியிருப்பாளோ?

இருக்காது. அப்படி எந்தப் பெண்ணையும் ஜனா வண்டியில் ஏற்றியது இல்லை. அதுவும் இந்த நேரத்தில் பீச் ரோட்டில் ஒரு பெண்ணுடன் போகிறான் என்றால் அது

நிச்சயமாய் அவளாய்த்தான் இருக்கும். இந்த நேரம் பீச்சிற்குப் போய் என்ன செய்வான்?

விடக்கூடாது. அவனை விடக்கூடாது. என்னைத் தவிர இன்னொருத்தியை நினைக்கவே கூடாது என்றேன். அவன் என்னவென்றால் அவளை அழைத்துக் கொண்டு ஊரைச் சுற்றுகிறானா?

அதுவும் என் கண்முன்னே? விடமாட்டேன் ஜனா! உன்னையும் அவளையும் என்ன செய்கிறேன் பார்! - மனதில் எழுந்த ஆக்ரோஷத்தோடு சீற்றமாய்க் காரைக் கிளப்பி ரிவர்ஸில் எடுத்து வளைத்து, திருப்பி, வந்த வழியே திருப்ப... தோழியர் பதறினர்.

"மேகா! என்ன பண்ற நீ? காரை ஏன் திருப்புற?"

"பீச்சுக்குப் போறோம்!" - என இறுகிய குரலில் கூறி விட்டு, காரைப் பறக்க விட, ரேவதியும் லலிதாவும் பதறினர்.

"ஏய்! முதல்ல காரை நிறுத்து. ஸ்டாப் இட் மேகா!" - தோழியரின் கத்தலில் கோபமாய் பிரேக்கை மிதித்தாள். எதிரே வந்த வாகனங்கள் மிரண்டு விலக, சாலையோரத் தடுப்பருகே கார் நின்றது.

"இப்ப ஏண்டி கத்துறீங்க?"

"கத்தாம... டைம் என்ன ஆகுது? வீட்டுக்குப் போக வேண்டாமா?"

"நோ... நான் உடனே பீச்சுக்குப் போகணும்."

"என்ன மேகா இது? இவ்வளவு நேரம் பீச்சிலதானே இருந்தோம். ரோந்து போலீஸ்காரர் விரட்டுற வரைக்கும் இருந்ததே தப்பு. திரும்பவும் போகணும்கிறியே..."



"அனி! நான் அவர்களைக் கையும் களவுமாய்ப் பிடித்தே ஆகணும்."

"யாரை?"

"ஜனாவையும் அவனோடு ஒட்டிக்கொண்டு போனாளே அவளையும்..."

"அவங்களை எங்கே போய்ப் பிடிப்பாய்?"

"பீச்சுக்குத்தான் போறாங்க. இப்பப் போனா பிடிச்சிட லாம்." - வெறி வந்தவள் போல மேகலா சொல்ல, அனைவரும் பயமாய் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

அனிதா மெல்ல மேகலாவின் தோளைத் தொட்டாள்.

"மேகா! என்னாச்சி உனக்கு?"

"ஏன்? எனக்கென்ன, நல்லாத்தானே இருக்கேன்."

"பிறகேன் இப்படிப் பண்றே? அவங்க பீச்சுக்குப் போறதா உன்கிட்ட யார் சொன்னது?"

"அறிவிருக்கா உனக்கு? இந்த நேரத்தில ஒருத்தியைக் கூட்டிட்டு அவன் எங்கே போவான்? குளிருக்கு இதமா அணைச்சிட்டுப் போறாளே. அவகூட..."

"ஸ்டாப் இட் மேகா. வரவர உன்னோட கற்பனைக்கு அளவில்லாமல் போச்சு. ஜனாவை உனக்கு மட்டுமல்ல, எங்க எல்லாருக்குமே தெரியும்."

"ஸோ வாட்?"

"ஜனா ஒன்றும் பொறுப்பில்லாம ஊர் சுற்றுபவனல்ல. ஏதாவது அவசர வேலையாக்கூடப் போகலாமில்லே?"

"நைட் பதினொரு மணிக்கு என்னடி அவசர வேலை? அவன் அவசர வேலையை நான் உங்களுக்குக் காட்டறேன். வாங்க."

"வேண்டாம்! காரைத் திருப்பு. நாங்க வீட்டுக்குப் போகணும். ஆல்ரெடி நான் லேட்."

"அனி! நீயாவது வருவியா? எப்படி?"

"ஸாரி மேகா! ஏற்கெனவே மம்மி ஒரே திட்டு. இன்னிக்கு உன்கூட வெளிய வர்றதுக்கே ஒன் அவர் கெஞ்சி யிருக்கேன். இதைவிட லேட்டாப் போனா கொன்னுடுவாங்க."

"ஏன்டி இப்படி இருக்கீங்க? ச்சே!"

"உனக்கென்ன சொல்லிடுவ? எல்லா அம்மாவும் உன் அம்மா மாதிரி இருப்பாங்களா?"

"ஏன் என் அம்மாவிற்கென்ன?"

"உன் அப்பா ஃபாரின்ல இருந்து சம்பாதிச்சுக் கொட்டுறார். உன்னையோ உன் அம்மாவையோ கண்டிக்கவோ தட்டிக் கேட்கவோ யாருமில்ல. நீ எப்ப வீட்டுக்குப் போனாலும் உங்க அம்மா கண்டுக்கப் போறதில்ல. நாங்க அப்படி இருக்க முடியுமா? "

"ஏய்! என்ன பாராட்டுறியா? இல்லே வாரிவிடுகிறாயா?"

"உண்மையைச் சொல்றேன். நீயே வீட்ல வந்து கூப்பிட்டதாலதான் என்னை அனுப்பினாங்க. இப்பவே பயந்து போய்த் தேடிட்டு இருப்பாங்க. காரைத் திருப்பு மேகா..."



"விளையாடாத மேகா! எங்களை வீட்ல போய் விட்டுட்டு நீ போ."

"என்னடி? நான் என்ன உங்க டிரைவரா? உங்களை யெல்லாம் விட்டுட்டு நான் எப்போ போய் அவங்களைப் பிடிப்பது?"

"மேகா?"

"இதோ பார். டூ மினிட்ஸ் டயம் தர்றேன். வீட்டுக்குப் போகணும்னு சொல்றவ எல்லாம் இறங்கிடு. என்கூட வர்றவ மட்டும் கார்ல இருங்க. ம். கமான்..."

ரேவதிக்குக் கோபம் தலைக்கேறியது. "மேகா! திஸ் இஸ் டூ மச்!"

"ஐ டோண்ட் கேர்."

"இப்போ டயம் என்ன தெரியுமா? இந்த நேரம் இப்படி நடுரோட்ல இறங்கச் சொல்ற?"

"ஊரைச் சுத்தணும்னு கூப்பிட்டதும் பல்லைக் காட் டிட்டு கிளம்பினீங்களே! அதே மாதிரி இறங்கச் சொன்னதும் இறங்கணும். இறங்குடி!"

"மேகா! என்ன இந்த மாதிரி பேசுற?"

"உள்ளதைத்தானே சொல்றேன். உங்களை ஊர் சுத்தக் கூட்டிட்டுப் போக நான் வேணும். பணத்தைத் தண்ணியா செலவழிக்க நான் வேணும். ஆனா எனக்குத் தேவையான நேரம் ஒருத்தியும் வரமாட்டீங்க. இப்போதான் அம்மா மேல பயம் வரும். சும்மா நடிக்காதீங்கடி..."

"நீ செலவு பண்றதுக்கு ஒண்ணும் நாங்க வரல்ல. அப்படி வர்ற அளவுக்கு நாங்க ஒண்ணும் வக்கில்லாத வங்களும் இல்லை."

"உன்னைவிட எதிலயும் குறைஞ்சவங்க இல்ல நாங்க. ஏதோ ஃபிரண்ட் கூப்பிடுறாளேன்னு வந்தா, நீ ரொம்ப பேசுற!"

"அப்படித்தான் பேசுவேன். இறங்குறவ இறங்கு. நான் காரை எடுக்கணும்..."

"மேகா! இந்த நேரம் இறக்கிவிட்டா, நாங்க எப்படி வீட்டுக்குப் போறது? பஸ் ஆட்டோ கூட கிடைக்காதுப்பா..."

"அப்போ நடந்தே போ."

"விளையாடாதே மேகா!"

"நான் கோபப்படுறது உங்களுக்கெல்லாம் விளையாட்டா தெரியுதா? அவன்தான் என்னைப் பத்தி தெரியாம இருக்கான்னா இத்தினி நாளா கூடவே இருந்தும் உங்களுக்குக் கூட என்னைப் பத்தித் தெரியலை இல்ல!"

"மேகா! அது வேற விஷயம். நாங்க உன் ஃப்ரண்ட்ஸ் இல்லியா?"

"நோ. நீங்க எல்லாம் ப்ரண்ட்ஸே இல்ல. நான் தோத்து அவமானப்படணும்னு நினைக்கிறீங்க. என்னைத் தோக்கடிக்க யாராலும் முடியாது. நான் ஜெயித்தே தீருவேன். ஜனா எனக்குத்தான். எனக்கு மட்டும்தான்..."

"ம். இப்படியே சொல்லிட்டு இரு. ஜனா கல்யாணம் பண்ணிட்டு வந்து நிற்கப் போறான். நீ முகத்தை எங்கே கொண்டு போய் வச்சுப்ப?"

"ரே! கொஞ்ச நேரம் சும்மா இரேன்."

"அட, நீ பயப்படாதே லலி! எப்படியும் இவ இங்கேதான் இறக்கி விடப் போறா. பிறகேன் இவளுக்குப்



பயந்து பணிஞ்சு போகணும். மனசுல உள்ளதைத் தைரியமா சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே!"

"சொல்லுடி! என்னடி சொல்லப் போற?"

"மேகா! இப்பவும் சொல்றேன். நீ இதே மாதிரி அரக்கத்தனமா நடக்கும் வரை சத்தியமா ஜனா உன்னைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான். யாரையுமே மிரட்டிப் பணிய வைக்கலாம்னு நினைக்கிற. அது தப்புக்கணக்கு.

"எத்தனை பெரிய முரடனா இருந்தாலும் சரி, அன்பால மட்டுமே பணியவைக்க முடியும். உன்னால அன்பாகவோ அடக்கமாகவோ நடக்க முடியாது. அதனால நீ நினைக்கிற எதுவும் நடக்கப் போறதில்ல. ஜனா ரொம்ப நல்லவன். அதனால அவனுக்கேத்த அன்பான துணை தான் கிடைக்கும்."

"நீ சும்மா மிரட்டிக்கிட்டே இருக்க வேண்டியதுதான். உன் மிரட்டலுக்கு நாங்களே பயப்படமாட்டோம். அவனா பயப்படுவான்? நீ எப்படித்தான் திட்டம் போட்டாலும் ஜனா உன் கையில சிக்கவே மாட்டான். போ. போய்ப் பைத்தியக்காரி மாதிரி விடியவிடிய பீச்சில போய்த் தேடிட்டு இரு.

"ஏய்! வாங்கப்பா. நான் என் டாடிக்கு போன் பண்ணினா காரை எடுத்திட்டு வந்திடுவாங்க. நான் எல்லாரையும் வீட்ல ட்ராப் பண்றேன். இறங்குங்க..." என்றவாறு ரேவதி குரல் கொடுக்க, மற்றவர்கள் கொஞ்சம் தயக்கமாய் மேகலாவைப் பார்த்துக் கொண்டே காரை விட்டு இறங்கினர்.

அனைவரும் இறங்கிவிட்டுக் கதவை அறைந்து சாத்த, ஏமாற்றமும் கோபமுமாய்க் காரைக் கிளப்பினாள்.

கண் இமைக்கும் நேரத்தில் கார் சீறிப் பாய்ந்து மறைந்துவிட அனிதா பதறினாள்.

"ஐயோ! இவ்வளவு வேகமா போறாளே! அது ஆபத்தாச்சே!"

"அவ என்னிக்குத்தான் மெதுவா போனா? இவ கார் ரோட்டில போனா எதிர்ல வர்றவங்களுக்குத்தான் ஆபத்து."

"பகல்ன்னா பரவாயில்ல, லலி! இப்படி மிட் நைட்ல இவ்வளவு வேகமா போறாளே. ஏதாவது ஆச்சுன்னா..."

"நாம என்ன பண்ணமுடியும்? நாம தப்பிச்சோமே!" என்றவாறு தனது செல்போனில் தந்தையை அழைத்துப் பேச ஆரம்பித்தாள் ரேவதி.

அவர்கள் நினைத்துப் பயந்ததை விட வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தாள் மேகலா. மனம் அதைவிட வேகமாய்ச் சிந்தித்துக் கொண்டிருந்தது. 'இந்த ரேவதிக்கு எத்தனை துணிச்சல்! என்னிடமே நேருக்கு நேராய் எப்படிப் பேசுகிறாள். எங்கிருந்து வந்தது இத்தனை துணிவு? மினிஸ்டர் பெண் என்பதாலா?'

இதற்காகத்தான் தன்னை விடக் குறைவானவர் களைக் கூட வைத்துக் கொள்ள வேண்டும் என்பார்கள், அம்மா. அப்போதுதான் நம் கட்டளைக்கு மிரட்டலுக்குப் பணிந்து கிடப்பார்கள் என்பாள்.

அது சரிதானோ? எவளுக்கும் வராத துணிச்சல் எப்போதுமே தன்னை மட்டம் தட்டுவதே இவளுக்கு வழக்க மாயிற்று.

இவளுக்கு நான் யார் என்று காட்ட வேண்டும் என் மிரட்டல் பயப்பட வைக்காது என்றா சொன்னாள்?



வைக்கிறேன். பயப்பட வைக்கிறேன். இனி மேகலாவின் முன் ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது... என்று நினைக்கும் அளவிற்கு மிரள வைக்க வேண்டும்.

என்ன செய்யலாம்? அவசரமாய் யோசித்தாள்.

சட்டெனத் தாயின் நினைவு வர, செல்லை உயிர்ப்பித்தாள். நீண்ட நேர அழைப்பிற்குப் பின் தூக்கம் கலைந்த எரிச்சலில் திலகவதியின் குரல் கேட்டது.

"ஹலோ!"

"மம்மி! நான்தான்."

"மேகா! எங்க இருக்க நீ?"

"பீச்சுக்குப் போயிட்டு இருக்கேன்."

திலகவதியின் தூக்கம் முற்றிலும் கலைந்தது. "என்ன? பீச்சுக்கா? இந்நேரமா?"

"மம்மி! கேள்வி கேட்காதீங்க. நான் கேட்குற கேள்விக்குப் பதில் சொல்லுங்க..."

"மேகாம்மா! எதுவா இருந்தாலும் வீட்டுக்கு வந்து பேசலாம்மா. இப்படி அர்த்த ராத்திரியில பீச்சுக்கு ஏம்மா போற?"

"மம்மி! நீங்க வேற என் கோபத்தைக் கிளறாதீங்க. ஏற்கெனவே நான் கடுப்பில இருக்கேன்."

"ஏன்டா கண்ணு? என்னாச்சு?"

"மம்மி! ஜனாவால நான் ரொம்ப அவமானப் பட்டுட்டேன். என் ஃபிரண்ட்ஸ் முன்னால தலைகுனிவா ஆகிப்போச்சு. அதுவும் அந்த ரேவதி..."

"ஏம்மா! என்னம்மா சொன்னா?"

"ரொம்ப பேசிட்டா மம்மி. இனிமே அவ பேசவே கூடாது. அதுக்கு நீங்கதான் ஏதாவது பண்ணணும்..." - மகளின் தீவிரமான பேச்சால் திடுக்கிட்டாள் திலகவதி.

"மே... மேகாம்மா! நீ என்ன சொல்ற?"

"என் இரத்தம் கொதிக்குது மம்மி. நானே என் கையால அவளைக் கொல்லணும்."

"மேகாம்மா! இப்படி வெளியே நின்று கண்டபடி பேசாதே. யார் காதிலயும் விழுந்தா வம்பாகிடும். மொதல்ல வீட்டுக்கு வா."

"நோ மம்மி. நான் இப்போ ஜனாவைத் தேடிப் போயிட்டு இருக்கேன்."

"ஜனாவா? அவன் எங்கே இருக்கான்?"

"அவன் எங்கே என்ன பண்ணிட்டு இருக்கான்னு எனக்கு மட்டும்தான் தெரியும். அவனை உண்டு இல்லன்னு பண்ணத்தான் போயிட்டு இருக்கேன். மேகான்னா ஒரு பயம் இருக்க வேண்டாம்."

"செல்லமே! அவசரப்பட்டு எதையும் செய்திடாதே. எல்லாம் கெட்டுப் போயிடும். உன் கல்யாணம் நல்லபடியா முடியுறவரைக்கும் கொஞ்சம் பொறுமையா இரும்மா"

"கல்யாணமா? அதுவே இப்போ கேள்விக்குறியா போச்சு மம்மி. நான் அவ்ளோ சொல்லியும் அவன் என்னை மதிக்காம அந்த நாயை பைக்கில ஏத்திக் கிட்டு ஊர் சுத்திட்டு இருக்கான். என்னை... எல்லாருமே அவமானப் படுத்துறாங்க. நான் அவங்களுக்கெல்லாம் பதிலடி



கொடுக்கணும்." - மகளின் வார்த்தையில் வெறி கூடிக் கொண்டே போவதை உணர்ந்த திலகவதி அவசரமாய் யோசித்தாள்.

இப்போது என்ன சொல்லி மகளின் கோபத்தைக் குறைப்பது? முதலில் அவளை வீட்டிற்கு வரவழைக்க வேண்டும். வெளியில் இருந்தால் ஆபத்து என்பதை உணர்ந்து வேகமாய்ச் சிந்தித்துச் சட்டென ஒரு முடிவுக்கு வந்தாள்.

"அட! ஜனாவோட வண்டி வந்திடுச்சே..."

"மம்மி! என்ன சொல்றீங்க? அவன் வீட்டுக்கு வந்திட்டானா?"

"ஆமாம்மா! இதோ இப்பத்தான் உள்ளே போறான்."

"கூட யாராவது வந்திருக்காங்களா? ஐ மீன் அந்தப் பொண்ணு."

"சேச்சே! தனியாத்தாம்மா வந்து இறங்குறான்..." - தாயின் பதிலில்... சற்று அமைதியானாள்.

"ஓ.கே. மம்மி. நான் வீட்டுக்கு வர்றேன். போனை வெச்சிடுங்க..." - என்றவாறு போனை கட் பண்ணினாள். ஒரு பெரிய விடுதலை உணர்வோடு தானும் போனை வைத்தாள் திலகவதி.

உடல் முழுக்க வியர்த்து ஊற்ற, கட்டிலை விட்டு இறங்கி, கதவைத் திறந்து, அறையை விட்டு வெளியே வந்தாள்.

மனதில் புதிதாய்ப் பயம் தோன்றி மிரட்டியது. ஒரே பெண். செல்லமாய் வளர்ந்த பெண். அழகாய் இல்லையே

என வருந்துகிறாளே என்று அவளை உற்சாகப்படுத்தச் சொன்ன வார்த்தைகளும் அளவுக்கு அதிகமாய்க் கொடுத்த சுதந்திரமும் உரிமையும் தவறோ என முதன் முறையாய்த் தோன்றியது.

அடம்பிடித்துக் காரியம் சாதிப்பதும் அவள் கேட்டதை மறுக்காமல் செய்வதும் வழக்கமான ஒன்றுதான். ஆனால் இன்று தன் பெண் சொன்னது எத்தனை பெரிய காரியம்! ஒரு பெண்ணைக் கொல்லும் அளவிற்கு அப்படியென்ன கோபம்? வெறி?

நிச்சயம் அதற்கான காரணம் ஜனாதான் என்று புரிந்தது.

மகளின் ஆத்திரமும் வன்மையும் இதற்கு மேலும் அதிகரிப்பதற்குள் எப்படியும் அவளை மணமுடித்து வைத்து விட வேண்டும். வேறு எதைக் கொடுத்தும் அவளைச் சமாதானம் செய்ய முடியாது என்று புரிந்தது.

வெளிவாசலை அடைத்து எதிர்வீட்டை நோட்டமிட்டாள்.

போர்டிகோவில் கார் மட்டுமே நின்று கொண்டிருக்க, ஜனாவின் பைக் நிற்கும் இடம் வெறுமையாய் இருந்தது. மகளிடம் பொய் சொல்லியிருக்கிறேன். அவள் வீடு வந்து சேருமுன் ஜனா வந்து சேர வேண்டுமே.

இல்லையெனில் அவளைச் சமாளிக்க முடியாது என்ற பயத்துடன் அவஸ்தையாய்க் காத்திருக்க ஆரம்பித்தாள், திலகவதி.



## 11

எங்கெங்கு நீ சென்ற போதும்
என் நெஞ்சமே உன்னைச் சேரும்
ஆனந்த ராகம் ஆரம்பமாகும்
பூங்காற்றுப் போராடும் அன்பே!

சாவித்ரி கண் விழித்தபோது மருத்துவமனையின் மெல்லிய விளக்கொளியில் பார்வைக்கு எதுவும் புலப்படவில்லை. உடல் முழுக்கக் களைப்பாய் இருக்க, தொண்டை வறண்டு நாக்கு உலர்ந்து போயிருந்தது. தண்ணீர் குடிக்கலாம் எனக் கட்டிலை விட்டு இறங்க முயற்சித்துத் தோற்றாள்.

கைகள் நடுங்க கட்டிலில் அமர்ந்து விட்டாள். எங்கே போய் விட்டார் இவர்... எனக் கண்களால் துழாவினாள். பாண்டியன் கண்ணில் படவில்லை. அந்த அறை சற்றுப் பெரிதான ஹால் போன்று இருந்தது. வரிசையில் பதினைந்து படுக்கைகள். அனைத்திலும் பெண் நோயாளிகள். வயிற்றுச் சுமையோடு சிலர் மெல்லக் கட்டிலைச் சுற்றி நடந்து கொண்டிருக்க, ஒரு சிலர் ஒருக்களித்துப் படுத்திருந்தனர்.

அனைத்துப் படுக்கை அருகிலும் ஒவ்வொரு பெண் உறவினர். நோயாளியின் தாயோ மாமியாரோ சகோதரியோ யாரோ ஒருவர் உதவிக்கு இருந்தனர். யாருமே இல்லாமல் தான் மட்டுமே தனித்திருப்பது உறைக்க, கண்ணீர் முட்டியது.

அம்மா இருந்திருந்தால் இப்படித் தனியாக விட்டுப் போயிருப்பாளா என்ற ஏக்கம் தோன்றியது.

பசித்தது. பசியும் தாகமும் வாட்டி எடுத்தது. யாரிடம் சென்று கேட்பது? கண்ணீரும் பயமுமாய்ப் பசியோடு தவிக்கையில் ஓடி வந்தாள் காயத்ரி. அவளுக்குப் பின்னே ஜனார்த்தனன்.

"அக்கா! எப்படிக்கா இருக்கே? இப்போ உடம்பு பரவாயில்லயா?" - பரிவாய்த் தமக்கையின் கையை வருடிக் கொண்டே கேட்ட காயத்ரியைக் கட்டிக் கொண்டாள் சாவித்ரி. தாயின் நினைவில் தேம்பி அழுதாள்.

"அக்கா! ஏன்க்கா அழறே? உடம்புக்கு ஏதுவும் பண்ணுதா?"

"காயு, மாமா எங்கே போயிட்டார்? வெளியே நிற்கிறாரா?"

'உன் புருஷன் குடித்துவிட்டுத் தெருவில் கிடக்கிறான்...' எனச் சொல்ல மனமின்றி, "ம். ஆமாங்கா... ஏன்? எதுவும் வேணுமா?" என்று கேட்டாள்.

"ரொம்ப தாகமா இருக்கு காயு. தண்ணி வேணும். ரொம்ப நேரமா பசிக்குது. மாமாகிட்ட சொல்லி சாப்பிட ஏதேனும் வாங்கிட்டு வரச் சொல்றியா?" - பரிதாபமாய்க் கேட்க, திகைத்துப் பின் கண்களில் நீர் கசியப் பின்னால் நின்றவனைத் திரும்பிப் பார்த்தாள் காயத்ரி.

"இதோ ஃபைவ் மினிட்ஸ்ல வாங்கிட்டு வர்றேன்!" - என ஓடியவனைப் பார்த்துக் குழப்பமாய்த் தங்கையை ஏறிட்டாள்.

"காயு! இது... யாரு?"

"ஜனார்த்தனன்!"



"யாரு? அ... அந்த மாப்பிள்ளையா?"

"ம்..." - தலையாட்டினாள்.

"இவர் எப்படி இங்கே? அதுவும் இந்த நேரத்தில்?"

"இவர் பைக்கில்தான் நான் வந்தேன் அக்கா!"

"என்ன?"

"தப்பா நினைக்காதே அக்கா. நான் ஆட்டோவுக்காக வெயிட் பண்ணினேன். ஆட்டோ கிடைக்கல. நேரமும் ஆயிடுச்சி. நீ இங்கே தனியா இருப்பியேனு ஆபத்துக்கு பாவமில்லன்னு வந்திட்டேன். மன்னிச்சிடுக்கா!"

"மாமா தான் இருக்காரே. பிறகேன் நீ இந்த நேரத்தில வந்தே? அத்தைக்குத் தெரிஞ்சா என்னாகும்?"

"உன் மாமியாருக்குத் தன் மகனைக் குளிப்பாட்டவே நேரம் சரியா இருக்கும். என்னைத் தேட நேரமிருக்காது..."

"காயு?"

"நாம என்னக்கா பாவம் பண்ணினோம்? நமக்கேன் இப்படியெல்லாம் நடக்கணும்?"

"என்னடி சொல்ற?"

"கட்டின பொண்டாட்டி வயித்துல பிள்ளையோடு பசியோடு இருக்க, உம் புருஷன் நான் செலவுக்குக் கொடுத்திட்டுப் போன பணத்தை எல்லாம் குடிச்சே தீர்த்திட்டாரு. இப்போ நம்ம தெருவில கிடந்து புரண்டிட்டு இருக்காரு..." - என்றாள் கடுப்பாய்.

வேதனையோடு கண்களை மூடிக் கொண்டாள் சாவித்ரி. பழகிப் போன ஒன்றுதான் என்றாலும் இப்படி மருத்துவமனையில் படுத்திருக்கும்போது கூட மனைவியின்

அருகே இருக்க முடியாமல் போதையில் கிடக்கிறார் என்பதை ஜீரணிக்க முடியவில்லை. கண்கள் கசிந்தன.

"இந்தாங்க. சாப்பிடுங்க..." - என்றவாறு குரல் கேட்டதும், கண்களைத் திறந்தாள் சாவித்ரி. கையில் சாப்பாட்டுப் பொட்டலங்கள், பழங்கள், குளுகோஸ் டப்பா, மினரல் வாட்டர் பாட்டிலோடு நின்றவனைப் பார்த்ததும் நெஞ்சம் விம்மிற்று.

பசி தாகம் என்றதும் ஒரு வார்த்தை கேளாமலே இத்தனை வாங்கி வந்து நிற்கிறானே. இவனை வேண்டாம் என்று மறுத்துவிட்டு ஒரு கொலைகாரப் பாவிக்கு என் தங்கையை மணமுடித்துக் கொடுக்கப் போகிறாளே அத்தை.

என்னைப் போல் என் தங்கையும் கஷ்டப்பட வேண்டுமா? நான் அதற்குச் சம்மதிக்கலாமா? அக்கா என்பவள் இன்னொரு அன்னை அல்லவா?

என் தங்கையின் தாய் நான். அவளைப் பாழுங் கிணற்றில் தள்ளி விட மாட்டேன். இவன்தான் என் தங்கையின் மாப்பிள்ளை!

இவர்களை நான் சேர்த்துவைப்பேன். இவர்களின் இன்பமான வாழ்வில் என் துன்பத்தை மறப்பேன். இனி இது என் கடமை. என் கணவரையோ மாமியாரையோ நம்பக் கூடாது.

இவள் வாழ்வை அவர்கள் கையில் கொடுக்கக் கூடாது. சீரழித்துவிடுவாள் அத்தை. எவ்வளவு சுயநலக்காரி.

"ஏங்க! பசியில இருக்கீங்க. முதல்ல சாப்பிடுங்க. காயு. அக்காவைச் சாப்பிட வை. நான் ஒரு ஃபைவ் மினிட்ஸ்ல வந்திடுறேன்," - என விலகினான்.



நன்றியுணர்வோடு பார்சலைப் பிரித்து அக்காவின் முன்னே வைத்தாள். வாட்டர் பாட்டிலைத் திறந்தாள்.

"அக்கா! பரோட்டாவும் இருக்கு. இட்லியும் இருக்கு. எது வேணுமோ சாப்பிடு."

"இட்லி போதும் காயு. நீயும் சாப்பிடு." - கவரில் இருந்த சாம்பாரை ஊற்றியதும் வேகமாய்ச் சாப்பிட ஆரம்பித்தாள். தங்கை தந்த தண்ணீரையும் நடு நடுவே குடித்துவிட்டு வயிறு நிறையச் சாப்பிட்டதும் பாதி உயிர் திரும்பியது.

குப்பைக் கூடையில் பொட்டலக் கவரைப் போட்டு விட்டு, கை கழுவிவிட்டு உட்கார்ந்தவளிடம் வாழைப் பழத்தை நீட்டினாள்.

"அக்கா, ரெண்டு பழத்தைச் சாப்பிடு."

"போதும் காயு! வயிறு நிறைஞ்சிடுச்சி."

"குளுக்கோஸ் கரைச்சித் தரவா?"

"இப்ப எதுவும் வேணாம். நீ இப்படி உட்கார். நான் உங்கிட்ட பேசணும்," - எனக் கட்டிலைக் காட்டினாள்.

"சொல்லுக்கா?"

"காயு! உனக்கு இந்த மாப்பிள்ளையைப் பிடிச் சிருக்கா?"

"அக்கா!"

"சொல்லு காயு. இனிமே எதுக்கும் நான் அத்தையை நம்புறதா இல்ல. என்னை மாதிரியே உன்னையும்

புதைகுழியிலே தள்ளி விடுவாங்க காயு. நீ என்னை விடப் புத்திசாலி. தைரியசாலி. சொல்லு. உன் விருப்பம்தான் முக்கியம்."

"அக்கா! நீ முதல்ல படு. டாக்டர் உன்கிட்ட எதுக்கும் உணர்ச்சிவசப்படக் கூடாதுன்னு சொன்னாரில்ல. அமைதியா படு."

"இல்லை காயு. நான்..."

"அக்கா! முதல்ல உனக்கு நல்லபடியா குழந்தை பிறக்கட்டும். பிறகு மத்ததைப் பார்த்துக்கலாம். இப்ப எதுவும் பேசாம அமைதியா ஓய்வெடு."

"காயு! என் உடம்பை பத்தி பயப்படாதே. எப்போ எது நடந்தாலும் நடக்கட்டும். எனக்கு உன் வாழ்க்கைதான் முக்கியம். நீ..."

"அக்கா! எனக்கு உன்னோட உடம்பும் குழந்தையோட ஆரோக்கியமும் தான் முக்கியம்."

டியூப்லைட்டுகள் ஒளிர, ஒருசில காலடிச்சத்தம் கேட்டு இருவரும் பேச்சை நிறுத்திவிட்டுத் திரும்பினர். வெள்ளை நிற கோட் அணிந்த மருத்துவர்கள் இருவர் வந்து கொண்டிருக்க. அவர்களுடன் ஏதோ தீவிரமாய்ப் பேசிக் கொண்டே வந்தான் ஜனார்த்தனன்.

காயத்ரி எழுந்து நிற்க. எழ முயற்சித்த சாவித்ரியைக் கை உயர்த்தித் தடுத்தார் மருத்துவர்.

"உட்காருங்கம்மா! இப்போ உடம்பு எப்படி இருக்கு?"

"ப... பரவாயில்ல டாக்டர்!"



மற்றொரு மருத்துவர் நாடித் துடிப்பையும் இரத்த அழுத்தத்தையும் சரி பார்த்தார்.

"டாக்டர்! பி.பி. இன்னும் நார்மலா இல்ல."

"என்னம்மா இது? நான் சொன்னேனே. பதட்டம் இல்லாம நார்மலா இருக்கணும்னு. சரி. சாப்பிட்டீங்களா?"

"ம். இப்பத்தான் டாக்டர் சாப்பிட்டேன்."

"வாட்? இப்பவா? ஏம்மா, டைம் என்ன ஆச்சு? இப்படி அன்டைம்ல சாப்பிடலாமா?"

"இல்ல வந்து..."

"சரி. இவர் உங்களை வேற ஹாஸ்பிடலுக்கு அழைச்சிட்டுப் போறதா சொல்றார். போறீங்களா?"

"என்ன?" – சகோதரிகள் இருவரும் ஜனாவைப் பார்க்க அவன் புன்னகைத்தான்.

"டாக்டர்! இந்த ஹாஸ்பிடல் பிடிக்காம நான் கூட்டிட்டு போகல்ல. எங்க வீட்ல இருந்து இங்க வர ரெண்டு மணி நேரம் ஆகுது. அதுவும் ட்ராஃபிக்ல மாட்டினா கேட்கவே வேண்டாம். அதுக்காகத்தான் சொல்றேன். நீங்க தப்பா எடுத்துக்க கூடாது."

அவன் நாசூக்காகவும் தெளிவாகவும் பேச, சாவித்ரியும் காயத்ரியும் மறுத்துப்பேச இயலாமல் நின்றனர். பத்து நிமிட உரையாடலில் மருத்துவர்களின் ஒப்புதலோடு மருத்துவக் குறிப்புகளைப் பெற்றுக் கொண்டு ஆம்புலன்ஸ் உதவியோடு அந்தப் பெரிய பளபளப்பான மருத்துவ மனையில் வந்து சேர்ந்தனர்.

விசாலமான அறையின் நான்கு புறமும் கண்ணாடியால் ஆன ஜன்னல். விலை உயர்ந்த திரை விரிப்புகள் அதை மூடியிருந்தன. அறை முழுக்கக் குளிரூட்டப்பட்டிருந்தது. பஞ்சுப் பொதி போல் இருந்த அகலமான படுக்கை, கட்டில் மெத்தை. அருகே சற்று நீளமான சோபா. நான்கு நாற்காலிகள். ஒரு டீபாய்.'

அறையின் மூலையில் பெரிதாய் ஒரு தொலைக் காட்சி. சுவரோடு பதிந்திருந்த கப்போர்டுகள். அதை யொட்டினாற்போல் குளியலறை கழிப்பறை என உயர்தர ஹோட்டல் போல் இருந்தது அந்த அறை.

சகோதரிகள் இருவரும் மிரட்சியோடு நின்று கொண்டிருக்க, நான்கு நர்ஸ்களோடு அந்தப் பெண் மருத்துவர் உள்ளே நுழைந்தாள். சாவித்ரியைப் படுக்க வைத்து அறையின் நடுவே இருந்த திரையை இழுத்து விட்டாள் ஒரு நர்ஸ்.

ஜனா நாகரிகம் கருதி அறைக்கு வெளியே சென்று விட, அனைத்துப் பரிசோதனைகளையும் முடித்துவிட்டுப் புன்னகையோடு அவனை அழைத்தாள் திவ்யா.

"டோன்ட் ஒர்ரி, ஜனா. பேபி ஆரோக்கியமா இருக்கு. பேஷண்ட்தான் வீக்கா இருக்காங்க. ஐ வில் டேக் கேர். ஒண்ணும் பயமில்ல..."

"டாக்டர்! அவங்க டெலிவரி வரைக்கும் இங்கேயே இருக்கட்டும். என்ன மருந்து மாத்திரை சாப்பாடு கொடுக்கணுமோ, தாராளமா கொடுங்க. செலவைப் பத்தி பயப்பட வேண்டாம். உங்களால பார்த்துக்க முடியுமா?"



"ஓ! ஷ்யூர். இவங்க கர்ப்பப்பை வீக்கா இருக்கிறதால கண்டிப்பா பெட் ரெஸ்ட் எடுத்தே ஆகணும். அப்பத்தான் குறைப் பிரசவத்தை அவாய்ட் பண்ண முடியும்..."

"அதுக்காகத்தான் இங்க அட்மிட் பண்ணியிருக்கேன். உங்க பொறுப்பில விட்டுட்டேன். தாயும் சேயும் பத்திரமா எங்களுக்கு வேணும்."

"திஸ் இஸ் மை டியூட்டி. நீங்க சொல்லணுமா?"

"அப்புறம் டாக்டர், இவங்க பேஷண்ட்டோட சிஸ்டர். இவங்க தான் பேஷண்ட் கூட தங்குவாங்க..."

"தாராளமா இருக்கட்டும். நோ ப்ராப்ளம்!"

"ஓ.கே. டாக்டர். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ். மார்னிங் மீட் பண்ணுவோம்."

"ஓ.கே. குட்நைட். ரேவதி! நீ நைட் இங்கயே இரு." - என ஒரு நர்ஸை இருக்க வைத்துவிட்டு வெளியேறினாள் மருத்துவர் திவ்யா.

அவள் சென்றதும் படுக்கையை நெருங்கினான் ஜனார்த்தனன்.

''சிஸ்டர்! உங்களுக்கு இந்த ஹாஸ்பிடல் பிடிச்சிருக்கா?"

சாவித்ரி இன்னும் மிரட்சியில் இருக்க, காயத்ரி குரல் கொடுத்தாள்.

"என்ன ஸார் இதெல்லாம்?"

"காயு! உன் அக்காவோட உடல் நலம் கருதிச் செய்த ஏற்பாடு இது. இதில் வேறு எந்தச் சுயநலமும் விளம்பரமும் கிடையாது. என்னை நம்பு."

"அ... அதுக்கில்ல. இது பெரிய ஹாஸ்பிடலா இருக்கே. ஃபீஸ் எல்லாம்..."

"இது என் நண்பனின் ஹாஸ்பிடல். இப்போ வந்தாங்களே... அவங்க டாக்டர் திவ்யா. என் நண்பனின் மனைவி. ரொம்ப கைராசிக்காரர். உன் அக்காவையும் பேபியையும் பத்திரமா பார்த்துப்பாங்க."

"ஜனா! இதெல்லாம்..."

"ப்ளீஸ் காயு. நீங்க ரெண்டு பேருமே ரொம்ப டயர்டா இருப்பீங்க. டயமாகுது. படுத்துத் தூங்குங்க. மத்ததை யெல்லாம் காலையில பேசிக்கலாம்."

"ஐயோ ஜனா! இதெல்லாம் என் அத்தைக்குத் தெரிஞ்சா என்னாகும்? எங்க சூழ்நிலை தெரியாம ஹெல்ப் பண்ணி இக்கட்டுலே விடுறீங்களே!"

"இப்போ அக்காவும் குழந்தையும் முக்கியமா? இல்லை, அத்தையைப் பத்தின பயமா?"

"அக்காதான்!"

"பிறகென்ன? தைரியமா இருங்க. உங்க அத்தையை நான் பார்த்துக் கொள்கிறேன். ஓ.கே?"

"எப்படி?"

"போதும் காயு! இன்னும் எத்தனை காலம்தான் கண்ணீர் சிந்திக் கொண்டே இருப்பீர்கள்? இந்த நிலை மாற வேண்டாமா?"

"மாறுமா?" - கண்களில் ஏக்கம் மின்னக் கேட்டாள் சாவித்ரி.



"நிச்சயமா மாறும். மாறணும். மாற்றங்கள் தானா வரும்னு எதிர்பார்க்கக் கூடாது. நாம தான் மாற்றி அமைக்கணும்."

"எப்படித் தம்பி? என் அத்தை..."

"ஏன் பயப்படுறீங்க? உங்க அத்தை என்ன பேயா பிசாசா? சாதாரண மனுஷிதானே. என்ன, பணத்தாசையும் சுயநலமும் அதிகம். அவ்வளவுதானே. இது ஒண்ணும் பெரிய விஷயமில்ல. முதல்ல உங்க புருஷனைத்தான் மாத்தணும்..."

"எ... எப்படி?"

"அவர் ஒழுங்கா வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சு வீட்டை நிர்வாகம் பண்ணினா உங்க அத்தையோட கொட்டம் குறையுமில்ல..."

"ம்.... ம்..."

"முதல்ல அவரை மாத்தணும். மத்ததெல்லாம் தானா மாறும். நான் மாத்துறேன். நீங்க ரெண்டு பேரும் எந்த டென்ஷனும் இல்லாம இருங்க. போரடிச்சா டி.வி. பாருங்க. மனசுவிட்டுப் பேசுங்க. ஹாஸ்பிடல் கேன்டீன்ல இருந்து சாப்பாடு வரும்.

"காலையில நான் வந்து பார்க்கிறேன். வரட்டுமா? குட் நைட்!" - இருவருக்கும் பொதுவாய்ச் சொல்லிவிட்டு அவன் வெளியேற, இருவரும் பிரமிப்பு மாறாமல் அமர்ந் திருந்தனர்.

காயத்ரியின் இதயம் என்ற ரகசிய அறை மெதுவாய்த் தனது பூங்கதவைத் திறந்து, அதில் ஜனார்த்தனன் என்ற வைரத்தைத் தன்னுள் பதித்துக் கொண்டது.

# 12

பூவிழி மூட முடியவும் இல்லை
மூடியபோது விடியவும் இல்லை
கடலைச் சேரும் காவிரிபோல்
கலந்திட வேண்டும் உன் மடிமேல்
இது புதுச் சொந்தம் அன்பே!

மருத்துவமனையை விட்டு வெளியே வந்தபோது ஜனார்த்தனனின் மனம் வெகுவாய் நிறைந்திருந்தது. உதவிக்காகத் தவித்த கர்ப்பிணிப் பெண்ணிற்கு உதவி செய்தது, அவளைப் பத்திரமாய்ப் பாதுகாத்து இங்கு வந்து சேர்த்தது... என எல்லாமே மனதை நிறைவாக்கியது. என்றாலும் இவற்றையெல்லாம் விட மனம் உற்சாகமாய் இருந்தது.

அதற்குக் காரணம் காயத்ரியிடம் தெரிந்த மாற்றம். தன்னுடன் அவள் வந்ததை இன்னும் அவனால் நம்ப முடியவில்லை. தன் மீது பட்டும் படாமல் உரசிய அவளது தேகம், தனது தோளைப் பற்றிக் கொண்டபோது ஏற்பட்ட சிலிர்ப்பு இன்னும் இனித்தது. மூன்று வருடங்களாய்த் தூரத்தில் இருந்தே பார்த்து ரசித்த முகம். கேட்டு ஆனந்தமடைந்த குரல்.

இது அனைத்துமே இன்று பிரமிப்பையூட்டியது. தன் மனதை அவளிடம் ஒளிவு மறைவின்றிச் சொன்னது மனதை இலேசாக்கியிருந்தது.

மேகலாவின் செய்கையில் எரிச்சல் அடைந்துதான் மனதை ரிலாக்ஸ் பண்ணிக் கொள்ளவென்று கணேஷைப் பார்க்கச் சென்றது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று.



அப்படி வராமல் போயிருந்தால் இத்தனை இனிய சம்பவம் நடந்திருக்காதே. எனிவே எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கவிருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். தனக்குள் சொல்லிக் கொண்டே பைக்கில் ஏறினான். நாளை முதல் வேலையாய் அந்தப் பாண்டியனைச் சந்திக்க வேண்டும். அதற்கு நிச்சயமாய்க் கணேஷின் துணை வேண்டும்.

கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். நள்ளிரவு பன்னிரண்டைத் தாண்டியிருந்தது. இவ்வளவு நேரமாகி விட்டதே... தூங்கியிருப்பான். காலையில் பேசிக் கொள்ளலாம் என்ற நினைவோடு வண்டியை ஸ்டார்ட் செய்து கிளம்பிச் செல்ல, மாடியறையின் பெரிய ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு நின்ற காயத்ரி புன்னகையோடு ஜன்னலை மூடி விட்டுத் திரையை இழுத்து விட்டாள்.

சாவித்ரி நன்றாய்த் தூங்கி விட்டிருக்க, தனக்கான கட்டிலில் படுத்தாள். கண்களை மூட மனமில்லை. இதமான மிருதுவான படுக்கைதான். அறை முழுக்க ஜில்லிப்பாய் இருந்ததுதான். காலையில் இருந்தே சாப்பிடாமல் துவண்டு போயிருந்த உடம்பும் களைத்துதான் இருந்தது. என்றாலும் தூக்கம் தோன்றவில்லை. அன்று காலையில் இருந்து நடந்த நிகழ்வுகள் கண் முன்னே வண்ணமயமாய்த் தோன்றின. கோவிலில் வைத்து உரிமையாய்த் தனது கையைப் பிடித்து, அவன் சொன்ன வார்த்தைகள் காதில் தேனாய் ஒலித்தன.

இரவில் அவனை எதிர்பாராமல் பார்த்தது முதல் இதோ இந்த நொடி வரை நடந்ததை நிதானமாய் மனம் அசை போட்டு ரசித்தது. கண்களை மூடி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த சகோதரியைப் பார்த்தாள்.

"அக்கா! நம் கஷ்டம் எல்லாம் தீரப் போகிறது. தினமும் நாம் விடும் கண்ணீரைப் பார்த்து மனம் தாள முடியாமல் நம்மைப் பெற்றவர்கள்தான் இந்த ஜனாவை நம்மிடம் அனுப்பி வைத்திருக்கிறார்கள். இன்று அவர் என்ன வெல்லாம் சொன்னார் தெரியுமா? நிறையப் பேசினார் அக்கா.

"அதையெல்லாம் நான் உன்னிடம் சொல்ல வேண்டும். என் தோழி, சகோதரி, அம்மா எல்லாமே நீதானே! உன்னிடம்தானே என் மனதில் இருப்பவற்றைச் சொல்ல முடியும். நீ நன்றாய்த் தூங்கு. உன் மனப்பாரம் எல்லாம் போகும் வரை தூங்கு. காலையில் எழுந்ததும் உன்னிடம் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் சொல்வேன். அதைக் கேட்டுவிட்டு நீ என்ன சொல்கிறாயோ அதன்படி நடப்பேன்.

"உன் சம்மதமும் ஆசியும் முக்கியம் என்றாரே... நீ சரியென்றால் நான் அவரை முழு மனதாய் ஏற்றுக் கொள்வேன், அக்கா. இனி அத்தையைப் பற்றியோ என் எதிர்காலம் பற்றியோ நான் பயப்படப் போவதில்லை. இனி அத்தையால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. எனக்காக - நமக்காக ஜனா இருக்கிறார் அக்கா.

"இது போதும். இந்த நிம்மதி போதும். இனி எதை நினைத்தும் நான் கலங்கப் போவதில்லை. என்னை நேசிக்கவும் என் கண்ணீர் கண்டு துடிக்கவும் எனக்காக உருகவும் ஒரு இதயம் இருக்கின்றது. அந்த இதயத்தை நான் ஏற்றுக் கொண்டேன், அக்கா. இறுதி வரை அதை வேறு யாருக்கும் கொடுக்க மாட்டேன். அது எனக்கு மட்டுமே



சொந்தமான இதயம்!" - மலர்ந்த புன்னகையோடு விழிகளை மூடிக் கொண்டாள் காயத்ரி.

**வி**ழிகளை மூட முடியாமல் வலியால் முனகிக் கொண்டிருந்தாள், ரங்கநாயகி.

வைத்தியரின் அருகே பதட்டமாய் அமர்ந்திருந்தார் சீனிவாசன். கொட்டாவியோடு தூக்கக் கலக்கமாய்க் கட்டிலின் ஓரத்தில் உமா உட்கார்ந்திருக்க, வைத்தியர் உதட்டைப் பிதுக்கினார்.

"ம்ஹூம்! இது சுளுக்கு அல்ல. லேசான எலும்பு முறிவு. அதான் இவ்வளவு வலி இருக்கு."

"ஐயோ!" - அலறினாள் ரங்கநாயகி.

"வைத்தியர் ஐயா! என்ன சொல்றீங்க? எலும்பு முறிஞ்சிடுச்சா? சும்மா லேசாத்தானே விழுந்தாள்."

"சீனிவாசன்! வயதாக ஆரம்பிச்சிட்டாலே பெண்களுக்கு எலும்புகள்தான் பலவீனமாகிடுது. அதோட ஏடாகூடமா ரெண்டு மூணு தரம் விழுந்ததாச் சொல்றீங்க. அதனால முறிஞ்சிருக்கலாம். ஒண்ணும் பயப்பட வேண்டாம். கட்டுப் போட்டுடலாமா? இல்லே, வேறெங்கும் ஆஸ்பத்திரிக்குப் போறீங்களா?"

"வேணாம்யா. என்னை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போக யாரு இருக்கா? இவரு இருந்தும் இல்லாத மாதிரிதான். மாடு மாதிரி வளர்ந்தவன் தெருவில விழுந்து கிடக்கிறான். பொட்டப்புள்ள மட்டும் தனியா நிக்குது. நான் எங்கே ஆஸ்பத்திரிக்குப் போறது? நீங்களே கட்டுப் போட்டு உட்டுடுங்க."

"சரிம்மா! அங்கே இங்கே அசையாம படுக்கணும். சட்டுன்னு எழுந்திருக்கக் கூடாது. அசையாம இருந்தாத்தான் எலும்பு சேரும்!" - என்றவாறு அவர் தனது வேலையைத் துவங்க, சத்தமாய் அழத் துவங்கினாள் ரங்கநாயகி.

"சண்டாளப் பாவி! இப்படி இடுப்பை உடைச்சி என்னைப் படுக்கையில போட்டுட்டானே... உருப்படுவானா அவன்? குடிகார நாயீ! அவன் விழுந்தது போதாதுன்னு என்னையும் கீழே பிடிச்சுத் தள்ளிட்டானே!"

"யம்மோவ்! இப்ப ஏன் ராத்திரி நேரத்தில இப்படி ஒப்பாரி வைக்கிற? தெருவில யாரும் தூங்க வேண்டாமா?" - உமா கடிந்து கொண்டாள்.

"அடியேய்! என் வலி எனக்கு. நான் வலியில அழுறது உனக்கு ஒப்பாரி மாதிரி தெரியுதா?"

"உன்னை யாரும்மா அண்ணன்கிட்ட போகச் சொன்னது? அவன்தான் குடிச்சா தானா வந்து படுத்துக்குவானே! நீ ஏன் போனாய்?"

"அவன் பெண்டாட்டி வீட்ல இல்லையே! இருந்தா அவளே கூட்டிட்டுப் போய்ப் படுக்க வெச்சிருப்பா. இன்னிக்கு காசு அதிகம் புழங்கியிருக்கும் போல. ரொம்ப ஊத்தியிருக்கான். வீட்டுக்குள்ள கூட வர முடியாம தெருவிலேயே விழுந்திட்டான்."

"உடனே நீ போய்த் தூக்கப் போனியாக்கும். அப்படியே கிடக்கட்டும்னு விட வேண்டியதுதானே!"

"எப்படிடி விட முடியும்? அவன் நான் பெத்த பிள்ளை யாச்சே! அப்படியே தெருவில போட முடியுமா?"



"ம். அதான் இப்படி எலும்பை உடைச்சிருக்கான். சரி, பேசாம தூங்கு."

"எப்படித் தூக்கம் வரும்? வலி உயிர் போகுதே... கருமாரி!" - வலியால் முனக, சீனிவாசன் வைத்தியரைப் பார்த்தார்.

"ரொம்ப வலிக்கும் போலிருக்கே. வலி குறைய மருந்து இருந்தா கொடுங்களேன். ரங்கா வலியைத் தாங்கிக்க மாட்டா."

"இந்த மருந்தை ஒரு மூடி அளவுக்குக் கொடுங்க. இந்தத் தைலத்தைக் கட்டு மேல அப்பப்ப ஊத்திட்டே இருங்க. இந்த மருந்துதான் வலியைக் குறைக்கும். ஆனா உள் காயம்ங்கிறதாலே எப்படியும் வலி இருக்கும். கொஞ்சம் சமாளிக்கணும்."

"கட்டை எப்போ பிரிப்பீங்க?"

"இன்னும் ரெண்டு நாள் கழிச்சு வர்றேன். அப்புறம் திரும்ப வேறு கட்டுப் போடணும். எப்படியும் எழுந்து நடமாட ஒரு மாசம் ஆகும்."

"ஒரு மாசமா?" - வாயைப் பிளந்தாள் ரங்கநாயகி.

"உறுதியாச் சொல்ல முடியாது. கூடுதலா ஆனாலும் ஆகலாம். நல்லபடியா நடமாட கொஞ்ச நாள் ஆகும்."

"ஐயோ! ஐயோ! குடிகாரப் பாவி. என்னை இப்படி முடமாக்கிட்டானே... நான் ரெண்டு கல்யாணத்தை வெச்சிக்கிட்டு இப்படிப் படுக்க முடியுமா? நான் நாளைக்கு ஊருக்குப் போகணுமே!"

"ஊருக்கா? ஏம்மா நீ கட்டிலை விட்டே இறங்க முடியாது. அசையாம இருந்தாத்தான் நீ நடமாட முடியும். பார்த்துக் கவனமா இருந்துக்கோ..." - என்றவாறே எழுந்தார் வைத்தியர்.

"ரங்கா! வைத்தியருக்குப் பணம் கொடுக்கணுமே!"

"ம்... ம்... வைத்தியரே! எம்புட்டு பணம் வேணும்?"

"ஒரு ஐந்நூறு ரூபா கொடும்மா. மருந்து இப்போ ரொம்ப விலை..."

"ஐந்நூறா? என்கிட்ட அவ்வளவு பணம் இல்லையே!"

"சரி. இருக்கிறதைக் கொடு. ரெண்டு நாள் கழிச்சு வரும்போது மிச்சத்தைக் கொடு."

"என்னமோய்யா! நீரு ஒருத்தர் பக்கத்தில இருக்கிறதால ஒரு ஆத்திர அவசரத்துக்கு நேரம் காலம் பார்க்காம வாறீரு. உமக்குக் கோவில் கட்டித்தான் கும்பிடணும். என்னைக் கொஞ்சம் சீக்கிரமா எழுந்து நடக்க வைச்சிடுங்க." - என்றவாறே அவள் தலையணைக்குள் கைவிட்டுத் துழாவ, சீனிவாசன் திடுக்கென விழித்தார்.

இவ்வளவு சீக்கிரம் மாட்டிக் கொள்ளப் போகிறோமோ... பயத்தில் உடல் உதறிக் கொள்ள ரங்கநாயகி ஐயோ! ஐயோவென அடித்துக் கொண்டாள். தூங்கி விழுந்த உமா பதறி எழுந்தாள்.

"ம்மா... என்னம்மா? ஏன் கத்துற?"

"உமா! பணத்தைக் காணோம்டி. ரெண்டு நூறு ரூபா தாளு வெச்சிருந்தேன்."



"உன் பணத்தை யாரும்மா எடுப்பாங்க? அங்கேதான் இருக்கும். நல்லாத் தேடிப் பாரு!"

"இல்லையே... பணத்தைக் காணலையே...!" - என்றவாறே தலையணையை உறையை விட்டுக் கழற்றியே பார்த்து விட்டாள்.

"ஐயோ! சண்டாளப் பாவி. இதைத்தான் எடுத்துக் குடிச்சானா? இல்லையே... நான் சாயந்திரம் கூடப் பார்த்தேனே...!"

வைத்தியர் சலித்துக் கொண்டார். "அட, என்னம்மா நீ! நடுச் சாமத்தில இப்படிக் காக்க வெச்சிட்டு.... வெறும் கையோட அனுப்புறியே?"

"ஐயா! சாமி. மன்னிச்சிக்குங்க. நீங்க நாளன்னிக்கு வரும்போது சேர்த்துத் தந்திடுறேன். கண்டிப்பா தந்திடுறேன்."

"அப்பவும் கடன் சொல்லாதம்மா..."

"சேச்சே! நீங்க இவ்வளவு தூரம் வந்ததே பெரிசு. உங்ககிட்ட கடன் சொல்லுவேனா? எப்படியும் தந்திடுவேன். நீங்க வராம மட்டும் இருந்திடாதீங்க."

"சரி... சரி... சீனிவாசா! அந்த மருந்தை அப்பப்போ ஊத்து. மறந்திடாதே... நான் கிளம்புறேன்."

"சரிங்கய்யா..." - கும்பிட்டு வழியனுப்பினார் சீனிவாசன். அவர் வெளியேறும் வரை அமைதியாய் இருந்தவள், அவர் போனதும் கோபமாய்க் கணவன் புறம் திரும்பினாள் .

"யோவ்! உண்மையைச் சொல்லுய்யா... பணத்தை எங்கே?"

சீனிவாசன் வெலவெலத்துப் போனார். "என்ன ரங்கா... என்கிட்டே கேட்டா...? எனக்கு எப்படித் தெரியும்?"

"யோவ்! நீதான் ரூம்லயே அடைஞ்சு கிடக்கிற. உனக்குத் தெரியாம அது எங்கேயும் போயிருக்காது. சொல்லுய்யா...!"

"நிஜமாவே எனக்குத் தெரியாது ரங்கா!"

"பொய் சொல்லாதே. பீடி வாங்கணும்னு சொன்னியே... அதுக்காகத் திருடினியா?"

"அம்மா! வரவர உன் அட்டகாசம் அதிகமாகிப் போச்சு. ஒத்த ரூபா பீடிக்காக யாராவது இருநூறு ரூபா திருடுவாங்களா? யார்கிட்ட பேசுறோம்னு கூட யோசிக்க மாட்டியா நீ?"

"ஏய்! உன் அண்ணன் நேத்துப் பகல்ல வீட்டுக்கே வரலை. நான் சாயந்திரம்கூடப் பார்த்தேன். அந்தப் பணத்தை வைச்சுத்தான்டி நாளைக்குக் களக்காடு போகணும்னு இருந்தேன். திடீர்ன்னு எப்படிக் காணாமப் போகும்?"

"என்ன! களக்காடு போகப் போறியா... எதுக்கு?"

"அதான்டி. இந்த மாடசாமியைப் பார்த்துப் பேசி கையோட கூட்டிட்டு வந்திடலாம்னு நானும் ராஜேஸ்வரியும் முடிவு பண்ணி வெச்சிருந்தோம். எல்லாத்தையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிட்டானே, படுபாவி!"

"அம்மா! நீ செய்யுற காரியத்தாலதான் அண்ணி இப்போ படுக்கையில விழுந்திட்டாங்க. காயு எப்பவும் அழுதிட்டே இருக்கா. இதெல்லாம் வேண்டாம்மா. அவ வந்து



உன்கிட்ட கல்யாணம் கேட்டாளா? நீ ஏன் இப்படிப் பண்றே?"

"வாயை மூடுடி. உனக்கு ஒரு நல்லது பண்ணிப் பார்க்கணும்னா முதல்ல அவளை வெளியேத்தணும்டி. இதெல்லாம் சொன்னா உனக்குப் புரியாது."

"பகல் கனவு காணாதம்மா. நீ நினைக்கிறது எதுவும் நடக்காது."

"அறிவு கெட்ட கழுதை! இப்படி அபசகுனமா பேசாதே!"

"நீ என்ன நல்ல காரியமா செய்யப் போறே, சகுனம் பார்ப்பதற்கு... அம்மா! திரும்பும் சொல்றேன். காயு பாவம்மா. பேசாம அந்த மாப்பிள்ளையையே கட்டி வைச்சிடும்மா. இனியாவது அவ வசதியா சந்தோஷமா வாழட்டும்."

"அசமந்தம்! அப்படியே அப்பனாட்டம் பேசுது பாரு. உன்னைப் பெத்ததுக்கு ஒரு கல்லைப் பெத்திருக்கலாம். பொழைக்கத் தெரியாத ஜென்மம்."

"போதும்மா. நானும் அப்பாவும் இப்படி இருக்கிறதால தான் உனக்குக் குடிக்கக் கஞ்சி கிடைக்குது. இல்லேன்னா உன் புத்திக்குப் பச்சைத் தண்ணிகூட கிடைக்காது."

"ஏய்! பெத்தவளுக்கே சாபம் விடுறியா?"

"நடக்கப் போறதைச் சொல்றேன். ஏற்கெனவே அண்ணியை உன் மருமகளாக்கிச் சக்கையாப் பிழிஞ்சி எடுக்கிறே. தலையெழுத்தேன்னு அண்ணி உழைக்கிறாங்க. இதில காயுவை உயிரோட புதைக்கப் போறியே... இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடுமா?"

"சொல்லும்மா! நல்லாச் சொல்லு. நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்திட்டேன். காது கொடுத்துக் கேட்க மாட்டேங்கிறாளே!"

"யார், என்ன சொன்னாலும் சரி. என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை. என் உடம்பு குணமாகிறதுக்குள்ள எப்படியும் இந்தக் கல்யாணத்தை நடத்தியே தீருவேன்."

"பார்த்திட்டே இரு. உன் புத்திக்கு நீ கடைசி வரைக்கும் இப்படிப் படுக்கையிலதான் கிடக்கப் போற..."

"உமா! இப்படியெல்லாம் பேசக் கூடாதும்மா. அவ உன் அம்மா!"

"போங்கப்பா! இவ்வளவு பட்டும் திருந்தலைன்னா எப்படி? அம்மா! நீ உன்னையே திருத்திக்கிறதுக்காக கடவுள் உனக்கு ஒரு வாய்ப்புத் தந்திருக்காரு. தயவு செய்து திருந்திக்க. இல்லேன்னா உன் கதி என்னாகுமோ அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.

"அப்பா! இவகூடப் பேசி நம்ம சக்தியை ஏன் வீணாக்கணும். படுங்கப்பா... எனக்குத் தூக்கம் வருது."

"நீ படும்மா... நான் அம்மாவுக்குத் தைலம் தடவணுமே!"

"சரிப்பா... ஆமா காயுவை எங்கே? இங்கே இவ்வளவு களேபரம் நடந்திருக்கு. அவ வெளியே வரவே இல்லையே!" - மகள் கேட்டதும்தான் ரங்கநாயகி விழித்துக் கொண்டாள்.

"அட! யோவ்... இந்தச் சின்னச் சிறுக்கி எங்கேய்யா போய்த் தொலைஞ்சா? நான் ஒருத்தி விழுந்து அடிபட்டுக் கிடக்கிறேன். எழுந்து வந்தாளா பாரேன். அவ்வளவு திமிர்!



நான் படுக்கையில கிடக்கிறதைப் பார்த்துக் கொண்டாட்டம் போட்டுட்டு இருக்காளா?"

"ரங்கா! எதையுமே யோசிக்காமப் பேசாதே. உன் மகன் இங்கே வந்திட்டானே! அங்கே வயித்துப்பிள்ளைக் காரி தனியா இருப்பாளே... அவளைப் பார்த்துக்கப் போயிருப்பாள்..." என்றார் சமாளிப்பாய்.

ரங்கநாயகியின் நெற்றி சுருங்கியது.

"போயிருப்பாளா? போயிருக்கிறாளா?" - மனைவியின் கேள்வியில் தடுமாறிப் போனார்.

"என்ன ரங்கா? இப்படிக் கேட்கிற?"

"யோவ்! உண்மையைச் சொல்லு. அவ எங்கே போனா?"

"நான் கவனிக்கலை ரங்கா. ஒருவேளை ஆஸ்பத்திரிக்குப் போயிருப்பான்னு நினைச்சேன். வேற எங்கே போகப் போகுது அந்தப் புள்ள!"

"அப்போ என் பணம் அவகிட்டதான் போயிருக்கு..."

"சேச்சே! இப்படியெல்லாம் பழி போடாதேம்மா. காயு ஏன் உன் பணத்தைத் தொடப் போறா?"

"எடுத்திருப்பாடி. இந்த அர்த்தராத்திரியில கையில பத்துப் பைசா இல்லாம எப்படி வெளியே போயிருப்பா. உன் அப்பன்தான் எடுத்துக் கொடுத்து வழியனுப்பி வெச்சிருப்பாரு. அவர் முழியே சரியில்லையே!"

"ஐயோ! நான் சத்தியமா உன் பணத்தைத் தொடவே இல்லை."

"அப்போ அவதான் எடுத்தா?"

"எனக்கு எதுவுமே தெரியாது, ரங்கா! என்னை விட்டுடு..."

"யோவ்... நீ யாரு? எப்படிப்பட்ட ஆளு! நீ அவளைக் காட்டிக் கொடுப்பியா? உனக்குத் தேவையானதை அவளுகதானே வாங்கி ஊட்டி விடுறாளுக. அந்த நன்றி விசுவாசம். ம்... இருக்கட்டும். அந்தச் சிறுக்கி வரட்டும். நானே கேட்கிறேன். நான் கேட்கிற கேள்வியிலே அவ நாண்டுகிட்டு நின்னு சாகணும்."

"அடியேய்! வேணாம்டி. அது பாவம் சின்னப்புள்ள! அதை எதுவும் அசிங்கமாப் பேசிடாதே. பாவம்டி!"

"அப்போ நான் பாவமில்லையா? வைத்தியருக்குக் கொடுக்கக்கூட பணம் இல்லாம கடன் சொல்லி அனுப்பியிருக்கேன். நான் உன் கண்ணுக்குப் பாவமாத் தெரியலை?"

"ரங்கா!"

"அடச்சீ வாயை மூடுய்யா. போற போக்கைப் பார்த்தா அவதான் உனக்குப் பொண்டாட்டியா இருப்பா போலிருக்கு!"

"ரங்கா...!" - சீனிவாசனின் உடல் ஆடிப் போயிற்று. எழுந்து நிற்க முடியாமல் தடுமாறினார்.

"ஏன்யா கத்துற?"

"நீயெல்லாம் ஒரு பொம்பளையா? ச்சே! உன் நிழல் பட்டாக்கூட தோஷம்டி. ச்சீ உமா கண்ணு... நீ போய்ப் படுடா. இவகிட்ட உட்கார்ந்தா இவ காத்து நம்ம மேல பட்டாக்கூட அது பாவம். போடா கண்ணு. போய்ப் படு..."



என்றவாறு கம்பை ஊன்றியவாறே எழுந்து தன் படுக்கைக்குச் சென்றார் சீனிவாசன்.

வெறுப்பைக் கக்கிய பார்வையோடு உமாவும் எழுந்து சென்றுவிட, ரங்கநாயகி தனியே விடப்பட்டாள். முகமும் மனமும் கடுக்க, காயத்ரி மேல் ஆத்திரம் அதிகரித்தது.

அவளுக்காகப் பெற்ற மகளும் கட்டிய கணவனும் தன்னை வெறுக்கிறார்கள் என்ற எண்ணம்தான் மேலோங்கியதே தவிர, தன் செயல்பாடுகள் அனைத்துமே தவறானவை என்று அவள் உணரவே இல்லை.

ஆனால் இவை எதையுமே அறியாத காயத்ரியோ மெல்ல மெல்ல ஜனாவைப் பற்றிய இனிய நினைவுகளோடு உறங்க ஆரம்பித்தாள்.

## 13

கல்லுக்குள்ளே வந்த ஈரமென்ன
நெஞ்சுக்குள்ளே அன்பின் பாரமென்ன
நீயென்ன மாயம் செய்தாய்
நீருக்குள் தீயை வைத்தாய்!

**வி**டிந்து வெகுநேரமான பின்பே கண் விழித்தான் பாண்டியன். சூரியக் கதிர்கள் முகத்தில் வெப்பத்தை உணர்த்த சட்டென எழுந்து அமர்ந்தான். தன் வீட்டு முற்றத்தில் அரைகுறை ஆடையோடு கிடந்த கோலம் அப்போதுதான் உறைக்க... பதறி எழுந்து லுங்கியை இடுப்பில் கட்டிக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான்.

மனம் பதறியது. 'ஐயோ! சாவித்திரியைத் தனியே விட்டுவிட்டு இரவெல்லாம் தெருவில் கிடந்திருக்கிறேனே...

ஊசி போட வேண்டும் என்றாளே, நர்ஸம்மா. பாழாய்ப் போன புத்தி எத்தனை முறை தடுத்தும் கேட்க மாட்டேன் என்கிறதே...' நெற்றியில் அறைந்து கொண்டே வீட்டுக்குள் நுழைந்தவன் தாய் இன்னும் படுக்கையில் கிடப்பதைப் பார்த்ததும் கோபமானான்.

"யம்மோவ்! நீ இன்னும் படுக்கையை விட்டே எழுந்துக்கலையா?"

"ம்..." - முனகலோடு கண்களைத் திறந்தாள்.

"ஏம்மா! நான்தான் புத்திகெட்டதனமா குடிச்சிட்டு விழுந்திட்டேன். நீயாவது கிளம்பி ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கலாமில்ல..."

"எதுக்குடா?"

"என்ன கிறுக்குத்தனமா கேட்கிற? சாவி தனியா இருக்காளே... நீ கூடப் போய் இருந்து கவனிக்க வேண்டாமா?"

"வாடா... கடன்காரா! என் இடுப்பை ஒடிச்சிட்டு எழுந்து நடமாட முடியாம கிடக்கிறவகிட்ட வந்து என்ன ஏதுன்னு கேட்காம உன் பெண்டாட்டியைப் பார்க்கப் போகலைன்னு எகிறுறியா?" - கடுப்பாய்க் கேட்டாள், ரங்கநாயகி.

"என்னம்மா... இடுப்பு ஒடிஞ்சு போச்சா? ஏன் கீழே விழுந்திட்டியா?"

"சண்டாளப் பாவி! நான் விழலைடா. நீதான் என்னைத் தள்ளிவிட்டு என் எலும்பை உடைச்சே. என்னால அசையக்கூட முடியலியே... காலையில இருந்து ஒரு சொட்டுக் காபித் தண்ணிகூட குடிக்காம படுக்கையில கிடக்கிறேனே... வலி உயிர் போகுதே!" - அரற்றினாள்.



"என்னம்மா சொல்றே? நான் உடைச்சேனா... எப்போ?"

சீனிவாசன் குரல் கொடுத்தார்.

"பாண்டியா! உனக்கு எதுவுமே நினைவில்லையா? நேத்து நீயும் உன் அம்மாவும் தெருவில புரண்டு விளையாடினீங்களே! அப்பத்தான் எலும்பு ஒடைஞ்சிருக்கு. வைத்தியரைக் கூட்டியாந்து கட்டுப் போட்டிருக்கு."

"ஐயோ! எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லையேப்பா...!"

"ம்... உனக்கு எப்படி ஞாபகம் இருக்கும்? குடிச்சிட்டா எதிர்ல யார் நிக்கிறான்னே உனக்கு அடையாளம் தெரியாதே... குடிகார நாயே! இப்போ என்னைப் படுக்கையில போட்டுட்டியே... இன்னும் ஒரு மாசம் எழுந்து நடமாட முடியாதுன்னு வைத்தியர் சொல்லிட்டாரே... நான் என்ன பண்ணுவேன்?"

"ஏம்மா கத்துறே? நீ என்ன ஓடியாடி வேலையா செய்யப் போறே? வழக்கமா விடிஞ்சதுல இருந்து ராத்திரி வரை திண்ணையில உட்கார்ந்து ஊர்க்கதை பேசுவ. இனிமே வீட்டுக்குள்ள அப்பாவுக்குத் துணையா உட்கார்ந்து உங்க பழங்கதைகளைப் பேசு.

"பாவம்! அப்பாவும் எவ்வளவு நாள்தான் தனியா கிடந்து சுவர்கூடப் பேசுவார். இனி உன்கூடப் பேசிட்டு இருக்கட்டுமே... அப்பாவுக்கும் நேரம் போகும். என்னப்பா?"

"மகனே! அருமையா சொன்னேடா... கெட்டதிலயும் ஒரு நல்லதுன்னு சொல்வாங்களே... அது இதுதானா?"

"அப்பா! நேரமாகிப் போச்சு. நான் குளிச்சிட்டு ஆஸ்பத்திரிக்குப் போறேன். சாவித்திரிக்கு ஏதோ டெஸ்ட் எடுக்கணும். ஊசி போடணும்னு சொன்னாங்க!"

"ஏன்டா! இப்படியா பொறுப்பில்லாம புள்ளதாச்சிப் பொண்ணை விட்டுட்டு வருவே... நீ ஏன்டா இப்படி இருக்கிற? மாறவே மாட்டியா? பாவம்டா. அந்தப் பொண்ணு ராத்திரியெல்லாம் என்ன பாடு பட்டதோ?"

"அப்பா! நானும் இந்தச் சனியனைத் தொடக் கூடாதுன்னுதான் நினைக்கிறேன். ஆனா கையில துட்டு இருந்தா காலு நேரா பிராந்திக் கடைக்குப் போயிடுதுப்பா. நான் என்ன செய்யட்டும்?"

"பேய்! மனசை அடக்கி ஆள்றவன்தான்டா மனுஷன். நீ மனுஷனா? அந்தப் பொண்ணு எத்தனை நாள் உன்கிட்ட கெஞ்சுது... குடிக்காதேன்னு... ஒரு நாளாவது காதுல வாங்குறியா?"

"அப்பா! எனக்கும் சாவி மேல பிரியம் இருக்குதுப்பா. ஆனா இதை விட முடியலியே!"

"பேய் பாண்டியா! அந்த ஆள்கிட்ட என்னடா வெட்டிப் பேச்சுப் பேசுற? எனக்குப் பசியில உயிர் போகுது. டிபன் வாங்கிட்டு வாடா."

"ஏம்மா... சமைக்கலையா?"

"நான்தான் கட்டிலை விட்டு இறங்காம இருக்கேனே உன்னால நான் முடமா ஆயிட்டேனே...!"

"சும்மா புலம்பாதம்மா... உமாவைச் சோறு பொங்கச் சொல்லு. நான் ஆஸ்பத்திரிக்குப் போகணும். நேரமாச்சு!"



என்றவன் டவலை எடுத்துக் கொண்டு பின் பக்கமாய்ச் செல்ல, திட்டித் தீர்த்தாள் ரங்கநாயகி.

"ஏன்டா! நான் ஒருத்தி நடமாட முடியாம கிடக்கிறேன். அதைப் பத்தி உங்க யாருக்குமே கவலை இல்லையா? எனக்கு ஒரு வாய் காபி போட்டுத் தரக்கூட இந்த வீட்ல யாரும் கிடையாது. அந்த ஓடுகாலி எங்கே போனான்னே தெரியலியே?"

"ரங்கா! இவ்வளவு பட்டும் உன் வாய் குறையலையா?"

"யோவ்! உன் வாயைத் திறக்காதே. கருநாக்கு மனுஷா. எந்த நேரம் பாவம் புண்ணியம்னு பேசினியோ... நீ சொல்லி வாய் மூடலை... அதுக்குள்ள என் இடுப்பு எலும்பு முறிஞ்சி போச்சு. உனக்கு இப்போ குளுகுளுன்னு இருக்குமே!" – தன் ஆத்திரத்தை எல்லாம் கணவனிடம் கொட்டினாள்.

புன்னகைத்தார் சீனிவாசன். "அடி பைத்தியக்காரி! கட்டினவ ராட்சஸியாவே இருந்தாலும் அவ படுக்கையில கிடக்கிறதைப் பார்த்து எந்தப் புருஷனும் சந்தோஷப்பட மாட்டான்டி. நேத்து ராத்திரி முழுசும் உன் பக்கத்துல உட்கார்ந்து நான்தானே தைலம் போட்டுக்கிட்டே இருந்தேன். வலியில நீ முனகும்போது என் கண்ணில தண்ணி வந்திடுச்சி ரங்கா.

"ஆயிரம்தான் கோபக்காரியா இருந்தாலும் நீ என் சம்சாரம். உனக்கு ஒண்ணுன்னா என் மனம் பதறாதா? உன்னை இப்படிப் பார்க்க எனக்கும் கஷ்டமாத்தான் இருக்குடி. ஆனா என் உடம்புல பழைய தெம்பு இல்லையே... என்னால உழைக்கவும் முடியலியே...!

"நான் மட்டும் ஆரோக்கியமா இருந்திருந்தா உன்னை இப்படிப் போட்டுட்டு உட்கார்ந்திருப்பேனா! உடனே பெரிய ஆஸ்பத்திரியா பார்த்துச் சேர்த்திருக்க மாட்டேன். இப்போ என் உடம்புலேயும் தெம்பு இல்லை. கையிலேயும் துட்டு இல்லையேடி!" - பரிதாபமாய்ச் சொன்ன கணவனைப் பார்க்கையில் மனம் நெருஞ்சி முள்ளாய்க் குத்தியது.

கடுமையாய் உழைத்தவர்தான். திடீரென ஏற்பட்ட விஷக் காய்ச்சலைக் கவனிக்காமல் கஷாயம், கைமருந்து என அலட்சியமாய் விட்டதில் உடலின் பாகங்கள் சோர்ந்து நடமாட முடியாமல் படுக்கையில் விழுந்தவர்தான்... பிறகு எழுந்து நடமாட முடியாமலே போயிற்று.

இதே அறையில் ஆண்டுக்கணக்காய் அடைந்து கிடக்கிறார். இது வரை ஒரு நாள் கூட அவரிடம் பரிதாபமோ பரிவோ காட்டியதில்லை. இரண்டு நிமிடம் அன்பாய் அமர்ந்துகூடப் பேசியதில்லையே! ஒரு மனைவியாய் எந்தப் பணிவிடையும் செய்ததில்லை.

சாவித்திரியும் அவள் தங்கையும்தான் மருந்து மாத்திரை, உணவு என அவரது தேவைகளைக் கவனித்துக் கொள்கின்றனர். இன்று தனக்கு உடம்பு முடியவில்லை என்றதும் எப்படிப் பதறுகிறார்! கண்கள்கூட கசிகின்றதே எனக்கேன் இந்தப் பரிவும் இரக்கமும் இல்லாமல் போனது?

"ரங்கா! நீ ஒண்ணும் பயப்படாதே. நான் உனக்கு கஞ்சி காய்ச்சி எடுத்திட்டு வர்றேன். நீ பசி தாங்க மாட்டியே..." - என்றவாறு சுவரோடு சாய்த்து வைத்திருந்த கம்பை எடுத்து ஊன்றியவாறே எழுந்தார் சீனிவாசன்.

அவசரமாய் மறுத்தாள். "வேண்டாம்யா... விழுந்துடப் போற!"



"இது என்ன புது இடமா? வருஷக் கணக்காப் பழகின இடம்தானே! நீ இரு. நான் பத்தே நிமிஷத்தில கஞ்சியோட வர்றேன்..." - என அவர் மெதுவாக அடியெடுத்து வைத்து அறையை விட்டு வெளியேற, லேசாய்க் கசிந்த கண்ணீரோடு கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் ரங்கநாயகி.

ஈரத் தலையைத் துவட்டிக் கொண்டே வந்த பாண்டியன் ஆடையை மாற்றிக் கொண்டே தாயை அழைத்தான்.

"ம்மோவ்! காசு இருந்தாக் கொடு."

"காசா! எதுக்குடா?"

"நேத்து ஏதோ ஊசி போடணும்னு சொன்னாங்க. அந்த மருந்தை வெளியேதான் கடையில வாங்கணுமாம்."

"வாங்கு."

"விளையாடாதேம்மா. என்கிட்ட பைசா இல்லை."

"தினம் தினம் குடிச்சிட்டே இரு. பணம் கொட்டியா கிடக்கு இங்கே? பணத்துக்கு நான் எங்கே போவேன்?"

"அம்மா!"

"ஏன்டா கத்துற? இப்போ நம்ம வீட்ல யாரு சம்பாதிக்கிறா? எப்படிப் பணம் இருக்கும்? நானே கையில பைசா இல்லாம திண்டாடிட்டு இருக்கேன். நீ வேற..."

"ஆஸ்பத்திரியில இருக்கிறது என் பெண்டாட்டி!"

"அந்த நினைப்பு உனக்கு இருந்திருந்தா மருந்து வாங்க வெச்சிருந்த பணத்தைக் குடிச்சி அழிச்சிட்டு

வருவியா? வீட்ல இருந்த பணத்தையும் காணோம். அந்த சின்னச் சிறுக்கியையும் காணோம். நேத்து வைத்தியருக்கு கொடுக்கக்கூடப் பணம் இல்லாம அக்கம் பக்கம் கடன் வாங்கிக் கொடுத்தேன்.

"இதுல உன் பெண்டாட்டிக்குச் செலவு பண்ண நான் எங்கே போவேன்? புருஷன் நீ குத்துக் கல்லாட்டம் இருக்கியே... வேலைக்குப் போ. சம்பாதிச்சு உன் பெண்டாட்டிக்குத் தங்கத் தட்டுலேயே சாப்பாடு போடு. நானா வேணாங்கிறேன். என்னவோ ஊர்ல இல்லாத பெண்டாட்டி விசேஷமா உண்டாகியிருக்கான்னு இப்படி வீட்டோட இருந்தா துட்டு தானா கொட்டுமா?"

"இப்ப ஏன் நீ கத்துறே? பணம் தர முடியுமா முடியாதா?"

"என்கிட்ட பத்துப் பைசா கிடையாது. இருந்தாத்தானே தர முடியும்?"

"இப்போ நான் என்ன பண்றது?"

"ஆம்பிள்ளைதானேடா நீ? போய் எவன்கிட்டயாவது கடன் வாங்கி மருந்து வாங்கு. சம்பாதிச்சிக் கடனை அடை."

"அம்மா! இப்ப ஆகுற வேலையைச் சொல்லு..."

"டேய்! நீ எவ்வளவு நேரம் கத்தினாலும் ஒத்த ரூபா கூட கிடைக்காது. பேசாம போ. உனக்குச் சாமர்த்தியம் இருந்தா பணத்தைப் புரட்டு. இல்லேன்னா அவ எப்படியும் செத்துத் தொலையட்டும்னு விடு."

"அம்மா... ஆ!" - கத்தினான் பாண்டியன். முகம் முழுக்கக் கோபச் சிவப்பானது.



"நீயெல்லாம் ஒரு பெண்ணா? வயித்துல புள்ளையோட இருக்கும்போது இப்படி ஒரு வார்த்தை சொல்லலாமா? ச்சே! உனக்காகவா என் சாவி இத்தனை வருஷமா உழைச்சுக் கொட்டினா. என் பெண்டாட்டியைக் காப்பாத்திக்க எனக்குத் தெரியும்.

"இனி இந்த மாதிரி ஏதாவது பேசின... அம்மான்னு கூட பார்க்க மாட்டேன். ஜாக்கிரதை!" - விரலை நீட்டி எச்சரித்து விட்டுப் போனவனைத் திகைப்பாய்ப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தாள் ரங்கநாயகி.

சமையலறையில் இருந்த சீனிவாசனின் முகம் புன்னகைத்தது. மகன் தன் மனைவியின் மீது நிறையப் பிரியம் வைத்திருக்கிறான் என்பதே மனதை நிறைவாக்கியது.

தெருவில் இறங்கி வேகமாய் நடக்கத் தொடங்கிய பாண்டியனின் மூளை வேகமாய்ச் சிந்திக்கத் துவங்கியது. பணம் வேண்டுமே! யாரிடம் போய்க் கேட்பது? கேட்டாலும்தான் தருவார்களா?

வேலை வெட்டிக்குப் போகாமல் வீட்டில் கிடப்பவனை... அதுவும் ஒரு குடிகாரனை நம்பி யார் கடன் கொடுப்பார்கள்?

மனைவியின் மருத்துவச் செலவுக்கு என்றாலும் கூட யாரும் நம்பப் போவதில்லை. குடிக்கத்தான் பொய் சொல்லிக் காசு கேட்கிறேன் என்று நினைப்பார்கள்.

ச்சே...! வேலையை விட்டது எவ்வளவு பெரிய தப்பு. முதலில் ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வேண்டும்.

நாளையே குழந்தை பிறந்தால் அதற்கும் சேர்த்துச் செலவழிக்கப் பணம் வேண்டுமே...? யார் கையையும்

"இல்லை ஸார். ஆஸ்பத்திரிக்குத்தான் போறேன். நேத்து தெரியாத்தனமா தண்ணியடிச்சிட்டு வழக்கம் போல வீட்டுக்கு வந்திட்டேன். சாவித்திரியை ஆஸ்பத்திரியில வெச்சிருக்கிறதையே மறந்திட்டேன்..." - என்றவனைக் கடுமையாய்ப் பார்த்தான் கணேஷ். அவனுக்குச் சற்றுப் பின்னால் நின்றிருந்த ஜனாவும்.

"ஏன்யா? இப்படித் தன் நிலையே மறக்கிற அளவுக்கா குடிப்பே? உன்னை மாதிரி ஒரு குடிகாரன்கூட எவதான் வாழணும்னு ஆசைப்படுவா! அதான் சாவித்திரி அந்த முடிவை எடுத்திருக்காங்க."

திக்கென அதிர்ந்தான் பாண்டியன். "ஸ... ஸார்! என்ன... முடிவு?"

"என்ன ஜனா... சொல்லிடலாமா?" - பின்னால் திரும்பிக் கேட்டான் கணேஷ். முகத்தில் அதே கடுமையோடு சொன்னான் ஜனார்த்தனன்.

"சும்மா சொல்லுடா. சொன்னாலும் அதைப் பத்தியெல்லாம் இவர் கவலைப்பட மாட்டார்."

"ஸார்! என்ன ஸார் ஏதேதோ பேசுறீங்க? எனக்குப் பயம்மா இருக்கே. என்னோட சாவித்திரிக்கு என்ன ஆச்சு? உங்களுக்கு இதெல்லாம் தெரியுமா? நீங்க ஆஸ்பத்திரிக்குப் போனீங்களா?" - பரபரத்தான் பாண்டியன்.

"நாங்க ஏன் ஹாஸ்பிடல் போறோம்?"

"பின்னே..."

"அவங்கதான் நேத்து நைட் பீச்சுக்கு வந்தாங்க."



"ஏ... என்ன? பீச்சுக்கா... ஏன்?"

"வயித்துப் பிள்ளையோட அர்த்த ராத்திரியிலே தனியா எதுக்கு வருவாங்க?"

"எதுக்கு ஸார்?"

"கடல்ல குதிச்சு தற்கொலை பண்ணிக்க..."

"ஐயோ!" - வீறிட்டான் பாண்டியன். "ஸார்! சாவித்திரி எங்கே? இப்போ எங்கே இருக்கா? அவளுக்கு ஒண்ணும் ஆகிடலையே! பத்திரமா இருக்காளா? சொல்லுங்க ஸார். அவளுக்கு என்ன ஆச்சு?" - கேட்கும்போதே கண்ணீர் பெருகியது. இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஜனார்த்தனன் அவனை நெருங்கினான். "பாண்டியன்! இந்தக் கண்ணீர்... உண்மைதானா? இல்லே..."

"ஸார்! என்னைக் கொல்லாதீங்க ஸார். நான் குடிகாரன்தான். ஆனா சாவித்திரின்னா எனக்கு உசுரு ஸார். அவ மேல ஒருநாள் கூட நான் கோவிச்சதில்லை. எவ்வளவு குடிச்சாலும் அவளைக் கைநீட்டி அடிச்சதில்ல... அவ மேல தூசு துரும்பு படக்கூட விட மாட்டேன் ஸார்!

"ரொம்பக் கஷ்டப்பட்டு இப்பத்தான் உண்டாகியிருக்கா. அவளைக் கூடவே இருந்து பார்த்துக்கணும்னுதான் வேலையைக் கூட விட்டுட்டு அவகூடவே இருந்து பார்த்துக்கிட்டேன். அவ என் உசுரு ஸார்!"

"நல்லாயிருக்கு. ஏன் பாண்டியன்! மனைவி கர்ப்பமா இருக்கும் சமயத்தில இன்னும் கடுமையா உழைச்சி... நிறையச் சம்பாதிச்சு... மனைவிக்கு வேண்டியதெல்லாம்

வாங்கிக் கொடுக்கணும். தேவையான சத்துள்ள உணவு களைச் சாப்பிட வைக்கணும். கரெக்ட்டா செக்-அப் கூட்டிட்டுப் போகணும். இதுல ஏதாவது செய்தீங்களா?"

"இ... இல்லை ஸார்!"

"இதெல்லாம் செய்யாம வேலைக்கும் போகாம வீட்டில இருந்தா என்ன அர்த்தம்! இதுதான் அன்பா? நம்ம நாட்டுல உள்ள பெண்கள் எத்தனையோ பேர் கர்ப்பமா இருக்காங்க. அத்தனை பேரோட புருஷனும் இப்படித்தான் வேலையை விட்டுட்டு வீட்ல இருக்காங்களா? அவங்களுக்கெல்லாம் மனைவி மேல அன்பும் அக்கறையும் இல்லைன்னு அர்த்தமா?"

"ஸ... ஸார்!"

"அன்பைக் காட்டுற லட்சணம் இதுதானா? அவங்களைத் தனியே விட்டுட்டுக் குடிக்கப் போற அளவுக்குப் போதை இழுக்குதோ? ஒரு நாள் கூட அந்தச் சாக்கடையைக் குடிக்காம இருக்க முடியலை, இல்லை...?"

"இல்லை ஸார்! நானும் இதை விட்டுடணும்னுதான் தினமும் நினைக்கிறேன். இது தப்புன்னு தெரியுது. ஆனா சாயங்காலம் ஆச்சுன்னா... என் மூளை மழுங்கிடுது. என்னை என்னாலயே கட்டுப்படுத்திக்க முடியலை."

"மனசை நம்ம கட்டுப்பாட்டுல வைக்கணும். அது விருப்பத்துக்கு அலைய விடலாமா? மனசு அப்படி அலைபாயுற நேரம் ஏதாவது கடுமையான வேலையைச் செய்திட்டே இருக்கணும். மற்ற எண்ணங்களை வர விடாம உழைக்கணும். உழைக்கிறீங்களா?"



"ஸார்! இப்போ இங்கே வரும்போது கூட நான் வேலைக்குப் போகணும்னுதான் நினைச்சிட்டு வந்தேன். கையில பத்துப் பைசா இல்லாத நேரம்தான் ஸார்... காசோட அருமை தெரியுது."

"அப்போ... வேலை கிடைச்சா போறீங்களா?"

"கண்டிப்பா போறேன் ஸார். அதுக்கு முன்னால நான் சாவித்திரியைப் பார்க்கணும் ஸார். அவ எங்கே இருக்கா? எப்படி இருக்கா?"

"பத்திரமா இருக்காங்க. நல்லவேளை! நானும் கணேஷும் நேத்து நைட் பீச்சுக்குப் போயிருந்தோம். நாங்க மட்டும் கவனிக்காம விட்டிருந்தா இன்னிக்கு உங்க மனைவி உங்களுக்கு இல்லை."

"ஐயோ!"

"நாங்கதான் காப்பாத்தி பத்திரமா ஹாஸ்பிடல்ல சேர்த்தோம்."

"எந்த ஆஸ்பத்திரி ஸார்!"

"எதுக்கு?"

"நான் போய்ப் பார்க்கணுமே..."

"தேவையில்லை. அவங்ககூட காயத்ரி இருக்கா. அவ பார்த்துப்பா..."

"ஸார்! நான்..."

"உங்க மனைவியை நீங்க பார்க்கலாம் பாண்டியன். ஆனா... இப்போ இல்லை. உங்களை ஒரு புது மனுஷனா மாத்தி அவங்க முன்னால கொண்டு போய் நிறுத்துறேன்.

அதுவரை நான் சொன்னபடி நீங்க நடக்கணும். நடப்பீங்களா?"

"கண்டிப்பா ஸார்! என் மனைவியை உயிரோடு காப்பாத்தித் தந்த கடவுள் நீங்க... எது சொன்னாலும் கேட்கிறேன்."

"வெரிகுட் பாண்டியன்! உங்க மனைவிக்கு டெலிவரி ஆகிற வரைக்கும் அவங்க ஹாஸ்பிடல்லதான் இருப்பாங்க. டெலிவரிக்கு இன்னும் நாற்பது நாள் இருக்கு. நீங்க அதுக்குள்ள மாறியாகணும். குழந்தை பிறக்கும்போது நீங்க பொறுப்புள்ள தகப்பனா... கண்ணியமான கணவனா மாறியிருக்கணும்."

"சரி ஸார். நான் என்ன பண்ணணும்?" - பாண்டியன் ஆர்வமாய்க் கேட்க, இருவரும் புன்னகைத்தனர்.

"முதல்ல நாம ஒரு இடத்துக்குப் போகணும்..."

"எங்கே?"

"இந்தக் குடிப் பழக்கத்தைச் சுத்தமா மறக்க வைக்கக்கூடிய வைத்தியம் இருக்கு. அங்கேதான் போகப் போறோம்!" - என்றான் ஜனார்த்தனன்.

## 14

நெருங்கும்போது அகப்படாமல்
பறந்து போகிறாய்! - நிழலைப் போலத்
தொடரும் என்னை மறந்து போகிறாய்!

**கா**லையில் எழுந்து தலை குளித்துப் பட்டுப் புடவையில் வந்து நின்ற மகளைக் கண்டதும் வியப்பாய்க்



கண்களைக் கசக்கிப் பார்த்தாள், திலகவதி. இது கனவல்லவே? தன் கையைக் கிள்ளிப் பார்த்தாள். வலித்தது.

நிஜம்தான்! ஆனால் எப்படி?

நேற்று நள்ளிரவுக்கு மேல் வீடு வந்து சேர்ந்து ஜனாவின் வண்டி இல்லாததைப் பார்த்து விட்டுப் பேயாட்டம் ஆடியவள், திடீரெனப் பட்டுப் புடவை சகிதமாய் வந்து நிற்கிறாளே! இந்தச் சில மணி நேரத்தில் என்ன மாயம் நிகழ்ந்தது? அதிர்வாய் நின்ற அன்னையைத் தொட்டு அசைத்தாள் மேகலா.

"மம்மி! என்ன ஷாக்கடிச்சு நிற்கிறீங்க?"

"மேகா! என்னம்மா இது? என் கண்களை என்னால நம்ப முடியலையே!"

"மம்மி! எனக்குப் பட்டு ஸாரி எப்படி இருக்கு?"

"உனக்கென்னடி ராஜாத்தி. தேவதை மாதிரி இருக்கே...!"

"நிஜமா?"

"நிஜமாத்தான்டா. இதிலென்ன சந்தேகம்? இத்தனை நாளா டைட்டான பேண்ட் ஷார்ட்டையும் மிடியையும் அழகாத் தெரிஞ்சே. இப்போ புடவையில பேரழகாத் தெரியுற!"

"ம்..."

"ஆமான்டா!"

"அப்போ இதே டிரெஸ்ல ஜனா என்னைப் பார்த்தா அவனுக்கும் என்னைப் பிடிக்குமில்ல?" - மகளின் கேள்வியில் சற்றுத் தடுமாறிப் பின் சுதாரித்துக் கொண்டாள்.

"அவனுக்கு மட்டுமா! எல்லாருக்குமே பிடிக்கும்."

"இவ்ளோ நாளை வேஸ்ட் பண்ணிட்டேன் மம்மி. இல்லேன்னா எப்பவோ என்னோட காஸ்ட்யூமை மாத்தி... ஜனாவை உன் மருமகனா ஆக்கியிருப்பேன்."

"எப்படிடா திடீர்ன்னு இந்த மாற்றம்? ஜனா சொன்னானா?"

"இல்லை மம்மி! நானே நைட்டெல்லாம் விழிச்சிருந்து யோசிச்சேன். என்கிட்ட ஜனாவுக்கு என்ன பிடிக்காமப் போச்சுன்னு திங்க் பண்ணினேன். சரி! இந்த மாதிரி புடவை கட்டி என்னோட முரட்டுச் சுபாவத்தை மாற்றிப் பார்க்கலாமேன்னு தோணிச்சு. மிரட்டலால சாதிக்க முடியாததை மென்மையான அணுகுமுறையில சாதிக்கப் போகிறேன் மம்மி!"

"புடவையைக் கட்டியதால் மட்டும் மென்மையானவளாய் மாறிவிட முடியுமா? அதெல்லாம் இயல்பாகவே வரவேண்டுமே... சிறு வயதிலேயே வளர வேண்டுமே. உடையில் மட்டும் மாற்றம் கொண்டு வந்தால் போதுமா? நடை, பேச்சு, மரியாதை, பணிவு, அடக்கம் என எத்தனையோ இருக்கின்றதே!

இதெல்லாம் என்னவென்று தன் மகளுக்குத் தெரியுமா? இவற்றில் பாதிகூட எனக்கே வராது. தாயைப் போலத்தானே பிள்ளை. இவளுக்கு மட்டும் எங்கிருந்து பணிவும் அடக்கமும் வரும்? இதெல்லாம் நடக்கிற காரியமா?

"என்ன மம்மி எதுவுமே பேசாம நிக்கிறீங்க?"



"ம்... என் மகளை இந்தக் கோலத்தில பார்த்ததும் ஏதேதோ கற்பனை வந்திடுச்சும்மா."

"என்ன... கல்யாணக் கோலம் நினைவுல வந்திச்சா?"

"ஆமான்டா. எல்லாப் பெத்தவங்களுக்கும் இருக்கிற கற்பனைதானே! எனக்கு மட்டும் இருக்காதா?"

"டோண்ட் வொர்ரி மம்மி. உன்னோட கற்பனை சீக்கிரமே நிஜமாகப் போகுது."

"என்னடா சொல்றே?"

"சொல்றேன். முதல்ல டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாங்க."

"என்னம்மா...! எங்கேயாவது வெளியே போறோமா?"

"ம்..."

"எங்கேன்னு சொன்னா அதுக்கேத்த மாதிரி ரெடியாகுவேன்."

"ம்... கொஞ்சம் ரிச்சாவே ரெடியாகுங்க. அப்பத்தான் நல்லா இருக்கும்."

"ரிச்சாவா...! அப்படி எங்கே போறோம்?"

"சொல்றேன். உடனே ரெடியாகுங்க. கமான்...!" - மகள் உற்சாகமாய்ச் சொல்ல, தனக்கும் அந்த உற்சாகம் தொற்றிக் கொள்ள, நல்லதாய் விலை உயர்ந்த புடவையைத் தேர்ந்தெடுத்து, அதற்கேற்ற நகைகளையும் அணிந்து கொண்டு, தனது மெலிந்த கூந்தலைப் பின்னிக் கொண்டையாக்கினாள் நிவேதா.

புடவைக்கு மேட்ச்சாக ஒற்றை ரோஜாவைக் காதோரம் செருகிக் கொண்டே வெளியே வந்த தாயைக் கண்டு விசிலடித்தாள் மேகலா.

"வாவ்... மம்மி! என்னோட சிஸ்டர் மாதிரி இருக்கீங்க?"

வெட்கமாய்ப் புன்னகைத்தாள். "போம்மா! உனக்கு எப்பவும் கேலிதான்."

"பிராமிஸ்மா. இனிமே என்கூட வரும்போது இவ்வளவு மேக்-அப் வேணாம். அப்புறம் என்னை யாரும் பார்க்க மாட்டாங்க."

"ஏய்... போதும்டா... இப்பச் சொல்லு... எங்கே போறோம்?"

"வாங்க சொல்றேன்!" - என்றவள், தன் அறைக்குள் நுழைந்து பெரிதாய் இருந்த ஸ்வீட் பாக்ஸை எடுத்துக் கொண்டாள்.

"என்னடா இது?"

"மம்மி! இன்னிக்கு என்னோட பர்த்டே."

"வாட்? அதுக்கு இன்னும் சிக்ஸ் மன்த் இருக்கே...!"

"நான் சொல்றேன். இன்னிக்கு என்னோட பர்த்டே..." - மகளின் குரலில் தெரிந்த அழுத்தம் வாயடைக்கச் செய்தது.

"வாங்க! ஜனா வீட்டில போய் ஸ்வீட் கொடுத்திட்டு வருவோம்..." - இப்போது மகளின் அலங்காரத்துக்கும் கையிலிருந்த இனிப்புக்கும் பொருள் புரிந்துவிட மென்மையாய்ப் புன்னகைத்தாள்.

"ஓ! இதுதான் விஷயமா? போகலாமே....!"



"ம்... வாங்க!" - எனப் புடவையை நீவி விட்டுக் கொண்டே, முன்னே செல்ல, அவளைப் பின்தொடர்ந்தாள் திலகவதி.

"மம்மி!"

"எல்லாருக்கும் ஸ்வீட் கொடுத்திட்டு ஒரு ஸாரி கேட்டுடணும்."

"ஏன்?"

"அவங்க வீட்டு டி.வி.யை உடைச்சேனே... அதுக்கு!"

"ம்... கேட்கலாம்."

"அப்புறம் நம்ம செலவுல ஒரு டி.வி. வாங்கி வைச்சிடலாம்."

"வைச்சுடலாம்."

"கிராண்ட்டா வாங்கணும் மம்மி. எப்படியும் நான் வாழப் போற வீடு. காஸ்ட்லியான பொருள் இருந்தா நமக்குத்தானே மரியாதை."

"ஆமா..."

"அப்புறம் இன்னொரு விஷயம், மம்மி. இதை நீங்கதான் அவங்ககிட்டப் பேசணும். நான் பேசினா, அது அவ்வளவு நல்லா இருக்காது."

"என்ன பேசணும்?"

"என் கல்யாணத்தைப் பத்தி..."

"அதைத்தான் ஏற்கெனவே..."

"இல்லை, மம்மி. அது போதாது. என்னோட ஜாதகப்படி இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே கல்யாணம் பண்ணிடணும். அதுவும் ஜனாவோட ஜாதகம் மட்டும்தான் ரொம்ப அருமையா பொருந்தி இருக்குன்னு அவங்ககிட்ட சொல்லணும்."

"ஏம்மா?"

"இதுக்கு மேலயும் ஜனாவைத் தனியா விடக்கூடாது. மம்மி! அவனோட சுருக்கு என் கையில மாட்டணும். நான் ஆட்டி வைக்கிற மாதிரிதான் அவன் ஆடணும்..." - சொல்லிக் கொண்டே எதிர் வீட்டை அடைந்துவிட, வெளியே புறப்பட்டு வந்த சங்கரன் ஒரு கணம் தயங்கி நின்றார்.

பின்னர் வீட்டுக்குள் திரும்பி, "கோமதி!" - எனக் குரல் கொடுத்தார்.

"இதோ வர்றேங்க..." - என்றவாறு வெளியே வந்த கோமதி, வாசலில் நின்றவர்களைப் பார்த்து லேசாய் அதிர்ந்தாள். பேச்சின்றிக் கணவனைப் பார்த்தாள்.

"என்ன ஆன்ட்டி! வான்னு கூப்பிட மாட்டீங்களா?"

"வாம்மா... உள்ளே வா. என்னங்க... உங்களுக்கு டயமாச்சே... கிளம்புங்க."

"சரி, வர்றேன்..." - என நகர முயன்றவரைத் தடுத்தாள் மேகலா.

"அங்கிள்! ஒரு நிமிஷம்."

"என்னம்மா?"



"இன்னிக்கு என்னோட பர்த்டே. ஆசிர்வாதம் பண்ணுங்க..." - எனக் குனிந்தவளை... அவசரமாய்த் தடுத்து விலகி நின்றவாறே வாழ்த்தினார்.

"நல்லா இரும்மா!"

"ஸ்வீட் எடுத்துக்கங்க அங்கிள்!" - ஸ்வீட் பாக்ஸைத் திறந்து நீட்டினாள். உள்ளே விலை உயர்ந்த இனிப்பு வகைகள். நெய் மணத்தோடு கமகமத்தன.

"இது என்ன ஸ்வீட்மா?"

"ப்யூர் நெய் ஸ்வீட் அங்கிள். ரொம்ப டேஸ்ட்டியா இருக்கும்."

"ஸாரிம்மா. நெய் ஸ்வீட் எனக்கு ஒத்துக்காது. மத்தவங்களுக்குக் கொடும்மா. நான் வெளியே கிளம்பிட்டு இருக்கிறேன். வரட்டுமா?" - அவர் காரை நெருங்க, பிறர் அறியாமல் அன்னையை இடித்தாள் மேகலா.

சட்டென உணர்ந்து கொண்ட திலகவதி சங்கரனை நெருங்கினாள்.

"சங்கரன் ஸார்! ஒரு நிமிஷம்."

"சொல்லுங்க."

"ஒரு முக்கியமான விஷயமா உங்ககிட்ட பேசணும். நீங்களும் இருந்தா நல்லாயிருக்கும்."

"இப்பவே பேசணுமா?"

"ஆமா! உங்களைப் பார்க்கவே முடியறதில்லை. அதோட இன்னிக்கு நாளும் நல்லாயிருக்கு..." - சங்கரன் யோசனையாய் மனைவியை ஏறிட்டார். அவளது முகமும் கலவரமாய்த் தெரிய... தலையசைத்தார்.

"வாங்க... பேசலாம்!" - என வீட்டுக்குள் சங்கரன் செல்ல, உற்சாகமாய்த் தாயின் கையைப் பற்றிக் குலுக்கினாள் மேகலா. வீட்டுக்குள் நுழைந்து கோமதியிடம் ஸ்வீட் பெட்டியைக் கொடுத்தாள்.

"எல்லாமே உங்களுக்குத்தான் ஆன்ட்டி!"

"எதுக்கும்மா இவ்வளவு?"

"பரவாயில்லை, ஆன்ட்டி. இனிப்பான விஷயம் பேசும்போது இனிப்போட ஆரம்பியுங்க..." - லேசான வெட்கத்துடன் மேகலா சொல்ல... கோமதி சற்றே பயமாய்க் கணவரைப் பார்த்தாள். அவர் பார்வையாலே சமாதானம் செய்து விட்டுத் திலகவதியிடம் திரும்பினார்.

"என்ன விஷயம்... சொல்லுங்க."

"இதோ... கோமதி! நான் சொன்ன விஷயத்தை வீட்டுல சொல்லிட்டியா?"

"அது வந்து..." - கோமதி திணற, அவளை அமைதியாய் இருக்கச் சொல்லி விட்டு... தானே பேசினார் சங்கரன்.

"ம்... சொன்னாள்."

"சொல்லிட்டியா? அதைப் பத்தித்தான் பேச வந்திருக்கோம்."

"என்ன பேசணும்?"

"உங்களுக்கு என் பொண்ணைப் பிடிச்சிருக்கும்னு நினைக்கிறேன். அதனால ஒரு நல்ல நாளா பார்த்து நிச்சயம் பண்ணிட்டா, இந்த மாசத்தில கல்யாணத்தையும் வைச்சிடலாம். என் ஹஸ்பண்ட்டுக்குப் போன் பண்ணி



விஷயத்தைச் சொல்லணும். நாம இன்னிக்கே தேதி குறிச்சிட்டா வசதியா இருக்கும். அதோட..."

"வெயிட் மிஸஸ். திலகவதி! நாங்க இன்னும் எதுவுமே சொல்லலையே?"

"என்ன...?" - தாயும் மகளும் திக்கென நிமிர்ந்தனர்.

"நாங்க சம்மதம்னு சொல்வதற்குள் கல்யாணம் வரைக்கும் போயிட்டீங்களே!"

"என்ன? உங்களுக்கு இதில் சம்மதம் இல்லையா?"

"அப்படின்னு சொல்ல முடியாது. ஆனா என் பையனோட விருப்பம்தான் எங்களுக்கு முக்கியம். ஏன்னா இது அவனோட லைஃப் இல்லையா?"

"அப்படின்னா..."

"என் பிள்ளைக்கு இஷ்டம் இல்லாத எதையும் நாங்க செய்யுறதில்ல..." - அவர் பட்டெனச் சொல்லிவிட, மேகலாவிற்குக் கோபம் தலைக்கேறியது.

"அங்கிள்! இப்போ என்ன சொல்றீங்க? ஜனாவுக்கு என்னைப் பிடிக்கவில்லையா?"

"அவனுக்கு வேறு ஒரு பெண்ணைப் பிடிச்சிருக்கும்மா. அவளைத்தான் கட்டிக்கணும்னு சொல்றான்."

"என்ன? அந்தப் பொண்ணுக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆயிட்டதா சொன்னாங்களே!"

"அது ஒரு சின்ன பிராப்ளம். இப்போ அது ஸால்வ் ஆயிடுச்சு."

"என்ன... கல்யாணத்துக்கு அந்தப் பொண்ணு ஒத்துக்கிட்டாளா?" - கண்களில் கோபக்கனல் மின்ன மேகலா கேட்க... கோமதி அவசரமாய்ச் சொன்னாள்.

"அது இன்னும் சரியாத் தெரியலைம்மா!"

"பின்னே எதுக்காக என்னை ரிஜெக்ட் பண்றீங்க?"

"அந்தப் பொண்ணு ஒத்துக்கிட்டாலும் சரி... மறுத்தாலும் சரி.. அவளைத் தவிர யாரையும் கல்யாணம் பண்ண மாட்டேன்னு சொல்லிட்டான்."

"என்ன?"

"அவன் விருப்பத்துக்கு மாறா எதையும் நாங்க செய்ததில்லை. அதனால அவன் விருப்பத்துக்கே விட்டுட்டோம்."

"என்ன கோமதி இப்படிச் சொல்றே? பிள்ளைகளை அதுக விருப்பத்துக்கே விடலாமா? அப்புறம் நாம எதுக்கு இருக்கோம் வீட்டில! பெத்தவங்களுக்கு என்ன மரியாதை இருக்கு!"

"இப்போ யாருங்க பெத்தவங்க பேச்சைக் கேட்கிறாங்க. பிள்ளைகளோட பேச்சைத்தான் நாம கேட்கிறோம்..." - சங்கரன் இயல்பாய்ச் சொல்ல, சுருக்கெனத் தைத்தது. திலகவதி ஏதோ பேச வாயெடுக்க... தாயைக் கைப்பற்றித் தடுத்தாள் மேகலா.

"அங்கிள்! நேரிடையாகவே கேட்கிறேன். என்னை உங்க மருமகளா ஏத்துக்க முடியுமா... முடியாதா?"

"எங்களுக்குன்னு எந்த விருப்பமும் எதிர்பார்ப்பும் இல்லைம்மா. வாழப் போறது ஜனா... அவன் விருப்பம்தான்



எங்க விருப்பம். அவன் பார்த்து யாரைக் கைநீட்டுகிறானோ அந்தப் பெண்ணை மருமகளாக்குவது எங்க கடமை!"

"உங்க கடமை உணர்வை நான் பாராட்டுறேன். ரோட்டில போற எவளோ ஒரு பிச்சைக்காரியைக் கை காட்டினாலும் நீங்க அவளை மருமகளா ஆக்கிடுவீங்களா?"

"கண்டிப்பா... என் மகனுக்கு மனைவின்னா எங்களுக்கு மருமகதானே!"

"அப்போ அவன் யாரை விரும்பினாலும் கல்யாணம் பண்ணி வைச்சிடுவீங்க!"

"ஷ்யூர்!"

"என்னை விரும்பினா...?"

"அப்படி எதுவும் நடந்தா நாங்க மறுப்புச் சொல்ல மாட்டோம்."

"இப்போ இப்படிச் சொல்லிட்டு அப்புறமா பேச்சு மாற மாட்டீங்களே!"

"பேச்சு மாற மாட்டோம். அதோட உன்கிட்டயும் ஒண்ணு சொல்லணும்மா...."

"சொல்லுங்க!"

"கண்டிச்சோ மிரட்டியோ யாரையும் சம்மதிக்க வைக்க முடியாதும்மா. அப்படியே சம்மதிச்சாலும் அந்த வாழ்க்கை இனிக்காதும்மா..."

"உங்க அட்வைஸுக்கு நன்றி. மம்மி... போகலாம்..." - என எழுந்து கொண்டாள்.

"என்னடா எழுந்திட்டே... இன்னும் ஒரு முடிவும் தெரியலையே?"

"அதான் அவங்க முடிவை அவங்க தெளிவாச் சொல்லிட்டாங்களே!"

"மேகா! நான் பேசுறேன்ம்மா..."

"நோ... யார்கிட்டயும் கெஞ்சிப் பிச்சை வாங்க வேண்டாம். நாம எதில குறைஞ்சு போயிட்டோம். வாங்க போலாம்..." - தாயின் கைப்பற்றி வேகமாய் இழுத்துக் கொண்டு வெளியேறினாள்.

கோமதி செய்வதறியாது கணவனை ஏறிட்டாள்.

"இப்போ என்னங்க பண்றது?"

"கோமு! நாம அந்தப் பொண்ணை உடனே பார்க்கணும்."

"எந்தப் பொண்ணை?"

"அதான். பெண் கேட்டுப் போனோமே... அந்தப் பெண்ணோட பேர்கூட...!"

"காயத்ரிங்க..."

"ம்... அவளைப் பார்த்துப் பேசுவோம். அவளுக்குச் சம்மதம்னா... தாமதிக்காம கல்யாணத்தை முடிச்சிடலாம். அதுக்கப்புறம் யாராலும் எதுவும் செய்ய முடியாது."

"எனக்கென்னவோ பயமா இருக்குங்க!"

"இதுல பயப்பட என்ன இருக்கு? ஆமா... ஜனா எங்கே?"



"காலையிலேயே வெளியே போனான். எங்கேன்னு சொல்லலை...!"

"அந்தப் பொண்ணு இப்போ திவ்யா ஹாஸ்பிடல்ல தானே இருக்கா?"

"ம்... அப்படித்தான் சொன்னான்."

"நாம போய் பார்த்துப் பேசிட்டு வரலாமா?"

"ஐயோ! அவனுக்குத் தெரிஞ்சா ரொம்பக் கோபப்படுவான். இப்போ போனா இந்த நோக்கத்தோடதான் ஹெல்ப் பண்ணியிருக்காங்கன்னு நினைச்சுப்பாளாம். அவ மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்ச பிறகு அவனே நம்மளைக் கூட்டிட்டுப் போவானாம்."

"இதெல்லாம் நல்லாத்தான் யோசிக்கிறான்."

"என் புள்ளை எல்லாத்தையும் யோசித்துத்தான் செய்வான்."

"சரிம்மா. உன் பிள்ளை தங்கம்தான். அதுதான் அவனுக்கு ரொம்ப மவுசா இருக்கு. எதுக்கும் பிள்ளையை எச்சரிக்கையாய இருக்கச் சொல்."

"சரிங்க..."

"எடுக்க வேண்டிய முடிவைச் சீக்கிரமா எடுக்கச் சொல்லு. அதுதான் எல்லாருக்குமே நல்லது."

"ம்... சொல்றேங்க."

"சரி... நான் கிளம்பறேன். டயமாச்சு... வரட்டுமா?"

"ம்..." - வாசல் வரை வந்து கணவரை வழியனுப்பியவளைத் தங்கள் வீட்டில் இருந்து கொண்டு வெறித்துக் கொண்டிருந்தாள் மேகலா. அருகே நின்ற திலகவதி மகளை அழைத்தாள்.

"மேகாம்மா! அவர் கிளம்பிப் போயிட்டார். இப்ப வேணா போய்ப் பேசிப் பார்ப்போமா?"

"யார்கிட்ட?"

"அதான்... கோமதிகிட்ட!"

"வேண்டாம்மா... அதுகிட்ட பேசி எந்த பிரயோஜனமும் இருக்காது."

"வேற என்ன செய்யலாம்?"

"அதான் யோசிக்கிறேன்."

"நமக்கு இவன் வேண்டாம், மேகா! உன் ஸ்டேட்டஸுக்கு இவன் பொருத்தமா இருக்க மாட்டான். உன் டேஸ்ட் வேற. அவன் டேஸ்ட் வேற. இவன் என்ன பெரிய மன்மதனா? இவனை ஏன் வலியப் போய்க் கேட்கணும்?

நான் இப்பவே டாடிக்கு போன் பண்ணி அந்த டாக்டர் மாப்பிள்ளையைப் பேசி முடிக்கச் சொல்லி..." - என்றவளை வெறுப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன சொன்னீங்க?"

"வந்து... அப்பாகிட்ட பேசி..."

"ஆமாம்மா... பேசணும். ஆனா அப்பாகிட்ட இல்லை..."



"பின்னே?"

"பேச வேண்டிய இடத்துல போய்ப் பேசுங்க. நீங்க என்ன பேசுவீங்களோ எனக்குத் தெரியாது. ஆனா உங்க பேச்சில அவ அலறியடிச்சிட்டு ஓடணும். ஜனா இருக்கிற பக்கமே திரும்பாத தூரத்துக்கு ஓடணும்."

"மேகா! என்னம்மா சொல்றே?"

"யெஸ் மம்மி! என்னை அவனும் அவன் குடும்பமும் எப்படித் தூக்கியெறிஞ்சாங்களோ... அதைவிட மோசமா அவ அவனைத் தூக்கியெறியணும். நான் அவமானப்பட்டு வேதனையோட தனியே நிற்கிற மாதிரி அவனும் நிற்கணும். ஒருத்தரை உதாசீனப்படுத்தினா அவங்களுக்கு எப்படி வலிக்கும்னு அவன் உணரணும்.

"நான் எவ்வளவு வலியை அனுபவிக்கிறேன்னு அவனுக்குத் தெரியணும். அது உங்களால மட்டும்தான் முடியும் மம்மி!"

"நானா? நான் என்ன செய்யணும்?"

"அந்தப் பிச்சைக்காரி யாரு? இப்போ எங்கே இருக்கான்னு விசாரிங்க. நேர்ல போய் நின்னு என்ன பேசணுமோ பேசுங்க. உங்களுக்கு நானா சொல்லிக் கொடுக்கணும்? ஆனா நீங்க பேசுற ஒவ்வொரு பேச்சும் ஜனாவைக் கலங்கடிக்கணும்... புரியுதா?"

"புரியுதுடா. நீயும் கூட வாயேம்மா... நீ நினைக்கிறதை யெல்லாம் செய்திடலாம்."

"வேணாம் மம்மி. எனக்கு அவளைப் பார்க்காமலேயே அவ மேலே ரொம்ப வெறுப்பா இருக்கு

அவளைப் பார்க்க எனக்கு விருப்பமோ ஆர்வமோ இல்லை."

"ஏன்டா?"

"என் ஜனாவோட மனசைக் கவர்ந்தவங்கிறதை என்னால ஜீரணிக்கவே முடியலை மம்மி! ஒருவேளை நேர்ல பார்த்தா என்னோட வெறி அதிகமாயிடும். அதனால நீங்களே போங்க. நீங்க யாருன்னு காட்டிக்க வேண்டாம்.

"ஆனா நீங்க பேசுறதுல எந்தச் சந்தேகமும் அவளுக்கு வரக்கூடாது. நடந்திட்டிருக்கிற உண்மையான சம்பவம் மாதிரி பேசணும். ஜனாங்கிற பேரைக்கூட அவ கேட்க விரும்பக் கூடாது. அவனை விட்டு அவ ரொம்ப தூரம் ஓடிடணும். இவன் பைத்தியக்காரன் மாதிரி தனியா நிக்கணும்.

"என்னை ஒதுக்கியவனுக்கு இதுதான் தண்டனை. எப்படியும் அவன் மனசு மாறி என்னை ஏத்துக்கப் போறதில்லை. பிறகேன் அவங்க கிட்ட போய் நம்ம நிலையை விட்டு இறங்கிக் கெஞ்சணும்? அந்தப் பொண்ணு இருக்கான்னுதானே இன்னிக்கு அவர் இவ்வளவு அலட்சியமா பேசினாரு?

"நாளைக்கே அவ ஓடிட்டா அதுக்கப்புறம் இந்த அலட்சியம் வருமா? அப்படியே திணறித் திண்டாடி நிற்பாங்களே! அதை நான் பார்க்கணும். பார்த்து ரசிக்கணும். இவங்களால எனக்கு ஏற்பட்ட காயத்துக்கு அதுதான் ஒரே மருந்து. நிரந்தரமான மருந்து!" - பற்களைக் கடித்தவாறே முகமெங்கும் வன்மம் பொங்கப் பேசிய மகளைப் பார்க்கையில் திலகவதியின் அடிவயிறு கலங்கியது.



## 15

நேற்றையப் பொழுது கண்ணோடு
இன்றையப் பொழுது கையோடு
நாளையப் பொழுதும் உன்னோடு
நிழலாய் நடப்பேன் பின்னோடு!

**மா**லை நேரச் சூரியன் மெதுவாய் மறைந்து கொண்டிருக்க, மருத்துவமனை முழுக்க விளக்கு எரிய ஆரம்பித்தது. அறையில் இருந்த நர்ஸ் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். காயத்ரியை நெருங்கினாள். வார இதழை வாசித்துக் கொண்டிருந்தவள் நிமிர்ந்தாள்.

"மேடம்! நான் டியூட்டி முடிஞ்சு கிளம்பறேன். நைட் டியூட்டிக்கு வாசுகி நர்ஸ் வருவாங்க."

"சரிங்க சிஸ்டர்!"

"உங்க அக்கா தூங்கிட்டு இருக்காங்க. எழுந்ததும் இந்த டாப்லெட்டைப் போடச் சொல்லுங்க."

"சரிங்க சிஸ்டர்!"

"வரட்டுமா?"

"ம்..." - அவள் கிளம்பிச் சென்றதும் மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்து விட, ஒரு சில வினாடியிலேயே... "அம்மா... ஆஆ!" - என்ற வீறிடலோடு கண் விழித்தாள் சாவித்திரி. கையிலிருந்த புத்தகம் நழுவி விழப் பதட்டமாய் எழுந்து அக்காவை நெருங்கினாள் காயத்ரி.

"அக்கா! என்னாச்சு? ஏன் கத்தின?" - தங்கையின் குரல் கேட்ட திசையில் திரும்பிய சாவித்திரியின் முகம் வியர்த்திருந்தது. முகத்தில் பயம் தெரிந்தது.

"அக்கா... என்னக்கா! கனவு எதுவும் கண்டியா? தண்ணி தரட்டுமா?"

"கா... காயு..."

"என்னக்கா!"

"எ...ன...க்கு... வலிக்குது."

"என்ன?" - காயத்ரியின் முகம் மாறியது. அவசரமாய்ச் சாவித்திரியின் தலையை வருடி விட்டாள். கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"அக்கா! இப்போ ஏன் வலிக்குது?"

"தெ...ரியலை... ஆனா... ரொம்ப வலிக்குது..." - வலியைச் சமாளிக்க முயன்று தோற்றுவிட, வலியில் கண்களில் நீர் பெருகியது. மீண்டும் வீறிட்டாள்.

"அக்கா! ரொம்ப வலிக்குதா?"

"ம்... என்னால முடியலை..."

"பயப்படாதேக்கா... நான் போய் டாக்டரை அழைச்சிட்டு வர்றேன்."

"நர்ஸை அனுப்பு, காயு... நீ என் பக்கத்திலேயே இரு...." - வலியின் தாக்கம் முகத்தில் தெரிய, ஆதரவாய் இருந்த தங்கையின் கரங்களை இறுகப் பற்றிக் கொண்டாள் சாவித்திரி. பரிதவித்துப் போனாள் காயத்ரி.

"அக்கா! நர்ஸ் இப்பத்தான் டியூட்டி முடிச்சுப் போனாங்க. நைட் டியூட்டி நர்ஸ் இன்னும் வரலையே... ஒரே நிமிடம் பொறுக்கா. நான் போய் டாக்டரை...."



"காயு! என்னால முடியலை காயு... அம்மா....ஆ!" - சகோதரியின் துடிப்பைக் கண்டு கண்கள் தானாய்க் கலங்கின.

"ஐயோ! நான் இப்போ என்ன பண்ணுவேன்... அக்கா! கையை விடு. நான் டாக்டரைக் கூட்டிட்டு வந்திடுறேன்."

"எனக்குப் பயமாய் இருக்கு, காயு! என்னைத் தனியா விட்டுட்டுப் போயிடாதே."

"ஆண்டவனே! நான் இப்போ என்ன பண்றது? துணைக்குன்னு யாருமே இல்லையே...!" - கண்ணீரோடு கதறிய நேரம்... வாசல் கதவு மெலிதாய்த் தட்டப்பட்டது. கூடவே, ஜனார்த்தனனின் மென்குரலும்.

"உள்ளே வரலாமா?"

கடவுளே நேரில் வந்ததைப் போல் நெகிழ்ந்து போனாள்.

"ஜனா! கொஞ்சம் சீக்கிரம் வாங்களேன். கதவு திறந்துதான் இருக்கு..." - காயத்ரியின் பதட்டமான குரலில் படாரெனக் கதவைத் திறந்து உள்ளே ஓடி வந்தான்.

"காயு! என்னாச்சு? ஐயோ... இவங்க ஏன் இப்படித் துடிக்கிறாங்க?"

"எனக்கு எதுவுமே தெரியலை ஜனா! நர்ஸும் போயிட்டாங்க. கொஞ்சம் டாக்டரைக் கூட்டிட்டு வர்றீங்களா?"

"இதோ ஒன் செகண்ட்!" - என்றவன் காற்றாய் வெளியேற... காயத்ரி தன் புடவைத் தலைப்பால்

தமக்கையின் கண்ணீரைத் துடைத்தாள். கண்ணீர் நிறைந்து பார்வையை மறைத்தது. கடவுளே! இதுதான் பிரசவ வலியா? இன்னும் குழந்தை போதுமான வளர்ச்சி அடையவில்லை என்று நேற்றுதானே டாக்டர் சொன்னார்.

அப்படியென்றால் குறைப் பிரசவமாகி விடுமா? ஐயோ! அப்படிப் பிறந்தால் அது ஆபத்து என்பார்களே... குழந்தையைத் தனியே இன்குபேட்டரில் வைக்க வேண்டும் என்பார்களே..... குழந்தை ஆரோக்கியமாய்ப் பிறக்க வேண்டுமே... அம்மா! அக்காவின் வலியை நிறுத்துங்கள். உங்கள் பேரக்குழந்தை இத்தனை அவசரமாய் இந்தப் பூமிக்கு வர வேண்டாம்...

உள்ளே இருந்து பாதுகாப்பாய் வளர்ந்த பிறகு வெளியே வரட்டும். அக்காவையும் குழந்தையையும் காப்பாற்றுங்கள் அம்மா! எனக்குப் பயமாய் இருக்கிறதே... அக்கா வலியால் துடிக்கிறாளே... - கண்ணீரோடு பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது டாக்டர்களோடு உள்ளே நுழைந்தான் ஜனா.

அவசரமாய்ச் சாவித்திரியைப் பரிசோதித்த திவ்யாவின் முகம் பதட்டமானது.

"மை காட்!"

"என்னாச்சு... டாக்டர்! எதுவும் பிரச்சனையா?" - பதட்டமாய்க் கேட்டான்.

"கொஞ்சம் கிரிட்டிக்கல்தான்!"

"ஐயோ..." - பதறினாள் காயு. "டாக்டர்! என் அக்காவுக்கோ குழந்தைக்கோ எதுவும் ஆகிடக்கூடாது. ப்ளீஸ்



டாக்டர்! எனக்கு உறவுன்னு இருக்கிறது... இவ மட்டும்தான். என் அக்காவைக் காப்பாற்றுங்கள்..."

"ஹலோ! உள்ளே இருந்து அழாதீங்க. பேஷண்ட் இன்னும் பயப்படுவாங்க. ஜனா! இவங்களை வெளியே கூட்டிட்டுப் போங்க... ப்ளீஸ்!"

"காயு! வா, வெளியே நிற்கலாம்."

"நோ... நான் என் அக்காவை விட்டு எங்கேயும் வர மாட்டேன்."

"இதோ பாரும்மா... சின்னப் பொண்ணா இருக்கே.. சொன்னாப் புரிஞ்சுக்க. வெளியே போய் வெயிட் பண்ணு!"

"டாக்டர்! என் அக்காவுக்கு...?"

"ஒண்ணும் ஆகாது. வலி நிற்க இன்ஜெக்ஷன் போடணும். வெளியே போங்க."

"டாக்டர்... நான்..."

"ஜனா! ப்ளீஸ்... டயத்தை வேஸ்ட் பண்ணாதீங்க!"

"யெஸ்... டாக்டர்!" - என்றவன் காயத்ரியைத் தோளோடு அணைத்துக் கொண்டு வெளியேற, காயத்ரி கட்டிலில் கிடந்து துடித்தவளைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே வெளியேறினாள். கதவு சாத்தப்பட, மனம் தாளாமல் கதறியழ ஆரம்பித்தாள்.

"காயு! என்னம்மா இது? அழாதே ப்ளீஸ்!" - பரிவாய்க் கூறியவனின் வார்த்தையில் அழுகை அதிகரித்தது.

"எனக்குப் பயமா இருக்கு. ஜனா! அக்காவுக்கு எதுவும் ஆகிட்டா... அப்புறம் நான்..." - என்றவளின் வாயை ஒற்றை விரல் வைத்து மூடினான்.

"எப்பவுமே பாஸிட்டிவா நினைக்கணும். அவங்களுக்கு எதுவும் ஆகாது."

"இல்லை ஜனா! உங்களுக்குத் தெரியாது. டாக்டர் ஏற்கெனவே இப்படி ஆக வாய்ப்பிருக்குன்னு சொன்னாங்க. அதோட அக்காவோட கர்ப்பப் பை ரொம்ப வீக்கா இருப்பதால இப்படி எதுவும் ஆனா சில சமயம் உயிருக்கே..."

"அப்படி யெல்லாம் எதுவும் ஆகாதும்மா. அதுக்காகத்தானே சிட்டியிலயே பெஸ்ட் ஹாஸ்பிடலாப் பார்த்துச் சேர்த்திருக்கேன். நீ வேணா பாரேன். சாதாரண வலிதான். பயப்பட ஒண்ணுமில்லைன்னு டாக்டர் சொல்லப் போறாங்க."

"அக்கா பாவம், ஜனா! ஏற்கெனவே மூணு முறை ஏமாந்திருக்கிறா. அப்போ அவ பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. இந்தக் குழந்தையாவது முழுசாக் கிடைக்கணு மேன்னு தவம் பண்ணிட்டு இருக்கா..."

"நிச்சயமா குழந்தை முழு ஆரோக்கியமா நல்லபடியா பிறக்கும்."

"உங்க வாக்குப் பலிக்கணும், ஜனா! அக்காவோட ஆசை, கனவு, எதிர்காலம் எல்லாமே அந்தச் சிசுதான். அவளுக்குன்னு வேற எந்த ஆசையும் கிடையாது. அவளுக்கோ குழந்தைக்கோ எதுவும் ஆகிடக்கூடாது!" - அவனது அணைப்பில்தான் இன்னும் இருக்கிறோம் என்ற உணர்வின்றி அவள் பேசிக் கொண்டே இருக்க... புன்னகையோடு அவள் தலையை வருடினான் ஜனா.



"நீ இப்படிப் பயப்படவோ அழவோ அவசியமே இல்லை, காயு! இப்போ மெடிக்கல்ல எவ்வளவோ முன்னேற்றம் இருக்கு. அதுவும் திவ்யா ரொம்ப டேலண்ட் ஆனவங்க. எந்த ரிஸ்க்கான கேஸையும் ஈஸியா ஹேண்டில் பண்ணுவாங்க. அதனால எந்தப் பயமும் வேண்டாம்."

கதவைத் திறக்கும் ஓசை கேட்டுச் சட்டென நிமிர்ந்தாள் காயத்ரி. ஜனாவின் முகத்தில் தலை மோதிவிட அப்போது தான் தன் நிலையை உணர்ந்து பதறி விலகினாள். அவனை நிமிர்ந்து பார்க்கவே கூசியது.

நர்ஸ் ஒருத்தி வெளியேற இருவரும் விலகி நின்றனர்.

"வந்து... ஸாரி!"

"இப்ப எதுக்கு ஸாரி?"

"நான் கொஞ்சம் நெர்வஸாகிட்டேன். தெரியாம... உங்க...!"

"ஏன் டென்ஷனாகிற, காயு? இது உனக்கு உரிமையுள்ள தோள். நீ மட்டும்தான் இதில் சாய்ஞ்சுக்க முடியும்."

"ம்...!" - திடுக்கென நிமிர்ந்தாள்.

"கொஞ்ச நாள் கழிச்சு வேறு சிலரும் கூட இதற்குச் சொந்தம் கொண்டாடலாம். ஆனா அதை நான் மறுக்கவும் முடியாது."

"என்ன?"

"ஆமா! நீ எனக்கு எப்படியோ அதே மாதிரி அவங்களும்!"

"ய... யாரு அவங்க?"

"நம்ம குழந்தைங்க...." - அவன் சிரிக்காமல் சொல்ல, குப்பென முகம் சிவந்தாள்.

அவசரமாய்த் தலையைக் குனிந்து கொள்ள, அவளது முகத்தை நிமிர்த்தினான்.

"உனக்கும் நம்ம குழந்தைக்கும்தான் இந்த இடம் சொந்தம். சரியா?" - கண்களை நேராய்ப் பார்த்து அவன் கேட்க, பேச்சு வராமல் திண்டாடினாள்.

"காயு!"

"ம்...?"

"இந்த ஹாஸ்பிடல் உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ம்... எல்லா டாக்டர்ஸும் ரொம்ப அன்பா பேசுறாங்க..."

"எல்லாரையும் ஃபிரண்ட் பிடிச்சு வெச்சுக்க..."

"எதுக்கு?"

"பின்னாடி யூஸாகும்."

"எப்படி?"

"நம்மோட குழந்தையும் இங்கேதானே பொறக்கும்... அதைத்தான் சொன்னேன்."

"அச்சோ...!" - கையை உதறினாள். அவளது முகத்தில் தெரிந்த பயமும் வருத்தமும் முற்றிலும் விலகிவிட திருப்தியாய்ப் புன்னகைத்தான்.

"தேங்க்ஸ் காயு!"



"எதுக்கு?"

"உன்னோட வெட்கமும் சிரிப்பும் அழகா இருக்கு. இந்தக் கண்ணீர் மட்டும் வேண்டாம். என்னால அதைப் பார்க்க முடியலை!" - கம்மிய குரலில் அவன் சொல்ல, விழிகளை விரித்து அவனைப் பார்த்தாள். சில நொடிகள்... சில நிமிடங்கள்... சில மணித்துளிகள் என விலக்க முடியாத பார்வை.

கண்களில் அவனது பிம்பம் பதிந்து போகும் அளவுக்கு ஆழமான... அழுத்தமான பார்வை. வாய்மொழி கூறாத ஆயிரம் வார்த்தைகளை விழிகள் பேசிக் கொண்டிருந்த நேரம் மீண்டும் கதவு திறக்கப்பட்டது. டாக்டர் திவ்யாவும் அவளைத் தொடர்ந்து மற்றவர்களும் வெளியேற, பதட்டமாய் அவர்களை நெருங்கினான் ஜனா.

"டாக்டர்! பிரச்சனை எதுவுமில்லையே?"

"நோ பிராப்ளம் ஜனா. குழந்தை பொஸிஷன் மாறினதுல கொஞ்சம் வலி வந்திருக்கு. இந்தப் பொண்ணு ரொம்ப வீக்கா இருக்கிறதால வலி தாங்கிக்க முடியலை. அதோட ரொம்ப பயப்படுறாங்க..."

"அவளோட பயத்துக்குக் காரணம் இருக்கு. டாக்டர். ஏற்கெனவே மூணு முறை அபார்ஷன் ஆகியிருக்கு. அதான்..." - என்ற காயத்ரியை ஏறிட்டாள் திவ்யா.

"ஏம்மா! உங்க அம்மாவைக் கூட்டிட்டு வரலாமில்ல... எத்தனை வயசான பிள்ளைகளா இருந்தாலும் இந்த மாதிரி நேரத்தில பொண்ணுங்க அம்மாவைத்தான் தேடுவாங்க. அம்மா பக்கத்தில இருந்தா வலியோ பயமோ தெரியாது."

"ஸாரி டாக்டர்! எங்களுக்கு அந்தக் கொடுப்பினை இல்லை..." - மீண்டும் கண்கள் கசிந்தன.

"என்னம்மா சொல்றே?"

"டாக்டர்! இவங்க பேரண்ட்ஸ் இப்போ உயிரோட இல்லை."

"ஓ...! ஐயாம் ஸோ ஸாரி."

"இட்ஸ் ஓ.கே. டாக்டர்."

"சரி... வீட்ல யாரும் பெரியவங்க இல்லையா?"

"இருக்காங்க டாக்டர். எங்க அத்தை!"

"அவங்களையாவது கூட்டிட்டு வரலாமில்ல... துணையா இருக்கும்."

"ச... சரிங்க டாக்டர்!"

"ஓ.கே. ஜனா! இதுல எழுதியிருக்கிற மருந்தெல்லாம் வாங்கிட்டு வந்து நர்ஸ்கிட்ட கொடுத்திடுங்க. இந்த மூனு ஊசியும் இன்னிக்கே போடணும்."

"சரிங்க டாக்டர்!"

"அப்புறம் பேஷண்ட் கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடுக்கட்டும். யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்."

"யெஸ் டாக்டர்!"

"இதோ பாரும்மா... நீங்க நாளைக்குக் காலையில பெரியவங்களை அழைச்சிட்டு வாங்க. டெலிவரி டைம்ல எப்படியும் ஒரு பெரியவங்க கூட இருக்கணும்."

"சரிங்க டாக்டர்!" - சொல்லும்போதே குரல் உள்ளே போயிற்று.



திவ்யா விலகிவிட, யோசனையாய் நின்றவளை அசைத்தான் ஜனா.

"என்னாச்சு காயு?"

"ம்... ஒண்ணுமில்லை. அத்தையைக் கூப்பிட்டு வர்றதைப் பத்தி யோசிக்கிறேன்."

"ஏன்?"

"அக்கா மயங்கிக் கிடந்தப்பக்கூட நானும் மாமாவும்தான் ஹாஸ்பிடலுக்குத் தூக்கிட்டு வந்தோம். என் அத்தை வரவே இல்லை. இப்போ ரெண்டு நாளா வீட்டுப் பக்கமே நான் போகலை. இதுல என் மேல ரொம்ப கோபமா இருப்பாங்க. நான் போய்க் கூப்பிட்டா வருவாங்களான்னு யோசனையா இருக்கு."

"இதுல யோசிக்க என்ன இருக்கு? சாவித்திரி உனக்கு மட்டும் அக்கா இல்லை. அவங்களுக்கும் மருமகள். பொறக்கப் போறது அவங்க பேரக் குழந்தை. அது மேல அவங்களுக்கும் அக்கறை இருக்கணுமே..."

"இருந்தால் சந்தோஷம்தான்."

"நீ நாளைக்கு வீட்டுக்குப் போ. டாக்டர் சொன்னதைச் சொல்லு. விருப்பம் இருந்தா வரட்டும். அப்படி வரலைன்னா நான் எங்க அம்மாவைக் கூட்டிட்டு வர்றேன்."

"உங்க அம்மாவையா?"

"ம்... அவங்களுக்குப் பெண் குழந்தை இல்லையேன்னு ரொம்ப வருத்தம், காயு! உங்க அக்காவைத் தன் பெண்ணா நினைச்சுப்பாங்க..." - என்றவனை நன்றியோடு பார்த்தாள்.

"ஜனா! இது... இதெல்லாம் எப்படி?"

"என்ன எப்படி?"

"நாங்க கேட்காமலே இப்படி ஓடி ஓடி உதவி செய்யுறீங்களே... நாங்க உங்களுக்கு ரொம்பக் கடன் பட்டிருக்கோம் ஜனா!"

"சேச்சே...! இப்படியெல்லாம் பேசக் கூடாது."

"இல்லை ஜனா! நான்...?"

"நோ... நான் இங்கே நின்னா நீ திரும்பவும் அழ ஆரம்பிச்சிடுவ. வேண்டாம்மா... நான் கிளம்புறேன்."

"எங்கே?"

"மருந்து வாங்கத்தான். இதோ லிஸ்ட் கொடுத்திருக் காங்களே... வரட்டுமா?"

"ம்... அப்புறம் ஜனா...!"

"சொல்லு."

"இந்த மெடிஸன் செலவை யெல்லாம் குறிச்சு வைச்சுக்கங்க."

ஜனார்த்தனனின் முகம் மாறியது. "எதுக்கு?"

"என்ன ஜனா இப்படிக் கேட்கிறீங்க. இதுக்கான செலவையெல்லாம் நாங்க திருப்பித் தர வேண்டாமா? மாமாதான் வேலைக்குப் போகப் போறாங்கள்ல. கொஞ்சம் கொஞ்சமா திருப்பித் தந்திடுவாங்க."

"என்னைப் பார்த்தா உனக்குக் கந்து வட்டிக்காரன் மாதிரி தெரியுதா?" - ஜனாவின் கோபமான குரலில் திகைத்தாள்.



"ஜனா!"

"பேசாதே... என்னைக் கடன்காரனாத்தான் நினைச் சிட்டு இருக்கே... இல்லே?"

"ஐயோ! அப்படியெல்லாம் இல்லை."

"பின்னே... இப்போ என்ன சொன்ன?"

"ஸாரி! நான் அந்த அர்த்தத்தில சொல்லலை. மாமாவுக்கும் பொறுப்பு வரணும் இல்லையா! அதான்..."

"அதெல்லாம் தானா வரும். இனிமே இந்த மாதிரி யெல்லாம் பேசினா நான் இங்கே வர மாட்டேன்..." - அவனது பேச்சில் துணுக்குற்றாள். சட்டெனக் கண்கள் கலங்கின.

"என்ன... கஷ்டமா இருக்கா?"

"ம்..."

"நான் பேசினது கஷ்டமா இருக்கா?"

"ம்..." - தலையாட்டினாள்.

"நீ பேசும்போது எனக்கும் இப்படித்தான் இருந்தது."

"ஸாரி!"

"வேண்டாம். இனிமே இப்படி ஸாரி கேட்கிற மாதிரி நடந்துக்காதே..." - என்றவன் அவளது அதிர்ந்த முகத்தைப் பார்த்து இளகினான். அவளை நெருங்கித் தலை மீது கை வைத்து லேசாய் அழுத்தினான்.

"இதோ பார் காயு! இப்ப மட்டுமில்ல... எப்பவுமே உன் மேல கோபமே படக்கூடாது என்று நினைக்கிறேன். அது

உன் கையிலதான் இருக்கு." உதடு கடித்து மௌனமாய் நின்றாள்.

புன்னகையோடு தொடர்ந்தான். "இப்படிப் பிரிச்சிப் பேசினா கோபம் வருமா... வராதா?"

"அதுக்காக இப்படியா பேசுவீங்க?" - உதட்டைப் பிதுக்கியவாறே கேட்டவளைப் பார்த்துச் சிரித்தான்.

"நீ மட்டும் அப்படிப் பேசலாமா? நான் என்ன உன் கிட்ட கடனா கொடுக்கிறேன்! இது வெறும் உதவி, காயு... மனிதாபிமானத்தோட செய்யுற உதவி. இதுல கிடைக்கிற நிறைவு திருப்தி வேற எதுலயும் கிடைக்காது. அதோட உன் மேலயும் உன் குடும்பம் மேலயும் நான் காட்டுற அக்கறை இது.

"இதைப் போய் நீ வியாபாரம் மாதிரி பேசலாமா... தப்புதானே! அதைத் தப்புன்னு சொல்லத்தான் இந்தப் பொய்க் கோபம். இனிமே இப்படிப் பேசுவியா?"

"ம்ஹூம்..."

"அதைச் சிரிச்சிட்டே கூடச் சொல்லலாமே..." - என்றதும் புன்னகைத்தாள்.

"ம்... இது அழகு. இதை விட்டுட்டு கண்ணில தண்ணியைக் காட்டலாமா? சரி... நீ ரூம்ல போய் உட்கார். நான் போய் மருந்து வாங்கிட்டு வர்றேன்."

"ம்..."

"நைட்டுக்கு வேற எதுவும் வேணுமா?"

"இல்லை... வேற ஒண்ணும் வேண்டாம்."

"சரி... வரட்டுமா?"



"மருந்து வாங்கினதும் கிளம்பிடுவீங்களா?"

"போக வேண்டாமா?"

"போகணும்தான்..."

"அப்போ உன்கூடவே இருந்திடவா?"

"ம்... ம்ஹூம்...."

"இருக்கணுமா... வேண்டாமா?"

"ஐயோ! முதல்ல மருந்தை வாங்கிட்டு வாங்க. நான் போறேன்..." - எனக் கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் சென்றுவிட, சின்னச் சிரிப்போடு நகர்ந்தவனை ஹாலில் அமர்ந்திருந்த அனிதா நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்ட காட்சியைக் கிரஹித்துக் கொள்ள முடியாமல் அதிர்ந்து போயிருந்தாள்.

மேகலாவின் நினைவு வந்தது. அவளது கனவை அறிந்தவளாயிற்றே... மனம் தாளாமல் தனது செல் போனைக் கையில் எடுத்தாள். சில கணத் தயக்கத்திற்குப் பின் மேகலாவின் எண்களை அழுத்திவிட்டுக் காதில் வைத்தாள்.

## 16

வாசப் பொன் மலராய் - ஒளி
வீசும் வெண்ணிலவாய்
ஆசைக் காவியமாய் - விழி
பேசும் ஓவியமாய் மகனும்
வருவான் விழியே நீ கலங்காதே!

ஆரஞ்சுப் பழத்தைப் பிழிந்து அளவாய்ச் சர்க்கரை இட்டுக் கலந்து சாவித்திரியிடம் நீட்டினாள் காயத்ரி. டி.வி.யில் காமெடி சீனைப் பார்த்து மெலிதாய்ச் சிரித்துக் கொண்டிருந்தாள் சாவித்திரி.

"அக்கா! இந்த ஜூஸைக் குடிச்சிட்டு சிரி..."

"இப்பத்தானேடி சாப்பிட்டேன்!"

"சாப்பிட்டு இரண்டு மணி நேரமாச்சு. பேசாம குடி."

"வர வர நீ கூட என்னை அதிகாரம் பண்ண ஆரம்பிச்சுட்டே..." - சலிப்போடு வாங்கிக் குடிக்க ஆரம்பித்தாள் சாவித்திரி.

"அக்கா! நீ இப்படி கரெக்ட்டா சாப்பிட்டாத்தானே குழந்தை முழுமையா வளர்ந்து சுகமா பிறக்கும். அதுக்குத் தானே நாம இத்தனை பாடுபடுறோம்."

"சரிடி! சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்."

"அக்கா! இன்னியோட நாலு நாளாச்சு... நாம இங்கே வந்ததுல இருந்து இன்னும் வீட்டுக்கே போகலை."

"ஆமான்டி... அத்தை இந்நேரத்துக்கு என்னென்ன ரகளை பண்ணிட்டு இருக்காங்களோ?"

"அக்கா! நான் இன்னிக்கு வீட்டுக்குப் போயிட்டு வரட்டுமா?"

"தனியாவா போற? அத்தை கோபமா இருப் பாங்களே...!"

"அவங்க கோபம் என்ன புதுசா? உன் டிரெஸ்ஸையும் என் டிரெஸ்ஸையுமா மாத்தி மாத்தி எத்தனை நாள்



போடுறது... வீட்டில போய்த் துணிமணி, சோப்பு, பவுடர் எல்லாம் எடுத்திட்டு வர்றேன்."

"ம்..."

"அப்படி அத்தைக்கு இந்த ஆஸ்பத்திரிக்கு வர்ற வழியையும் சொல்லிட்டு வர்றேன். இஷ்டம் இருந்தா வந்து பார்த்திட்டுப் போகட்டும்."

"காயு! ஒருவேளை பழைய ஹாஸ்பிடல்ல போய்த் தேடியிருப்பாங்களோ... நாம சொல்லிக்காம வந்தது தப்போ?"

"சும்மா இருக்கா... நாம என்ன ஊரைச் சுற்றிப் பார்க்கவா வந்திருக்கோம்? உண்மையாகவே அவங் களுக்கு அக்கறை இருந்தா தேடிப் பிடிச்சுப் பார்க்க வந்திருக்க மாட்டாங்களா?"

"காயு! மாமா கூட வரலை பாரேன்..."

"வருவாரு... ஜனா கூட்டிட்டு வர்றேன்னு சொன்னார்."

"எப்போ?"

"நேத்து ஈவினிங் வந்தார். உனக்கு செக்-அப் நடந்திட்டு இருந்ததால வெளியே நின்னு பேசிட்டுக் கிளம் பிட்டார்."

"மாமா ஏன் வரலையாம்... கேட்டியா?"

"அக்கா... இவரும் கணேஷும் சேர்ந்து பெரிய பெரிய வேலையெல்லாம் செய்யுறாங்களாம்."

"என்ன வேலை?"

"அது... நம்ம மாமாவை..." - எனக் காயத்ரி தொடங்க... கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. சாவித்திரி தன் கையிலிருந்த ரிமோட்டால் டி.வி.யை ஆஃப் பண்ண... காயத்ரி எழுந்து கதவருகே வந்தாள்.

"யாருங்க?"

"நான்தான் ஜனா!" - பதில் வந்ததும் அவசரமாய்த் திறந்தாள்.

"வாங்க... வாங்க...!"

"வாங்க தம்பி!" - படுக்கையில் எழுந்து அமர்ந்தாள் சாவித்திரி.

"ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க. படுத்துக்கங்க..."

"இல்லை... பரவாயில்லை."

"சாப்பிட்டீங்களா?"

"ம்... சாப்பிட்டாச்சு... இப்பத்தான் ஜுஸ் குடிச்சேன்."

"வெரிகுட்! அப்புறம் உங்ககிட்ட ஒண்ணு சொல்லணுமே!"

"சொல்லுங்க."

"உங்க கணவர் இப்போ என்கூடத்தான் இருக்கார். வேலையும் கிடைச்சிடுச்சு. அதோட மூணு நாளா அவர் லிக்கரைத் தொடவே இல்லை..." - மென்மையான குரலில் ஜனார்த்தனன் சொல்ல, இருவரின் முகமும் மலர்ந்தது.

"எ... என்ன சொல்றீங்க?"

"பாண்டியன் அடிப்படையில் ரொம்ப நல்லவர்தான். உங்க மேல நிறையப் பிரியம் வெச்சிருக்கார். அவர்கிட்ட



உள்ள ஒரே மைனஸ் அவரோட குடிப்பழக்கம்தான். இப்போ அதை நிறுத்தத்தான் தீவிரமான முயற்சியில இறங்கியிருக்கோம்."

"என்ன முயற்சி?"

"தினமும் காலையில ஒரு மணி நேரம் மெடிக்கல் சென்ட்டருக்கு... அதாவது குடிப் பழக்கத்தை நிறுத்த ட்ரீட்மெண்ட் எடுக்கிறார். யோகா பண்றார். இப்படியே தொடர்ந்து செய்தா குடிப் பழக்கத்தைச் சுத்தமா வெறுத்திடுவார்."

"என்ன?" - சாவித்திரியின் முகம் பிரகாசித்தது.

"ஆமாங்க. அவரோட நிலையில நல்ல முன்னேற்றம் அடைஞ்ச பிறகுதான் உங்ககிட்ட கூட்டிட்டு வரணும்னு இருக்கேன். உங்களுக்கு இதுல எதுவும் வருத்தம் இருக்கா?"

"ஐயோ! என்ன இப்படிக் கேட்கிறீங்க? அவர் அந்தப் பழக்கத்தை விடணும்னுதானே நான் தவமிருக்கேன். அந்தக் கடவுளே நேர்ல வந்த மாதிரி எங்களுக்கு எவ்வளவோ உதவி செய்யுறீங்க. இதுக்கெல்லாம் நான்... நாங்க எந்தப் பிரதிபலன் செய்யப் போறோம்?"

"மன்னிக்கணும். நான் எதையும் எதிர்பார்த்து இதையெல்லாம் செய்யலை. ஆனா இதுக்கு முன்னால உங்க வீட்ல வந்து கேட்டேனே... அதுல எந்த மாற்றமும் இல்லை."

"என்ன சொல்றீங்க?"

"நான் உங்க தங்கையை மனைவியா ஏத்துக்க ஆசைப்படுறேன். உங்க எல்லாருக்கும் சம்மதம்னா

காயத்ரியை மட்டும் எனக்குக் கொடுத்திடுங்க. வேறு எதுவும் வேண்டாம்."

சாவித்திரி யோசனையாய்த் தங்கையின் புறம் திரும்ப, அவள் தலை குனிந்து நின்றிருந்தாள். அத்தையின் பேச்சுக்கள் நினைவு வர, லேசாய் வியர்த்தது.

"தம்பி! வந்து..."

"சும்மா ஜனான்னே கூப்பிடுங்க..."

"ஜனா! என் தங்கைகிட்ட நான் இதைப்பத்தி இன்னும் பேசலை. ஆனா எனக்கு இதில முழுச் சம்மதம். என் தங்கையை உங்களைவிட நல்லபடியா யாரும் பார்த்துக்க முடியாது. ஆனா..." - அவளது தயக்கத்தில் காயத்ரியும் நிமிர்ந்தாள்.

"என்ன தயக்கம்? சும்மா சொல்லுங்க..."

"இல்லை... எங்க அத்தை மனசுல... வேற எண்ணம் இருக்கு... அதான்!"

"வேற எண்ணம்னா?"

"அவங்க பொண்ணுக்கு உங்களைக் கேட்கலாம்னு இருக்காங்க. அதுக்குத் தடையா இருப்பான்னுதான் என் தங்கையை இரண்டாம் தாரமா கட்டிக் கொடுக்கவே முடிவு பண்ணிட்டாங்க. இந்த நேரத்தில... எப்படி?"

"ஏங்க! என் மனசில காயத்ரி இருக்கான்னு அந்த அம்மாகிட்ட தெளிவாச் சொல்லித்தானே பெண் கேட்டேன். இவளை மனசுல வெச்சிட்டு அவங்க பெண்ணை எப்படிங்க கட்டிக்க முடியும்? இது வாழ்க்கை... விளையாட்டு இல்லை..."



"நீங்க சொல்றது சரிதான் ஜனா! ஆனா அவங்க அப்படி நினைக்கலையே!"

"அவங்க நினைப்பது இருக்கட்டும். உங்க தங்கை மனசுல என்ன இருக்குன்னு எனக்குத் தெரியணும். கேட்டுச் சொல்லுங்க அண்ணி!"

"என்ன... அ... அண்ணியா!" - வியப்பாய் அவனைப் பார்த்தாள்.

"அப்படிக் கூப்பிடலாமா? உறவுமுறை சொல்லிக் கூப்பிட்டாத்தான் உறவு நீடிக்குமாம். எங்க அம்மா சொல்வாங்க."

"ஓ! தாராளமாக் கூப்பிடலாம்..." - புன்னகைத்தாள் சாவித்திரி.

"அண்ணி! காயு மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சாத்தானே நான் மேற்கொண்டு ஸ்டெப் எடுக்க முடியும்? கேளுங்க அண்ணி!"

"நான் என்ன கேட்கிறது! இதோ பக்கத்திலதானே நிற்கிறாள். நீங்களே கேளுங்க...."

"தேங்க்யூ அண்ணி! காயு... உன் மனசில என்ன இருக்கு? எதுவா இருந்தாலும் தயங்காம சொல்லு."

"இப்படிக் கேட்டா... எப்படி?"

"வேற எப்படிக் கேட்கணும்? நீயே சொல்லேன்."

"அது... வந்து..." - தடுமாறினாள்.

"ஓ.கே. நானே கேட்கிறேன். காயு! என்னைப் பிடிச்சிருக்கா? கல்யாணம் பண்ணிக்கிறியா?" - என அவன் சற்றுச் சத்தமாகவே கேட்க, பதறினாள்.

"அச்சோ! ஏன் இப்படிக் கத்துறீங்க?"

"உடனே பதில் சொல்லு. இல்லை... இன்னும் கத்துவேன்."

"என்ன சொல்லணும்?"

"எப்போ கல்யாணத்தை வைச்சுக்கலாம்னு கேளு!"

"ம்ஹூம்..."

"ஏன்?"

"அக்காவுக்குக் குழந்தை பிறகுதான் கல்யாணம். அது வரைக்கும் சும்மா தொந்தரவு பண்ணாம இருக்கணும்...." - என்றாள் உத்தரவாய்.

"காயு! நீ என்ன சொல்றே?"

"புரியலையா, ஜனா! கல்யாணத்துக்கு ஓ.கே. சொல்லிட்டா..." - சாவித்திரி குறும்பாய்ச் சொல்ல, குபீரென மலர்ந்து சிரித்தான்.

"ரியல்லி! ஹய்யோ... என் காதுல சரியா விழலியே... ப்ளீஸ் காயு! எனக்காக ஒரே ஒரு வாட்டி திருப்பிச் சொல்லேன்..."

"ம்ஹூம்..." - தலையாட்டி மறுத்தாள்.

"ப்ளீஸ்... ப்ளீஸ்... சொல்லும்மா... ப்ளீஸ்ம்மா!"

"அக்காவுக்குக் குழந்தை பிறந்த பிறகுதான் நம்ம கல்யாணம்..." - என அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னாள்.

இரு கரங்களையும் தன் நெஞ்சின் மீது வைத்துக் கொண்டு கண்மூடிப் பெருமூச்சுடன் சிரித்தான்.



"போதும்ப்பா... இதுவே போதும். எனக்கு இப்பவே கல்யாணமாகிட்ட மாதிரி ஒரு நிறைவு. தேங்க் யூ அண்ணி! தேங்க்ஸ் காயு!"

"நாங்கதான் உங்களுக்கு நன்றி சொல்லணும் ஜனா. எங்களுக்குன்னு என்ன இருக்கு? சொத்து, சுகம்னு எதுவுமே இல்லையே!"

"மனசுக்குப் பிடிச்ச பெண்ணோட வாழுறதுதான் அண்ணி சொர்க்கம். அந்த வாழ்க்கைதான் உண்மையான சொத்து சுகம். அதுதான் நிரந்தரம்."

"ஜனா! மாமாவுக்கு வேலை எங்கே கிடைச்சது? என்ன வேலை?"

"நம்ம கணேஷோட ஜவுளி ஷோரூம்லதான் வேலை. என்னென்ன பொருட்கள் தேவையோ அதையெல்லாம் குறிப்பெடுத்துட்டு சூரத்ல போய் கொள்முதல் பண்ணிட்டு வரணும். பாண்டியன் டெம்போவில போயிட்டு வந்திடுறேன்னு சொல்லியிருக்கார்."

"மாமாவுக்கு வேலை பிடிச்சிருக்கா?"

"ரொம்ப ஆர்வமா செய்யுறார், காயு! நான்கூடத் தயங்கினேன். ஆனா அவர் உடனே ஒத்துக்கிட்டார்."

"ரொம்ப சந்தோஷமா இருக்கு, ஜனா!"

"அண்ணி! நீங்க என்னைத் தப்பா எடுத்துக்கக் கூடாது."

"நானா... உங்களையா!"

"ஆமா, அண்ணி. நான் என்னோடயே ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்து வெச்சுக்கலாம். ஆனா அதுல எனக்குக் கொஞ்சம் தயக்கம்."

"ஏன்? குடிச்சிட்டு வந்து கலாட்டா பண்ணு வாரோன்னு...?"

"சேச்சே...! அப்படியெல்லாம் இல்லை. எப்படி இருந்தாலும் நான் அவருக்குச் சகலையாகப் போறேன். சொந்தத்துக்குள்ளேயே ஒருத்தர் ஓனராகவும் ஒருத்தர் சம்பளத்துக்கும் நிற்கும்போது அவரோட மனசு கஷ்டப் படுமில்லையா! அதான் கணேஷ்கிட்ட சொல்லி இந்த வேலையை வாங்கிக் கொடுத்தேன்.

"அண்ணி! அவர் மட்டும் இந்த வேலையை நல்லா கத்துக்கட்டும். பழைய வழிக்குத் திரும்பாம நல்லபடியா உழைக்கட்டும். கொஞ்ச நாள் கழிச்சு நானே பஜார்ல ஏதாவது ஒரு கடை பார்த்து ரெடி பண்ணித் தந்திடுறேன். அப்புறம் அவர்தான் முதலாளி. என்ன சொல்றீங்க?"

கண்கள் பனிக்கப் புன்னகைத்தாள் சாவித்திரி. "ஜனா! எனக்குப் பெரிய ஆசையெல்லாம் கிடையாது. அவர் எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாம ஒழுங்கா வேலைக்குப் போயிட்டு வந்தாலே போதும் எனக்கு. என் மேல எப்பவும் இதே அன்போட இருந்தாப் போதும்.

"மத்தப்படி நிறையச் சம்பாதிக்கணும்... நகை நட்டு செய்து தரணும்னு நான் எப்பவுமே எதிர்பார்க்கலை... அவர் ஆரோக்கியமா நீண்ட ஆயுளோட என் கூட வாழ்ந்தா போதும்."

"அண்ணி! அசத்திட்டீங்க. உங்களை மாதிரி ஒவ்வொரு ஆணுக்கும் மனைவி அமைஞ்சா போதும். கணவன் மனைவிக்குள்ள விரிசலே ஏற்படாது. ஐயாம் பிரெளட் ஆஃப் யூ!"



"காயத்ரியும் என்னை மாதிரிதான். எதுக்கும் ஆசைப் படமாட்டா...!"

"அதான் பார்த்தாலே தெரியுதே... நான் அதிர்ஷ்டசாலி அண்ணி."

"ஹச்...!" - எனப் போலியாய்த் தும்மினாள் காயத்ரி.

"என்னாச்சு காயு?"

"ஏற்கெனவே ஏ.சி. ரூம். இதுல நீங்க வேறே கிலோ கணக்கில ஐஸ் வைக்கிறீங்களே... தும்மல் மட்டுமா வரும்! இருமல், ஜுரம்... அப்புறம்..."

"வேணாம்... போதும். வேற எதுவும் வரவேண்டாம். நான் கிளம்புறேன்..." - எனப் புன்னகையோடு நகர முயன்றவன்... நின்றான்.

"அண்ணி! எங்க அம்மாவும் அப்பாவும் உங்க ரெண்டு பேரையும் பார்க்க ஆசைப்படுறாங்க. அழைச்சிட்டு வரலாமா?"

"இது என்ன கேள்வி? தாராளமா அழைச்சிட்டு வாங்க. நானும் அவங்களைப் பார்க்கணும்னுதான் நினைச் சிட்டு இருந்தேன். ஹாஸ்பிடலை விட்டு வெளியே வர முடியலையே...!"

"அப்போ கூட்டிட்டு வரவா?"

"கண்டிப்பாக் கூட்டிட்டு வாங்க."

"ஓ.கே. அண்ணி! டயம் கிடைக்கும்போது வர்றோம். வரட்டுமா?" - சின்னப் புன்னகையோடு காயத்ரியிடம் கண்ணால் விடை பெற்றுக் கொண்டு அவன் வெளியேற,

நாணத்தால் சிவந்த முகத்தோடு நின்றவளை நெருங்கினாள் சாவித்திரி.

"என் ராஜாத்தி! நீ கொடுத்து வைச்சவடி... எவ்வளவு தங்கமான பிள்ளை உனக்குப் புருஷனா கிடைச்சிருக்கான். என் கண்ணே பட்டுடும்!" - எனத் தங்கைக்குத் திருஷ்டி கழித்தாள்.

"என்னக்கா நீ?"

"நிஜமாத்தான்டி சொல்றேன். நம்ம அம்மாவும் அப்பாவும் உயிரோடு இருந்து வலை போட்டுத் தேடினாலும் இப்படி ஒரு மாப்பிள்ளை கிடைக்காது. நம்ம பட்ட கஷ்டம் எல்லாம் தீரப் போகுது. காயு! இனிமே நமக்கு நல்ல காலம்தான்."

"உண்மைதான்க்கா... மாமா மறுபடியும் வேலைக்குப் போக ஆரம்பிச்சதே நல்ல காலம்தான். இனிமே உனக்கு ஒரு குறையும் வராது. உன் குழந்தை பிறக்கும் நேரம் நீ சந்தோஷமா வாழப் போற."

"நீ மட்டும் என்னவாம்? பெரிய வீட்டு மருமகளாகப் போறே... உன் மாமியார் உன்னைப் பார்க்கணும்னு சொன்னாங்களாமே... காயு! நீ வீட்டுக்குப் போய் நல்லதா நாலு துணி எடுத்திட்டு வா."

"ஏன்க்கா?"

"இது என்னடி கேள்வி? உன் மாமியார் உன்னைப் பார்க்கத்தான் வர்றாங்க. அவங்க வரும்போது நீ பளிச்சுன்னு இருக்க வேண்டாமா? போ... போய் டிரெஸ் எடுத்திட்டு அப்படியே அத்தைகிட்ட நாம இங்கே இருக்கிற விஷயத்தையும் சொல்லிட்டு வந்திடு."



"சரிக்கா... நீ இங்கே தனியா இருந்துப்பியா?"

"அதான் நர்ஸ் இருக்காங்களே... நீ கிளம்பு. பஸ்ஸுக்குச் சில்லறை இருக்கா?"

"இருக்குக்கா... நீ பத்திரமா இரு. நான் போயிட்டு வர்றேன்..." - என வாசலை நோக்கிச் செல்ல, கதவு தட்டப் பட்டது.

"அக்கா! நர்ஸ் வர்றாங்க போலிருக்கு. நான் செக்-அப் முடிஞ்சதும் போகட்டுமா?"

"இல்லைடி. நீ கிளம்பு. வீட்டுக்குப் போயிட்டுத் திரும்பி வர லேட்டாகிடும். இருட்டும் முன் வந்திடு... என்ன...?"

"சரிக்கா..." - என்றபோது மீண்டும் கதவு தட்டப்பட்டது.

"யாரது? கதவு திறந்துதான் இருக்கு. வாங்க..." - இருவரும் கதவையே பார்த்துக் கொண்டிருக்க, கதவைத் திறந்து நர்ஸ் எட்டிப் பார்த்தாள்.

"காயத்ரி யாருங்க?"

"நான்தான்..."

"உங்களைப் பார்க்க ஒரு அம்மா வந்திருக்காங்க..."

"யாரு?"

"பேர் சொல்லலை... ரிசப்ஷன்ல வெயிட் பண்றாங்க."

"ரூமுக்கு வரச் சொல்லுங்க சிஸ்டர்!"

"சொன்னேன். அவங்க உங்களைக் கார்டனுக்கு வரச் சொல்றாங்க. ஏதோ பேசணுமாம்."

"கார்டனா? அது எங்கே இருக்கு?"

"முன்பக்கத் தோட்டத்தைத்தான் சொல்றாங்க. போய்ப் பாருங்க..." - என அவள் சென்றுவிட, குழப்பமாய்த் தமக்கையை ஏறிட்டாள்.

"அக்கா! அது யாராய் இருக்கும்?"

"வேறு யார்? உன் மாமியாராய்த்தான் இருக்கும். போ... பார்த்திட்டு வா."

"அவங்க ஏன் இங்கே வராம என்னை வெளியே கூப்பிடுறாங்க?"

"ஏய்! உன்கிட்ட பேசணும்னு சொல்றாங்களாம். போ... போய்ப் பேசு. வயசானவங்களைக் காக்க வைக்காதே. சிரிச்ச முகமா பேசு.... என்ன.... உன்னைப் பார்த்ததும் அவங்களுக்குப் பிடிச்சிடணும்..." - சாவித்திரி உற்சாக மாகவே சொல்லி அனுப்ப... தலையாட்டி விட்டு வெளியேறி னாள் காயத்ரி. மனம் ஏனோ வேகமாய் அடித்துக் கொண்டது.

## 17

சோலைக்கிளியே ஏன் சோகம்
மாலை கைமாறுமோ - புயலில்
மரமெல்லாம் ஆடும்போது
பெண்மை போராடுமோ?

பச்சைப் பசேலென்று இருபுறமும் பசுமையாய் அளவாய் வெட்டப்பட்டிருந்த புற்களின் நடுவே போடப் பட்டிருந்த சிமெண்ட் தரையில் தயக்கமாய் நடந்து வந்தாள்



காயத்ரி. பாதையோரமாய் வரிசையாய்ப் பூந்தொட்டியில் விதவிதமான மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கின.

புற்களின் நடுவே ஆங்காங்கே சில சிமெண்ட் இருக்கைகள் போடப்பட்டிருக்க, நடுவே சின்னதாய்ச் செயற்கை நீரூற்று. அதில் பெரிது பெரிதாய் ஆரஞ்சு நிற மீன்கள் ஓடிக் கொண்டிருந்தன.

இது என்ன ஹாஸ்பிடலா... பார்க்கா? வியப்பாய் விழிகளைச் சுழற்றியவளின் கண்களில் தூரத்தில் நின்ற பெண்மணி தெரிந்தார். விலை உயர்ந்த புடவையில் வலைக் கொண்டையோடு கைகளைக் கட்டிக் கொண்டு அவள் நின்ற கோலமே காயத்ரியின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

ச்சே! நான் ஏன் இப்படிப் பயப்படுகிறேன்? ஜனாவின் அம்மாவும் அவரைப் போலத்தானே இருப்பார். பிறகேன் பயப்பட வேண்டும்! துணிவைத் திரட்டிக் கொண்டு முன்னேறினாள். புற்கள் மீது மெலிதான கொடி படர்ந் திருந்தது. மிக மெல்லிய கொடி. ஆனால் கொடி முழுக்கக் கத்தரிப்பூக் கலரில் குட்டி குட்டியாய்ப் பூக்கள் பூத்திருந்தன.

காயத்ரியின் முகம் இயல்பாகவே புன்னகைத்தது. எத்தனை அழகுப் பூக்கள். என்ன ஒரு நிறம். அம்மாடி யோவ்! இலையே தெரியாத அளவுக்கு எவ்வளவு பூக்கள்! பூக்களையே பார்த்துக் கொண்டு நடந்தவளின் கண்கள் ஓரிடத்தில் நிலைத்து நின்றன.

கொத்தாய்ப் பரவிக் கிடந்த பூக்களின் மீது ஒரு ஜோடிப் பாதங்கள் விலை உயர்ந்த வேலைப்பாடுள்ள செருப்போடு நின்றன. அந்தக் கால்கள் தன்னை

மிதித்தாற் போல் பதறி, "ஏங்க! பூவுங்க... பூவை மிதிச்சிட்டு இருக்கீங்க?" - என்றவாறே விழிகளை உயர்த்தி அந்தக் கால்களுக்குரிய முகத்தைப் பார்த்தவள்... துல்லியமாய் அதிர்ந்தாள். இது? இவள்... அன்று ஜவுளிக் கடையில் வைத்துக் கத்தியவளாயிற்றே... அத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணிவிட்டு... பிறகு எந்தத் துணியையும் வாங்காமலே சென்றவள்!

இவளா ஜனாவின் அம்மா? ஐயோ! என்ன ஒரு கொடூரமான முகம். ஏன் இந்த அலட்சியமான பார்வை. கடவுளே! இதற்காகத்தான் என் மனம் இப்படி அடித்துக் கொண்டதா? திகைப்பாய்ப் பார்வையை விலக்க முடியாமல் நின்றவளை... புருவம் உயர்த்திப் பார்த்தாள் திலகவதி.

"ஏய்! நீ அந்த... ஜவுளிக்கடையில நின்னவதானே...?" - முதல் கேள்வியிலேயே துணுக்குற்றாள் காயத்ரி. பேச்சு எழாமல் தலையை மட்டும் ஆட்டினாள்.

"உன் பேர்தான் காயத்ரியா?"

"ம்..."

"ஜனா... சொன்னானே... அந்தப் பொண்ணு?"

"ந... நான்தான்...." - காயத்ரியின் பதிலில்... வந்தவளது முகம் அலட்சியமாய்ச் சுழித்தது.

"அடக் கொடுமையே! இந்தப் பயலுக்குக் கண்ணு மங்கிப் போச்சா? என்னவோ தேவதை... உலக மகா அழகி... இதயத்தில் கொலுவிருக்கும் மகாலட்சுமி... அப்படி இப்படின்னு அளந்தான். உன்னைப் பார்த்தா சாப்பாட்டுக்கே வக்கத்தவ மாதிரி இருக்கே!"



காயத்ரியின் முகம் அவமானத்தால் சிவந்தது. அவளது முகத்தில் படர்ந்த செம்மை கண்கூடாய்த் தெரிய, "ஏதோ! கொஞ்சம் கலர் இருக்கு. இந்தக் காலத்துப் பயலுக இந்தக் கலர்லதான் விழுந்திடுறானுங்க. ஆமா! உனக்கு என்ன தீராத நோய் எதுவும் இருக்கா?" - நக்கலாகவே அவள் கேட்க, காயத்ரிக்குள் கோபம் தலை தூக்கியது.

"ஏன்?"

"உன் உடம்பைப் பார்த்தா டி.பி. வந்தவ மாதிரி தெரியுதே... அதான் கேட்டேன்....!"

"கொழுப்பு அதிகமா இருந்தா உடம்புக்கு ஆகாது. அதனால நான் நிறையச் சாப்பிடுறதில்ல..." - என எதிரே நின்றவளை மேலிருந்து கீழாய்ப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

திலகவதியின் முகம் இருண்டது.

"என்னடி கொழுப்பா?"

"இப்பத்தானே சொன்னேன்..."

"ம்... ம்... அப்படியே பாலும் பாதாமும் சாப்பிட்டு வளர நீ என்ன எங்களை மாதிரி ராயல் ஃபேமிலியா? மாசச் சம்பளத்துக்காக நாளு பூரா கண்டவன் முன்னாடி நின்னு பல்லைக் காட்டிப் பொழைக்கிறவதானே நீ?

"உனக்கு இரண்டு வேளை சோறு கிடைக்கிறதே பெரிய விஷயம்... பிறகெப்படி உடம்புல சத்துப் பிடிக்கும். நோயில விழுந்த ஞொஞ்சான் கோழி மாதிரி இருக்கிற உன் பின்னாடி அலையுறான் பாரு... அவனைச் சொல்லணும்."

பற்களைக் கடித்துத் தன் கோபத்தைக் கட்டுப் படுத்தினாள் காயத்ரி. இல்லை... இவள் சம்பந்தம் பேச வரவில்லை. தன்னை அவமானப் படுத்தவென்றே வந்திருக் கிறாள். இவளிடம் பேசி நேரத்தை வீணாக்குவதை விட இந்த இடத்தை விட்டுச் செல்வதுதான் சரி.

இவளது பார்வையே முடிவைச் சொல்லி விட்டதே... கடவுளே! இந்த ஜனாவின் பேச்சைக் கேட்டு நான்கூட மனம் தடுமாறி விட்டேனே... மகன் விரும்பும் பெண் என்று தெரிந்தே இத்தனை இழிவாய்ப் பேசுபவள் எப்படி இந்தத் திருமணத்திற்குச் சம்மதிப்பாள்?

அப்படி மகனுக்காகச் சம்மதித்தாலும் இவளுடன் எப்படி ஒரே வீட்டில் வாழ முடியும்? அதற்குப் பதில் அத்தை வீடே தேவலாம். ஆயிரம் பேசினாலும் அவள் தன் சொந்த அத்தை. ரத்த உறவு. இப்படிக் கண்டவளிடம் வசை கேட்பதை விடவும் சொந்த வீட்டில் கேட்டுக் கொள்ளலாம். தப்பில்லை...!

சற்று முன் ஜனாவின் வார்த்தையால் நெகிழ்ந்திருந்த இதயம் இறுகிவிட, வந்த வழியே திரும்பி நடக்கத் துவங் கினாள். நின்ற இடத்தில் இருந்தே குரல் கொடுத்தாள் திலகவதி.

"என்ன கிளம்பிட்ட... நான் உன்கிட்ட பேசணும்!"

"என்கிட்ட பேச வேண்டிய அவசியம் என்ன?" - நடந்து கொண்டே சொன்னவளைப் பார்த்துக் கடுப்பானாள் திலகவதி.

"போகணும்னு முடிவு பண்ணிட்ட... ஒரு முடிவைச் சொல்லிட்டுப் போ."



"என்ன முடிவு?" - திரும்பாமலே நின்றாள்.

"எங்க ஜனாகிட்ட என்ன சொல்றது நான்...?"

"என்ன?"

"அவன் சொன்னதைக் கேட்டு நீ பெரிய பேரழகின்னு நினைச்சு உன்கிட்ட சில விஷயங்கள் பேசலாம்னு வந்தேன். இப்ப உன்கிட்ட போய் அதையெல்லாம் பேசணுமான்னு யோசிக்கிறேன்."

"நல்லது! நான் கிளம்பறேன்."

"அட... ரொம்பப் பிகு பண்ணிக்காதே. இந்த விஷயத்தைப் பேசாமலும் விட முடியாது. ஏன்னா இது என் குழந்தையோட வாழ்க்கைப் பிரச்சனை. பேசித்தான் ஆகணும்.

"அதை இப்படி நின்னு பேச முடியாது. வா... அந்தப் பெஞ்சில உட்கார்ந்து பேசுவோம்...." - என்றவாறு அவளது பதிலை எதிர்பாராமல் நடக்க ஆரம்பித்தாள் திலகவதி.

என்ன பேசப் போகிறாள் என்ற குழப்பத்தோடு பின்னே சென்றாள். இருக்கையில் அமர்ந்த திலகவதி தன் கைப்பையைத் திறந்து போஸ்ட் கார்ட் அளவில் இருந்த ஒரு புகைப்படத்தை எடுத்துக் காயத்ரியிடம் நீட்டினாள். மௌனமாய் வாங்கிப் பார்த்தாள் காயத்ரி.

அது ஒரு இளம்பெண்ணின் புகைப்படம். கவனமாய் ஒப்பனை செய்யப்பட்டு ஏராளமான ஆபரணங்களோடு பட்டுப் புடவையோடு நின்றாள். சற்றுக் கனத்த உடல். மாநிறம். முகம் திருத்தமாய் இருந்தது.

"பொண்ணு எப்படி இருக்கு?"

"ம்...!" - திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"பொண்ணு எப்படி இருக்குன்னு கேட்டேன்..."

"ம்... ந... நல்... நல்லா இருக்கு."

"ஜனாவுக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும் இல்ல...!" - காயத்ரியின் மனதை யாரோ கடப்பாரையால் குத்திக் கிழித்தனர். இதயத்திலிருந்து தோன்றித் தொண்டை வரை வந்த வலியை மென்று விழுங்கினாள். கண்கள் லேசாய்க் கசியத் துவங்கின.

"என்ன ஒண்ணும் பேசாம இருக்கே? பேச முடியாது. ஏன்னா இந்தப் பெண்ணோட முகராசி அப்படி. பார்த்தியா... எப்படி இருக்கான்னு... இவ ஒண்ணும் உன்னை மாதிரி அன்றாடங்காய்ச்சி இல்லைம்மா... கோடீஸ்வரி! வீட்டுக்கு ஒரே பொண்ணு. இவ கழுத்துல, கையில கிடக்கிற நகைகளைப் பார்த்தியா?

"அத்தனையும் சுத்தத் தங்கம். ஒரிஜினல் வைரம். இது மட்டுமல்ல. கார், பங்களான்னு ஏகப்பட்ட சொத்து. நீயே சொல்லு. இவ்வளவு சொத்தோட வீட்டுக்கு வர்ற மகாலட்சுமியை யாராவது வேண்டாம்னு சொல்வாங்களா?" - திலகவதி கேட்க, மௌனமாய் நின்று கொண்டிருந்த காயத்ரி நிமிர்ந்தாள்.

"இதையெல்லாம் எதுக்காக என்கிட்ட சொல்றீங்க?"

"உன்கிட்ட சொல்லாம வேற யார்கிட்ட சொல்றது? என் அந்தஸ்துக்கு உன்கூட நின்னு பேசுறதே அசிங்கம்தான். என்ன பண்றது... எனக்கு என் குழந்தையோட வாழ்க்கை முக்கியம். அதுக்காக இப்படிச் சிலதைச் சகிச்சுத்தான் ஆக வேண்டியிருக்கு..."



"சொல்ல வந்த விஷயத்தைச் சொன்னீங்கன்னா நான் போயிட்டே இருப்பேன். இப்படி நின்னு வெட்டிப் பேச்சு பேச எனக்கு நேரமில்லை..."

"அட! என்ன லட்ச லட்சமா சம்பாதிக்கப் போறீயாக்கும். ஆமா. உன்னைத் தேடி அந்தக் கடைக்குப் போனேன். நீ வேலையை விட்டுட்டதா சொன்னாங்களே... உண்மையா?"

"ஆமா!"

"வேலையை விட்டுட்டுச் சாப்பாட்டுக்கு என்ன பண்றே?"

"உங்களுக்கு ஏன் அந்தக் கவலையெல்லாம்...?"

"அதுவும் சரிதான்... நீ யாரோ எவரோ? எப்படியோ போ. ஆனா இனிமேலும் என் குழந்தையோட சந்தோஷமான வாழ்க்கைக்குத் தடையா நிற்காதே. நீ நிற்கும் வரைக்கும் எங்க வீட்டில நல்ல காரியம் நடக்காது. ஜனாவும் பிடி கொடுத்துப் பேச மாட்டேங்கிறான். வீட்டிலயே அவனைப் பார்க்க முடியுறதில்ல...

"எப்பவும் ஒரு வேலைக்காரப் பய மாதிரி உனக்குச் சேவை செய்துட்டு அலையுறான். வெளியே நாலு பேர் இதைப் பார்த்திட்டுக் கேட்கிற கேள்வியில மானமே போகுது. வெளியே தலைகாட்ட முடியலை!"

"நாங்க யாரும் அவரை இங்கே கூப்பிடலை. வேலை வாங்கவும் இல்லை..."

"நீ கூப்பிடலை சரி. அவன் கூப்பிட்டதும் ஏன் கிளம்பி வந்தே? அதுவும் உன் அக்காவையும் கூட்டிக்கிட்டு?"

"அது... வந்து..."

"புரியுதும்மா... தர்ம ஆஸ்பத்திரியில கொசுக்கடியில கிடக்கிறவளுக்கு ஏ.சி. ஆஸ்பத்திரி கசக்குமா? அதுவும் முழுச் செலவையும் - சாப்பாட்டுச் செலவு உட்பட எல்லாத்தையும் - ஏத்துக்க ஒரு இளிச்சவாயன் கிடைச்சா விடுவீங்களா?"

"இதோ பாருங்க. நீங்க அளவுக்கதிகமா பேசுறீங்க..."

"நீ நடந்துக்கிறதும் அப்படித்தானே இருக்கு. உன் நிலைமை என்ன? அவன் நிலைமை என்ன? இதையெல்லாம் நினைச்சுப் பார்க்க வேண்டாம்... குப்பையில பொறந்த நீ கோபுரத்தில வாழ ஆசைப்படலாமா? எங்க வீட்டில வேலை செய்யுற வேலைக்காரி கூட உன்னை விட வசதியானவ தெரியுமா!"

"நாங்களா உங்க வீட்டில வந்து வாழ ஆசைப்படலை. நானா எங்க வீட்டுக்குப் பொண்ணு கேட்டு வரச் சொன்னேன்?"

"அதுதானேடி... உங்க சாமர்த்தியம். பூனை போல இருந்து இப்படிப் பரிதாபமா வேஷம் போட்டுக் கடைக்கு வர்றவனை எல்லாம் சாய்க்கிறதுதானே உன் திறமை!"

"வாயை மூடுங்க. மரியாதையா பேசுங்க."

"உனக்கென்னடி மரியாதை! உன் லட்சணத்தைத்தான் அன்னிக்கே பார்த்தேனே?"

"இதோ பாருங்க. இவ்வளவு நேரம் உங்க வயசுக்குத்தான் மரியாதை கொடுத்தேன். இனிமேலும் இங்கே நின்னா மரியாதை போயிடும்."



"எங்கே நின்னு யாரை மிரட்டுற? ஜனா மட்டும் இல்லேன்னா இந்த மாதிரி ஆஸ்பத்திரியோட வாசலைக்கூட மிதிக்க முடியுமா, உங்களால! ஏதோ பரிதாபப்பட்டு உதவி செய்தான். அது அவனோட பெருந்தன்மை. ஆனா அதையே சாக்கா வெச்சிட்டு அவனுக்கே எஜமானியா ஆகிடலாம்னு கனவு காணாதே!"

காயத்ரியின் மொத்த சக்தியும் வற்றிப் போனது. உடல் முழுக்க அவமானத்தால் குறுகியது. மேலும் மேலும் அவளிடம் பேசிக் காயப்பட மனமின்றிப் பரிதாபமாய்க் கேட்டாள்.

"இப்போ உங்களுக்கு என்ன வேணும்?"

"நான் கேட்டதுக்குப் பதில் சொல்லணும். இந்தப் பொண்ணுக்கும் ஜனாவுக்கும் பொருத்தம் எப்படி இருக்கும்?"

"ம்... பொருத்தம் நல்லா இருக்கும்."

"பார்த்தியா! உனக்குத் தெரியுது. ஆனா அந்தப் பயலுக்குத் தெரிய மாட்டேங்குதே... நான் பேசுறதைக் காதுலயே வாங்க மாட்டேங்கிறான்..."

"அதுக்கு நான் என்ன பண்ணணும்?"

"இதோ பாரும்மா. முதல்லயே இந்தச் சம்பந்தம் பேசத் தொடங்கினதும் அவன் உன்னைத்தான் கட்டுவேன்னு சொன்னான். நானும் சரின்னு விட்டுக் கொடுத்தேன். வாழப் போறவன் அவன். அவனுக்குப் பிடிச்ச பெண்ணையே கட்டிக்கட்டும்னு ஒதுங்கிட்டேன்.

"ஆனா உனக்குக் கல்யாணம் முடிவாகிடுச்சு. இன்னும் ஒரு வாரத்திலயோ பத்து நாள்லயோ கல்யாணம்னு

சொன்னாங்க. இதுக்குப் பிறகும் அவன் இப்படி உன் பின்னாலயே அலைஞ்சா எப்படி? பார்க்கிறவங்க என்ன நினைப்பாங்க?

"நாளைக்கு இவனுக்கு வரப்போற பொண்ணுக்கும் உனக்கு வரப் போற புருஷனுக்கும் தெரிஞ்சா அது வீணான வருத்தம்தானே... அசிங்கம்தானே... அவன் ஆம்பிள்ளை. இதைப் பத்தியெல்லாம் யோசிக்காம ஓடி ஓடி வர்றான். நீ இன்னொரு வீட்ல போய் வாழப் போறவ. நீ யோசிக்க வேண்டாமா?"

திகைப்பாய்ப் பேச்சற்று நின்றாள் காயத்ரி. என்ன இது? அவன் என்ன சொல்லி விட்டுப் போனான்? இவள் என்ன கேட்கிறாள்? தாயிடம் நடந்தவைகளைக் கூறவே இல்லையே!

"இதோ பாரும்மா. உனக்குக் கல்யாணம்னு தெரிஞ்ச பிறகுதான் நான் திரும்பவும் இந்தச் சம்பந்தத்தைப் பேசினேன். முதல்ல சரின்னான்... ஆனா இப்போ உன் பின்னாடியே வந்து சேவை செய்துக்கிட்டு இருக்கான். இந்தப் பொண்ணு மனசு என்ன பாடுபடும்... நீயே சொல்லு...!"

"எ... என்ன? சரின்னு சொன்னாரா?"

"ஆமா! அவன் பேச்சை நம்பி நான் எல்லாத்தையும் பேசி முடிவு பண்ணிட்டேன். எல்லாம் கூடி வந்த நேரம்... இப்போ உன்னால கல்யாணமே நின்னுடும் போலிருக்கு..."

காயத்ரியின் கண்கள் சட்டெனக் குளமாகின.

"என்ன? க... கல்யாணமா?"



"இதோ பாரும்மா... உங்க குடும்பத்தில வேணா நினைச்ச நேரம் மாப்பிள்ளையை மாத்திட்டு இருப்பீங்க. ஆனா அப்படிப்பட்ட அசிங்கத்தை நாங்க ஒரு நாளும் செய்ய மாட்டோம்."

காயத்ரி அழுத்தமாய் உதடு கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்தினாள்.

"எனக்கு என் குழந்தையோட வாழ்க்கை முக்கியம். அதுங்க மனசுபோல வாழணும். அதுக்குத் தடையா நிக்கிற உன்னைப் பார்த்து இதெல்லாம் நியாயமான்னு கேட்டுட்டுப் போகத்தான் வந்தேன். உன்னைப் பார்த்ததும் ஏதோ ரெண்டு வார்த்தை தவறாப் பேசியிருக்கலாம்.

"ஆனா ஒரு தாயா உன்கிட்ட இப்ப கையேந்திக் கேட்கிறேன். என் பிள்ளையை நிம்மதியா வாழ விடும்மா. அவங்க வாழ்க்கையில எந்தக் குழப்பத்தையும் உண்டாக் கிடாதேம்மா...." - கண்களில் துளிர்த்த கண்ணீரோடு வந்தவள் மன்றாட... காயத்ரியின் மனம் தூள் தூளானது.

கண்களில் நிறைந்து நின்ற நீர் கன்னங்களில் உருண்டோட அதைத் துடைக்கவும் தோன்றாமல் நின்றாள். இதயம் இருந்த இடம் வெறுமையானது போல் தோன்றியது. பெருமூச்செறிந்தாள்.

"இப்போ நான் என்ன பண்ணணும்?"

"நீ ஜனாகிட்ட இருந்து விலகிடணும். அவன் பார்வையே படாத தூரமாப் போயிடு. அப்பத்தான் அவன் உன்னை மறந்திட்டு நிம்மதியா வாழுவான்."

காயத்ரியின் முகம் விரக்தியாய்ப் புன்னகைத்தது. இறைவா! இதுவும் உன் விளையாட்டா? பாலைவனத்தில்

தனியே நடக்க வைத்தாய். அப்படியே இருந்திருக்கலாம். நடுவே குளிர் சோலையில் வாழ வைத்து விட்டு மீண்டும் எரிதணல் மீது நடக்கச் சொல்கிறாயே... இது என்ன நியாயம்?

பார்வை இல்லாதவனிடம் கண்ணைக் கொடுத்து விட்டுப் பார்வை கிடைத்த சந்தோஷத்தை அவன் உணரும் போது கண்ணைப் பறித்துக் கொண்டாயே!

இதற்கு நீ என்னைக் குருடாகவே வைத்திருக் கலாமே... பாலைவனத்திலேயே அமிழ்ந்து போகச் செய்திருக்கலாமே...?

எந்தச் சலனமும் இல்லாத மனதில் நேசத்தை விதைத்து விட்டு அதில் துளிர் விடும்போது பிடுங்கி எறியலாமா... அந்த வலியை இந்த உயிர் தாங்குமா?

"இதோ பாரும்மா... நீ யார் பெத்த பிள்ளையோ? உன்னைக் கஷ்டப்படுத்தணும்னு நான் இதையெல்லாம் பேசலை. ஆனா நீ செய்யுறது தப்பு. ஊர் கூடி நிச்சயமான ஒரு மாப்பிள்ளையை நீ உன் பக்கம் இழுக்கலாமா? அது பாவமில்லையா?"

"ஓ! நிச்சயமே முடிந்து விட்டதா?"

"ஏன்? அவன் உன்கிட்ட எதையுமே சொல்லலையா? எப்படிச் சொல்வான்? சொன்னா அவன்கூட நின்னு பேசுவியா? இல்லை... தோள்ல சாய்ந்து அழ முடியுமா?

"உன்னைப் பார்த்தா நியாய அநியாயத்துக்குப் பயப்படுறவ மாதிரிதான் தெரியுது. அதனாலதான் அவன் மறைச்சிருப்பான்."



இதயத்தில் கொஞ்சமாய் ஒட்டிக் கொண்டிருந்த நம்பிக்கை சுத்தமாய் உதிர்ந்து போனது.

தான் எத்தனை மோசமாய் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கண்ணீர் நிற்காமல் வழிந்தோடியது.

"நல்லா நினைவு வைச்சிக்கம்மா... நிச்சயதார்த்தம் வரை இந்தப் பெண்கூடச் சுத்தினவன் இப்போ உன்னைப் பார்த்ததும் கல்யாணத் தேதி குறிக்க ஒத்துக்க மாட்டேங் கிறான். ஊர் உறவு கூடச் சம்பந்தம் பேசிய கோடீஸ்வரி யையே ஒதுக்குறவன் உன்னைத் தூக்கியெறிய எவ்வளவு நேரமாகும்?

"அப்படித் தூக்கி வீசினா உனக்காக அவனைக் கேள்வி கேட்க யாரு இருக்கா? குடிகாரப் பய ஒருத்தன் இருக்கானே... அவனா வந்து கேட்பான்! அதுக்குத்தாம்மா... உன் நல்லதுக்காகவும்தான் சொல்றேன். பேசாம வீட்டில பார்த்து வெச்சிருக்கிற மாப்பிள்ளையைக் கட்டிக்கிட்டு சந்தோஷமாக் குடும்பம் நடத்தப் பாரு...

"போற வர்றவனையெல்லாம் நம்பி ஏமாந்து சீரழிந்து விடாதே. புரியுதா? உன் அம்மா சொல்றதா நினைச்சுக்க... நீயும் வாழணும். அவனையும் வாழ விடணும். நான் சொல்றது புரியுதில்ல...!"

"புரியுது..."

"ம்... இப்படித்தான் பட்டுத் திருந்தக் கூடாது. வருமுன் காப்பாத்திக்கணும். உன் அக்காவைப் பார்த்துக்க ஆயிரம் நர்ஸ்... டாக்டரு... போதாக் குறைக்கு அவ புருஷன், மாமியார்ன்னு எல்லாரும் இருக்காங்களே... பிறகு நீ எதுக்கு

இங்கே? கல்யாணப் பொண்ணா லட்சணமா வீட்டோட இரு. அதுதான் உனக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது.

"இனிமே உன்னைத் தேடி அவன் இங்கே வரவே கூடாது. அப்படி வந்தா அது நல்லா இருக்காது. என்ன... ஒண்ணுமே பேசாம நிற்கிற?"

"போ... போயிடுறேன்."

திலகவதியின் முகம் மலர்ந்தது. "எனக்குத் தெரியும். நீ நல்லவதான். அவன்தான் புத்தி கெட்டுப் போய் அலையுறான். நீ கல்யாணம் பண்ணிட்டுப் போயிட்டா சரியாயிடுவான். ஆமா! அந்த மாப்பிள்ளைக்கு எந்த ஊரு?"

"எந்த மாப்பிள்ளைக்கு?"

"அதான்... உனக்கு முடிவாகி இருக்கே... அந்த மாப்பிள்ளைக்கு!"

"தெ... தெரியாது."

"என்ன பொண்ணும்மா நீ! வாழப்போற ஊரைக்கூட தெரிஞ்சு வைக்காம இருக்கே... கல்யாணம் எப்போ?"

"ம்... தெரியலை. நான் ஹாஸ்பிடல்லதான் இருக்கேன்."

"ஹாஸ்பிடல்னு சொன்னதும்தான் ஞாபகம் வருது. உன் அக்காவுக்குக் குழந்தை பிறக்கிற வரைக்கும் ஆகவேண்டிய பணத்தை மொத்தமாக் கட்டிட்டான் ஜனா. அதனால இனி அவன் தயவு உங்களுக்குத் தேவை இருக்காதுன்னு நினைக்கிறேன்.

"இனிமே அவனை இங்கே வரவைக்காதீங்க. கூடுமான வரை நீயும் இங்கே வராதே! நீ இல்லைன்னா



அவனும் வரமாட்டான். உன் அக்கா மேல அவனுக்கு என்ன அக்கறை? உன் வீட்ல உள்ள ஆட்களை வெச்சு கவனிக்கச் சொல்லு."

"ம்..."

"உன் கல்யாணம் முடியுற வரை அவன் கண்ல பட்டுடாதே..."

"இதையே அவர்கிட்டயும் சொல்லிடுங்க."

"கல்யாணம் முடியுற வரை அவனை எதுவும் சொல்ல முடியாதே. கல்யாணமாகிட்டா எல்லாம் சரியாகிடும். அப்புறம் அவன் பாடு... அவன் மனைவி பாடு. எனக்கு எந்த டென்ஷனும் இருக்காது."

"சரி, நான் கிளம்புறேன்..." - அதே மரத்த குரலில் சொல்லிவிட்டு நகர முயன்றவளைத் தடுத்தாள் திலகவதி.

"ஒரு நிமிஷம் இரும்மா..." - என்றவாறு கைப்பையைத் திறந்து போட்டோவை உள்ளே வைத்து விட்டு... கை நிறையப் பணத்தை எடுத்துக் காயத்ரியிடம் நீட்டினாள்.

காயத்ரியின் முகம் மாறியது. "என்ன இது?"

"சும்மா... கல்யாணச் செலவுக்கு வைச்சுக்க...!"

"அதுக்கு நீங்க ஏன் பணம் தர்றீங்க?"

"நீ எவ்வளவு பெரிய உதவி பண்ணியிருக்க... வாங்கிக்கம்மா..."

"மன்னிச்சிடுங்க. உடம்பையோ மனசையோ பணத்துக்கு விக்கிற அளவுக்கு மோசமானவ இல்லை நான்... உங்க பணம் உங்ககிட்டயே இருக்கட்டும்..."

என்றவாறு அதற்கு மேல் நிற்காமல் விடுவிடுவென நடக்க ஆரம்பித்தாள். மருத்துவமனை வாசலை அடைந்ததும் ஒரு கணம் நின்றாள்.

அக்கா எதிர்பார்த்துக் கொண்டிருப்பாளே... வேண்டாம். அவளைப் பார்த்தால் என் இதயம் வெடித்துக் கொட்டித் தீர்த்து விடும். இந்நிலையில் அவளைப் பார்க்க வேண்டாம். ஒரு முடிவோடு வேகமாய் மருத்துவமனையை விட்டு வெளியேறினாள்.

கண்கள் வெறித்த பார்வையோடு நேர் வழியை வெறிக்க, பேருந்துக்காகக் காத்து நில்லாமல் நடக்கத் தொடங்கினாள். கால்கள் களைத்துப் போகும் வரை நடந்து கொண்டே இருந்தாள்.

மனதில் தோன்றிய ஏமாற்றம், அழுத்தம், கசப்பு எல்லாம் மாறும்வரை, சுற்றுப்புறம் இருள் சூழ்வதைக்கூட உணராமல் நடந்து கொண்டே இருந்தாள்.

'நீ ஜனாகிட்ட இருந்து விலகிடணும்.'

'அவன் பார்வையே படாத தூரமாப் போயிடு.'

'உன்னால கல்யாணமே நின்னு போயிடும் போலிருக்கு.'

'நீ கல்யாணம் பண்ணிட்டுப் போயிட்டா சரியாகிடும்...' - தொடர்ச்சியாய்க் கேட்ட வார்த்தைகளால் தலைக்குள் பிரளயமே நடந்தது.

'என்னைப் பிடிச்சிருக்கா, கல்யாணம் பண்ணிப்பியா?' - என்ற ஜனாவின் குரல் தூரமாய்த் தேய்ந்து போனது.



'என் மனசில இவ இருக்கும் போது இன்னொரு பெண்ணை எப்படி என்னால் மணக்க முடியும்?' - என்ற அவனது வார்த்தை இப்போது கானல் நீராய் ஏமாற்று வார்த்தையாய் மாறி முகத்தில் அறைந்தது.

## 18

கண்கள் கலங்கிக் கண்ணீர்
நிறைந்து நெஞ்சில் விழுந்தால்
சொந்தம் புரியும்! உன்னை
நினைத்து என்னை மறந்தேன்!

"ரங்கா! மணி பத்தாகப் போகுது. ஒரு வாய் சாப்பிடு ரங்கா..." - ராஜேஸ்வரி கையில் சாப்பாடுத் தட்டோடு நிற்க... வெறுப்பாய் முகத்தைச் சுழித்தாள், ரங்கநாயகி.

"எனக்குச் சாப்பாடு ஒரு கேடா? நீ சாப்பிட்டுப் படு ராஜேஸ்வரி!"

"அம்மா! ஏம்மா இப்படி அடம் பண்ணுற... சாப்பிடும்மா!" - உமா கோபமாய்க் கூற, ரங்கநாயகியின் கண்களில் நீர் எட்டிப் பார்த்தது.

"எப்படிடி சாப்பாடு இறங்கும்? என் பிள்ளை என்ன ஆனான்னே தெரியலையே? ஏதோ ஒரு வார்த்தை கோபமா சொல்லிட்டேன். அதுக்காக இப்படிச் சொல்லாம கொள்ளாம பெண்டாட்டியையும் மச்சினியையும் கூட்டிட்டு எங்கே போனான்னு தெரியலையே!"

"அதான்... அப்பா அக்கம் பக்கம் சொல்லி விசாரிக்கப் போயிருக்குதே... நீ இப்படிச் சாப்பிடாம இருந்தா மட்டும் அண்ணன் வந்திடுமா?"

"எத்தனை வாட்டி சண்டை போட்டாலும் என் மகன் வீட்டை விட்டுப் போக மாட்டான். இப்போ பெண்டாட்டிக்கு மருந்து வாங்கக் காசு கொடுக்கலேன்னதும் ரோஷமா வெளியே போயிட்டான். நான் வேணாம்னு போயிட்டான்."

"ரங்கா! இதையே எத்தனை முறை சொல்லுவ. நம்ம பாண்டி அப்படிப் போகிற பிள்ளையா? ஒரு ரெண்டு நாள் சுத்திட்டு வந்திடுவான்...."

"இல்லை ராஜேஸ்வரி! சும்மா சுத்தப் போகலை அவன். கையில பத்துப் பைசா இல்லைன்னு சொன்னானே... பெண்டாட்டியைக் கூட்டிட்டு எங்கே போயிருப்பான்? வயசுக்கு வந்த பிள்ளையையும் எங்கெல்லாம் கூட்டிட்டு அலையுறானோ?"

"சரி... நீ அழாதே. ஏற்கெனவே உடம்பு முடியாம இருக்கியே!"

"அதானே எனக்கும் வருத்தமா இருக்கு. என்னைப் படுக்கையில போட்டுட்டானே... இல்லேன்னா நானே தேடிப் போயிருப்பேனே... இப்பப் பாரு! சோறு தண்ணி தரக்கூட ஆளில்லாம அநாதையா கிடக்கிறேன்."

"ஏன் இப்படியெல்லாம் பேசுற ரங்கா! நான் இருக்கேனே... அழாதே ரங்கா..."

"ராஜேஸ்வரி! உனக்கே தெரியும். நான் கொஞ்சம் சுயநலக்காரிதான். படபடன்னு பேசிடுவேன்தான். ஆனா எனக்கும் பாசம், பற்று இருக்குதே... என் புள்ளை என்னை என்ன நினைச்சானோ? பார்க்க வராம இருந்திட்டானே...!"

"ரங்கா! நாமளும் கொஞ்சம் அவசரப்பட்டிருக்கக் கூடாது. அதுதான் இவ்வளவு பிரச்சனைக்கும் காரணம்."



"என்ன சொல்றே ராஜேஸ்வரி?"

"அதான்... சின்னவ கல்யாணத்தைப் பத்திச் சொல்றேன். நாம கொஞ்சம் நிதானமா இருந்திருக்கணும். பத்தே நாள்ல கல்யாணம். அதுவும் ரெண்டாம் தாரம்னு சொன்னதாலதானே உன் மருமகளை அதிர்ச்சி தாக்கிப் படுக்கையில போட்டுடுச்சு. இல்லன்னா அவபாட்டுக்கு அவ வேலையைப் பார்த்திட்டு வீட்டோட இருந்திருப்பா. இவ்வளவு பிரச்சனையும் வந்திருக்காதே!"

"எல்லாம் இதோ இந்த வாயாடியால வந்தது..." - அருகே அமர்ந்திருந்த மகளின் தலையில் இடித்தாள் ரங்கநாயகி.

"என்னை ஏம்மா திட்டுற? தப்பு செய்யுறதெல்லாம் நீ. பழியை மட்டும் என் மேல போடுவியா?"

"ஏய்! நான் என்னடி பழி போட்டேன்? அப்படியென்ன தப்பு பண்ணினேன்?"

"பின்னே...! என்னைவிடப் பெரியவ காயு! அவளைப் பார்க்க வந்த மாப்பிள்ளையை நீ ஏன் வேண்டாம்னே... பேசாம அவளுக்கே கட்டி வைச்சிருக்கலாமில்ல...!"

"வாயை மூடுடி. இதெல்லாம் பெரியவங்க விஷயம்."

"ம்க்கும். இப்படிச் சொல்லியே எங்க வாயை அடைச்சிடு. உன் பேராசைதான் இப்போ பெருநஷ்டமா ஆகிப் போச்சு."

"உமா! அம்மாகிட்ட அப்படியெல்லாம் பேசக் கூடாது."

"சும்மா இருங்க பெரியம்மா... அண்ணி எவ்ளோ பாவம்! எத்தனை வருஷமா நமக்காக உழைச்சிருக்காங்க.

அவங்களுக்கு உடம்பு முடியாத நேரத்தில செலவு பண்ண கணக்குப் பார்க்கலாமா? அதான் அண்ணன் கோவிச்சிட்டுப் போச்சு."

"ஏய்! நான் என்ன வைச்சிக்கிட்டா வஞ்சனை பண்றேன்? அன்னிக்கு என்கிட்ட உண்மையாவே பணம் இல்லைடி!"

"அதுவும் உங்க தப்புதான். அப்பாவுக்கு உடம்பு முடியலை. வேலைக்குப் போக முடியாது. அண்ணன் ஏன் வீட்டோட இருக்கணும். அவனைத் தட்டிக் கேட்டு அறிவுரை சொல்லி வேலைக்கு அனுப்ப வேண்டியதுதானே! அவனை முழுச் சோம்பேறியா ஆக்கினதே நீதாம்மா."

"நானாடி அவனை வேலைக்குப் போகாதேன்னு சொன்னேன்?"

"போன்னு சொன்னியா...! அவன் மட்டும் ஒழுங்கா வேலைக்குப் போயிருந்தா இவ்வளவு கஷ்டம் வருமா? இதுல காயுவையும் வேலையை விட்டு நிறுத்தியாச்சு. கையில ஒத்தப் பைசா இல்லாம என்ன தைரியத்துல கல்யாணப் பேச்சை எடுத்தீங்க?"

"அது... மாடசாமி..."

"பேசாதேம்மா... அவன் வந்து உங்ககிட்ட பொண்ணு கேட்டானா? அவனே செய்த பாவத்துக்குக் கோர்ட்டுக்கும் வீட்டுக்குமா நடந்திட்டு இருக்கான். அவனுக்குக் கல்யாணம் ஒரு கேடா? இதுக்குப் பேசாம காயுவோட சாப்பாட்டுல விஷம் வைச்சிருக்கலாம். நிம்மதியாப் போயிடுவா."

மகளின் பேச்சில் ரங்கநாயகியும், ராஜேஸ்வரியும் வாயடைத்துப் போயினர். தெரு முழுக்க அலைந்து விட்டுத் தள்ளாட்டமாய் வந்த சீனிவாசன் கூட அசந்து போனார்.



சின்னப் பெண்... வெகுளி... உலகம் அறியாதவள்... என்றல்லவா இந்தப் பெண்ணை நினைத்தோம்.

ஆனால் அதன் பேச்சில் எத்தனை தெளிவு! என்ன துணிச்சல்! தன் மனைவியிடம் யாருமே இப்படி நேருக்கு நேராய்ப் பேசியதில்லை. பேசவும் முடியாது. இந்தச் சின்னப் பெண்ணுக்கு எப்படி இவ்வளவு துணிச்சல் வந்தது? அவர்களின் வாதத்தைக் கலைக்க விரும்பாமல் வெளித் திண்ணையில் அமர்ந்து கொண்டார்.

"சரி, விடும்மா... அவ எதையோ நினைச்சா? அது எப்படியோ முடிஞ்சு போச்சு!"

"அதைத்தான் பெரியம்மா சொல்றேன். நம்ம நினைப்பு நல்லதா இருந்தாத்தானே செயலும் நல்லதா நடக்கும்? அடுத்தவ எக்கேடோ கெட்டுப் போகட்டும்னு நினைச்சா... அது நம்ம தலையிலதான் விடியும்."

"ஏன்டி! நான் என்ன எனக்காகவா இதையெல்லாம் செய்தேன். அது ரொம்ப பெரிய இடம்டி. உனக்கு அந்த வாழ்க்கை அமைஞ்சிடாதான்னு ஒரு ஏக்கம். நான் என்ன உனக்குக் கோடிக் கணக்கில நகை நட்டா சேர்த்து வைச்சிருக்கேன்."

"வேண்டாம்மா... இன்னொருத்தர் கழுத்துல விழுற மாலையைப் பறிச்சு உம் பொண்ணுக்குப் போட நினைக்காதே. எனக்குன்னு அமையுறது தானா அமையும்."

"ம்... இப்படித்தான் உன் அப்பனும் சொல்லிட்டுத் திரியுறாரு. கையில... காதுல பொட்டுத் தங்கம் கிடையாது. எவன் வருவான்?"

"வருவாம்மா... காயுவை விரும்பி ஒருத்தர் வந்த மாதிரி என்னையும் விரும்பி ஒருத்தன் வருவான். அப்போ கல்யாணம் பண்ணி வை. போதும்!"

"வருவான்டி வருவான். அவ கொஞ்சம் லட்சணமா இருக்கா... சம்பாதிக்க வெளியே போனா... அந்தப் புண்ணியவான் கண்ணில பட்டிருக்கா.... நீ வீடு வீடா சுத்திட்டுத் திரியுறியே... உன்னைத் தேடி எவன் வருவான்?"

"வருவாம்மா... எனக்குன்னு பொறந்தவன் என்னைத் தேடி வருவான்."

"எப்போ வருவான்?"

"காயு கல்யாணம் முடிஞ்சதும் வருவான்..." - என்றாள் அழுத்தமாய்.

ரங்கநாயகி முகம் மாறினாள்.

"ஏய்! என்னடி சொல்றே?" - தாயின் கூர்மையான பார்வையை நேராய்ச் சந்திக்க இயலாமல் தடுமாறினாள் உமா.

ரங்கநாயகியின் குரல் உயர்ந்தது. "ஏய்! உன்னைத் தான் கேட்கிறேன்..."

"ஆமாம்மா... காயு கல்யாணம் முடிஞ்சதும் என்னைப் பெண் கேட்டு வருவான்."

"யாரு?"

"கோபால் மாமா பையன்!" - என்ற மகளின் உறுதியான குரலில், ஆடிப் போனாள் ரங்கநாயகி.

"ஏய்! என்னடி சொல்றே?"



"ஆமாம்மா... அந்த மீனாட்சிசுந்தரம் என்னைத்தான் கட்டிப்பேன்னு சொல்லுது. வர்ற பொண்ணு ஜாதகத்தை எல்லாம் வேணாம்னு சொல்லுது. என்னைத்தான் கட்டுமாம்."

"அடியேய்! என்னடி என் தலையில கல்லைத் தூக்கிப் போடுற? அவன் ஆட்டோக்காரன்டி!"

"இருக்கட்டுமேம்மா... நல்லவரு. குடிக்க மாட்டாரு. என்னைத் தவிர இன்னொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாரு... ஒரு பொண்ணுக்கு இதைவிட வேறென்னம்மா வேணும்?"

"அடியேய்! உனக்கு விபரம் பத்தாதுடி... காசு வேணும். காசு இல்லேன்னா வாழ்க்கை எப்படி சந்தோஷமா இருக்கும்?"

"இருக்கும்மா... வர்றதை வெச்சு சிக்கனமா வாழ்ந்து நிறைவான மனசோட இருக்கிறதுதாம்மா சந்தோஷம். இருக்கிறதை விட்டுட்டுப் பறக்கிறதைப் பிடிக்கணும்னு நினைக்கிறது ரொம்பத் தப்பும்மா."

"பாரு ராஜேஸ்வரி! நான் இவளைக் கோபுரத்தில் வாழ வைக்கணும்னு ஆசைப்படுறேன். இவ குப்பை மேட்டுல வாழ ஆசைப்படுறா. நீயாவது சொல்லேன்...!"

"அம்மா! கோபுரமோ குப்பைமேடோ நாம வாழுற வாழ்க்கையைப் பொறுத்துதாம்மா அமையும். குடிசையில இருக்கிறவங்க எல்லாம் கஷ்டப்படுறதுமில்ல... மாடி வீட்டில வாழுறவங்க எல்லாருமே சந்தோஷமா வாழுறதுமில்ல... அதுதான் அவங்க அவங்களுக்கு என்ன கிடைக்குமோ அதுதான் கிடைக்கும்."

"ஏய்... தத்துவம் பேசாதடி...!"

"இல்லைம்மா... இதுதான் யதார்த்தம். நீதான் புரிஞ்சுக்க மாட்டேங்கிற. இப்போ காயுவைப் பெண் கேட்டவர் என்னை எப்படிக் கட்டிப்பார்ன்னு நீ நினைச்சே...? நீயா எதையோ கற்பனை பண்ணி நீயாவே முடிவும் எடுத்து அந்த முடிவாலதான் இன்னிக்கு நம்ம குடும்பமே திசைக்கு ஒண்ணா பிரிஞ்சு போச்சு.

"நீ மட்டும் சந்தோஷமா சம்மதிச்சிருந்தா காயுவோட கல்யாணமும் நல்லபடியா நடக்கும். என் கல்யாணமும் ஒரு குறையில்லாம நடக்கும். அண்ணிக்கு எதுவும் ஆகி யிருக்காது.

"அண்ணி நல்லாயிருந்தா அண்ணன் ஏன் கோபிச் சிட்டுப் போகப் போகுது. நீ எடுத்த ஒரு தவறான முடிவு தான் எல்லாப் பிரச்சனைக்கும் காரணம். கனவிலேயே வாழாதம்மா. நிஜத்தைப் புரிஞ்சிக்கிட்டு அப்படியே வாழப் பழகு."

ராஜேஸ்வரி வாயில் கை வைத்தாள். "ரங்கா! உன் பொண்ணையா உலகம் புரியாதவன்னு சொன்னே. ஆத்தாடி! எம்புட்டு பெரிய பேச்செல்லாம் பேசுது. எம்புட்டு அறிவு பாரேன். நாமகூட இதெல்லாம் யோசிக்கலையே!"

"பெரியம்மா! நீங்க அவசரப்பட்டு அந்த மாடசாமிகிட்ட எதுவும் பேசிடலையே?"

"இல்லம்மா. அன்னிக்குப் போகணும்னு புறப்பட்டு நின்னப்பதான் உன் அம்மா இடுப்பு ஒடிஞ்சு போச்சு. பாவம்! படுக்கையில விட்டுட்டு எங்கே போறதுன்னு இங்கேயே



தங்கிட்டேனே... இவ குணமானதும்தான் போகணும்னு இருந்தோம்."

"நல்லவேளை பெரியம்மா! அவசரப்பட்டுப் போகாம இருந்தீங்க..."

"அந்த நல்ல வேலையைச் செய்தது என் புள்ளைம்மா!" - என்றவாறு வீட்டுக்குள் நுழைந்தார் சீனிவாசன். ஓடி வந்து தந்தையைக் கைப் பற்றி அழைத்துக் கட்டிலில் உட்கார வைத்தாள் உமா.

"அப்பா! என்னப்பா சொல்றீங்க?"

"ஆமாம்மா... அன்னிக்கு மட்டும் உன் அண்ணன் குடிபோதையில உன் அம்மாவைக் கீழே தள்ளிவிட்டு எலும்பை உடைக்கலைன்னு வை. இவ சும்மாவா இருந்திருப்பா... ஒரே ஓட்டமும் சாட்டமுமா ஓடிப் போய் அந்தக் கொலைகாரப் பாவியைக் கையோட கூட்டியாந்து சின்னப்புள்ளையோட கதையையே முடிச்சிருப்பாளே...!"

"யோவ்! அப்போ இதெல்லாம் யோசிச்சுத் திட்டம் போட்டுத்தான் அப்பனும் புள்ளையும் என் எலும்பை உடைச்சீங்களா?"

"சேச்சே! நான் எதுவும் பண்ணலைப்பா. ஆனா உன் மகன் திட்டம் போட்டானோ என்னவோ... அவன் வந்ததும் கேளு!"

"யோவ்! என் புள்ளையைப் பார்த்தியா? எங்கே இருக்கானாம்? எப்படி இருக்கான்? எம் மருமக எங்கே? சொல்லுய்யா...!"

"பொறு ரங்கா. இப்போதைக்கு உன் மகன் வேலை பார்க்கிறான்னு மட்டும்தான் தெரியும். நான் இன்னும் அவனை நேரில பார்க்கலை."

"என்னப்பா சொல்றீங்க?"

"ஆமாம்மா... நம்ம காயத்ரி பொண்ணு வேலை செய்த கடையிலதான் இவன் டிரைவரா வேலை செய்யுறானாம். நேத்திக்கு நம்ம மீனாட்சிசுந்தரத்தைப் பார்த்தானாம். வேலை அதிகம். ஒரு ரெண்டு நாள் கழிச்சு வர்றேன்னு சொல்லி அனுப்பியிருக்கான்."

"மகமாயி! என் புள்ளை பத்திரமா இருக்காம்மா... அது போதும் எனக்கு..." - கைகளைக் குவித்துக் கண்ணீரோடு கும்பிட்டாள் ரங்கநாயகி.

"அப்போ... அண்ணி, காயு எல்லாம்?"

"அதாம்மா தெரியலை. தனியா வீடு பார்த்து வச்சிருப்பானோ... அவன் வந்தாத்தான் தெரியும். ஆனா மருமக தனியா போயிருக்கச் சம்மதிக்க மாட்டாளே...!"

"அதானே... அப்படியே வீடு பார்த்திருந்தாலும் நம்மகிட்ட வந்து ஒரு வார்த்தை கூடச் சொல்லாம இருக்க மாட்டாளே!"

"ஏன்டி! அந்தப் புள்ளையே உடம்பு முடியாத புள்ளை. அது எப்படி அலையும்!"

"அப்போ சின்னவ்வளையாவது அனுப்பிச் சொல்லியிருக்கலாமில்ல... நாம எவ்வளவு பயந்து போயிருக்கோம். கொஞ்சமாவது அக்கறை இருக்கா?"



"அம்மா! திரும்பவும் ஆரம்பிச்சிடாதே.. அடுத்தவங்க சூழ்நிலை புரியாம வார்த்தையை விடக்கூடாதும்மா... அங்கே என்ன சூழ்நிலையோ?"

"யோவ்! உன் பொண்ணு உன்னை மாதிரியே தான்யா... நான் எது சொன்னாலும் உடனே என் வாயை அடைச்சிடுது..."

"பின்னே... எல்லாருமே சாவித்திரி மாதிரி இருப்பாங்களா? நீ சொல்றதுக்கெல்லாம் தலையாட்டிட்டு இருக்க...!"

"யோவ்! அவ என் மருமகய்யா... இந்த வீட்டிலயே என் பேச்சைக் கேட்டு நடக்கிறது அவ மட்டும்தான். அந்தப் புள்ளையைக் கூடப் போய்ப் பார்க்க முடியாம இப்படிப் படுக்கையில தள்ளிட்டானே...!"

"போதும், விடும்மா. எல்லாம் நல்லதுக்குத்தான். நீ மட்டும் இப்படிப் படுக்கலேன்னா உன்கூட இதெல்லாம் எங்களால பேச முடியுமா? இல்லே... நீதான் பொறுமையா கேட்டிருப்பியா? இப்போ உன்னோட தவறு எல்லாமே உனக்குப் புரியுதுல்ல...!"

"ஆமான்டி.... சின்னக்குழந்தை நீ! உனக்கு இருக்கிற பக்குவத்தில பாதிகூட எனக்கு இல்லையே...! புத்தி கெட்டுப் போய் நடந்திருக்கிறேனே...!"

ரங்கநாயகியின் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது.

"சரிம்மா.. போனது போகட்டும். இனி நடக்கிறதெல்லாம் நல்லாவே நடக்கட்டும். முதல்ல காயுவைப் பார்க்க வந்தாங்களே... அந்த மாப்பிள்ளை வீட்டில

போய்ச் சம்மதம்னு சொல்லு. நடந்ததெல்லாம் விளக்கமாச் சொல்லிடு."

"நான் எப்படிப் போக முடியும்! என்னால கட்டிலை விட்டு இறங்கவே முடியலையே... நான் எப்படிப் போவேன்?"

"விடு ரங்கா! முதல்ல உடம்பு குணமாகட்டும். பிறகு போய்ச் சம்பந்தம் பேசலாம். உன்னைப் படுக்கையில வெச்சிக்கிட்டு எப்படிக் கல்யாணம் பண்ண முடியும்? நீ ஓடியாடி வேலை செய்ய வேண்டாமா?" - என்ற கணவனை இயலாமையாய்ப் பார்த்தாள் ரங்கநாயகி.

"இல்லையா... நல்ல காரியத்தைத் தள்ளிப் போடக் கூடாது. என் கால் குணமாகி நான் நடக்க ஆரம்பிக்கிற துக்குள்ள... அந்த மாப்பிள்ளைக்கு வேற எதுவும் கல்யாணம் கூடிப் போச்சுன்னா...?"

"அப்படி யெல்லாம் ஆகாது. அவர் நம்ம பொண்ணுக்காக எவ்வளவு நாள் வேணா காத்திருப்பார்..."

"எதுக்கும் நாம உறுதி செய்துக்க வேண்டாமா? இப்ப உள்ள நிலைமையை விளக்கிச் சொல்லிட்டா... அவங்களும் சந்தோஷமா காத்திருப்பாங்கள்ல...!"

"பரவாயில்லைம்மா... நீ கூட நிறைய யோசிக்கிறே... அதுவும் நல்லவிதமாவே யோசிக்கிற...! ரொம்ப சந்தோஷமா இருக்கு."

"அடிப்போடி நீ வேற... ராஜேஸ்வரி! நீ ஒரு உதவி செய்யணுமே!"

"சொல்லு ரங்கா."



"அந்த மாப்பிள்ளை வீட்டு அட்ரஸ் இருக்கு, தர்றேன். நீ ஒரு நடை நேர்ல போய் இங்கே உள்ள சூழ்நிலையைச் சொல்லி, கல்யாணத்துக்கும் நாள் குறிக்கச் சொல்லிடு ரியா?"

"அதுக்கு அவசியமே இல்லை அத்தே...!" - காயத்ரியின் குரலில் அனைவரும் திரும்ப, வாசல் கதவைப் பற்றிக் கொண்டு நின்றவளைப் பார்த்துத் திடுக்கிட்டனர்.

நைந்து போன காகிதமாய்... கலைந்த ஓவியமாய் நின்றாள் காயத்ரி. கலைந்த தலை, வறண்ட உதடுகள், களைத்த முகம்... என வெகு நாட்களாய்க் காய்ச்சலில் கிடந்தவள் போலத் தோற்றத்துடன் இருந்தாள்.

"காயு! என்னாச்சு உனக்கு? ஏன் இப்படி இருக்கே...?" - உமா பரிவோடு அவளை நெருங்கிக் கலைந்த கூந்தலை ஒதுக்கி விட்டாள்.

"வாம்மா! இத்தனை நாளா வீட்டுப் பக்கமே வராம இருந்திட்டீங்களே... அக்கா எப்படிம்மா இருக்கா? உன் முகம் ஏன் இப்படி வாடியிருக்கு? உனக்கும் உடம்பு சரியில்லையா?" - கேட்டுக் கொண்டே எழ முயற்சித்தாள் ரங்கநாயகி.

"வா... சின்ன மருமகளே! நல்ல காரியம் பேசும் போதுதான் வந்திருக்கே... உன் அத்தை என்ன முடிவு பண்ணியிருக்கான்னு தெரியுமா உனக்கு?"

"கேட்டேன் மாமா!"

"உன் அத்தை அடியோட மாறிட்டாம்மா. அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பன்னு சொல்வாங்களே... அதே மாதிரி

இந்த உமாக் குட்டிதான் அவ ஆத்தா மனசை மாத்தி யிருக்கா..."

"அப்பா! அம்மா ஒன்னும் கொடூரமானவங்க கிடையாது. கொஞ்சம் வேண்டாத குணங்களை வளர்த்துக் கிட்டாங்க. இப்போ அது தப்புன்னு உணர்ந்து அவங்களே மாறிட்டாங்க..."

"அந்தத் தப்பை உணர வெச்சது யாரு...? நீதானேம்மா...!"

"ந்தா! கொஞ்சம் சும்மா இருங்க அப்பனும் மகளும். எம்மா... காயத்ரி! என்னம்மா ஆச்சு உனக்கு? முகமெல்லாம் கலங்கிப் போயிருக்கு... காய்ச்சல் எதுனா அடிக்குதா? இப்படிப் பக்கத்துல வா!" - ரங்கநாயகி அழைக்க...

வெறித்த பார்வையோடு இயந்திரத்தனமாய் நடந்து ரங்கநாயகியின் காலடியில் அமர்ந்தாள்.

"காயத்ரி! உன் கஷ்டமெல்லாம் தீர்ந்து போச்சும்மா... அத்தையால இனி உனக்கு எந்தத் துன்பமும் தடையும் இல்லை. உன் மனசு போல அமோகமா வாழப் போறே! பெரிய இடத்து மருமகளா ஆகப் போறே!"

"அத்தே!"

"என்னம்மா...?"

"எனக்கு எந்தக் கல்யாணமும் வேண்டாம், அத்தே! கடைசி வரை இப்படியே இருந்திடுறேன், அத்தே!"

"என்னம்மா சொல்றே? எல்லாம் கூடி வர்ற சமயம்..."



"என்கிட்ட எதுவும் கேட்காதீங்க. எனக்குக் கல்யாணமே வேண்டாம். இந்த வீட்டு வேலைகளைச் செய்துக்கிட்டு அக்கா குழந்தைகளை வளர்த்துக்கிட்டு உங்களுக்கு அடங்கின பெண்ணா... உங்க கூடவே இருந்திடுறேன் அத்தே!

"தயவு செய்து என்னை எங்கேயும் வெளியே அனுப் பிடாதீங்க, அத்தே!"

"காயு! என்ன பேசுற நீ?" - உமா பதறினாள்.

"அத்தே! உமா கல்யாணத்தை நல்லபடியா முடிங்க. என்னை மட்டும் வற்புறுத்தாதீங்க. நான் கடைசி வரை உங்க காலடியிலேயே கிடந்து உயிரை விட்டுடுறேன் அத்தே! எனக்கு எதுவுமே வேண்டாம் அத்தே...!" - ரங்கநாயகியின் கால்களைப் பற்றிக் கொண்டு கதறி அழ ஆரம்பித்தாள் காயத்ரி.

அனைவரும் பதறிவிட, ரங்கநாயகி கணவனின் உதவியுடன் மெல்ல எழுந்து அமர்ந்து காயத்ரியின் முகம் பற்றி நிமிர்த்தினாள்.

கண்ணீர் நிற்காமல் வழிந்து கொண்டே இருக்க, விம்மியவளைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள்.

இதுநாள் வரை எதற்கும் கண்களில் துளி நீரைக் காட்டாதவள்... இன்று ஏன் இப்படிக் கதறுகிறாள்? எ இவளை இப்படித் துடிக்க வைக்கிறது? இந்தக் கண்ணீருக்கு காரணம் யாராய் இருக்கும்?

அவசரமாய் யோசிக்கத் துவங்கினாள்.

# 19

கண்களால் என் தேகம்
எங்கும் காயம் செய்கிறாய்!
கைகளால் என் காயம் நீவி
ஆறச் செய்கிறாய்!

வெற்றிக் களிப்போடு திரும்பிய அன்னையை வாசலில் நின்று வரவேற்றாள் மேகலா.

"மம்மி! என்னாச்சு? போன விஷயம் சக்ஸஸ்தானே!"

"டபுள் சக்ஸஸ் மேகாம்மா... இனிமே ஜனாவோட கதி அதோகதிதான்!"

"இஸிட்! வாவ்... என்ன மம்மி சொன்னீங்க?"

"முதல்ல உள்ளே வா. எல்லாம் சொல்றேன்..." - என மகளை அழைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்து கதவைச் சாத்தும்போது எதிர் வீட்டைப் பார்த்தவளின் முகம் மாறியது.

"மேகா! என்ன எதிர் வீட்டில லைட் எதுவும் எரியலை? பவர் கட்டா?"

"இல்லை மம்மி! அதுங்க எல்லாம் குடும்பத்தோட கிளம்பிப் போச்சுங்க..."

"எங்கே?"

"அது தெரியலை மம்மி. நான் அங்கே போகவே இல்லை..."

"தப்பு மேகாம்மா! அங்கே நமக்குத் தெரியாம என்ன நடக்குதுன்னு நாம கண்காணித்துக் கொண்டே இருக்கணும்."



"வொய் மம்மி?"

"நாம போய் அவளை மிரட்டிட்டு வந்திருக்கோம். இவங்க நமக்குத் தெரியாம அந்தப் பிச்சைக்காரி வீட்டில போய்க் கல்யாணம் பேசி முடிச்சிட்டாங்கன்னா...!"

"ஓ நோ மம்மி..."

"இப்ப அவங்க எங்கே போயிருக்காங்கன்னு தெரியணுமே?"

"கூல் மம்மி! விசாலத்தை அனுப்பி அவங்க வீட்டில வேலைக்காரி இருக்காளே... அவகிட்ட போய் விசாரிச்சிட்டு வரச் சொல்லுங்க."

"யா... குட் ஐடியா!" - மகளை மெச்சியவாறே வீட்டினுள் பார்த்துக் குரல் கொடுத்தாள் திலகவதி.

"விசாலம்! ஏய்... விசாலம்!"

"அம்மா!"

"உனக்கு அந்தத் தேவகி வீடு தெரியுமில்ல...?"

"தெரியும்மா..."

"அவகிட்ட போய் கோமதியோட ஃபேமிலி எங்கே போயிருக்காங்கன்னு கேட்டுட்டு வாம்மா!"

"அவ ஊர்ல இல்லைம்மா. அவளையும் கூட்டிட்டுப் போயிருக்காங்க."

"அவளையுமா... எங்கே?"

"வெளியூர் போல இருக்கும்மா... ஏதோ குல தெய்வம் கோவிலுக்கு வேண்டுதல் நிறைவேத்தப் போறதா

சொன்னா... வர ஒரு நாள்... இரண்டு நாள் ஆகும்னு சொன்னா..."

குழப்பமாய் மகளைப் பார்த்துவிட்டு, "சரி! நீ போ..." - என்றதும் விசாலம் சமையலறைக்குள் நுழைந்து கொள்ள, மகளிடம் திரும்பினாள் திலகவதி.

"என்ன மேகாம்மா... புதுக் குழப்பமா இருக்கு...!"

"இதுல என்ன குழப்பம் மம்மி! கோவிலுக்குத்தானே போறாங்க..."

"இல்லை கண்ணம்மா! வேண்டுதல் நிறைவேற்றன்னு சொன்னாளே... கவனிச்சியா?"

"ஆமா..."

"அதுதான் குழப்பம். ஏன்னா கோமதியோட ஒரே வேண்டுதல் அவ புள்ளைக்குச் சீக்கிரமா கல்யாணம் நடக்கணும்கிறதுதான்."

"ம்..."

"இப்போ கோவிலுக்குப் போயிருக்காங்கன்னா... அதுக்கு என்ன அர்த்தம்!"

"என்ன அர்த்தம்?"

"அவளோட வேண்டுதல் நிறைவேறி விட்டது என்று தானே அர்த்தம்."

"மம்மி!"

"நமக்குத் தெரியாம ஏதோ நடந்திருக்கு மேகா!"

"என்ன நடந்திருக்கும்?"

"இந்தப் பய அவகிட்ட பேசி சம்மதம் வாங்கியிருப்பானோ? நாம கஷ்டப்பட்டதெல்லாம் வீணாய்ப் போயிடுமே...!"

"போகாது மம்மி!" - மகளின் உறுதியான குரலில் வியந்தாள்.

"என்னடா சொல்றே?"

"யெஸ் மம்மி! நீங்க அவகிட்ட பேசும்போது பயம் என்ன?"

"சாயங்காலம் ஒரு ஆறு மணி இருக்கும்."

"இவங்க அதுக்கு முன்னாலயே கிளம்பிப் போயாச்சு."

"அப்படின்னா...!"

"நீங்க பேசப் போன நேரம் ரொம்ப அருமையான நேரம். அவ அப்படியே ஆடிப்போயிருப்பாளே...!"

"அதையேன் கேட்கிற! நான்கூட என்னவோ பெரிய புத்திசாலியா இருப்பான்னு நினைச்சேன். ஆனா சுத்த மண்டு. வடிகட்டின முட்டாளா இருக்கா!"

"என்ன மம்மி சொல்றீங்க?"

"நான் போய் அவளை எவ்வளவு அசிங்கமாப் பேச முடியுமோ அவ்வளவு மோசமா பேசுறேன். அந்த மண்டு என்னை ஒரு வார்த்தை திருப்பிக் கேட்கலை. அவ்வளவ ஏன், நான் யாருன்னு கூட கேட்கலைன்னா பாரேன்."

"என்ன... நீங்க யாருன்னு கூட கேட்கலையா ஆச்சரியமா இருக்கு... மம்மி!"

"ஆச்சரியம் மட்டுமில்ல... அதிசயம்கூட. இதுல என் வயசுக்கு மரியாதை குடுக்கிறாளாம். நான் நினைச்சிட்டுப் போனதைவிட மோசமான வார்த்தைகளைச் சொன்னபோது கூட பேக்கு மாதிரி அழுதிட்டு நிக்குது..."

"வாவ்... சூப்பர் மம்மி...! அழுதாளா? அப்போ நம்பிட்டாளா?"

"நம்பாம இருப்பாளா? சொன்னது யாரு? திலகா வாச்சே!"

"அதானே... இல்லாததை இருக்குன்னு நிரூபிக்கிற ஆளாச்சே நீங்க... அதனாலதான் வேற யாரையும் ஹெல்ப்புக்குத் தேடாம உங்களை அனுப்பினேன்..."

"என் குழந்தைக்காக நான் இதைக்கூடச் செய்ய மாட்டேனா?"

"தேங்க் யூ மம்மி! ஐ லவ் யூ மம்மி!" – தாயின் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டாள் மேகலா. திலகாவின் முகமும் மனமும் பூரித்துப் போனது. தன் மகளின் முகத்தில் தோன்றும் இந்தப் புன்னகைக்காக என்ன வேண்டு மானாலும் செய்யலாமே! அந்தப் பிள்ளைப்பூச்சியை விரட்டுவதா பெரிய வேலை?

"லாஸ்ட்டா என்ன சொன்னா மம்மி?"

"உனக்கும் ஜனாவுக்கும் நிச்சயதார்த்தம் முடிஞ்சு போச்சுன்னு சொன்னதுமே அவ சுத்தமா ஆடிப் போயிட்டா. அப்புறமா நான் பேசினதையெல்லாம் கேட்டுட்டுப் பொணம் மாதிரி அசையாம நின்னா... கடைசியில நான் போயிடு றேன்னு சொல்லிட்டுப் போயிட்டாம்மா.



"இனிமே ஹாஸ்பிடல் பக்கமே வராதேன்னு சொல்லி அனுப்பியிருக்கேன். வரவும் மாட்டா. ஜனாவைச் சிந்தவும் மாட்டா. இவன் எவ்வளவுதான் கெஞ்சினாலும் அவ நம்ப முடியாத அளவுக்குப் பேசிட்டு வந்திருக்கேன்."

"வாவ்! மம்மி... ரியல்லி யூ ஆர் கிரேட்.. ஐயாம் ஸோ ஹேப்பி..."

"குல தெய்வம் கோவிலுக்குப் போயிட்டு வந்தப் புறம்தான் இருக்கு வேடிக்கை. போகட்டும்... போய் நல்லா சாமியைக் கும்பிட்டுட்டு வரட்டும். என்னையும் என் பொண்ணையும் எவ்வளவு அலட்சியப்படுத்தினாங்க. அதுக்கெல்லாம் சேர்த்து வட்டியும் முதலுமா அவகிட்ட அவமானப்படப் போறாங்க... பாரு!"

"யெஸ் மம்மி! அவ தூக்கியெறிஞ்ச பிறகு... தானா என்னைத் தேடி வருவான். அப்போ காட்டுறேன் நான் யாருன்னு!"

"என்ன ஐடியா வெச்சிருக்கே... மேகாம்மா?"

"அது சஸ்பென்ஸ். பட் ரொம்ப சுவாரஸியமா இருக்கும் மம்மி!"

"ஜனாவைக் கட்டிக்கணும்னுதானே இவ்வளவும் பண்றே... அதுல எந்த மாற்றமும் இல்லையே...!"

"நோ மம்மி. முதல்ல அவகிட்ட இருந்து ஜனா நிரந்தரமா பிரியணும். அதுக்கப்புறம்தான் மத்ததெல்லாம் யோசிக்கணும்."

"சரிடா! எல்லாமே நாம நினைக்கிற மாதிரிதான் இருக்கும். வாம்மா... வந்து சாப்பிட்டுப் படுக்கலாம்."

"யா மம்மி! ஐயாம் ஸோ ஹேப்பி. ஸோ... இன்னிக்குத்தான் நான் நிம்மதியா தூங்கப் போறேன்...." - என்றவாறே கலகலத்துச் சிரித்தாள் மேகலா. அந்தச் சிரிப்பில் தாயும் இணைந்து கொள்ள, வீடு முழுக்க அவர்களது சிரிப்பொலி எதிரொலித்தது.

அதே சமயம் தன் வீட்டில் விறகு அடுப்பின் முன் அமர்ந்திருந்தாள் காயத்ரி. காய்ந்த விறகுகள் திகுதிகு வென எரிந்து கொண்டிருக்க, அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந்தது. தீ ஜ்வாலைகளின் ஒளியில் காயத்ரியின் முகம் செந்நிறமாய் மாறியிருந்தது. அழுது சிவந்திருந்த கண்கள் தக்காளிப் பழம் போல் சிவந்திருந்தன.

வீட்டின் பின்புறமாய் ஒற்றை அடுப்பை வைத்து அதிலேயே சமையல் செய்வது வழக்கம் என்பதால் சோறு பொங்குகிறேன் என்ற சாக்கில் அடுப்பருகே வந்து அமர்ந்து கொண்டாள். அவள் தேடிய தனிமை இங்கு தான் கிடைக்கும். இரண்டு அறைகள், ஒரு வெளிப்புறத் திண்ணை மட்டுமே உள்ள வீட்டில் தனிமை எங்கே கிடைக்கும்? மாமாவோ அத்தையோ எழுந்து வெளியே வரப் போவதில்லை.

அக்காவும் மாமாவும் வீட்டில் இல்லை. உமாவுக்குச் சீரியல் பார்க்காமல் இருக்க முடியாது. சீரியல் பார்க்கிறாளோ... மீனாட்சி சுந்தரத்தைப் பார்க்கிறாளோ... அது அவள் கவலை!

ராஜேஸ்வரி கூட வீடு வரை போய் வருகிறேன் எனச் சென்று விட, கிடைத்த தனிமையில் கண்களில் உள்ள மொத்தக் கண்ணீரும் வற்றி விடும் வரை அழுது தீர்த்தாள்.



ஜனாவைச் சந்தித்துப் பேசிய ஒவ்வொரு விநாடியையும் நினைத்து அவற்றை மறக்க முயற்சித்து, அதில் தோற்றுக் கண்ணீரை விரயமாக்கினாள். இத்தனை வருடங்களாய்த் துளியும் அசையாத மனம்... எதற்கும் கலங்காத மனம்... இன்று கலங்கித் தவித்தது.

வலிய வந்து உதவி செய்தபோது யூகித்திருக்க வேண்டும். வீடு தேடி வந்து பெண் கேட்டதை ஆராய்ந்திருக்க வேண்டும். பெற்றவளின் மனத்தைக்கூடப் புரிந்து கொள்ளாமல் வாக்குறுதிகளை அள்ளி வீசினானே... குழந்தைகள் பெற்றுக் கொள்வது வரை பேசினானே...!

அனைத்தையும் கேட்டுக் கொண்டு கிறங்கிப் போய் நின்றேனே... எத்தனை ஏமாளியாய் இருந்திருக்கிறேன். ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களை எப்படிக் குறை கூற முடியும்? இதில் முழுத் தவறும் என்னுடையது தான்.

நான்தான் பைத்தியக்காரியாய் இருந்து விட்டேன்.

தலையில் பட்பட்டென அடித்துக் கொண்டு அழுதாள். உடன்பிறந்தவளைக் கூட இருந்து கவனிக்க முடியாததை எண்ணி அழுதாள். கடைசி வரை அவன் முகத்தில் விழிக்கவே கூடாது என்ற வைராக்கியம் காயத்ரியை மெழுகாய் உருக வைத்தது.

இனி என்ன ஆனாலும் சரி... வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது. அவனது திருமணம் முடிந்து விட்டது என்ற செய்தி காதில் விழும்வரை அவன் பார்வையில் பட்டு விடக் கூடாது...

போதும்... அவனைப் பார்த்ததும் போதும். அவனால் கேட்ட சுடுமொழிகளும் போதும். கண்ணீரைத் துடைத்து விட்டுச் சமையலில் ஈடுபட்ட காயத்ரி ஒன்றை மட்டும் உணரவோ சிந்திக்கவோ இல்லை.

அந்த அம்மாள் சொன்ன நிச்சயதார்த்தம் எப்போது நடந்தது? தன்னைப் பெண் கேட்டுச் சென்ற பிறகு தினமும் தன் கண்ணில் ஜனா பட்டுக் கொண்டுதானே இருந்தான். பிறகெப்படி ரகசியமாய் நிச்சயதார்த்தம் நடந்திருக்கும் என்று சிந்திக்க மறுத்தாள்.

அதோடு ஜனாவை ஒன்றும் வருடக் கணக்காய் அறிந்திருக்கவில்லையே...! அவன்தான் மூன்று வருடங்களாய் விரும்பிக் கொண்டிருக்கிறேன் என்றான். இவள் அதுவரை அவனைச் சரியாய்ப் பார்த்ததுகூட இல்லை... பிறகு எப்படி அவனை முழுமையாய் அறிந்திருக்க முடியும்?

அப்படி அவனை முழுமையாய் அறிந்திருந்தால் இந்த வேதனைக்கும் கண்ணீருக்கும் அவசியம் இருந்திருக்காது.

சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும்தான் சில சமயங்களில் மனிதர்களை ஆட்டுவிக்கிறது. விதியின் வலிய கரத்தில் சிக்கித் திணற வைக்கிறது.

காயத்ரியின் நிலையும் அப்படித்தான் திணறிக் கொண்டிருந்தது. விதியின் கையில் அல்ல. சதியின் கையில். வஞ்சகர்களின் சதிக்கு வெகு சுலபமாய்ப் பலியாகி இருந்தாள்.

ஆனால் இவை எதையுமே அறியாத ஜனார்த்தனன் தன் சொந்த ஊரில் சொந்த உறவுகளுடன் உற்சாகமாய்க்



கொண்டாட்டமாய்த் தன் வருங்காலத் துணையைப் பற்றிச் சிலாகித்துக் கொண்டிருந்தான்.

மருத்துவமனையில் படுத்திருந்த சாவித்திரியோ கொட்டக் கொட்ட விழித்திருந்து... வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள். காயத்ரியின் வரவுக்காக... அவளது மாமியார் என்ன பேசினார்கள் என்பதை அறியும் ஆவலுடன் சாப்பிடவும் தோன்றாமல் ஆர்வமாய் எதிர் பார்த்துக் காத்திருந்தாள்.

இப்படியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு மன நிலையில் தவிக்க, இவை அனைத்தையும் மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது வானத்து நிலவு.

## 20

உன்னிடம் சொல்வதற்கு எண்ணம்
ஒன்றல்ல நூறு இருக்கு - அதை
நானும் சொல்ல நீயும் கேட்க
ஏது வார்த்தைகள்? என் மனம் உன் வசமே!

கதவைத் தட்டும் ஒலியில் ஆவலாய் நிமிர்ந்த சாவித்திரியின் முகம் மீண்டும் வாடியது. கேன்டீன் பணியாளர் கையில் சாப்பாட்டுடன் வர, மௌனமாய் வாங்கிக் கட்டிலில் வைத்தாள். வந்தவன் போய் விட மீண்டும் குழப்பிப் போனாள்.

'இந்தக் காயுவிற்கு என்ன ஆயிற்று? எங்கே போய் விட்டாள்... எதுவும் சொல்லவில்லை. வந்து பார்க்கவும் இல்லை. ஜனாவின் அம்மா என்ன பேசினார்கள் என்று கூட என்னிடம் சொல்லத் தோன்றவில்லையா? முழுதாய்

இரண்டு நாட்கள் இங்கு வராமல்... என்னைப் பார்க்காமல் இருக்க அவளால் எப்படி முடிந்தது?

வீட்டுக்குத்தானே போனாள்... ஒருவேளை அத்தை அடித்து மிரட்டி வீட்டோடு பூட்டி வைத்து விட்டாளோ? வீட்டில் யாரும் இல்லை என்ற தைரியத்தில் அந்த மாடசாமிக்குக் கட்டியே கொடுத்திருப்பாளோ?' - நினைக்கையில் உள்ளம் தவித்தது. இரத்த அழுத்தம் ஏறியது.

நிச்சயம் ஏதோ ஒரு தவறு நடந்திருக்கிறது. இல்லையென்றால் காயு வராமல் இருக்க மாட்டாள். ஐயோ! நான் இங்கு இருக்கிறேன். இவரும் வேலைக்குப் போய் விட்டார். மாமாவால் எழுந்து நடமாட முடியாது. உமாவுக்கு ஊர் சுற்றவே நேரம் போதாது.

இதுதான் சமயம் என்று அத்தையும் ராஜேஸ்வரியும் சேர்ந்து என் தங்கையைப் புதைகுழியில் தள்ளி விட்டார்களா? அந்தப் பாவிக்குக் கல்யாணம் செய்து அவனிடமே அனுப்பி விட்டார்களா? காயு! நீ எங்கேயம்மா இருக்கிறாய்? உனக்கு என்ன நடந்தது?

எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! படபடப்பாய் எழுந்து மெல்ல அறைக்குள்ளேயே நடைப்பயிற்சி செய்தாள். பேசாமல் வீட்டிற்கே சென்று பார்த்து விடலாமா? இங்கிருந்து பரிதவிப்பதைவிட வீட்டில் போய்ப் பார்த்து விடலாம். டாக்டரிடம் சொல்ல வேண்டுமே!

என்ன சொல்லிவிட்டுப் போவது? எதையாவது சொல்லிக் கொள்ளலாம் என நினைத்த நேரம் மீண்டும் கதவு தட்டப்பட்டது.

ஆவலாய் ஓடி... கதவைத் திறந்தாள்.



"ஹாய் அண்ணி!" - புன்னகையோடு நின்றான் ஜனார்த்தனன். செல்போனைக் காதில் வைத்திருந்தான். அவனருகே அவன் ஜாடையில் ஒரு அம்மாள். கையில் கூடை நிறையப் பழங்கள். முகத்தில் கனிவான புன்னகையோடு அன்று பெண் கேட்டு வந்திருந்த ஜனாவின் அம்மாவைப் பார்த்ததும் புன்னகைத்தாள் சாவித்திரி.

"வா... வாங்க... உள்ளே வாங்க..." - விலகி நின்று வழி விட்டாள்.

"ம்... இதோ பார்த்திட்டேன். போனைக் கொடுக்கட்டுமா? ஒன் மினிட்!" என்றவன் போனைச் சாவித்திரியிடம் நீட்டினான்.

"அண்ணி! ஃபோன் உங்களுக்குத்தான். பேசுங்க!"

"யாரு?"

"பேசிப் பாருங்க..." - என்றான் புன்னகையோடு.

"காயுவா?"

"அட... எப்பவும் காயு நினைப்புத்தானா? உங்கள் அன்புக் கணவர் பேசுகிறார். பேசுங்க..." - ஜனா குறும்போடு சொல்ல, மனதில் கிளர்ந்த புது உணர்வோடு செல்போனை வாங்கிக் காதில் வைத்தாள்.

"ஹலோ... என்னங்க...!"

"சாவிக்கண்ணு! நல்லா இருக்கியா? உடம்பு எப்படிம்மா இருக்கு?" - கணவனைப் பிரிந்து ஒரு சில நாட்களே ஆனபோதும் அவனது குரலைக் கேட்டதும் கண்களில் நீர் சுரந்தது. பேச முடியாமல் தடுமாறினாள்.

"அம்மா! அவங்க பேசட்டும். நாம வெளியே வெயிட் பண்ணுவோம்."

"ஐயோ! ஏன் வெளியே போறீங்க. உட்காருங்க... அம்மா! நீங்களும் உட்காருங்க."

"சரிம்மா... நீ பேசு!" - என்றவாறு அவர்கள் அமர்ந்து கொள்ள, மெல்ல நகர்ந்து ஜன்னல் புறமாய் வந்து நின்றாள்.

"என்னங்க! வேலை எல்லாம் பிடிச்சிருக்கா?"

"ரொம்பப் பிடிச்சிருக்கு சாவி! எல்லோரும் என்கிட்ட ரொம்ப மரியாதையா பழகுறாங்க. கணேஷ் தம்பியும் ஜனா தம்பியும் சொல்லி வைச்சிருக்காங்களாம். நான் நல்லா இருக்கேன் சாவி!"

"ரொம்ப சந்தோஷமா இருக்குங்க..."

"சாவி! இன்னும் பத்து நாள்ல நான் உன்னைப் பார்க்க வருவேன்..."

"வாங்க... எனக்கும் உங்களைப் பார்க்கணும் போல இருக்கு..."

"நீ மட்டும் என்னைப் பார்த்தே, அப்படியே அசந்திடுவே. நான் எப்படி இருக்கேன் தெரியுமா? மளமளன்னு ஷேவ் பண்ணி பேண்ட் சட்டையெல்லாம் போட்டுக்கிட்டு பெரிய ஆபீஸர் மாதிரி இருக்கேன் தெரியுமா?" - கணவனின் உற்சாகக் குரலில் கண்ணீரோடு புன்னகைத்தாள்.

"ரொம்ப சந்தோஷங்க..."



"அப்புறம் சாவி! நான் தினமும் யோகா கிளாஸ் கூட போறேன். இப்பல்லாம் எந்தக் கருமத்தையும் தொடுறதும் இல்லை. நினைக்கிறதும் இல்லை."

"அது போதும்ங்க..."

"நான் வரும்போது உனக்கு என்னவெல்லாம் வாங்கிட்டு வரப் போறேன் தெரியுமா?"

"எனக்கு எதுவும் வேணாங்க... நீங்க மட்டும் வந்தாப் போதும்."

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. நாளைக்கு உனக்கு ஒன்பதாம் மாசம் பொறக்குதில்ல... சீமந்தம் பண்ணணுமே... அதுக்குத் தேவையானதெல்லாம் வாங்கிட்டு வர்றேன்."

"இங்கே எதுக்குங்க?"

"டாக்டரம்மா உன்னை அலைய வைக்கக் கூடாதுன்னு சொன்னாங்களாம். அதனால உனக்கு ஆஸ்பத்திரியில வைச்சே சீமந்தம் பண்ணிடலாம்னு முடிவு பண்ணிட்டோம். அது விஷயமா ஜனா டாக்டரம்மா கிட்டயும் பேசிட்டாரு."

"இதெல்லாம் எனக்கு எதுக்குங்க?"

"என்ன சாவி இது! உனக்கு நான்தானே செய்யணும்... இதை யெல்லாம் வேண்டாம்னு சொல்லக் கூடாது. சந்தோஷமா இருக்கணும்."

"சரிங்க... அத்தை எப்படி இருக்காங்க? வீட்டுக்குப் போனீங்களா?" - தங்கையின் நினைவோடு உள்ளம் பதறக் கேட்டாள்.

"இன்னிக்குத்தான் நைட் வேலையில்லை. அதனால ஒரு ஆறு மணிக்கு வீட்டுக்குப் போகலாம்னு இருக்கேன்."

"என்னங்க... வீட்டுக்குப் போனதும் காயுவை இங்கே வரச் சொல்றீங்களா?"

"என்ன சாவி! காயு அங்கே இல்லையா?"

"இ... இல்லை. வீட்டுக்குத் துணி எடுத்திட்டு வர அனுப்பினேன். இன்னும் வரலை. அதான்..."

"அவ்வளவுதானே! வரச் சொல்லிடுறேன். சரி, சாவி... நீ வந்தவங்க கிட்ட பேசு. நல்ல விஷயம் பேச வந்திருக்காங்க. கடவுளை வேண்டிக்கிட்டுப் பேசு."

"பாருங்களேன்... இந்த நேரம் பார்த்துக் காயு இல்லை..."

"வருவா... நீ உடம்பைப் பார்த்துக்க. வந்தவங்க கிட்ட என் அம்மா பண்ணின குழப்பத்தைச் சொல்லி... மன்னிக்கச் சொல்லு. சாவி!"

"நான் பேசுறேங்க... நீங்க போனை வைச்சிடுங்க..." - என்றவாறு போனை ஜனாவிடம் கொடுத்தாள்.

"ரொம்ப நன்றி ஜனா!"

"இதுல என்ன இருக்கு, அண்ணி! பிரிஞ்சிருக்கிற இளம் தம்பதிகளுக்கு என்னால் முடிஞ்ச சிறு உதவி. அப்புறம் அண்ணி! இவங்க என் அம்மா கோமதி."

"அதுதான் தெரியுமே... வணக்கம்மா...!" - வணங்கினாள்.



"ஞாபகம் இருக்காம்மா உனக்கு! நான் அன்னிக்கு உன்னைச் சரியா கவனிக்கலை. நீ வெளியே வரவே இல்லையே!"

"அது அவங்க அத்தையின் கட்டளை."

"சரி, போகட்டும்... உடம்பு எப்படிம்மா இருக்கு?"

"ம்... பரவாயில்லைம்மா...!"

"இந்தாம்மா... இதுல ஆப்பிள், கிரேப்ஸ் எல்லாம் இருக்கு. அதோட நம்ம குலதெய்வம் கோவில் பிரசாதமும் இருக்கு. சாப்பிடும்மா..."

"சரிங்கம்மா..."

"உன் தங்கை எங்கே காணோம்?" - கண்களைச் சுழற்றித் தேடினாள், கோமதி.

"அவ வீட்டுக்குப் போயிருக்காம்மா... மாத்துத் துணி எடுத்திட்டு வரணும்னு..."

"வர நேரமாகுமோ?"

"வர்ற நேரம்தான்..." - தடுமாறியவளை ஜனாவின் கண்கள் ஆராய்ந்தன.

"அன்னிக்குப் பெண் பார்க்க வந்தப்பவும் பார்க்க முடியலை. இன்னிக்கு எப்படியும் பார்த்திடணும்னு ரொம்ப ஆவலா வந்தேன்."

"அம்மா! வருவாம்மா... என்ன அவசரம்?"

"என் மருமகளைப் பார்க்க அவசரமா இருக்காதாடா? நீ மட்டும் ஊர்ல இருந்து வந்ததும் வராததுமா கிளம்பி ஓடி வந்திட்டேல்ல..."

"சும்மா இருங்கம்மா..." - வெட்கமாய்க் குனிந்து கொண்டான்.

"ஏம்மா! உன் தங்கை எப்படி இருப்பாள்? உன்னை மாதிரி இருப்பாளா?" - கோமதி ஆவலாய்க் கேட்க, சாவித்திரியின் முகம் மாறியது.

"என்னம்மா இப்படிக் கேட்கிறீங்க? அன்னிக்குப் பார்க்கலியா?"

"நாங்க வரும்போது அவ வேலைக்குப் போயிருந் தாளே...!"

"அதில்லம்மா... இப்போ ரெண்டு நாள் முன்னால வந்தீங்களே?"

"நானா?"

"ஆமா! சாயங்காலமா வந்தீங்க... கார்டன்ல வெச்சுப் பேசலாம்னு நர்ஸ்கிட்ட சொல்லி அனுப்பியிருந்தீங்களே... நான் கூட அவளை அனுப்பினேனே...!"

"என்ன...!" - வியப்பாய் அன்னையைத் திரும்பிப் பார்த்தான் ஜனார்த்தனன்.

"அம்மா! எனக்கே தெரியாம வந்து உங்க மருமகளைப் பார்த்திட்டீங்களா?"

"ஜனா! இந்த ஹாஸ்பிடலுக்கே இன்னிக்குத்தான்டா முதல் முறையா வர்றேன். நீ கூட்டிட்டுப் போறேன்னு சொன்ன பிறகு உனக்குத் தெரியாம வருவேனா?" - கோமதியின் குரலில் இருவரும் திகைத்தனர். சாவித்திரி அதிர்ந்து போனாள்.



"அம்மா! நீங்க... நிஜமாகவே அன்னிக்கு வரலையா?"

"இல்லையேம்மா...!"

"ஐயோ! ஜனா... அப்போ அது யாராய் இருக்கும்?"

"பதறாதீங்க அண்ணி...! காயு வரட்டும்... கேட்கலாம்."

"ஜனா! என் பதட்டத்துக்குக் காரணம் இருக்கு..."

"அண்ணி!"

"ஆமா ஜனா! அந்த லேடியைப் பார்க்கப் போன காயு... பிறகு என்னைப் பார்க்கவே வரலை...!"

"என்ன...!" - அதிர்ச்சியாய் இருக்கையை விட்டு எழுந்தான்.

"ஆமா... அது யாரு? அவங்க என்ன பேசினாங் கன்னு தெரியலை. ஆனா அதுக்கப்புறம் காயு இங்கே வரவே இல்லை. அவளுக்கு என்ன ஆச்சோ தெரிய லையே!" - சொல்லும்போதே கண்ணீர் முட்டியது.

"அண்ணி! இதெல்லாம் எப்போ நடந்தது?"

"ரெண்டு நாளைக்கு முன்னால நீங்க வந்திட்டுப் போனீங்களே... நீங்க போய் ஒரு பத்து நிமிஷம்தான் இருக்கும். நர்ஸ் வந்து கூப்பிட்டா...!"

"வந்தது யாருன்னு பார்த்தீங்களா?"

"இல்லை. முன்பக்க கார்டன்ல இருந்து பேசணும்னு சொன்னாங்களாம். உங்க அம்மாதான் கூப்பிடுறாங்கன்னு நினைச்சு நான்தானே அனுப்பினேன்."

"அப்போ... காயு ஹாஸ்பிடலுக்கு வந்து ரெண்டு நாளாச்சா?"

"ஆமா ஜனா! என்ன நடந்ததுன்னு தெரியலையே...? ஒருவேளை அது என் அத்தை அனுப்பின ஆளாய் இருக்குமோ...!" - பயத்தில் உடல் நடுங்கினாள் சாவித்திரி.

"என்ன அண்ணி நீங்க? ரெண்டு நாளாகி யிருக்கு. எனக்கு ஒரு ஃபோன் பண்ணியிருக்கலாமே!" - என்றவாறு தன் செல்லை எடுத்தான்.

"எனக்கு உங்க ஃபோன் நம்பர் தெரியாதே! நீங்க வருவீங்க... சொல்லலாம்னு எதிர்பார்த்திட்டே இருந்தேன்."

"ச்சே! நான் ஒரு மடையன். அண்ணி. அன்னிக்கு உங்ககிட்ட பேசிட்டு காயுவோட சம்மதம் கிடைச்சதும் சந்தோஷத்தில வீட்டுக்குப் போனேன். எல்லாரும் ரொம்ப சந்தோஷப்பட்டாங்க. நல்ல காரியம் நடக்கப் போகுது. அதனால குலதெய்வம் கோவிலுக்குப் போயிட்டு வரலாம்னு அப்பா சொன்னாங்க...

"சரின்னு கிளம்பிட்டோம். போன் பண்ணிச் சொல்ல ணும்னுகூட தோணாமப் போச்சே எனக்கு...!"

"என்ன? அப்போ நீங்க ஊர்லேயே இல்லையா?"

"இல்லைம்மா... அரை மணி நேரம் முன்னாலதான் வந்து இறங்கினோம். உடனே இங்கே கிளம்பிட்டான். நானும் மருமகளைப் பார்த்தே ஆகணும்னு கிளம்பி வந்தேன். ஜனா... இப்போ என்னப்பா பண்றது?"

"அண்ணி! காயு வீட்டுக்குப் போறதாத்தானே சொன்னா..."



"ஆமா! வீட்டுக்குக் கிளம்பும்போதுதான் நர்ஸ் வந்து சொன்னா..."

"உங்க வீட்ல ஃபோன் இருக்கா?"

"இல்லை ஜனா!" - ஜனார்த்தனன் ஒரு கணம் கண் மூடி யோசித்தான். உடனே ஃபோனை எடுத்துக் கணேஷைத் தொடர்பு கொண்டான்.

"சொல்லுடா! ஊர்ல இருந்து வந்திட்டியா?"

"ம்... வந்திட்டேன், கணேஷ்!"

"இப்போ ஹாஸ்பிடல்லதானே இருக்கே?"

"ஆமான்டா... உனக்கு எப்படித் தெரியும்?"

"ஹும். இது பெரிய விஷயமா! ரெண்டு நாள் நடந்த கதையெல்லாம் உன் ஆளுகிட்ட அளந்திட்டு இருப்பியே...!"

"கணேஷ்! ஒரு சின்னச் சிக்கல்!"

"என்னடா... உங்களுக்குள்ள ஊடலா?"

"ம்... ஸீரியஸ் கணேஷ்!"

"ஓ.கே. சொல்லு... என்ன சிக்கல்?"

"நீ இப்போ கடையிலா இருக்கே?"

"ஆமா..."

"பாண்டியன்!"

"அவர் இப்பத்தான் வீட்டுக்குப் போனார். என்னடா... என்ன விஷயம்?"

"கணேஷ்! கடையில அப்பா இருக்காரா?"

"ம்... இருக்காங்க."

"அப்போ நீ உடனே வண்டி எடுத்துட்டு காயு வீட்டுக்குப் போ..."

"ஏன்டா?"

"போனதும் காயு இருக்காளா பார்! இருந்தா... உடனே எனக்குப் போன் பண்ணு."

கணேஷின் குரல் மாறியது. "என்னடா... எதுவும் பிரச்சனையா?"

"ஒரு சின்னக் குழப்பம்! நீ சொல்ற பதில்லதான் அது தெரியும். கொஞ்சம் சீக்கிரம் போறியா?"

"இதோ! பத்தே நிமிஷத்தில பார்த்திட்டுப் போன் பண்றேன்...."

"தேங்க்ஸ்டா! உடனே போன் பண்ணு!" - என்றவாறு போனைக் கட் பண்ணினான்.

"யாருகிட்ட ஜனா பேசுனீங்க?"

"கணேஷை வீட்டுக்கு அனுப்பியிருக்கேன், அண்ணி... இப்போ போய்ப் பார்த்திட்டுப் போன் பண்ணுவான்... நீங்க பதறாம உட்காருங்க..."

கோமதி சாவித்திரியைத் தோள் பற்றி அமர வைத்தாள்.

"இந்த மாதிரி நேரத்தில பதறக்கூடாதும்மா. உட்காரு... அழாதே! என் மருமகளுக்கு எதுவும் ஆகியிருக்காது."



"அம்மா...!" - பதட்டமாய்க் கோமதியின் கைகளைப் பற்றிக் கொண்டாள். மனம் தாறுமாறாய்த் துடித்தது. தங்கைக்கு எதுவும் ஆபத்து நேர்ந்திருக்கக் கூடாது என மந்திரம் போல் தொடர்ந்து உச்சரித்துக் கொண்டே இருந்தாள். கண் மூடி இறைவனை வேண்டினாள்.

ஜனாவின் போன் சிணுங்கியது. எடுத்துப் பார்த்து விட்டு எரிச்சலாய் கட் பண்ணினான்.

கோமதி மகனை ஏறிட்டாள். "யாருப்பா போன்ல?"

"மேகலா!"

"பேச வேண்டியதுதானே... ஏன் கட் பண்ணினே?"

"அம்மா! நான் கணேஷ் போனுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கேன். இந்த நேரம் பேச முடியுமா?" - சொல்லிவிட்டுத் தவிப்பாய் ஃபோனைப் பார்க்க... அது மீண்டும் அழைத்தது.

கணேஷ் பெயரைக் கண்டதும் ஆவலாய்ப் போனைக் காதிற்குக் கொடுத்தான். "கணேஷ்! பார்த்தியா?"

"கண்டேன் காயத்ரியை!" - கணேஷின் பதிலில் நிம்மதியாய்ப் புன்னகைத்தான். மனம் ஆசுவாசமடைந்தது. அவன் முகத்தைப் பார்த்து மற்றவர்களும் நிம்மதியாயினர்.

"வீட்லதானே இருக்கா?"

"ம்... சமைச்சிட்டு இருக்காளாம்."

"போனை அவகிட்ட கொடுடா... பேசணும் போல இருக்கு..."

"இதோ, கொடுக்கிறேன்..." - என்றவாறு காயுவை அழைப்பது இங்கு வரை கேட்டது.

காயத்ரியின் குரலைக் கேட்க ஆவலாய் இருந்தவனுக்கு அவளது பதில் செவியில் அறைவது போல் ஒலித்தது.

"யார்கிட்டயும் பேச முடியாது. எனக்கு நிறைய வேலை இருக்கு..." - என்ற அவளது குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

அவனது அதிர்வைக் கண்ட சாவித்திரி துணுக் குற்றாள். "என்ன ஜனா?"

"இல்லை... சிக்னல் கிடைக்கலை போலிருக்கு. நான் வெளியே போய்ப் பேசிட்டு வர்றேன். அம்மா! நீங்க அண்ணிகூட இருங்க..."

"சரிப்பா!" - என்றதும் வேகமாய் அறையை விட்டு வெளியேறினான்.

"கணேஷ்! என்ன ஆச்சு? காயு ஏன் இப்படிப் பேசுறா?"

"ஜனா! எனக்கும் புரியலைடா... பட்... ஸம்திங் ராங்!"

"என்னடா சொல்றே?"

"யெஸ்! காயத்ரிகிட்ட நிறைய மாற்றம் தெரியுது. என்னைப் பார்த்ததும் ரூமுக்குள்ள போயிட்டா. வெளியே வரலை. போன் பேசக் கூப்பிட்டேன். அவ...!"

"கேட்டேன். என் காதிலேயும் விழுந்தது."

"ஸாரிடா மச்சான். ஆனா காயு மனசில ஏதோ இருக்கு. அவ முகமே சரியில்லை..."



"வீட்ல எதுவும் பிரச்சனையாடா? எல்லாரும் உன்கிட்ட எப்படிப் பேசுறாங்க?"

"நார்மலா பேசுறாங்கடா... எல்லாருமே உன்னைப் பார்த்துப் பேசப் பிரியப்படுறாங்க. நீ வர்றியா?"

"இதோ வர்றேன். நீ அங்கேயே இரு!"

"இருக்கேன். சீக்கிரமா வா!"

"வந்திட்டே இருக்கேன்..." - என்றவாறு போனைக் கட் பண்ணிவிட்டுத் தாயிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வண்டியை எடுத்துக் கொண்டு காயத்ரியின் வீட்டை நோக்கிச் சீறிப் பாய்ந்து புறப்பட்டான்.

# 21

பாதச்சுவடுகள் போகும் பாதை
அறிந்திங்கு நானும் கூட வருகின்ற
நேரம் காண மறுப்பதோ நீயும் - உள்ளக்
கதவினை மெல்லத் திறந்து நீ
நெஞ்சில் இடம் தர வேண்டும்!

"அத்தே! நான் யாரையும் பார்க்கவோ பேசவோ விரும்பலை. தயவு செய்து நீங்களும் என்னைக் கஷ்டப் படுத்தாதீங்க..." - கதவின் பின்னால் இருந்தே காயத்ரி பேச, ஜனார்த்தனனின் தவிப்பு கூடியது.

"காயு! என்னாச்சி காயு? ஏன் இப்படிப் பண்றே? முதல்ல வெளியே வா!"

"நீங்க முதல்ல வெளியே போங்க."

"காயு!"

"உங்களுக்கு நிச்சயமான கல்யாணம் என்னால நிற்க வேண்டாம். தயவு செய்து போயிடுங்க."

"காயு! என்ன உளர்றே? என்ன நிச்சயம்... யாருக்குக் கல்யாணம்?"

"எனக்கு எல்லாம் தெரியும். சும்மா நடிக்க வேண்டாம்..."

ஜனாவின் முகம் மாறியது.

"என்ன... நான் நடிக்கிறேனா?"

"ஆமா! உங்க நடிப்பைப் பார்த்து நான் ஏமாந்தது போதும். தயவு செய்து வெளியே போங்க..."

"காயு! வீட்டுக்கு வந்தவங்க கிட்ட இப்படியா பேசுவ? சும்மா வெளியே போன்னு சொல்றியே... முதல்ல நீ வெளியே வா... என்ன ஏதுன்னு தெளிவா சொன்னாத் தானே எல்லாருக்கும் புரியும்."

"உமா! உனக்கு எதுவும் தெரியாது. சும்மா இரு."

"இதையேதாம்மா நானும் சொன்னேன். ஆனா அவ எதுவும் தெரியாதவ இல்லை. எங்ககிட்ட சொல்ல விருப்பம் இல்லாட்டி அவகிட்டயாவது சொல்லேன். நீ இப்படிக் கோபப்படுற அளவுக்கு இந்தத் தம்பி அப்படி என்னதான் பண்ணிச்சு?" - ரங்கநாயகி கட்டிலில் இருந்தவாறே குரல் கொடுக்க, காயத்ரியின் குரல் கம்மியது.



"நிறையப் பண்ணியிருக்கார். அதனாலதான் அவர் முகத்தைப் பார்க்காம பேசிட்டு இருக்கேன். அவரைப் போகச் சொல்லுங்க அத்தே...!"

"எனக்கு உண்மையான பதில் கிடைக்கிற வரைக்கும் இங்கிருந்து நகர மாட்டேன்.... காயு!" - ஜனாவின் குரல் உறுதியாய் ஒலித்தது.

"நான் எந்தப் பொய்யும் சொல்லலை. எனக்குக் கல்யாணம் பண்ணிக்க விருப்பம் இல்லை. அதனால..."

"இதுதான் உண்மையான பதில்ன்னா அதை என்னைப் பார்த்துச் சொல்லு. போயிடுறேன்.." - ஜனார்த்தனனின் பதிலில் தவித்துத் தடுமாறினாள்.

இவனைப் பார்த்துச் சொல்ல வேண்டுமா? அது முடியுமா? இதுவரை திரட்டி வைத்திருக்கும் துணிவு இவனது முகத்தைப் பார்த்தால் தகர்ந்து விடாதா?

இவனது குரலைக் கேட்டாலே மனமும் உடலும் துடிக்கிறது. அதை மறைக்கத்தானே மறைந்து கொண்டு பேசுகிறாள்... தவிப்பாய்க் கைகளைப் பிசைந்து கொண்டு நிற்க, கணேஷ் ஜனாவிடம் திரும்பினான்.

"ஜனா! இது சரிப்படாது. நான் போய் இவங்க அக்காவை அழைச்சிட்டு வர்றேன்."

"எதுக்குடா?"

"அவங்களுக்குத் தெரியாம எதுவும் நடந்திருக்காது. அவங்களைக் கூட்டிட்டு வந்து விசாரிச்சா... எல்லாம் தெரியப் போகிறது."

"அக்காவுக்கு எதுவும் தெரியாது!" - உள்ளிருந்தே அவசரமாய்க் குரல் கொடுத்தாள் காயத்ரி.

"அதை நாங்க அவங்ககிட்டயே கேட்டுத் தெரிஞ்சிக்கிறோம். ஜனா! வண்டியிலேயே கூட்டிட்டு வரவா! இல்லே... ஆட்டோவில அழைச்சிட்டு வரவா?" - கணேஷ் குரலைச் சற்று உயர்த்தியே கேட்க, "ஐயோ!" எனப் பதறியவாறே வெளியே வந்தாள்.

"என்ன... ஐயோ!"

"அக்கா நடமாடவே கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காங்க. அவளை அலைய வைக்காதீங்க..."

"அது எங்களுக்கும் தெரியும். இப்பச் சொல்லு. நான் அன்னிக்கு ஹாஸ்பிடல்ல இருந்து கிளம்பிப் போனதும் உன்னைப் பார்க்க வந்தது யாரு?" - நேருக்கு நேராய் நின்று கேட்டவனைக் காண இயலாமல் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"எல்லாம் உங்களுக்கு வேண்டியவங்கதான்..."

"எனக்கு... எனக்கு வேண்டியவங்களா...? யாரு?"

"அதை உங்க அம்மாகிட்டயே போய்க் கேளுங்க..."

"அம்மாகிட்டயா! ஏன்... அவங்களுக்கு என்ன தெரியும்?" - புரியாமல் கேட்க, கோபமாய் நிமிர்ந்தாள்.

"ஆஹா! உங்க அம்மாவுக்கு ஒண்ணுமே தெரியாதே! வாயில் விரலை வைத்தால் கூடக் கடிக்கத் தெரியாது..."

"காயு...!"



"கத்தாதீங்க. என்னை என்னவெல்லாம் பேசினாங்க தெரியுமா? ஒரு பொண்ணை எவ்வளவு தூரம் அசிங்கப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் அசிங்கப்படுத்தி அவமானப்படுத்தி... ச்சே! இத்தனை பேச்சுக்களைக் கேட்டும் இந்தப் பாழும் இதயம் துடிக்கிறதே!"

"காயு! நீ... என்ன சொல்றே?" - ஜனாவின் முகம் அதிர்ந்து போயிருந்தது.

"உண்மையைச் சொல்றேன்."

"நீ என் அம்மாவைப் பார்த்தியா... எப்போ?"

"நீங்க வெளியே போனதும் எனக்கு அழைப்பு வந்தது. நானும் போனேன். உங்கம்மா எனக்கு நிறையப் பட்டம் கொடுத்தாங்க. திகட்டத் திகட்டப் புகழாரம் சூட்டினாங்க."

"காயு! நீ ஏதோ தப்பாப் புரிஞ்சிட்டு இருக்கே...!"

"ஆமா... தப்பாத்தான் புரிஞ்சிக்கிட்டேன். உங்களை... உங்க மனசை... உங்க பேச்சை எல்லாமே தப்பாத்தான் புரிஞ்சுக்கிட்டேன்."

"காயு! ப்ளீஸ் நான் சொல்றதைக் கேளு!"

"போதும். நீங்க பேசினதை எல்லாம் கேட்டது போதும். இன்னும் பேசி என்னை முழுப் பைத்தியக்காரி ஆக்கிடாதீங்க."

"காயத்ரி! அந்தப் புள்ளை பேசுறதையும் கேளும்மா. அது என்ன சொல்லுதுன்னு கேட்போமே...!" - சீனிவாசன் பதமாய்ச் சொல்ல...

மறுப்பாய்த் தலையாட்டினாள்.

"வேண்டாம் மாமா... இவர் பேச்சைக் கேட்டு நான் மட்டும் ஏமாந்தது போதும். குடும்பத்தோட ஏமாற வேண்டாம்."

"அப்படியென்ன காயு! நான் உன்னை ஏமாத் திட்டேன்..."

"இல்லை... நீங்க ஏமாத்தலை. நான்தான் ஏமாந் திட்டேன். நீங்க சொல்றது எல்லாமே உண்மைன்னு முழுசா நம்புற அளவுக்கு ஏமாளியா இருந்துட்டேன்."

"இது உண்மை!"

"என்ன...?"

"நீ ஏமாளிதான். அதனாலதான் யாரோ வந்து உன்னைச் சுலபமா ஏமாத்திட்டுப் போயிருக்காங்க..." - என்றான் உறுதியாய்.

"நான் ஒண்ணும் மடச்சி இல்லை...!"

"ஆனா ஏமாளி. பயந்தவ... ஒருத்தர் வந்து உன்னைக் கண்டபடி பேசினா... யார்... எவர்ன்னு கேட்க மாட்டியா? பதிலுக்கு நாலு கேள்வியாவது திருப்பிக் கேட்க மாட்டியா?"

"கேட்டிருக்கலாம். ஆனா வந்தது உங்க அம்மா வாச்சே...! நீங்க எங்களுக்குச் செய்த உதவிதான் என் கண்ணு முன்னால வந்து நின்னது. என்னால... பேச முடியலை!"

"அது என் அம்மான்னு அவங்களே சொன்னாங் களா?"



"அவங்க அந்தஸ்துக்கு என்கிட்ட அறிமுகம் எல்லாம் செய்வாங்களா? அதுக்கெல்லாம் அவங்களுக்கு நேரமோ பொழுதோ இல்ல..."

"நீ என் அம்மாவை இதுக்கு முன்னால பார்த்தி ருக்கியா?"

"இல்லை."

"பிறகெப்படி என் அம்மான்னு நீயா முடிவு பண்ணிட்ட?"

"என்கிட்ட வந்து உங்களுக்கு நிச்சயமான பொண் ணோட போட்டோவைக் காட்டி அந்தக் கல்யாணத்துக்குத் தடையா இருக்கிறது நீதான். நீ அவன் பார்வையில படாம போயிட்டாத்தான் இந்தக் கல்யாணம் நடக்கும்னு சொன்னாங்களே...! தெருவில போகிற யாரோ வந்து இப்படியெல்லாம் சொல்வாங்களா?" - ஆத்திரமாய்க் காயத்ரி கேட்க, ஜனாவின் முகம் இருண்டது.

"என்ன... நிச்சயமான பொண்ணா?"

"ஆமா! அதை என்கிட்ட காட்டி ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்குன்னு என்கிட்டயே கேட்கிறாங்க. உங்க அம்மாவுக்கு எவ்வளவு வக்கிரப் புத்தி!"

"ஸ்டாப் இட் காயு! நீயா எதையாவது கற்பனை பண்ணிட்டுப் பேசாதே!"

"என்ன? நான் கற்பனை பண்ணினேனா? உங்களுக்கும் அந்தப் பொண்ணுக்கும் ஊரைக் கூட்டி

நிச்சயம் பண்ணலை? நீங்க அந்தப் பொண்ணுகூட ஊரைச் சுத்தலை?"

"நான்சென்ஸ்! என்ன உளர்ற?"

"நான் உளறலை. உங்க அம்மா சொன்ன தகவல் இது. கோடீஸ்வரியாமே... கோடீஸ்வரி மருமகளா வரும் போது என்னை மாதிரி பிச்சைக்காரியை அவங்களால ஏத்துக்க முடியுமா? இதைக்கூட உங்க அம்மாதான் சொன்னாங்க..."

"நோ... என் அம்மா அப்படி ஒரு நாளும் பேச மாட்டாங்க..."

"நான் காதால கேட்டேனே! கண்ணால பார்த்தேனே... ஊரைக் கூட்டி வெச்சு என்னைச் செருப்பால அடிச்ச மாதிரி கேட்டாங்களே... எத்தனை கேள்வி! எத்தனை வார்த்தைகள்... ஐயோ! அதையெல்லாம் இப்பக் கேட்டாலும் என் உடம்பெல்லாம் கூசுதே... தீயா எரியுதே!" - உடல் நடுங்க முகத்தை மூடிக் கொண்டு அப்படியே தரையில் அமர்ந்து அவள் அழ, விக்கித்துப் போனான் ஜனார்த்தனன்.

இவள் சொல்வது உண்மை. இவள் பட்ட அவமானம் உண்மை. ஆனால் இவளை இப்படிப் பேசியது சத்தியமாய்த் தன் தாயாய் இருக்க முடியாது. தாயின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

பேச்சற்று நின்றவனைத் தொட்டான், கணேஷ். மெல்லிய குரலில் அழைத்தான். "ஜனா!"

"ம்..."



"காயத்ரி சொல்றது எல்லாமே உண்மையா இருக்குமோ?"

"ம்... எனக்கும் அப்படித்தான் தோணுது."

"அம்மா அப்படியெல்லாம் பேசுவாங்களா?"

"டேய்! என்னடா நீயே இப்படிக் கேட்கிற... அம்மாவைப் பத்தி உனக்குத் தெரியாதா?"

"எனக்குத் தெரியும். ஆனா உனக்கே தெரியாம ஏதாவது கல்யாண ஏற்பாடு பண்ணியிருந்தால்?"

"கணேஷ்... நீ... நீ என்ன சொல்றே?"

"அந்தக் கல்யாணத்துக்குக் காயத்ரிதான் தடையாக இருக்கான்னு நினைச்சி உனக்குத் தெரியாம ஹாஸ்பிடலுக்கு வந்து மிரட்டிட்டுப் போயிருக்கலாமில்ல...!"

"இல்லைடா... அம்மா! எனக்குத் தெரியாம... என்னைக் கேட்காம எதுவும் செய்ய மாட்டாங்க. என் விருப்பத்தை மதிக்கிறவங்க..."

"என்ன ஸார்! உங்ககிட்ட நல்லவிதமாப் பேசிட்டு காயத்ரியை விரட்டலாம்னு கூட உங்கம்மா இப்படிச் செய்திருக்கலாமில்ல..." - உமா கேட்க, அவசரமாய் மறுத்தான்.

"நோ... நோ! அம்மா அப்படியெல்லாம் செய்ய மாட்டாங்க."

"அப்போ நான் பொய் சொல்றேனா?" - வெடுக்கென நிமிர்ந்தாள் காயத்ரி.

"நோ காயு! நான் அப்படிச் சொல்லலை."

"பின்னே? நான் இவ்வளவு தூரம் நொந்து... வேதனை தாளாம கண்ணீர் விடுறேன். இப்பக்கூட உங்க அம்மா அப்படிப் பேச மாட்டாங்கன்னுதானே சொல்றீங்க! உங்களுக்கு என் மேல... என் வார்த்தை மேல... நம்பிக்கை யில்லை இல்லே...!"

"நீ என்னை நம்பினாயா காயு!" – அவன் தீர்க்கமாய்க் கேட்க உறைந்து போனாள்.

"நீ என்னை நம்பவில்லையே... உனக்கு என் வார்த்தையில் நான் உன் மீது வைத்த அன்பில்... நேசத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையே! அதுதான் இத்தனை கஷ்டத்திற்கும் காரணம்!"

"எ... என்ன?"

"நீ என் மீது உறுதியான நம்பிக்கை வைத்திருந்தால் உன்னை இவ்வளவு சுலபமாய் ஒருவர் ஏமாற்றி இருக்க முடியுமா? யாரோ சொன்ன பொய்யை நம்பி என்னை வெறுக்கிறாய்! என் உண்மையான அன்பை நம்ப வில்லையே நீ?" – வருத்தமாய்ச் சொன்னவனைக் கண்டு அனைவரும் மனம் கசிந்தனர். ஆனால் காயத்ரி கோபமோ இன்னும் அதிகரித்தது.

"எப்படி நம்பாமல் இருப்பது! சொன்னது யாரோ அல்ல... உங்கள் அம்மா!"

"திரும்பவும் இதையே சொல்கிறாயே! உன்னை என் அம்மா பார்த்ததே இல்லையே... நான் உன் சம்மதம்



கிடைத்ததும் நேராய் வீட்டிற்குத்தான் போனேன். அம்மா, அப்பாவிடம் உன் சம்மதத்தைக் கூறியதுமே ரொம்ப சந்தோஷப்பட்டாங்க...

"எங்க குலதெய்வம் கோவில்ல விசேஷம் இருந்ததால அம்மா ஏதோ நேர்த்திக் கடன் இருக்குன்னு சொன்னதால குடும்பத்தோட கோவிலுக்குப் போயிட்டு இன்னிக்குத்தான் வந்தோம். வந்ததுமே அம்மா உன்னைப் பார்க்கணும்னு சொன்னதால அவங்களையும் கூட்டிட்டு உன்னைப் பார்க்க ஹாஸ்பிடலுக்குத்தான் போனேன்.

"அங்கே உன் அக்கா சொன்ன பிறகுதான் எனக்கு இந்த விஷயமே தெரியும். அப்படியும் அம்மாவிடம் கேட்டேன். அம்மா இதற்கு முன் அந்த ஹாஸ்பிடலுக்கே வரலைன்னு சொன்னாங்க..."

"அவங்க சொன்னா நம்பிடுவீங்க! அப்போ என்கிட்ட வந்து பேசிட்டு... இல்லை, மிரட்டிட்டுப் போனது யாரு?"

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன். அவங்க எப்படி இருந்தாங்க? பேர் ஏதாவது சொன்னாங்களா? அவங்க அடையாளத்தைச் சொல்லு காயு!"

"எதுக்கு?"

"அது யாருன்னு கண்டுபிடிக்க வேண்டாமா? அப்போதானே உன்னை நம்ப வைக்க முடியும்!"

"வேண்டாம். எதையும் ஆராய வேண்டாம். நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். என்னை விட்டுடுங்க. நான் எப்பவும் போல... இப்படியே இருந்திடுறேன்."

"அவ்வளவுதானா காயு!"

"அவ்வளவுதான். இனி இதைப் பற்றி யாரும் எதுவும் பேச வேண்டாம். உங்க வழியைப் பார்த்துக்கிட்டுப் போங்க. நான் யாரையும் பார்க்க விரும்பலை!" - மீண்டும் முகத்தை மூடிக் கொண்டு அவள் அழத் துவங்க, இருண்ட முகத்தோடு வெளியே திரும்பியவனின் கையைப் பற்றித் தடுத்தான் கணேஷ்.

"ஜனா! ஒரு நிமிஷம். நான் பேசுறேன்..."

"வேண்டான்டா... என்னால அவ அழ வேண்டாம். வா போகலாம்."

"ஏன்டா! அவதான் உண்மை புரியாம பேசுறான்னா நீயும் பேசாம கிளம்புற? எத்தனை வருஷக் கனவுடா! காயத்ரிதான் என் லைஃப்ன்னு ஒரு நாளைக்கு நூறு முறை சொல்லியே!"

"இப்பவும் சொல்றேன். இவதான் என் லைஃப். பட்... என்னால அவ மனசு கஷ்டப்படக் கூடாது. வா கணேஷ்!" - அவன் நடக்கத் துவங்க ரங்கநாயகி பதறினாள்.

"அம்மாடி காயத்ரி! இந்தப் புள்ளை தங்கமான புள்ளையா இருக்குதே... அது சொல்றதையும் நம்பும்மா... அந்தப் பொம்பளை வேற யாராவதா இருக்கப் போறா... அவ எப்படி இருப்பான்னு...!"

"வார்த்தைக்கு வார்த்தை என் குழந்தைன்னு சொன்னாங்களே... வேற யாரோ அப்படிச் சொல்லுவாங்களா?" - அழுகையினூடே கேட்ட காயத்ரியின் கேள்வியில் ஜனார்த்தனனின் நடை தடைப்பட்டது. முகம் முழுதும் பதறிவிட... வேகமாய்த் திரும்பிக் காயத்ரியை நெருங்கி, அவளருகே மண்டியிட்டு அமர்ந்தான்.



"காயு! இப்ப... என்ன சொன்னே... குழந்தையா?"

"ஆமா... உங்க அம்மா அப்படித்தான் சொன்னாங்க..."

"மை காட்! கணேஷ்... வந்தது யாருன்னு உனக்குப் புரியுதா?"

புருவம் சுருக்கி யோசித்தான், கணேஷ். "யாரு... மேகலாவோட அம்மா!"

"யெஸ். நிச்சயமாய் அவங்களாத்தான் இருக்கும். காயு! ஒன் மினிட்..." - என்றவாறு எழுந்து நின்று தன் பாண்ட் பாக்கெட்டினுள் கையை விட்டு பர்ஸை எடுத்துப் பிரித்தான். உள்ளே பாஸ்போர்ட் சைஸில் இருந்த கோமதியின் புகைப்படத்தை உருவிக் காயத்ரியின் முன்னால் நீட்டினான்.

"இவங்க யாருன்னு தெரியுதா?" - புகைப்படத்தை உற்றுப் பார்த்தாள். நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமத்தோடு புன்னகை சிந்திய கனிவான முகம். இதுவரை பார்த்ததில்லையே... மறுப்பாய்த் தலையசைத்தாள்.

"தெரியலை!"

"இவங்களை நீ பார்த்ததே இல்லையா?"

"ம்ஹூம்..."

"இதுதான் என் அம்மா..." - அமைதியாய் அவன் கூற, திகைத்துப் போனாள் காயத்ரி. விரல்கள் நடுங்க அந்தப் புகைப்படத்தை வாங்கிப் பார்த்தாள். கண்கள் கலங்கின.

"இ... இவங்களா... உங்க அம்மா?"

"ம்..."

"ஐயோ! அப்போ... அது யாரு?"

"ரொம்ப அதிக ஒப்பனையோடு தோள்ல ஒரு ஹேண்ட் பேக் போட்டிருந்தாங்களா?"

"ஆமா..." - வியப்பாய்த் தலையாட்டினாள்.

"அவங்க யாருன்னு அவங்களே சொல்வாங்க. கொஞ்சம் வெயிட் பண்ணு..." - என்றவன், தன் செல் ஃபோனை எடுத்துத் தாயைத் தொடர்பு கொண்டான்.

அவன் பேசப் பேசக் காயத்ரியின் முகம் திகிலாய் உறைந்தது.

## 22

நீ என்னைச் சேர்ந்திடும் வரையில்
இதயத்தில் சுவாசங்கள் இல்லை
நீ வந்து தங்கிய நெஞ்சில்
யாருக்கும் இடமே இல்லை!

**வா**சலில் வந்து நின்ற கோமதியைப் பார்த்ததும் ஆச்சர்யமாய் எழுந்து வந்து வரவேற்றாள், திலகவதி.



"அடடே... வா கோமதி! உள்ளே வா."

"திலகா! ஒரு அவசரம். நீ உடனே என்கூட வரணும். சீக்கிரம் வா."

"என்ன கோமதி! என்ன அவசரம்?"

"எல்லாம் நல்ல காரியம்தான். நீயும் உன் பொண்ணும் நினைச்சதை நிறைவேத்திட்டீங்களே! சரியான ஆட்கள்தான் நீங்க..."

கேலியாய்ப் பேசினாலும் கோமதியின் முகத்தில் தெரிந்த மாற்றம் லேசாய் உறுத்தியது. தங்களது திருவிளையாடல்கள் எதுவும் தெரிந்து விட்டதோ?

உள்ளூர ஏற்பட்ட கலக்கத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் இயல்பாய்ச் சிரித்தாள் திலகவதி.

"கோமதி! நீ என்ன சொல்றே?"

"திலகா! உன் கனவு பலிக்கப் போகுது. உன் பொண்ணோட ஆசையை ஜனா புரிஞ்சுக்கிட்டான் போல் இருக்கு..."

"என்ன... நிஜமாவா சொல்றே?" - பூரிப்பாய்க் கேட்டாள்.

"ம்... இப்பத்தான் ஜனா போன் பண்ணினான். என்னன்னு விபரமாச் சொல்லலை. அம்மா... நீங்க உடனே கிளம்பி திலகா ஆன்ட்டியையும் கூட்டிட்டு நான் சொல்ற இடத்துக்கு வாங்க. கல்யாணத்தைப் பற்றி முடிவெடுக்கணும்னு சொன்னான்."

திலகவதிக்கு ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது. முகமெல்லாம் பல்லாக, "கோமதி! நீ நிஜமாத்தான் சொல்றியா? என்னால நம்பவே முடியலையே?" - என்றாள்.

"என்னாலயும்தான் நம்ப முடியலை... எப்படியோ இப்போவாவது சம்மதிச்சானே... அதுவே போதும். நீ சீக்கிரம் வா. அவன் மனசு மாறுறதுக்குள்ளே எல்லாம் பேசி முடிச்சிடலாம்."

"கோமதி! நீ இப்படி திடுதிப்புன்னு வந்து சொன்னதும் எனக்குக் கையும் ஓடலை. காலும் ஓடலை. ஐயோ! இந்த நேரம் பார்த்து என் குழந்தை வீட்டில இல்லாம போயிட்டாளே... அவ மட்டும் இதைக் கேட்டான்னு வை... சந்தோஷத்தில துள்ளிடுவாளே...!"

"உன் குழந்தைகிட்ட பொறுமையா சொல்லிக்கலாம். நீ கிளம்பு. அவன் அங்கே காத்திருப்பான்."

"எங்கே?"

"அது எந்த இடம்னு எனக்குத் தெரியலை. டிரைவருக்குத் தெரியுமாம். போய்ப் பார்த்தாத்தான் தெரியும்."

"அடடா! இந்தப் பொண்ணு காரை எடுத்திட்டுப் போயிட்டாளே...!"

"அதுக்கென்ன... நம்ம கார்லயே போயிடலாம்... வா!"

"கோமதி! ஒரே நிமிஷம் வெயிட் பண்ணு. நான் புடவையை மாத்திட்டு வர்றேன்..."

"போதும் திலகா! இந்தப் புடவையே நல்லாத்தான் இருக்கு."



"சேச்சே! கல்யாண விஷயம் பேசப் போறோம். பளிச்சின்னு பட்டுப் புடவை கட்டிட்டுப் போக வேண்டாமா? நீ ஒரே நிமிஷம் உட்காரு. உடனே மாத்திடுறேன்."

"சரி... நான் வெளியே கார்ல வெயிட் பண்றேன். லேட் பண்ணிடாதே!"

"ரெண்டே நிமிஷத்தில வந்திடுறேன்...." - என்றவள் உற்சாகமாய்த் தன் அறைக்குள் நுழைந்து கொள்ள...

கோமதி வெளியே நின்ற காருக்குச் சென்றாள்.

கோமதி போய் விட்டாள் என்று தெரிந்ததும் அவசரமாய்ப் போனை எடுத்து மகளைத் தொடர்பு கொண்டாள்.

"என்ன மம்மி?"

"கன்னுக்குட்டி! உனக்கொரு குட் நியூஸ்..."

"என்ன... டாடி வர்றாரா?"

"ம்ஹூம். இது வேற... நீயே கெஸ் பண்ணு... பார்க்கலாம்."

"ம்ப்ச்...! இதுல என்ன சஸ்பென்ஸ்? நீங்களே சொல்லுங்க."

"நான் சொல்ற விஷயத்தை மட்டும் நீ கேட்டேன்னு வை... அப்படியே துள்ளிக் குதிச்சிடுவ..."

"முதல்ல விஷயத்தைச் சொல்லுங்க மம்மி! அப்புறம் பார்க்கலாம்."

"மேகாம்மா! நாம போட்ட திட்டம் சக்ஸஸ். உன் விருப்பம் நிறைவேறப் போகுது."

"மம்மி! வாட் யூ மீன்?"

"யெஸ் டியர்! ஜனா கல்யாணத்துக்கு ஓ.கே. சொல்லிட்டான்."

"வாட்... மம்மி! நிஜமாவா... இல்லை, சும்மா விளையாடுறீங்களா?"

"சேச்சே...! என் குழந்தையோட லைஃப்ல போய் விளையாடுவேனா? அவனே அவன் அம்மாவை அனுப்பி யிருக்கான். ஏதோ கோவிலுக்குன்னு நினைக்கிறேன். அங்கே போய்ப் பேசணும்னு கோமதி என்னை அவங்க கார்ல கூட்டிட்டுப் போக வந்திருக்கா..."

"வெயிட் மம்மி! கல்யாண விஷயம் பேசணும்னா ஒண்ணு அவன் வீட்ல பேசணும்... இல்லை, நம்ம வீட்ல பேசணும்... அவங்க ஏன் வெளியே பொது இடத்தில வைச்சுப் பேசணும்னு சொல்றாங்க?"

"மேகாம்மா... ஒரு சில நல்ல விஷயங்களைக் கோவில்ல வைச்சுப் பேசுறது நல்லதுன்னு சொல்வாங்க. அதிலேயும் கோமதி ஒரு பக்திப் பழமாச்சே... எங்க வைச்சுப் பேசினா என்ன... நமக்குக் காரியம்தானே முக்கியம்!"

"எனக்கென்னவோ கொஞ்சம் டவுட்டா இருக்கு மம்மி!"

"என்ன நீ... விஷயத்தைக் கேட்டுக் குதிப்பேன்னு நினைச்சா இப்படிச் சொல்றே?"



"இல்லை மம்மி! ஜனாவை நாம சாதாரணமா நினைச்சிடக் கூடாது. இன்னிக்கு நான் வீட்டில இருந்து கிளம்பும்போது பார்த்தேனே... ஒரு சின்ன ஸ்மைல் கூடப் பண்ணாம அலட்சியமா முகத்தைத் திருப்பிட்டுப் போனானே...!

"அதுக்குள்ள எப்படி மாறியிருப்பான்? மம்மி! சந்தேகமே இல்லை. இதுல ஏதோ உள்நோக்கம் இருக்கு. நாம உஷாரா இருக்கணும்."

"மேகா! என்னடா சொல்றே?"

"அவங்க ஏதோ காரணமாத்தான் உங்களைக் கூட்டிட்டுப் போக வந்திருக்காங்க. மம்மி! நீங்க கார்ல ஏறியாச்சா?"

"இல்லடா! டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வர்றேன்னு சொன்னேன்."

"கோமதி ஆன்ட்டி எங்கே இருக்காங்க?"

"வெளியே காரில உட்கார்ந்திருக்கா."

"ஓ.கே. மம்மி! நீங்க புறப்படுற மாதிரி கொஞ்சம் டிலே பண்ணுங்க... நான் இப்போ உடனே கிளம்பி வர்றேன். சேர்ந்தே போகலாம்!"

"மேகாம்மா... கல்யாண விஷயம் பேசப் பெரியவங்க தான் போகணும்... நீ எதுக்குடா?"

"நோ மம்மி! நீங்க என்ன பேசுறீங்கன்னு எனக்குத் தெரியணும். நான் கண்டிப்பா வருவேன்."

"கோமதி வேற அவசரப்படுத்துறாளே...!"

"பரவாயில்லை. வெயிட் பண்ணட்டும். நான் ஒரு டென் மினிட்ஸ்ல வந்திடுறேன். சேர்ந்தே போகலாம்."

"இப்போ நீ எங்கே இருக்க?"

"நான் இங்கே ஒரு வொர்க் ஷாப்ல நிற்கிறேன்."

"ஏன்... என்னாச்சு?"

"கார் கொஞ்சம் மக்கர் பண்ணுது மம்மி! அதான்... செக் பண்ணிட்டேன்."

"அதை எப்போ சரி பண்ணி நீ எப்போ கிளம்பி வர்றது? அதுவரைக்கும் கோமதி வெயிட் பண்ணுவாளா?"

"நான் உடனே காரை எடுத்திட்டு வர்றேன் மம்மி! பிறகு செக் பண்ணிக்கலாம்."

"மேகாம்மா! சொன்னா கேள். முதல்ல காரைக் கவனி. கார்ல தாறுமாறா போகாதே! எப்பவும் ஒரே மாதிரி இருக்காது."

"மம்மி! என்கிட்ட பேசுறதை விட்டுட்டு நீங்க கிளம்புங்க. இன்னும் பத்தே நிமிஷத்தில நான் வீட்ல இருப்பேன்."

"சரி! நாங்க வெயிட் பண்றோம். நீ பொறுமையா வா... சரியா?"

"ஓ.கே. மம்மி... பை!" - என்றவாறே மேகலா போனைக் கட் பண்ண, உடனே அது வீறிட்டது.

அலட்சியமாய்த் திரையைப் பார்த்தவளது முகம் மலர்ந்தது.



"ஹாய் டாடி! ஹௌ ஆர் யூ?"

"ஃபைன்மா... அங்கே எப்படி இருக்கீங்க?" - என்றார் மகேந்திரன்.

"வெரி ஃபைன் டாடி! என்ன திடீர்னு போன் பண்ணியிருக்கீங்க... இந்தியா வரப் போறீங்களா?"

"ஆமா... இன்னும் ஒன் வீக்ல வரலாம்னு இருக்கேன்."

"வாவ்! இந்த முறை எவ்ளோ நாள் இருப்பீங்க... டாடி?"

"ஒரு டென் டேஸ் இருப்பேன்."

"ஹூம்... வெறும் டென் டேஸ்தானா... என்ன டாடி நீங்க...!" - சிணுங்கினாள்.

"டோண்ட் வொர்ரிம்மா... இந்த முறை உங்களையும் மலேசியாவுக்கு அழைச்சிட்டு வந்திடலாம்னு இருக்கேன்."

"டாடி! என்ன திடீர்ன்னு?"

"நான் இல்லாம நீங்க ரொம்பக் கஷ்டப்படுறீங்களே...?"

"நோ டாடி! அப்படியெல்லாம் எதுவும் இல்லை. நானும் மம்மியும் ரொம்ப ஹேப்பியா இருக்கோம்."

"ஆனா மத்தவங்க ஹேப்பியா இல்லையேம்மா...!"

"டாடி!" - மேகலாவின் முகமும் குரலும் மாறியது.

"மேகா! அப்பா வரும்போதெல்லாம் எத்தனை முறை சொல்லியிருக்கேன். வீண் பிடிவாதம் பிடிக்கக் கூடாது.

அடுத்தவங்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது. நம்ம விருப்பத்தை அடுத்தவங்க மேல திணிக்கக் கூடாதுன்னு... ஆனா இதுல எதையுமே நீயும் உன் அம்மாவும் கேட்ட மாதிரி தெரியலையே...!"

"டாடி! வாட் டு யூ மீன்?"

"நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து என்ன காரியம் பண்ணிட்டு இருக்கீங்க... அங்கே?"

"நா... நாங்க என்ன பண்ணினோம்?"

"எல்லாம் என் காதுக்கு வந்துவிட்டது. இப்பத்தான் ஜனா போன் பண்ணி எல்லா விபரத்தையும் சொன்னான்...."

"என்ன?"

"உன் அம்மாவுக்குத்தான் நாலு டோஸ் விடணும்னு நினைச்சேன். அவ போன் எங்கேஜ்டா இருந்தது. உன் பங்கு இல்லாம அவ இதையெல்லாம் செய்ய மாட்டான்னு தெரியும். அதான் உனக்குப் போன் பண்ணினேன். ஏம்மா! படிச்சவ தானே நீ?

"இப்படியா சில்லறைத் தனமா நடந்துக்கிறது? ஒரு அப்பாவிப் பொண்ணைத் தேடிப் போய்த் தப்புத் தப்பா பேசியிருக்கா உன் அம்மா. ஜனா கட்டிக்கப் போற பொண்ணுகிட்ட போய் அப்படிப் பேசலாமா? அவங்க ஃபேமிலி நமக்கு எவ்வளவு ஹெல்ப்ஃபுல்லா இருக்கு.

"அவங்கள்ளாம் உங்களுக்குத் துணையா பாதுகாப்பா இருக்காங்க என்ற தைரியத்துலதானே... அப்பா இப்படிக் கடல் கடந்து வந்து கஷ்டப்படுறேன். அவங்க வீட்டில ஒரு



நல்லது நடக்கும்போது கூடமாட இருந்து உதவி செய்யுறதை விட்டுட்டு என்ன காரியம் பண்ணி வைச்சிருக்கீங்க ரெண்டு பேரும்...!"

"டாடி! ஐ லவ் ஜனா..."

"பட்... அவன் உன்னை விரும்பலையே?"

"அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. பட் ஐ வாண்ட் ஜனா."

"முட்டாள் மாதிரிப் பேசாதே. மேகா! பிடிக்காத ஒருத்தன்தான் வேணும்னு இந்த மாதிரி பைத்தியக்காரத் தனமான வேலையெல்லாம் செய்யாதே! இப்படியெல்லாம் செய்தா அவன் உன்னை விரும்பிடுவானா?"

"டாடி!"

"விரும்பாதவனைக் கட்டிக்கிட்டு எப்படியம்மா உன்னால சந்தோஷமா வாழ முடியும்! சந்தோஷமா வாழணும்னா ரெண்டு மனசும் ஒத்துப் போகணுமே..."

"டாடி! பிலீவ் மீ. ஜனா கிடைச்சாத்தான் என்னோட லைஃப் ஹேப்பியா இருக்கும்..."

"அவனோட லைஃப்?"

"அதைப் பற்றி நீங்க ஏன் கவலைப்படுறீங்க? மேரேஜ் ஆகிட்டா... அவன் தானா மாறிடுவான்..."

"தப்பு மேகா! இது பெரிய தப்பு. கிடைக்காதுன்னு தெரிஞ்சப்புறம்... அதை மறக்கிறதுதான் எல்லாருக்கும் நல்லது."

"நோ! என்னால முடியாது. ஜனாதான் என் ஹஸ்பண்ட்ன்னு எப்பவோ முடிவு பண்ணிட்டேன். அதை என்னால் மாத்திக்கவோ மறக்கவோ முடியாது. அவன்தான் தன்னோட மனசை மாத்திக்கணும்..."

"அவன் தெளிவா இருக்கான். தன்னோட லைஃப்ல வேற எந்தப் பெண்ணுக்கும் இடமில்லைன்னு சொல்லிட்டான். உன்னால தன்னோட லைஃப்புக்கு எதுவும் இடைஞ்சல் வரும்னுதான் என்கிட்ட போன் பண்ணிச் சொன்னான். நான்...உன்னால எந்தப் பிரச்சனையும் வராதுன்னு சொல்லியிருக்கேன்..."

"நோ... ஐ வாண்ட் ஜனா! யார் சொன்னாலும் சரி... நான் ஜனாவை விட்டுக் கொடுக்க மாட்டேன்..." - பற்களைக் கடித்தவாறே மகள் பேச...

மறுமுனையில் மகேந்திரன் அவசரமாய் யோசித்தார். இப்போதைக்கு இவளை ஏதாவது சொல்லிச் சமாளித்தால் போதும். மற்றவற்றை நேரில் போய்ப் பார்த்துக் கொள்ளலாம்.

"சரிம்மா... நீ இவ்வளவு தீவிரமா அவனை விரும்புறேன்னு நான் நினைக்கலை. சரி! நீ அமைதியா இரு. நான் வந்து ஜனாகிட்ட பேசுறேன்."

"டாடி! நிஜமாவா சொல்றீங்க?"

"ஆமான்டா. எனக்கு என் பெண்ணோட லைஃப் தான் முக்கியம். நான் சொன்னா ஜனா கேட்பான். ஆனா அதுவரைக்கும் நீயும் அம்மாவும் அவங்களுக்கு எந்தப் பிரச்சனையும் கொடுக்காம இருக்கணும்."



"சரி டாடி!"

பொண்ணையும் சேர்த்துத்தான் சொல்றேன்.

"அந்தப் பொண்ணு குளறுபடியில அந்தப் பொண்ணுதான் நீங்க பண்ணின குளறுபடியில ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கு. ஜனா என்கிட்ட சொல்லி ரொம்ப வருத்தப்பட்டான். இனிமே இப்படி எதையும் பண்ணாம இருங்க. நான் நெக்ஸ்ட் வீக் வந்து எல்லாத்தையும் சரி பண்ணிடுறேன்... சரியா?"

"ஓ.கே. டாடி!" - என்றவாறே போனைக் கட் பண்ணியவளின் முகம் ஆவேசமாய் மாறியிருந்தது. ஜனாவின் மீதும் காயத்ரியின் மீதும் மொத்தக் கோபமும் திரும்பியது.

'என் அம்மாவைக் கல்யாணம் பேசவென்று அழைத்து விட்டு என் தந்தையிடம் போட்டுக் கொடுத்தாயா? விட மாட்டேன் உன்னை... நீ யாரிடம் போய் முறையிட்டாலும் சரி... இந்த ஜென்மத்தில் நீ எனக்குத்தான்... எனக்கு மட்டும்தான்... என் உயிர் இருக்கும் வரை உன்னை இன்னொருத்திக்கு விட்டுத் தர மாட்டேன்.

"இன்னொருத்தியை மணக்கவும் விட மாட்டேன். உனக்கு எல்லாமே தெரிந்து விட்டதா? உன்னிடம் வந்து கண்ணீர் விட்டாளா அவள்? என் தாயை அழைத்து உண்மையை அந்த நாய்க்கு நிரூபித்துக் காட்டப் போகிறாயா? விட மாட்டேன். நீ நல்லவனாய் மாறிவிட்டால் என் கதி?

"மம்மியை அனுப்பக் கூடாது. மம்மி வாயால் அனைத்து உண்மைகளையும் நிரூபித்து விட்டால்

அவர்களது திருமணம் தடையின்றி நடந்து விடுமே! நான் இருக்கும் வரை அது நடக்காது. முதலில் மம்மியை அங்கு போக விடாமல் தடுக்க வேண்டும்...'

அவசரமாய் செல்லில் திலகவதியைத் தொடர்பு கொள்ள லைன் கிடைக்கவில்லை.

மீண்டும் மீண்டும் முயற்சித்துக் கடுப்பாய் போனை அணைத்தாள். அவர்கள் வீட்டை விட்டுக் கிளம்புவதற்குள் சென்று தடுக்க வேண்டும். வேகமாய்க் காரை நெருங்கி, கதவைத் திறந்து ஏறினாள்.

மெக்கானிக் ஓடி வந்தான். "அம்மா! உங்க காரை இன்னும் சரி பண்ணலைம்மா..."

"நீ பண்ணிக் கிழித்தது போதும். நான் அர்ஜெண்ட்டா வீட்டுக்குப் போகணும்!" - எனக் காரைக் கிளப்பிச் சீறிப் பாய விட்டாள்.

"ஐயோ அம்மா! பிரேக் வயர் கட்டாகி நிற்குதும்மா... காரை எடுக்காதீங்க... அம்மா!" - எனக் காரின் பின்னே ஓடிய மெக்கானிக்கின் குரல் காற்றோடு கரைந்து போனது. அதற்குள் வெகு தூரம் போய் விட்டிருந்தாள் மேகலா.

பொறுமையின்றி காரை விட்டு இறங்கித் திலகவதியின் வீட்டுக்குள் நுழைந்தாள் கோமதி. திலகவதி போனைக் குடைந்து கொண்டிருக்க... கோபமாய் அவளை நெருங்கினாள்.

"என்ன பண்ணிட்டு இருக்கே திலகா... டயமாகுதுன்னு சொன்னேனே...!"



"வா கோமதி! போன் கீழே விழுந்தது. என்ன ஆச்சுன்னு தெரியலை... இப்ப வொர்க் பண்ண மாட்டேங்குது."

"அதை வீட்டுல போட்டுட்டு வா. ஏற்கெனவே நேரமாச்சுன்னு ஜனா ரெண்டு வாட்டிப் போன் பண்ணிட்டான்."

"இல்லை கோமதி! மேகா போன் பண்ணினாலும் பண்ணுவா... அதான்..."

"அதையெல்லாம் பிறகு சரி பண்ணிக்கலாம். முதல்ல நீ வா..." - எனத் திலகவதியின் கையைப் பற்றி எழுப்பினாள் கோமதி.

போன் இன்னும் இருட்டாகவே இருக்க, மனமே இல்லாமல் அதைக் கட்டிலில் வைத்து விட்டுக் கோமதியுடன் கிளம்பினாள்.

தலையில் பூச்சூடிக் கொள்கிறேன்... வளையலை மாற்றிக் கொண்டு வருகிறேன்... என அப்படி இப்படியுமாய் இருபது நிமிடத்தைக் கடத்தியபோதும் மேகலா வீடு வந்து சேரவில்லை.

திலகவதி எரிச்சலாய் மணியைப் பார்த்தாள்.

பத்து நிமிடத்தில் வந்து விடுவேன் என்றவள் முக்கால் மணி நேரமாய் என்ன செய்கிறாள்? இதற்கு மேலும் நேரத்தைக் கடத்தினால் அது நன்றாய் இராதே...

தயக்கமாய்க் கோமதியை நெருங்கினாள்.

"கோமதி! மேகா வர்ற நேரம்தான். ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணி அவ வந்ததும் சொல்லிட்டுப் போகலாமா?"

"திலகா! நீ வேணும்னேதான் லேட் பண்றே. எனக்குப் புரிஞ்சு போச்சு... உனக்கு இந்தக் கல்யாணத்தில விருப்பம் இல்லையோ?"

"ஐயய்யோ! என்ன கோமதி இப்படிச் சொல்றே?"

"நீ பண்றதும் அப்படித்தானே இருக்கு. என் புள்ளை போன் பண்ணி ஒரு மணி நேரமாச்சு. அங்கே அவன் நமக்காகக் காத்திருப்பானே...! நான் வேணா போன் பண்ணி அவனைப் போகச் சொல்லிடவா?"

"கோமதி! அப்படி எதுவும் செய்திடாதே... இந்தக் கல்யாணம் கைகூட நான் எவ்வளவு பாடுபட்டிருக்கேன்...!"

"அதான் தெரியுமே...!"

"என்ன...?"

"இது உன்னோட ரொம்ப நாள் ஆசையாச்சே! அதைச் சொன்னேன்."

"ஓ! சரி, கோமதி... அவ வரும்போது வரட்டும். நாம கிளம்புவோம்..." - என்றவாறே தன் அறையைப் பூட்டி விட்டுக் கிளம்பினாள். செருப்பை மாட்டும் போதும் காரில் ஏறும்போதும் கூட... மகள் வந்து விட மாட்டாளா எனப் பார்வையை அலைய விட்டாள்.

மேகலா வரவே இல்லை. ஏமாற்றமாய்க் காரில் ஏறி அமர்ந்ததும், கார் புறப்பட்டது.

எதிரில் வருகிறாளா எனப் பாதையைக் கவனித்துக் கொண்டே வந்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.



பத்து நிமிட தூரம் சென்றதும் கார் தன் வேகத்தைக் குறைத்தது. மெதுவாய் நின்றது. சாலையில் ஏதோ சலசலப்பு... கூட்டம்!

"என்னாச்சுப்பா?" - கோமதி குரல் கொடுத்தாள்.

"ஏதோ ஆக்ஸிடெண்ட்ம்மா... லாரிக்கடியில கார் மாட்டியிருக்கு!" - டிரைவர் சொல்ல, பார்வையை வெளியே வீசிய திலகவதியின் இரத்தம் உறைந்தது. இது... தங்கள் கார் ஆயிற்றே!

கார் உருத் தெரியாமல் நசுங்கிப் போயிருக்க, துடித்துப் போனாள்.

"ஐயோ! மேகா... மேகா... என் குழந்தை..." - எனக் கதறியவாறே காரைத் திறந்து கீழே இறங்கி ஓட, கோமதியும் பதட்டமாய் இறங்கி ஓடினாள்.

ராட்சத டேங்கர் லாரியின் சக்கரங்களுக்கு அடியில் சிக்கிக் காரோடு நசுங்கிப் போயிருந்த உருவத்தைக் கண்டதும்...

"மேகா... ஆ...ஆ....!" - என்ற வீறிடலோடு மயங்கிச் சரிந்தாள் திலகவதி. கூட்டம் வேகமாய்க் கூட ஆரம்பித்தது.

## 23

மனதில் நின்ற காதலியே
மனைவியாக வரும்போது
சோகம் கூடச் சுகமாகும்
வாழ்க்கை இன்ப வரமாகும்!

கையிலிருந்த கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தான் ஜனார்த்தனன்.

"கணேஷ்! அம்மா இன்னும் என்ன பண்றாங்க?"

"ஜனா! அம்மா எப்பவோ ரெடியாகியிருப்பாங்க. திலகா ஆன்ட்டி கிளம்ப இன்னும் டு ஹவர்ஸ் ஆகும்.

"வா! நாம வெளியே போய்ச் சாப்பிட்டு வரலாம்."

"சாப்பாடா? காயுவோட சந்தேகத்தைத் தீர்க்கும் வரை எனக்குப் பசிக்காது..."

"எனக்குப் பசிக்குதுடா. நீ பாட்டுக்குக் கிளம்பி வான்னுட்டே.... சாப்பிட்டியா இல்லையான்னு ஒரு வார்த்தை கேட்டியா?"

"ஸாரிடா நண்பா. எனக்கு இது தோணாமப் போச்சே!"

"எப்படித் தோணும். உன் நினைப்புல காயத்ரி மட்டும் தானே இருக்கா?"

"அடடே! வாங்க தம்பி! எப்போ வந்தீங்க?" - என்ற வாறே கையில் பார்சலுடன் வந்தான் பாண்டியன்.

"வாங்கண்ணே! எனக்கு முன்னால கிளம்புனீங்களே... இப்பத்தான் வர்றீங்க..."

"அது ஒண்ணுமில்லப்பா. இந்த வாரச் சம்பளம் அப்பா தந்தாங்க. அதனால வீட்டுல உள்ளவங்களுக்கு ஏதாவது வாங்கிட்டு வரலாம்னு..."

"ம். ம். புரியுது. ஜமாய்ங்க!"



"ஆமா நீங்க எங்கே இங்கே?"

"அதையேன் கேட்கிறீங்க? உங்க மச்சினிச்சி செம ரகளை பண்ணிட்டா!"

"என்ன காயுவா? அவ அமைதியான பொண்ணாச்சே."

"ம்க்கும். கொஞ்சநேரம் முன்னால வந்திருக்கணும் நீங்க..."

"ஏன் என்னாச்சு?"

"அண்ணா! அதையெல்லாம் பொறுமையா பேசலாம். முதல்ல அம்மாவைக் கவனிங்க. பாவம்! எழுந்திருக்க முடியாம சிரமப்படுறாங்க பாருங்க!" - ஜனா சொன்ன பிறகே கட்டிலைப் பார்த்தவன், கையிலிருந்த பொருட்களைத் தங்கையிடம் கொடுத்து விட்டுக் கட்டிலை நெருங்கினான்.

"அம்மா! மெய்யாகவே உனக்கு நடக்க முடியலை யாம்மா! ஐயோ! ஏதோ கோபத்துல சொல்றேன்னு நினைச்சேனே. ரொம்ப வலிக்குதாம்மா. உன்னை இப்படி படுக்கையில போட்டுட்டேனே..." - கண்கள் கலங்கியவனை அணைத்துக் கொண்டாள் ரங்கநாயகி.

"ராசா! அந்த வலியெல்லாம் போச்சுப்பா. நீ வேலைக்குப் போறியாமே... ரொம்ப சந்தோஷமா இருக் குய்யா!"

"இனிமே ஒழுங்கா வேலைக்குப் போறேம்மா. கணேஷ் தம்பி கடையிலதான் வேலை. ஜனா தம்பிதான் வாங்கிக் கொடுத்தது..."

"ஐயா! எங்க குடும்பத்துக்கு எவ்வளவு உதவி செய்திருக்கீங்க. உங்களைப் போயா இந்தப் புள்ள சந்தேகப் படணும்..."

பாண்டியன் காயத்ரியை ஏறிட்டான்.

"என்ன? சந்தேகமா? யாரை யார் சந்தேகப்பட்டது?

"அண்ணே! இது சந்தேகம் இல்ல. காயத்ரியை எனக்கு தெரிஞ்ச ஒரு பெண்மணி நல்லா குழப்பியிருக் காங்க. அதைத் தெளிவுபடுத்திக்கத்தான் வந்தோம்."

"என்ன குழப்பம் ஜனா?"

"எங்க எதிர்வீட்டு ஆன்ட்டி அவங்க பொண்ணுக்கு என்னைக் கேட்டாங்க. நான் காயத்ரியை விரும்புகிறேன்னு தெரிஞ்சதும் அவங்க பொண்ணு மேல உள்ள அக்கறையில காயத்ரியைக் கொஞ்சம் மிரட்டிப் பார்த்திருக்காங்க. இவ ஏற்கெனவே பயந்த சுபாவம் உள்ளவ இல்லையா?

"அதான் ரொம்ப பயந்து போயிட்டா. ரெண்டு நாளா ஹாஸ்பிடலுக்கும் போகாம அழுது ஆர்ப்பாட்டம் பண்ணிட்டா. அவளைச் சமாதானம் செய்யத்தான் நான் வந்தேன்." - வழக்கமான புன்னகையோடு ஜனார்த்தனன் சொல்ல, பிரமிப்பாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள் காயத்ரி.

'என்ன ஒரு மனிதன் இவன்! எத்தனை பெரிய பிரச்சனையை எவ்வளவு எளிதாய்ச் சொல்லி முடித்து விட்டான். இவனைப் போய் என்னவெல்லாம் பேசிவிட்டேன். இவனது தாயின் புகைப்படத்தைப் பார்த்தபோதே நடந்த தெல்லாம் சதி என்று புரிந்து போயிற்றே...



ஆனாலும் தவறைச் செய்தவள் மூலமே அதை நிரூபிக்க வேண்டும் என்று எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு இப்படிக் கால்கடுக்க நிற்கின்றானே. இவனா பொய்யானவன்? இவனையா ஏமாற்றுக்காரன் என்றேன்... கடவுளே!'

தன் கண்ணில் நீரைக் கண்டாலே பதறி வரும் இவன் தாயல்லவா? என் மனம் வருந்தாமல் இருக்கப் போராடும் இவன் என் தந்தையல்லவா? கடைசிவரை என்னை இதயத்திற்குள் பொத்திப் பாதுகாக்கும் இவன் என் இணை அல்லவா? இவனை என் துணையாய் அடைய என்ன தவம் செய்தேன்?

எவளோ ஒருத்தியின் பேச்சை நம்பி என் இணையை நானே சந்தேகிக்கலாமா? எனக்காக என்னை மட்டுமே விரும்பி வந்தவன் ஆயிற்றே. இவன் மனமும் அதில் உள்ள நேசமும் பரிசுத்தமானவை. இதை எனக்கு உணர வைத்தவள் அந்த அம்மாள்.

அவள் வந்தால்... நிச்சயம் அவளுக்கு நன்றி கூற வேண்டும். கடவுள் நிகழ்த்தும் ஒவ்வொரு நிகழ்விற்குப் பின்பும் ஒரு நன்மை இருக்கத்தான் செய்கிறது. அத்தைக்கு அடிபட்டதால் தான் அவள் மனம் மாறத் துவங்கியது. இந்தப் பிரச்சனை வந்ததால் தன் மனம் எத்தனை தூரம் இவனை விரும்புகிறது என்பதைத் தன்னால் உணர முடிந்தது.

தன்னுடைய பிரியத்தை அவனும் முழுதாய் உரைத்தது இன்றுதானே. இவை அனைத்திற்கும் காரணம் அந்த அம்மாள்தானே. இனி யார் எதைச் சொன்னாலு

ஏமாறமாட்டேன் ஜனா. உங்கள் உண்மையான அன்பைப் புரிந்து கொண்டேன். என் வாழ்வின் வரமாய் வந்தவர் நீங்கள்... உங்களை இழக்க மாட்டேன். இதற்கு மேலும் யாருடைய விளக்கமும் எனக்குத் தேவையில்லை. உங்கள் அன்பை நம்புகிறேன். உங்கள் நேசத்தை... உங்களது வார்த்தைகளை நம்புகிறேன். என்னை மன்னித்து விடுங்கள் ஜனா. உண்மை நிலை புரியாமல் உங்களை நான் நிறையக் காயப்படுத்தி விட்டேன்.'

"காயு! உன்னை உன் ஆள் கூப்பிடுகிறார்!" - ரகசிய மாய்க் கிசுகிசுத்தாள் உமா. சட்டென நிமிர்ந்தாள்.

"என்ன ஜனா?"

"காயு! அம்மாவை இன்னும் காணோம். நான் போய் அழைச்சிட்டு வர்றேன். அப்படியே திலகா ஆன்ட்டியையும்..."

"வேண்டாம் ஜனா!"

"என்ன? அவங்க வந்தாதான் உனக்கு எல்லாம் புரியும்."

"புரிந்து கொண்டேன் ஜனா. உங்களை... உங்கள் பிரியத்தைப் புரிந்து கொண்டேன்."

"காயு? பேசுறது நீதானா?"

"ஆமாம். உங்கள் காயுதான் பேசுகிறேன்."

"பாருடா இந்தப் பெண்ணை. இவ்வளவு நேரமா வெளியே போன்னு குதிச்சா. இப்போ உங்கள் காயுவாமே. யப்பா! இந்தப் பொண்ணுங்களை மட்டும் நம்ப முடியல!" - கணேஷ் சொல்ல, அவனை இடித்தான் ஜனா.



"டேய்! அவளே கோபத்தை மறந்தாலும் நீ மறக்க மாட்டியா?"

"அவ மறக்கலாம். அவ மேல உள்ள மயக்கத்தில நீயும் மறக்கலாம். ஆனா என்னால மறக்க முடியாது."

"எதை?"

"வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னதை!"

"சொன்னதும் போயிட்டீங்களா... வீட்லதானே நிற்கிறீங்க!" - உமா கேட்க, "வேற வழி? நண்பனுக்காக எல்லா அவமானத்தையும் பொறுத்துக்கொள்ள வேண்டியது தான். இவனைத் தனியே விட்டுட்டுப் போக முடியுமா?" - என்றான் பரிதாபமாய்.

"என்ன, வெளியே போகச் சொன்னாளா? காயு! என்னம்மா இது. வீட்டுக்கு வந்தவங்கள அதுவும் உன்னைச் சமாதானம் பண்ண வந்தவரை இப்படியா விரட்டுவது?"

"ஸாரி மாமா!"

"சரி. வந்தவங்களுக்குக் காபி எதுவும் கொடுத்தீங்களா இல்லையா?" - பாண்டியன் கேட்ட பிறகே அனைவருக்கும் உறைத்தது.

உமாவும் காயத்ரியும் உள்ளே ஓட, நாற்காலியை எடுத்துப் போட்டான் பாண்டியன்.

"உட்காருங்க தம்பி!"

"அண்ணே! கை கொடுங்க..."

"எதுக்குப்பா?"

"உங்களுக்காவது எங்களை உட்காரச் சொல்லணும்னு தோணிச்சே!"

"அப்போ இவ்வளவு நேரமா நின்னுகிட்டேதான் இருந்தீங்களா?"

"ம். ஸ்கூல்ல படிக்கும் போதுகூட நாங்க இவ்வளவு நேரம் நின்னதில்ல."

சீனிவாசன் பதறினார். "மன்னிச்சுக்கங்க தம்பி! இங்கே நடந்த குழப்பத்தில உங்களை உட்கார வெக்கக்கூட தோணல்ல!"

"பரவாயில்லப்பா. கணேஷ் எப்பவும் இப்படித்தான். வேடிக்கையா பேசுவான்."

"ஆனா உண்மையைத்தான் பேசுவேன்."

"சரிங்க அரிச்சந்திரப் பிரபு! முதல்ல காபி சாப்பிடுங்க."

உமா காபியோடு வர, வாசலுக்கு வெளியே குரல் கேட்டது.

"வீட்ல யாருங்க?"

"எல்லோருமே இருக்கோம். உங்களுக்கு யாரு வேணும்?" - என்றவாறே பாண்டியன் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, உற்சாகமாய் வரவேற்றான்.

"அடடே! அடுத்த மாப்பிள்ளை... வாங்க சுந்தரம்!"

சுந்தரம் என்ற பெயரைக் கேட்டதும் உமா வெட்கமாய் வீட்டிற்குள் ஓடிவிட, கணேஷ் பொய்க் கோபத்தோடு நிமிர்ந்தான்.



"இந்த வீட்ல என்னதான் நடக்குது?"

"ஏன் தம்பி?"

"ஒரு காபி குடிக்கக் கூட முடியலையே. கொண்டு வந்த காபியை உங்க தங்கை கொண்டு போயிட்டாங்க."

"ஏன்டா! வாழ்நாள்ள காபியே பார்த்ததில்லயா நீ? ஏன்டா என் மானத்தை வாங்குற?"

"இப்ப ஏன் அவரைத் திட்டுறீங்க? இந்தாங்க கணேஷ் ஸார். நீங்க காபி குடியுங்க." - என்றவாறு காபியோடு வந்தாள் காயத்ரி. கூடவே ஸ்வீட் காரம் எல்லாம் கொண்டு வந்து வைத்தாள்.

"தேங்க்யூ காயத்ரி. இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு இது ஏதோ பெண் பார்க்கும் படலம் போல இருக்கு..."

"ஹலோ ஸார்! நீங்க சொன்னாலும் சொல்லாட்டியும் இது பெண் பார்க்கும் படலம்தான்!" - என்றான் மீனாட்சி சுந்தரம்.

"நீங்க யார் ஸார்?"

"நான்தான் சுந்தரம். உமாவைப் பெண் பார்க்க வந்திருக்கேன்."

"ஓ! அதுதான் அந்தப் பொண்ணு அப்படி ஓடிச்சா?" - கேட்ட

"பாண்டியா! என்னப்பா இதெல்லாம்?"

ரங்கநாயகியை நெருங்கினான் மீனாட்சி சுந்தரம்.

"அத்தே! நான் உங்களைப் பார்க்கத்தான் வர இருந்தேன். ஆனா கொஞ்சம் பயமா இருந்தது."

"அதனால நான்தாம்மா வரச்சொன்னேன். சுந்தரம் ஏற்கெனவே என்கிட்ட எல்லாத்தையும் சொல்லிட்டான். அதான் காயுவோட கல்யாணத்தன்னிக்கே இவங்க கல்யாணத்தையும் முடிச்சிடலாம்னு இருக்கேன். அப்பா! நீங்க என்னப்பா சொல்றீங்க?"

"நான் என்னப்பா சொல்றது? மாப்பிள்ளைங்க ரெண்டுபேருமே தங்கமான புள்ளைங்க. அவங்களுக்குத் தயங்காம பெண்ணைக் கொடுக்கலாமே."

"பிறகென்ன? கல்யாணத் தேதி குறிச்சிடலாமே!" - பாண்டியன் சொல்ல...

அவசரமாய்த் தடுத்தான் ஜனார்த்தனன்.

"நோ நோ. முதல்ல அண்ணிக்கு நல்லபடியா குழந்தை பிறகட்டும். அதுக்கப்புறம்தான் கல்யாணம். இது என் காயுவோட உத்தரவு!"

'அடேயப்பா! இப்பவே பொண்டாட்டி பேச்சைக் கேட்க ஆரம்பிச்சிட்டான்டா"

"அதில தப்பே கிடையாது தம்பி! நானும் அப்படிக் கேட்டு நடந்திருந்தா எப்பவோ முன்னேறியிருப்பேன்."

"இப்ப மட்டும் என்ன கெட்டுப் போச்சு? இனிமே கேட்டு நடங்க. மேலும் மேலும் முன்னேறுங்க!" - என்றான் ஜனா.

"உன் வார்த்தை பலிக்கட்டும்ப்பா!"



"பலிச்சா என்ன தருவீங்க?"

"எங்க வீட்டு மகாலக்ஷ்மியையே தர்றேன்."

"வேண்டாம். எனக்குக் காயத்ரி மட்டும் போதும்."

"அவதாம்பா மகாலக்ஷ்மி..." - பாண்டியன் சொல்ல, அனைவரும் உற்சாகமாய்ச் சிரித்த சத்தம் வெளியேவரை கேட்க, காரை விட்டு இறங்கிய கோமதி ஒரு கணம் தயங்கி நின்றாள்.

மேகலாவின் கோரமான மரணத்தை இவர்களிடம் சொல்லலாமா?

வேண்டாம். தெரியும் போது தெரியட்டும். இப்போது இவர்களுடைய ஆனந்தத்தைக் கெடுக்க வேண்டாம். மனதிற்குள் முடிவு செய்தவாறே வீட்டிற்குள் நுழைந்தாள்.

"அட, அம்மா வந்தாச்சு. வாங்கம்மா!" - என்றவாறே ஜனா எழுந்துவர, மற்றவர்களும் மரியாதை நிமித்தமாய் எழுந்து நின்று வரவேற்றனர். காயத்ரி மெல்ல நடந்து வந்து கோமதியின் காலில் விழ, மனதார ஆசிர்வதித்து நெற்றியில் முத்தமிட்டாள்.

"அம்மா! எப்படி உங்க மருமக?"

"மகாலக்ஷ்மியாட்டம் இருக்காப்பா..."

"அம்மா திலகா ஆன்ட்டியை அழைச்சிட்டு வரச் சொன்னேனே."

"அது... அவ வீட்ல இல்லப்பா. வெளியே போயிட்டா போலிருக்கு..."

"அம்மா! மேகாவோட அப்பாகிட்ட பேசிட்டேன். அவர் அவளையும் ஆன்ட்டியையும் மலேசியா கூட்டிட்டுப் போயிடுறேன்னு சொல்லிட்டாரு. அதனால இனிமே அவளால எந்தப் பிரச்சனையும் இருக்காதுன்னு நினைக்கிறேன்..."

"ஆமாம்ப்பா! இனிமே அவளால யாருக்கும் எந்தப் பிரச்சனையும் வராது!"

"இங்கேயும் எல்லாப் பிரச்சனையும் ஸால்வ் ஆகிடுச்சிம்மா. இனிமே..."

"இனிமே என்ன? கல்யாணம்தான்..." - கணேஷ் சொல்ல, அனைவரும் மனநிறைவோடு சிரித்தனர். அந்தச் சிரிப்பின் ஊடே தன் மனம் விரும்பியவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டான் ஜனார்த்தனன்.

இனி அவர்களுக்குள் பிரிவென்பது இல்லை.